வெளியீடு 03-03-2000 Issued 03-03-2000

402
2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 30, 1999 - தொகுதி 77 - எண் 1**

**Friday, 30th April, 1999—Volume 77 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**...ive Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

D
V2:1,31'N99.
N99:77.1.
221806

**[Price Rs. 3.00**

40

30–04–1999

## உள்ளடக்கம்


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் v-viii

Personnel of the Government of Tamil Nadu ix-xii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xv-xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. **இரங்கற் குறிப்பு--**

   முன்னாள் உறுப்பினர் மறைவு 1-2

2. **வினாக்கள்-விடைகள்--**

   உடுக்குறியிட்ட வினாக்கள் 2-43

3. **விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை--**

   தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக ஆக்குதல் குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்தல் பற்றி கல்வி அமைச்சரின் அறிக்கை 44-45

4. **சிறப்புக் கவன ஈர்ப்பு--**

   வீராணம் ஏரி வாய்க்கால்களைப் பொதுப் பணித் துறையின் மூலம் தூர் வாருதல்

   திரு. ச. அழகிரி 45

   *மாண்புமிகு திரு. துரைமுருகன் 46

| | பக்கங்கள் |
|---|---|
| 5. கவன ஈர்ப்பு-- | |
| (அ) தொப்பூர் மலைப்பாதை வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல் | 46-48 |
| (ஆ) செங்கோட்டை-சாம்பவர்-வடகரை சாலையில் பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்துதல் | 49-51 |
| 6. அறிக்கைகள் அளித்தல்-- | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 51-52 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 52 |
| 7. தகவல் கோரல்-- | |
| சந்தனக் கடத்தல் வீரப்பன் மூன்று வன ஊழியர்களைக் கடத்திச் சென்றது | 52 |
| 8. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 53,57-58,66, 67,71-74,75, 102-103,104, 105,106-107, 118,124-125, 127-152 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 58-64 |
| திரு. எம். ரங்கநாதன் | 64-69 |
| திரு. கே. சுப்பராயன் | 69-79,139 |
| திரு. ஆ. நடராசன் | 79-85 |


221806




| | பக்கங்கள் |
|---|---|
| மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | |
| திரு. ஜி.கே. மணி | 86-91,140 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 91-96 |
| திரு. எஸ்.எஸ். மணி நாடார் | 96-98 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 98-100 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 101-108,133 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 103 |
| திரு. வி.பி. இராசன் | 108-114 |
| *திரு. டி. மணி | 114-119 |
| *திரு. பி.என். வல்லரசு | 119-122 |
| திரு. மு. அப்பாவு | 122-127,152 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 153 |
| 9. அறிவிப்பு-- | |
| சட்ட அமைச்சர் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீதான விளக்கத்தினை திரு. சொ. கருப்பசாமி உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு பேரவைத் தலைவர் தீர்ப்பு | 156-157 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 157-158 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா, மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—*Justice* Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

**Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

**Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

**Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

**Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms and Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press. |
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | |
|---|---|
| 1. திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. திரு. இ. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 13. திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. திரு. க. சம்பந்தராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 15. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல் .. | சார்புச் செயலாளர் |
| 35. | திரு நா. நடராஜன், பி.ஏ .. | தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல்., .. | தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ., .. | தலைமை நிருபர் |
| 39. | திருமதி பி. சரஸ்வதி .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார். திரு. பா. .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து. திரு. வெ.அ. .. | பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. .. | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. .. | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

30. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை

31. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்

32. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்

33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

39. இராஜேந்திரா, திரு. டி. .. பூங்கா நகர்

40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வ

50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.

54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.

62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

75. சம்பத், திரு. ஏ.ஜி. .. மு[illegible]யூர்

76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பளமரத்துப்பட்டி

84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேளூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| 157. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 158. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 159. புரட்சிமணி, திரு. ச. | .. | மங்களூர் (செ.வ.) |
| 160. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 161. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 162. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 163. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 164. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 165. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 166. பெர்னார்டு. திரு. இரா. | .. | குளச்சல் |
| 167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 171. மகேந்திரன், திரு. இரா. | .. | நாட்ராம்பள்ளி |
| 172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. | திருநாவலூர் |
| 173. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 174. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 175. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 176. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 178. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |



| | | |
|---|---|---|
| 179. மணிவர்மா, திரு. க. | .. | தண்டராம்பட்டு |
| 180. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 181. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம், (செ.வ.) |
| 182. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 183. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 184. மாரி அய்யா, திரு. பே. | .. | புதுக்கோட்டை. |
| 185. மாரிமுத்து, திரு அ. | .. | வானூர் (செ.வ.) |
| 186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 187. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 188. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 189. முத்துராமலிங்கம், திரு. ம. | .. | திருமங்கலம் |
| 190. முபாரக், திரு. பா.மு. | .. | கூடலூர் |
| 191. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 192. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 193. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 194. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |
| 195. மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 196. மோகனதாசன், திரு. கோ. | .. | பூம்புகார் |
| 197. மோகன் கந்தசாமி, திரு. ப. | | பொங்கலூர் |
| 198. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | பேரூர் |
| 204. ராணி, செல்வி ந. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடராமன், திரு. ர.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | நத்தம் |
| 235. வெற்றிடம் | .. | திருவட்டாறு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 17, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 30, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு."*

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலைமை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் 29-4-1999 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் மைலாப்பூர் தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் எழும்பூர் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து 3 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புடன் பணியாற்றியுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 30

அன்னாரது மறைவு குறித்து அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 561, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**561—**

### பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி

***15528—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பல வகுப்புகளும், அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டொன்றுக்கு அதற்காக அரசு செலுத்தும் வாடகை எவ்வளவு?

(இ) அப்பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1999 ஏப்ரல் 30]

(ஆ) மாதம் ஒன்றுக்கு ரூ.11,840 வீதம் ஓர் 1 ஆண்டுக்கு ரூ.1,42,080 வாடகையாகச் செலுத்தப்படுகிறது.

(இ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்ட அரசாணை (நிலை) எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ல் ரூ. 4.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 34 வகுப்பறைகள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் ஏறத்தாழ 1½ இலட்சம் ரூபாய் வருடத்திற்கு வாடகையாக வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே, பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அவர்களால் அங்கே 12 வகுப்பறைகள் கொண்ட 2 கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.58 இலட்சம் மதிப்பீட்டில் அரசுக்கு மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, சிறப்பு நேர்வாகக் கருதி, இந்த நிதியாண்டில் அந்தப் பள்ளிக்குக் கட்டடங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான வகுப்பறைகள் இல்லாத நிலை, தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 1,500 பள்ளிக்கூடங்களில் உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 20 கோடி ரூபாய், 25 கோடி ரூபாய் தொகை ஒதுக்கினாலும் கூட, அந்தத் தொகை நூற்றுக்கணக்கான பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டித் தருகின்ற முறையில் பங்கிட்டு வழங்கப்படுகிறது. அதிக மாணவர்களும், போதுமான வகுப்பறைகளும் இல்லாத பள்ளிக்கூடங்களில், அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகத்தைக் கூட்டி, கலந்து பேசி, தகுந்த முறையில் வகுப்பறைகளை முழு நேரமும் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் காலை, மாலை என்று இரு பிரிவுகளாகப் பள்ளி நேரத்தினைப் பிரித்து நடத்துவதுதான் உடனடியாக அவர்கள் செய்யக் கூடிய நல்ல காரியம் ஆகும். (குறுக்கீடு)

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவி அருணன் திரும்பவும் compulsory-யாக இரண்டாவது வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றால்

எப்படி? பதில் பொருத்தமாக இருக்கிறது, உட்காருங்கள். வினா எண் 562, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**562—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்**

***16653—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, நல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் தரத்தை உயர்த்தி அரசு மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு. 1998-99 ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலே இருக்கக்கூடிய நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்பெல்லாம் ஒரு நாளைக்கு 400 புறநோயாளிகள் வந்து சென்றார்கள். சென்ற ஆண்டு அந்த நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் இடிந்து, மிக மோசமான நிலையிலே இருந்ததால், மருத்துவர்கள் நோயாளிகளை வேறோர் இடத்திலே வைத்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தக் கேள்வியே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்காகக் கேட்கப்பட்டுள்ளது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை நல்லமுறையிலே சீர்படுத்தி, 24 மணி நேரமும் புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிற வகையிலே மருத்துவர்களையும் அலுவலர்களையும் அங்கே அமர்த்தி, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அளவிற்கு நிலை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியிலே கடலோரத்திலே கிட்டத்தட்ட 40 கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு, கொள்ளிடம் கடலோரத்திலே வாழுகிற மக்களுக்கு அது மிகவும் பயன்பாடு உடையதாக இருக்கிறது.





எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசிலனை செய்து, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அளவிலே செய்து கொடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே ஏறக்குறைய 1414 இருக்கின்றன. ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரம் உயர்த்துவது என்று சொன்னால் இந்த அரசாங்கத்தாலே இப்போது நிச்சயமாக முடியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலேயுள்ள, குறிப்பாக, 40 கிராமத்து மக்களுடைய நலனைக் கருதி 24 மணி நேர மருத்துவமனையாக உயர்த்த முடியுமா என்று கேட்டிருக்கிறார். அதுபற்றி நிச்சயம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 563, திரு.ச.க. வெங்கடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**563—**

**விட்டுக்கு ஒரு மின் விளக்கு வசதி**

***16788—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியிலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் வீட்டுக்கு ஒரு மின் விளக்குத் திட்டத்தினை அமல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், செய்யூர் அனல் மின் நிலையத் தொடக்க விழா எப்போது நடைபெறவுள்ளது என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் அனல் மின் நிலையத்தில் N.T.P.C. மூலம் மத்திய அரசின் முயற்சியாலே 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான முடிவு எடுக்கப்பட்டு அதற்கான பணிகளையெல்லாம் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதியே அங்கே அடிக்கல் நாட்டலாம் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்கள். ஆனால், சுற்றுச் சூழல் இலாகாவிலேயிருந்து அதற்குரிய உத்தரவுகளெல்லாம் பெறப்படாத காரணத்தால், முதலமைச்சர் அவர்களும் மற்றும் மத்திய அமைச்சர் அவர்களும் கலந்துகொள்ளக்கூடிய அந்த விழாவில் அந்த ஆணைகள் இல்லாமல் கலந்து கொள்வது அவ்வளவு நன்றாக இருக்காது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கிய காரணத்தாலே அனைத்து ஆணைகளையும் பெற்றதற்குப் பிறகு அங்கே அடிக்கல் நாட்டு விழா நடத்துவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 564, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**564—**

**வாய்க்கால் சீரமைத்தல்**

***10141—திரு. வை. சிவபுண்ணியம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சியின் சட்டிஉருட்டி வாய்க்காலைச் சீரமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் படிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) சட்டிஉருட்டி வாய்க்கால் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. அது நகராட்சியிடம்



1999 ஏப்ரல் 30]

ஒப்படைக்கப்படவில்லை. எனினும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன்னுழைவு அனுமதி பெற்று, 1.98 கிமீட்டர் நீளத்தில், 1 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டும் தூர் வாரும் பணி அக்டோபர் 1998-ல் முடிவடைந்துள்ளது. மீதி 0.98 கிலோமீட்டர் நீளத்திற்குத் தூர் வாரும் பணிக்கான செயற்குறிப்பு நகர்மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தப் பணி நடைபெற்று, நிறுத்தப்பட்டு, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி வேறு பணிகளுக்காகச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. எனவே மீதம் இருக்கிற தூரத்தை தூர் வாருவதற்கான நிதி இருக்கிறதா? இரண்டாவது, அந்த சட்டிஉருட்டி வாய்க்காலிலே பல ஆக்கிரமிப்புகள் இருக்கிற காரணத்தினாலே அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தடையாக ஆக்கிரமிப்பாளர்கள் இருப்பதாக ஒரு தகவல் சொல்லி அந்தக் காரணத்தினாலேயே இந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. ஆகவே, அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலேகொண்டு முழுமையாக அந்தப் பணியை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டிலேயே ஒரு முறை நான் மன்னார்குடி நகராட்சி மன்றத்திற்கு ஆய்வுப் பணிக்குச் சென்றிருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலேயே என்னிடத்திலே தெரிவித்து, நானும் அதுபற்றி விசாரித்தபோதுதான் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை என்பதைத் தெரிந்து, அது உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தேன். பல காரணங்கள் எல்லாம் சொல்லப்பட்டு, பிறகு அது எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும் என்று கருதுகின்றேன். பாக்கி இருக்கிற 0.98 கிலோமீட்டர் பணிக்கு இப்போது இருக்கிற நிலையில் ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்ததாக எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு,

செலவழிக்காத பாக்கித் தொகையை வேறு காரணங்களுக்கு செலவழிக்கக்கூடாது. வேறு காரணங்களுக்கு செலவழிக்க மாட்டார்கள். செலவழித்தால் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *565*, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**565—**

**வாரச் சந்தையை சீரமைத்தல்**

***15486—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தை கூடும் இடம் மற்றும் கட்டடங்கள் மோசமாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த நிதியாண்டில் சீர்செய்ய நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாதங்கள் முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல்லுக்கு வந்திருந்தபோது நானும் நகர்மன்றத் தலைவரும் அழைத்துச் சென்று அந்த இடத்தைக் காட்டினோம். அப்போதே இதை சீர் செய்ய வேண்டிய அவசியம் குறித்து ஒத்துக்கொண்டார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு முக்கியமான பிரச்சினை. அந்த வாரச் சந்தை கூடுகின்ற இடத்தைச் சுற்றி இருக்கக்கூடிய,



நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற சௌராஷ்டிரா பெருமக்களுக்கு மழைக் காலங்களிலும் மற்ற காலங்களிலும் சுகாதாரக் கேடு ஏற்பட்டு, மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அங்கே இருந்த நாட்டு ஓடு வேயப்பட்ட கட்டடங்கள் எல்லாம் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. எனவே, அவசியம் கருதி, இந்த ஆண்டே அந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகராட்சியைப் பொறுத்தவரையில், மழைநீரை வடிகட்டுவது மற்றும் அங்கே இருக்கிற சாக்கடை நீரை வடிகட்டுவது இவை எல்லாம் ஒரு திட்டத்தின் அடிப்படையிலே இணைக்கப்படுகிறது என்பதும், அதோடுகூட அங்கே இருக்கின்ற பழுதடைந்த கடைகளை முழுமையாக சீர்திருத்தம் செய்வதும் ஆகிய பணிகள் எல்லாம் கூடினால் கொஞ்சம் நிதி அதிகப்படியாகத் தேவை ஏற்படுகிற நிலை வருகிற காரணத்தால், நகராட்சி மன்றத்திற்கு அளித்திருக்கிற யோசனைப்படி, அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி, யாரிடத்தில் எவ்வளவு, எப்போது கடன் பெறுவது என்பதைப் பற்றி எல்லாம் முடிவு எடுத்து, ஒரு proposal அனுப்புவார்களேயானால், உரிய நடவடிக்கை இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *566*, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**566—**

**காபி உற்பத்தி**

***17184—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு, கொல்லிமலைப் பகுதிகளில் எவ்வளவு காபி உற்பத்தியாகின்றது?

(ஆ) எவ்வளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது?

[1999 ஏப்ரல் 30

(இ) இதனால் அரசிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

(ஈ) Coffee Board, Control விலையை ஏன் எடுத்தது? control விலை மீண்டும் அமலாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு தாலுகாவில் சுமார் 6,381 ஹெக்டேர் பரப்பில் காபி பயிரிடப்பட்டு, 3,619 மெட்ரிக் டன் காபி உற்பத்தி செய்யப்படுகிறது. அதுபோல் கொல்லிமலைப் பகுதிகளில் சுமார் 18 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு, சுமார் 10 மெட்ரிக் டன் காபி உற்பத்தி செய்யப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) சேலம் மாவட்டம், ஏற்காடு, கொல்லிமலைப் பகுதிகளில் உற்பத்தியாகும் காபி, ஏற்றுமதியாகும் அளவு குறித்து Coffee வாரியத்தால் தனியே ஆவணங்கள் ஏதும் பராமரிக்கப்பட்டு வராத காரணத்தால், இப்பகுதியில் விளையும் காபி மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணி விவரத்தை அளிக்க இயலவில்லை.

(ஈ) காபி வாரியம் நேரடி விற்பனை முறையினை கைவிட்ட காரணத்தால் விலைக் கட்டுப்பாட்டு முறை அகற்றப்பட்டுவிட்டது. தற்சமயம் காபி வாரியத்தினால் control விலையை மீண்டும் கொண்டுவரும் வாய்ப்புகள் ஏதுமில்லை.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1998 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட வினாவாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், அங்கே சிறு விவசாயிகளாக இருக்கின்ற மலைவாழ் மக்கள் 5 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கின்றவர்களுக்கு எல்லாம் Coffee Board மூலமாக நல்ல விலை கிடைத்து வந்தது. வெளிச் சந்தையிலே Coffee-யை தாறுமாறாக வாங்குகின்ற ஒரு நிலை ஏற்பட்ட காரணத்தினால், மத்திய அரசு Coffee Board-ஐ அங்கே வைத்து, சிறு விவசாயிகளிடம் இருந்து, 25 ஏக்கருக்கு உட்பட்டவர்களிடம் கொள்முதல் செய்து வந்தது. அதை ஏன் எடுத்தார்கள்? அப்படி எடுத்ததால் அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. தமிழக அரசு மூலம் அதை மத்திய அரசுக்கு



1999 ஏப்ரல் 30]

எடுத்துச் சொல்லி மீண்டும் அங்கு பல ஆண்டுகளாச் செயல்பட்டுவந்த Coffee Board-ஐத் திறப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Coffee Board மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே இயங்கக்கூடியது. அதை ஏன் எடுத்தார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக, ஆங்கிலேயர் காலத்திலேயிருந்து இந்த Coffee அந்நிய நாட்டுச் செலாவணியை ஈட்டித் தந்து கொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஏற்காடு பகுதியிலே விளைகின்ற Coffee தான் அந்நிய நாட்டிலே மிகவும் நல்ல பிரசித்தி பெற்ற Coffee-யாக இருந்து வந்திருக்கின்றது. Coffee Board மூலமாக வாங்குகின்ற காரணத்தினால், தரமான விவசாயப் பொருட்களுக்கு வழங்குவதுபோல், அங்கே தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனால் சிறு விவசாயிகளுக்கு, அந்நிய Market-லே விலை போகின்றபொழுது, ஒரு முறை அல்லது இரண்டு முறை bonus கிடைக்கக்கூடிய வாய்ப்புகூட இருந்தது. அதை, மீண்டும் தமிழக அரசினுடைய முயற்சியால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால் மலைவாழ் மக்களும், சிறு விவசாயிகளும் பயன்படுகின்ற வகையிலே, மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பியிருக்கின்ற கேள்வியையொட்டி, மத்திய அரசாங்கத்திற்கு இந்த மாநில அரசாங்கம் எந்த அடிப்படையிலே இந்தக் கருத்தை எடுத்துச்சொல்லி, Coffee வாரியத்தின் மூலம் Control முறையை மீண்டும் கொண்டுவருவதன் மூலம், Coffee உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குப் பயனுள்ள வகையிலே இருக்கும் என்பதை இந்த அரசு ஆராய்ந்து பரிந்துரை செய்யலாம்.

[1999 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 567, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**567—**

**மேல்செங்கம் மைய-மாநிலப் பண்ணை**

***18612—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல்செங்கம் மைய-மாநிலப் பண்ணை நட்டத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அரசு எடுத்து நடத்த ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ). ஆம். ஆனால், மேற்கண்ட பண்ணை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

(ஆ) இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, மேல்செங்கம் மத்திய-மாநில விதைப் பண்ணை நட்டத்தில் இயங்கி வருவது அரசுக்கு தெரியுமா? அது நட்டத்தில் இயங்குவதால் அந்தப் பண்ணையை மூடிவிட முடிவு செய்திருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. அதுவும் அரசுக்குத் தெரியுமா? ஏறத்தாழ இரண்டாயிரம் தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். அதை மூடிவிட்டால் அவர்களுக்குப் பாதிப்பு வரும் என்பதை அறிந்து அதை மூடாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? மீண்டும் அரசுக்குத் தேவையானபோது, மண்வளம் பொருந்திய ஏறத்தாழ 11,000 ஏக்கர் நிலம் கிடைக்குமா? செங்கம் தொகுதியில் அந்த இடம்தான் ஒரு பரந்த இடம். எனவே, அதை வீணாக்காமல் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியையோ அல்லது ஒரு தொழிற்பேட்டையையோ அமைக்க ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கம் கிராமத்தில் உள்ள மத்திய-மாநில விதைப் பண்ணை தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கவில்லை என்றுதான் இங்கு நான் சொன்னேன். இப்பண்ணை இந்திய மாநில பண்ணைக் கழகத்தின்கீழ் செயல்படுகிறது. புதுடில்லியில் உள்ள இப்பண்ணைக் கழகம் அளித்துள்ள தகவலின்படி இப்பண்ணையில் 154 நிரந்தர ஊழியர்களும், 900 தினக்கூலி தொழிலாளர்களும் பணிபுரிந்து வருவதாகவும், இப்பண்ணை தொடர்ந்து பல ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது,

*1992-93* இல் ரூ.*120.99* இலட்சம் நட்டம்;

*1993-94* இல் ரூ.*94.95* இலட்சம் நட்டம்;

*1994-95* இல் ரூ.*101.56* இலட்சம் நட்டம்;

*1995-96* இல் ரூ.*45.31* இலட்சம் நட்டம்;

*1996-97* இல் ரூ.*77.59* இலட்சம் நட்டம்.

இது தொடர்ந்து நட்டத்திலே இயங்கக்கூடியதாலும், போதிய நீர் வளம் இல்லாமையினாலும், கூடுதலாக இப்பொழுது மின்சாரக் கட்டணமும் அதிகரித்திருப்பதாலும், இந்தப் பண்ணையை இலாபத்தில் நடத்த இயலவில்லை; தொடர்ந்து நட்டத்தில் நடைபெறுகிறது. ஆகவே, இதை மூடிவிடலாம் என்கிற கருத்து மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளதாக இப்பண்ணையின் இயக்குநர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

*முற்பகல் 9-50*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்னன் அவர்கள் கேட்ட அந்தக் கேள்வியையொட்டி, ஒரு கேள்வி; நான் அந்தப் பண்ணையை நேரடியாகப் பார்த்து இருக்கிறேன். சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அதிலே பணி புரிகிறார்கள், தரம் உள்ள தென்னை,

[1999 ஏப்ரல் 30

சப்போட்டா கன்றுகள் அந்தப் பண்ணையிலே விளைவிக்கப்படுகின்றன. அநேகமாக மின்சார வாரியத்திற்குக் கட்டக்கூடிய பணம்தான் அவர்களுக்குப் பெரிய நஷ்டமாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவது போன்று, அந்த மின்சாரக் கட்டணத்தை ரத்து செய்து, அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும், அந்தப் பண்ணைக்கென பேருந்து எல்லாம்கூட அவர்கள் வைத்து இருக்கிறார்கள். அந்தப் பண்ணையை மத்திய அரசிடமிருந்து மாநில அரசு எடுத்தால் நல்ல கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதை வேளாண்மைத் துறையிலே எடுத்துக்கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்திய மாநில பண்ணைக் கழகத்தின் சார்பிலே நடத்தப்படுகின்ற ஒரு பண்ணை. மாநில அரசாங்கத்தின் சார்பிலே நடத்தப்படுவதில்லை. இது தொடர்ந்து நஷ்டத்தில் நடைபெறுவதால் மூடிவிடலாம் என்கிற கருத்து பரிசீலனையில் இருந்து வருவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் கட்டணத்தினாலேதான் இந்தப் பண்ணைக்குப் பெருத்த நஷ்டம் என்று சொல்லி, அதற்கு ஏதாவது சலுகை அளிக்க இயலுமா என்று கேட்டார்கள். விவசாயத்திற்கு மட்டும்தான் இலவச மின்சாரம் வழங்குவதாக நம்முடைய தமிழக அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து பல்வேறு சங்கடங்களுக்கு இடையிலேயும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இலவச மின்சாரம் வழங்குவதில் உறுதியாக இருந்துவருகிறார்கள். தமிழக அரசின் சார்பிலே 39 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. இந்த விதைப் பண்ணைகளுக்கு மட்டும் — ஏனென்றால் நல்ல வீரிய சக்தியுள்ள விதைகள், புதிய ரக விதைகள் கண்டுபிடித்து, ஆதார விதைகளைத் தயார் செய்து, நாம் அதிக அளவிலே உற்பத்தியை பெருக்குவதற்கு இந்தப் பண்ணைகள் இருக்கக்கூடிய காரணத்தால் இந்த 39 அரசு விதைப் பண்ணைகளுக்கு மட்டும் இலவச மின்சாரம் தரப்படுகிறது. அதைப்போல தோட்டக்கலைத் துறையின்கீழ் 54 பழப் பண்ணைகள் தமிழகத்திலே இருக்கின்றன. அதற்குக்கூட இந்தச் சலுகை இல்லை. ஆகவே, அந்தச் சலுகையை இப்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அளிக்க இயலாது.



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய-மாநிலப் பண்ணையாக இயங்குகிற இந்தப் பண்ணைக்குத் தமிழக அரசு 11,000 ஏக்கர் நிலத்தை ஒப்பந்த அடிப்படையில் கொடுத்துள்ளது. அந்த ஒப்பந்தம் எவ்வளவு காலம்? அதை மத்திய அரசு முடித்துக் கொண்டு, தமிழக அரசுக்கு 11,000 ஏக்கர் நிலத்தை எப்போது ஒப்படைப்பார்கள் என்பதை அறிய விரும்புவதோடு, அந்த விவசாயப் பண்ணையில் மிகச் சிறந்த முறையில் சிறப்பாக நல்ல விளைச்சல் தருகின்ற தரமான விவசாயப் பயிர்கள் உற்பத்தி ஆகின்றன. மேலும் அதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குத் தமிழக வேளாண்மைத் துறை ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் இந்தப் பண்ணையை நடத்த இயலாது என்று மூடிவிடுவார்களேயானால் அந்த நிலத்தை மாநில அரசாங்கம் எடுத்துக்கொண்டு, அதிலே மாநில அரசாங்கத்தின் மூலம் பண்ணை அமைப்பதைப்பற்றியோ அல்லது தோட்டக்கலைத் துறை மூலம் பராமரிப்பது பற்றியோ பிறகு பரிசீலிக்கலாம். ஆனால் தனியாருக்கு அந்த நிலங்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுவிடமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 568, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**568—**

**நீர்த்தேக்கம் கட்டும் திட்டம்**

***8391—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சி அறம்பள்ளிபாறை நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 ஏப்ரல் 30

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சி அறம்பள்ளிபாறை நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சி விவசாயிகளுடைய நீண்டகாலக் கோரிக்கை அந்தப் பகுதியில் அறம்பள்ளிபாறை நீர்த்தேக்கம் கட்டித்தர வேண்டும் என்பது. கொடைக்கானல் மலைப்பகுதியில், குறிப்பாக, கவுஞ்சி கிராமப் பகுதியில் விவசாயிகள் செய்கின்ற விவசாயம் எல்லாம் மானாவாரிப் பயிர்கள்தான். அதாவது, உருளைக் கிழங்கு, பூண்டு, கோஸ், கேரட் போன்ற காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். குறிப்பாக, நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படக்கூடிய பூண்டு அதிக அளவில் அங்கு விவசாயம் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியில் மழை பொய்த்துவிடுகிற காலத்தில், அந்த விவசாயிகள் பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டும். மலைப்பகுதியான அங்கே, கிணற்றுப் பாசனமோ, ஆற்றுப் பாசனமோ, வாய்க்கால் பாசனமோ கிடையாது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மலைப்பகுதி விவசாயிகளுடைய நலன் கருதி, மீண்டும் அரசு பரிசீலனை செய்து, கவுஞ்சி விவசாயிகளுடைய நலன் கருதி, அந்தப் பகுதியில் அறம்பள்ளிபாறை நீர்த் தேக்கத்தைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூக்கையா அவர்கள் பலமுறை இந்த மன்றத்திலே அறம்பள்ளிபாறை அணைக்கட்டு திட்டத்தைப்பற்றிப் பேசினார். எனவே, அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு அதுகுறித்து ஓர் ஆய்வு நடத்தச் சொல்லிற்று. சென்ற ஆண்டு நடத்திய ஆய்வில், 10 கோடியே 17 இலட்சம் ரூபாயிலே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கலாம்; அதன்மூலம் 756 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் என்று ஒரு முதல் நிலை அறிக்கை தந்திருக்கிறார்கள். சில technical defects அந்த report-லே இருக்கிற காரணத்தினால், மீண்டும் ஸ்தலத்திலே இருக்கிற அந்த அதிகாரிகள் அதுகுறித்து ஆய்வு நடத்தி இருக்கிறார்கள். அது முழுமை பெற்று, அறிக்கை கிடைத்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவுக்கு அனுப்பப்பட்ட பிறகு, நில நீர்வள ஆய்வாளர்களுடைய ஒப்புதல் பெற்று, பிறகு அரசுக்கு வரும். வந்த பிறகு அரசு இதுகுறித்து பரிசீலனை செய்யும்.



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 569, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**569—**

**ஆய்வு மாளிகையைப் புதுப்பித்தல்**

***14239—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி கிராமத்தில் பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாளிகை மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

(இ) இக்கட்டடத்தில் அரசு கால்நடை மருத்துவமனை அமைய அரசு அனுமதிக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தக் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(இ) கால்நடைத் துறையிடமிருந்து இதுகுறித்து எந்தவிதமான செயற்குறிப்பும் வரவில்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஓய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் பணகுடியில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டது. அதைச் சுற்றி கல்லறைகள் இருக்கின்றன. ஆகவே, கட்டி முடிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை யாருமே அங்கு தங்குவது இல்லை. அதைப் பயன்படுத்துவதும் இல்லை. அதற்குக் காவலரும் இன்றளவும் இல்லை. ஆகவே, கண்டவர்களெல்லாம் சென்று கதவுகளையெல்லாம் உடைத்து அங்கே தாறுமாறாகச் செய்திருக்கிறார்கள். நம்முடைய கால்நடைத்

துறை அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு ஒரு கால்நடை மருத்துவமனையைப் பனகுடிக்குத் தந்தார்கள். அது தற்போது ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சத்திரத்திலே இயங்கி வருகிறது. அது மிக மோசமான நிலையில் இருக்கிறது. நம்முடைய கால்நடைத் துறை அமைச்சரவர்களுக்கு ஏற்கெனவே இதுகுறித்து வேண்டுகோள் கொடுத்திருக்கிறேன். அந்த அடிப்படையில், இதைக் கால்நடை மருத்துவமனை வைப்பதற்குச் சரி செய்து தரவேண்டும்; தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சென்ற ஆட்சியில் அந்த மாண்புமிகு அமைச்சர், அந்த ஊர்க்காரர் என்பதற்காக, அவர் தங்குவதற்காக அது கட்டப்பட்டது. ஊருக்கு வெளியே நெடும் தூரத்தில் அது இருக்கிறது. பக்கத்திலே சுடுகாடு இருக்கிறது. அங்கு யாரும் தங்கியதே கிடையாது. கடைசியிலே வேறு எதற்காகவாவது நாங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமா என்று அறிய நானேகூட நேரிலே போய்ப் பார்த்தேன். வழிப்போக்கர்கள்கூட ராத்திரியிலே தங்கமாட்டார்கள். ஏனென்றால், சுடுகாடு; பக்கத்திலே நரி ஊளையிடுகிற சப்தம். இந்த நிலையிலே அதிலே இருக்கிற ஜன்னல்களை, வாசல் கதவுகளை எல்லாம் சில விஷமிகள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இதுமாதிரி பலர் செய்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து வேலூருக்குப் போகின்ற வழியில், எங்களுடைய மாவட்ட எல்லையில், முன்னாள் முதலமைச்சர் திடீரென்று அந்த வழியாகப் போனால், இயற்கை உபத்திரவங்களைக் கழிப்பதற்காக ஒரு சின்ன T.B., குட்டி T.B. கட்டினார்கள். ஆனால், இதுவரையிலே அதிலே யாரும் தங்கமுடியாது. அது வீணாகக் கிடக்கிறது. இப்படி பல உண்டு. அவற்றைப் பற்றி இப்போது பேசுவதற்கு நேரம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, சும்மா இருப்பதை, ஒரு கால்நடை மருத்துவமனையாக மாற்றலாமா என்று கேட்பது நல்ல யோசனை. ஆனால், அந்தத் துறையிலிருந்து எங்களுக்கு கருத்துரு இது சம்பந்தமாக வரவில்லை. வந்தால், அதுகுறித்து யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 570, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.





**570—**

**இரவில் வாகனங்களை இயக்கத் தடை**

***14594—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துகள் அதிகம் நடைபெற்று, உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதால் இரவு 1 மணி முதல் 4 மணிவரை லாரியைத் தவிர எல்லா வாகனங்களையும் இயக்க கட்டாயத் தடை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இரவு 1-00 மணி முதல் அதிகாலை 4-00 மணிவரை லாரியைத் தவிர எல்லா வாகனங்களையும் இயக்கத் தடை செய்வதற்கான செயற்குறிப்பு அரசிடம் எதுவும் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே நிறைய விபத்துகள் இரவு 1 மணியிலிருந்து விடியற்காலை 4 மணிக்குள்ளேதான் நடைபெறுகின்றன. எல்லோருமே அந்த நேரத்தில் கண் உறங்கி விடுகின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற விபத்துகள் ஏராளமாகத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் இரவு 1 மணி முதல் 4 மணிவரை எத்தனை விபத்துகள் சென்ற ஆண்டு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன; அதற்கு முந்தைய ஆண்டு எத்தனை ஏற்பட்டிருக்கின்றன என்கிற கணக்கு ஏதாவது எடுத்தாரா? இந்த விபத்துகளைத் தவிர்ப்பதற்கு அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைதூரப் பயணிகள் எல்லாம் இரவு நேரத்திலேதான் பெரும்பாலும் பயணம் செய்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல இரவு 1 மணி முதல் 4 மணிவரை பேருந்துகளை நிறுத்திவிடுவோம் என்று சொன்னால், தொலைதூரப் பயணிகளுக்கு அது தொல்லையாக அமையும். மேலும், லாரிகளைத்

[1999 ஏப்ரல் 30

தவிர, மற்றவைகளை நிறுத்திவிட முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். லாரிகளை நிறுத்துவது என்பதுகூட இப்போது இருக்கிற, வளர்ந்து வருகின்ற தொழிற்சாலைகள் போன்றவைகள் காரணமாக சாத்தியக் கூறாக இல்லை. அதுவும் 4 மணி நேரம் பேருந்துகளை நிறுத்திவிட்டால், மறுநாள் பகல் நேரத்தில் அதிகமான traffic, அதிகமான போக்குவரத்து இருக்கக்கூடிய. வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே இரவு நேரங்களிலே இதுபோன்ற போக்குவரத்தை நிறுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. பெரும்பாலும் இதுபோன்ற விபத்துகள் எல்லாம் ஓட்டுநருடைய கவனக் குறைவு மற்றும் இப்போதெல்லாம் சாலைகள் சரியாகப் போடப்பட்டிருப்பதால் வேகமாகச் செல்கிற நிலைமை இவற்றின் மூலமாகக்கூட நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் தடை செய்வதற்காக ஓட்டுநர் பயிற்சியைக் ஒரு Trade-ஆக, இப்போதெல்லாம் I.T.I. போன்றவைகளில் Fitter போன்ற Trade எல்லாம் இருப்பதைப்போல, Driving should be made as a Trade, அதையும் ஒரு பட்டயப் படிப்பாக மாற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறது. ஆகவே ஓட்டுநர்களுக்கு இதுபோன்ற பயிற்சி கிடைக்கும் என்று சொன்னால், இந்த விபத்துகள் குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களேகூட, குழுத் தலைவராக இருந்தபோது இரவு 1 மணிக்குத்தான் பயணம் செய்கிறார் என்று துறையிலே அடிக்கடி தகவல் சொல்லியிருக்கிறார்கள். அவரே அதைத் தவிர்க்க வேண்டும். திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாகன விபத்துக்கள் நடைபெறுவதற்கு மிக முக்கியமான காரணம், வாகன ஓட்டுநர்களுக்குப் போக்குவரத்து விதிகள் முழுமையாகத் தெரிந்திருக்கவில்லை. உதாரணமாக, முன்னால் செல்லக்கூடிய ஒரு வாகனத்தை, Overtake செய்ய வேண்டுமென்றால், முன்னால் செல்லக்கூடிய வாகனங்களில் Right-hand side Indicator போடுகிறார்கள். இது மிகவும் தவறு. Right-hand side Indicator போட்டால் overtake பண்ணக்கூடாது என்று அர்த்தம். இதுபோன்ற விதிமுறைகள் சரிவர சொல்லிக்கொடுக்கப்படவில்லை. விதிமுறைகள்



1999 ஏப்ரல் 30]

தெரியாதவர்களுக்கு உரிமம் வழங்கப்படுகிறது. ஆகவே உரிமம் வழங்குவதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்து வயது, கல்வித் தகுதி இவற்றையும் மறுபரிசிலனை செய்வதன்மூலம் வாகன விபத்துக்களைக் குறைக்க முடியும். வாகன விதிமுறைகளைப் பற்றித் தொலைக்காட்சி போன்ற Media மூலமாக ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்களுக்கு உரிமம் கொடுக்கப்படுகிறபோதே சாலை விதிகளில் எல்லாம் அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களா என்று பார்த்துவிட்டுக் கொடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. அப்படித்தான் கொடுக்கப்படுவதாக நம்புகிறோம். அதேபோல, மருத்துவத்திலேகூட, முதலுதவி அளிக்கும் பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் கொடுக்க வேண்டுமென்றும் விதிகள் இருக்கின்றன. ஆகவே விதிகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உரிமம் கொடுப்பவர்கள் முறையாகப் பார்த்துக் கொடுத்தால் இதுபோன்ற விபத்துகள் குறைவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்குத்தான் நான் முன்பே சொன்னதைப் போல இதையும் ஒரு Trade ஆக வைத்துக் கொடுத்தால் இன்னும் இதிலே அதிக பலனைப் பெற முடியும் என்ற உணர்வோடுதான் மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்ற நிகழ்ச்சி மிக அதிகமாக நடைபெறுகின்றன. முன்பெல்லாம் ஒருவர் இறந்தால் இப்போது 5 பேர், 6 பேர் இறக்கக்கூடிய சூழ்நிலையைத் தினமும் பத்திரிகையிலே பார்க்கிறோம். இதற்கு முழுமுதல் காரணம், Rash and Negligent act, ஓட்டுநர்களுடைய கவனக் குறைவு என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே, Indian Penal Code 304 (a) Section-லே சிறைத் தண்டனை அல்லது அபராதம், Imprisonment or Fine என்று இருப்பதை மாற்றி கட்டாயம் Imprisonment சிறைத் தண்டனை உண்டு என்று மாற்றுகின்ற அளவுக்கு ஒரு கடுமையான நடவடிக்கையை எடுக்க இந்த அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 30

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக விபத்துகள் என்று சொன்னாலே அவைகள் ஏதோ கவனக்குறைவாலே ஏற்படுகின்றன என்றுதான் கருத வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் ஆய்வு செய்து இந்த சட்ட விதிகள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. விபத்துகளைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை உபயோகப்படும் என்றால் அதுகுறித்து வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகள் என்பது ஆண்டுக்காண்டு உயர்ந்து வரக்கூடிய கவலை தரத்தக்க ஒரு செய்தியாக இருக்கிறது. இவற்றைக் குறைத்திட சாலை மேம்பாட்டுப்பணிகள் தமிழ்நாட்டிலே சிறப்பாக நடைபெறுகின்றன. வாகனங்களைப் புதுப்பிக்கும் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது, என்றாலும் வாகன விபத்துகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இதற்குப் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஓட்டுநர் உரிமம் வழங்குவதில் தளர்வு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகக் குறைந்த அளவிற்கு விபத்துகள் இருப்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு விபத்துகள் ஏற்படக் காரணம் என்ன என்பதைக் கண்டறிவதோடு, அவற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான வழிமுறையைக் கண்டறிய, வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1938 ஆம் ஆண்டைய மோட்டார் வாகனச் சட்டத்தின் 215 ஆம் பிரிவின்கீழ் சாலை பாதுகாப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது இந்தத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக் கொண்டு அங்கேயும் இதுபோன்ற ஒரு குழு நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த விதியிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளிலே ஏற்படுகின்ற விபத்துகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.



1999 ஏப்ரல் 30]

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகள் அநேகமாகக் கவனக் குறைவால் நடந்தாலும், சில சாலை விபத்துகள் கண்பார்வை குறைகின்ற காரணத்தால் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு உரிமம் பெற்றிருக்கின்ற அரசுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு 3 வருடம் அல்லது 5 வருடத்திற்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்து, கண் சரியான முறையில் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசோதனைகள் அடிக்கடி செய்யப்பட்டுத்தான் வருகின்றன. அதுமட்டுமல்ல, வயதானவர்கள், அதுபோல் பார்வை குறையுள்ளவர்கள் தாங்களாக ஓய்வு பெற வேண்டுமென்று விரும்பினால், அதற்கான தொகைகூட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. 8,500 என்பதை 9,000 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அவ்வாறு வயதின் காரணமாக, கண் பார்வைக் குறைவின் காரணமாகத் தாங்களாக ஓய்வுபெற விரும்புகிறவர்களுக்குத் தொகையைக்கூட இந்த அரசு உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகளிலே சிக்குகின்ற பயணிகளை, அங்கே சாலை வழியாகச் செல்கின்ற சக பயணிகள்கூட ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. ஏனென்றால் பல தொல்லைகள் வரும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, இப்போது ரயில்வே துறையிலே, விபத்துகளில் சிக்கியவர்களைக் கவனிப்பதற்காக மட்டும் தனி ரயில் பெட்டியை (Accident car) உருவாக்கியிருக்கின்றார்கள். அதுபோல, போக்குவரத்துத் துறையிலும், விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்கு ஏதாவது ஒரு நடமாடும் மருத்துவமனையை—நெடுஞ்சாலையில் உள்ள எல்லாப் பணிமனைகளிலும் பல வசதிகள் இருக்கின்றன—அத்தகைய வசதிகளைப் பயன்படுத்தி—ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 30

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மருத்துவத் துறையைப் பொறுத்த கேள்வி. இருந்தாலும்கூட, நெடுஞ்சாலைத் துறையிலே இதுபோன்ற முயற்சிகளிலே ஈடுபட்டு, போக்குவரத்து அதிகமாக உள்ள நெடுஞ்சாலைகளில் Ambulance வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று, மத்திய அரசின் மூலமாகச் சொல்லப்பட்டு, சென்ற ஆண்டு இங்கேயும் அது பல பகுதிகளிலே வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் தேசிய நெடுஞ்சாலைகளில், patrol செய்வதற்காக, காவல் துறையின் மூலமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்போது எல்லாம் ஓட்டுநர்கள் குடித்துவிட்டு ஓட்டுகின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற விபத்துகள் அதிகமாக நடைபெறுவதாக ஒரு கணக்கு இருக்கிறது. ஆகவே, குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டுவதை எப்படியாவது தடை செய்வதற்கு இன்னும் கடுமையான சட்டதிட்டங்களை நம்முடைய அரசு கொண்டுவருமா? அதேபோல, Dim and Dipper யாருமே அடிக்க மறுக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய ஓட்டுநர்களுக்கு இந்த Dim and Dipper அடிக்கக்கூடிய ஒரு கலையே தெரியவில்லை. அவர்கள்பாட்டுக்கு அந்த Dazzling light-ஐ போட்டுக்கொண்டு போகின்ற காரணத்தினாலே, கண் கூசுவதாலே, பல விபத்துகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதையும் தவிர்க்க வேண்டும். பொதுவாக, இப்போதெல்லாம் விபத்து ஏற்பட்டாலே ஒரு Private வண்டியிலே விழுந்து செத்துவிடலாம், அப்போதுதான் பணமாவது உடனடியாகக் கிடைக்கும் என்று எண்ணக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் சிக்கி யாராவது செத்தால் பணம் 8 வருடங்கள் 10 வருடங்கள் ஆனாலும்கூட கிடைப்பதில்லை. ஆகவே, சாகின்றவர்கள்கூட, ஒரு தனியார் வண்டியிலே விழுந்து செத்துவிடலாம் Insurance பணம் வரும் என்று கருதக்கூடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் விபத்தில் சிக்குபவர்களுக்கு உடனடியாகப் பணத்தைக் கொடுக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தற்கொலை முயற்சியிலே இப்போது ஈடுபட்டிருக்கிறார் என்பது சரியாகத் தெரிகிறது. தற்கொலை எப்படி செய்துகொள்ளலாம் என்பதிலே மிகவும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். தனியார் பேருந்துகளிலா, போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலா என்பது இருந்தாலும்கூட, அரசு என்று வருகின்றபோது அதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. அவைகள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று தீர்வு செய்யப்பட்டுதான் கொடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் தனியார் பேருந்துகளில் எல்லாம் வழக்கு மன்றத்திற்கே வருவதில்லை. அங்கே பேசி settlement செய்து, கட்ட பஞ்சாயத்து செய்து— உங்களுக்குத் தெரியும், அதன்மூலமாகவே— பணம் வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். அதுபோன்று உண்டு. ஆனால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே அதுபோன்று முடியாது. ஆகவேதான் சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது. அவைகளைக்கூட விரைவுபடுத்த வேண்டுமென்று இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு நீதிமன்றங்களுக்குச் செல்லாமலே ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் அவர்களே பேசி முடிவு எடுத்து, இன்று பல வழக்குகள் அந்தமாதிரி முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 571, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**571—**

**இருவழிச் சாலையாக மாற்றுதல்**

***9747—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழையூத்து கள்ளிமந்தையம் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[1999 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தாழையூத்து கள்ளிமந்தையம் சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் நிறைவேற்றப்படும்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் அந்தச் சாலையிலே 28/6-ன்கீழே கொள்ளூர் அருகே நல்லத்தங்காள் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் உள்ளது. அந்தப் பாலத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டித் தருவார்களா? அதுபோல, இந்தப் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆய்வில் உள்ளது என்று நான் தெரிவித்திருக்கின்றேன். தற்போது 3.75 மீட்டர் அகலம் உள்ள, ஒருவழிப்பாதையாக இருக்கின்ற இந்தச் சாலையை இருவழிச் சாலையாக ஆக்குவதற்கான பரிசீலனையில் துறை ஈடுபட்டிருக்கின்றது. அந்தச் சாலையை அகலப்படுத்துகிறபோது, பாலத்தையும் கட்டுவதற்காக ஆய்வு செய்யப்படும். வரும் நிதி ஆண்டில், இந்தத் திட்டம், நிதி நிலைக்கு ஏற்ப நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 572, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 30]

**572—**

**NABARD திட்டத்தில் பாலங்கள்**

***16839—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சாலைகளில் பல பாலங்கள் மரப் பாலங்களாகவே உள்ள நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், NABARD திட்டத்தின்கீழ் எடுத்துச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்தப்பட்ட விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) NABARD திட்டத்தின்கீழ் 1,000 மக்கள் தொகையும் அதற்கு மேலும் உள்ள கிராமங்களுக்குக் கிராமப்புற சாலைத் திட்டத்தில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 500 முதல் 1000 வரை மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு நெடுஞ்சாலைத் துறைக்கு அனுமதி வழங்கி உள்ளார்கள். அதன்படி நடப்பு ஆண்டில் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. கிராமப்புறச் சாலைத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் சாலைகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி சாலைகள்தான். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பினால் அந்தச் சாலை நடப்பு ஆண்டில் NABARD திட்டத்தின்கீழ், கிராமப்புறச் சாலைத் திட்டத்தின்கீழ் எடுத்து நிறைவேற்றப்படும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான பல சாலைகள் இப்போது உள்ளாட்சித் துறை மூலம் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. அதேபோல பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஆகியவற்றிலிருந்துகூட சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்தக் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் பணிகளை

[1999 ஏப்ரல் 30

எடுத்துச் செய்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. குறுக்கிடுகின்ற ஆறுகளிலே, பாலங்கள் இல்லாத காரணத்தினாலே, விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய விளைபொருட்களையும், இடுபொருட்களையும் எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, NABARD திட்டத்தின்கீழ் இதுபோன்ற பாலங்களுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்தான் R.R. திட்டத்தில், கிராமப்புற இணைப்புச் சாலைத் திட்டத்தில் NABARD உதவியின் மூலம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இது தவிர, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும், சில சாலைகள் தார்ச் சாலைகளாக அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இன்னின்ன சாலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்தால், அந்தக் கிராமப்புறச் சாலைகளும் சரி, பாலங்களும் சரி வரும் ஆண்டில் NABARD திட்டத்தின்கீழ், நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NABARD திட்டத்தின்கீழ் எடுக்கப்படுகின்ற சாலைகள் எல்லாம் paver இயந்திரங்கள் வைத்து செப்பனிடப்படுமா? பஞ்சாப் மாநிலத்தில் ஊராட்சிமன்ற சாலைகள்கூட NABARD திட்டத்தில் எடுக்கப்பட்டால், paver இயந்திரங்கள் மூலம்தான் புதுப்பிக்கிறார்கள். தமிழகத்தில் சென்ற ஆண்டு பல சாலைகள் paver இயந்திரங்கள் மூலம் போடப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு, சிறு ஒப்பந்தக்காரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக paver இயந்திரங்கள் இல்லாமல் அவர்கள் சாலை போடுகிறார்கள். அதனால் சாலைகளினுடைய தரம் மிகவும் குறைந்து இருக்கிறது. எனவே, புதுப்பிக்கின்ற எல்லாச் சாலைகளையும் paver இயந்திரங்கள் மூலம் புதுப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, paver இயந்திரங்கள் வைத்து சாலைகளைச் செப்பனிடுவதற்கு இந்த ஆண்டுகூட துறையில் 100 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பொதுவாக paver இயந்திரங்கள் வைத்து சாலைகளைச் செப்பனிடும்போது, அந்தச் சாலைகள் இருவழிச்



1999 ஏப்ரல் 30]

சாலைகளாக இருந்தால் உபயோகமாக இருக்கும்; ஒருவழிச் சாலைகளாக இருக்கிறபோது paver இயந்திரங்கள் சரியாக இயங்குவதற்குக்கூட வழியில்லாமல் இருக்கிறது; அது ஒன்று. இன்னொன்று, தமிழ்நாட்டில் paver இயந்திரங்கள் வைத்து இருக்கக்கூடிய Contractors மிகமிகக் குறைவாக இருக்கிறார்கள். கிராமப்புறச் சாலைகளை paver இயந்திரங்கள் வைத்துப் போடுவதற்கு துறை விருப்பமாகத்தான் இருக்கிறது. ஆனாலும்கூட paver இயந்திரம் வைத்து இருக்கக்கூடிய Contractors மிகமிகக் குறைவாகையினால் அந்தச் சாலைகளை விரைவாக முடிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. சிறிய contractors-க்கு வாய்ப்புத் தர வேண்டும் என்பதற்காகத் துறை முடிவு எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், அவர்களுடைய பகுதிகளிலே ஒப்பந்தக்காரர்களிடத்தில் சொல்லி, அனைவரும் paver இயந்திரங்கள் வாங்குங்கள் என்று அவர்களுக்கு ஊக்கம் அளித்து, ஏராளமான paver இயந்திரங்கள் தமிழ்நாட்டில் இருக்குமானால், அவர்களுக்குக்கூட முன்னுரிமை கொடுப்பதற்குத் துறை தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வியிலே இருக்கிற உள்ளாட்சி ஒன்றியச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருகிற TNADP., R.R. போன்ற துறைகள் மூலமாகச் செப்பனிடப்படுகின்றன. ஆனால் அதிலே வருகிற பாலங்கள் பழுதடைந்தால், அதைச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறபோது, அது நெடுஞ்சாலைத் துறையிலே இல்லை, உள்ளாட்சித் துறையினுடைய சாலை என்று சொல்லிவிடுகிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே பொருமன்னையூரில் 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பன்னீர்பாலம் என்ற பெயருடைய பாலம், இன்னும் சொல்லப்போனால் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களால் கட்டப்பட்டு, திறக்கப்பட்ட பாலம். அது ஒரு T.N.A.D.P.-லே வருகிறது. அதைப்பற்றி நான் ஒரு குறுகிய வினாவாக மாண்புமிகு அமைச்சரிடம் கையெழுத்துப் பெற்றுக் கொடுத்தும், அதை இந்தத் துறைக்கு அனுப்பாமல் உள்ளாட்சித் துறைக்கு அதை மாற்றி அனுப்பியிருப்பதாக அறிகிறேன். எனவே, இப்படிப்பட்ட சாலைகளில் வருகிற பாலங்களையாவது இந்தத் துறையே எடுத்து, செப்பனிட்டுத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 30

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரம் வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவேதான் இந்தச் சாலைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பையும் உள்ளாட்சித் துறைக்கே வழங்கலாம் என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது. ஆகவே, கிராமப்புறச் சாலைகள், இணைப்புச் சாலைகள் போடுகிறபோது, அந்த ஊராட்சிச் சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொண்டு, அந்தச் சாலைகளை முடித்து மறுபடியும் ஒன்றியத்திலே ஒப்படைத்து விடுவது; ஆனால் அதைப் பராமரிக்கின்ற செலவை ஒன்றியங்கள் ஏற்றுக்கொண்டாலும், அந்தப் பராமரிப்புத் தொகையை நெடுஞ்சாலைத் துறையிடத்திலே ஒப்படைத்து பராமரிப்புப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை செய்யலாம். அப்போதுதான் அது தரமாகவும் இருக்குமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் கிராமப்புறங்களிலுள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை போட்டாலும், அவற்றைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஒன்றியங்களிடம்தான் இருக்கின்றன. அந்தப் பராமரிப்புச் செலவையும் ஒன்றியங்கள்தான் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் அந்தப் பணியை நிறைவேற்றும் பொறுப்பை நெடுஞ்சாலைத் துறை செய்யத் தயாராக உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 573, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**573—**

### பிற மாநிலங்களில் தமிழ் மொழி

***15640—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களிலும் தமிழ் மொழியை வளர்க்கச் செயல் திட்டம் ஒன்றை தமிழக அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பிற மாநிலங்களில் தமிழ்மொழியை வளர்க்க செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, முதற்கட்டமாக மேற்கு வங்காளம் மற்றும் மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் தமிழ் மையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிப் புயல் பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப் போல,

“தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ், இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”.

நம் தாய் தமிழ் மொழியை, பிற மாநிலங்களில் வளர்க்க, அரசின் செயல் திட்டம் எந்த அளவுக்குச் சிறப்பு வாய்ந்த திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது? மேற்கு வங்காளத்திலும், மகாராட்டிரத்திலும் தொடங்க இருக்கும் அந்தத் தமிழ் மையத்தினுடைய பணி எந்த அளவுக்கு நிறைவேறியிருக்கிறது? அதுபோல, டெல்லி மற்றும் மற்ற அனைத்து மாநிலங்களிலும் இந்தத் தமிழ் மையங்களை அமைக்க அரசு எந்த வகையில் முயற்சித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கெல்லாம் புரட்சிக் கவிஞர் என்றால்தான் தெரியும். திடீரென்று எப்படிப் புரட்சிப் புயல் ஆனது என்று தெரியவில்லை. இருந்தாலும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்பதற்கும், திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்ய வேண்டும் என்பதற்குமான முயற்சி இது. இதில் வெளி மாநிலங்களும் அடங்கும். அந்தவகையில் இங்கே சென்னையில் இயங்குகிற இந்தி பிரச்சார சபாவிற்கு இணையாக, ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்ற தமிழ் மையங்களை அமைக்க வேண்டுமென்று விரும்பி, கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே அதற்காக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தவகையில் கல்கத்தாவில் இருக்கிற பாரதி தமிழ்ச் சங்கம் இடம் வழங்க முன்வந்திருக்கிறது. அங்கேயிருக்கிற தேசிய உயர்நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கு வாய்ப்பளிக்க

[1999 ஏப்ரல் 30

முன்வந்திருக்கிறது. எனவே, இந்த இரண்டு அமைப்புகளையும் சார்ந்து, ஓர் அலுவலர் மற்றும் சில உதவியாளர்களைக் கொண்டு, தக்க தமிழ் அறிஞர்களை அந்த ஊரிலிருந்தே தேர்ந்தெடுத்து, அங்கே கல்விப் பயிற்சி கொடுப்பதற்கும், தமிழ் வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கும் அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அதைப்போலவே, மும்பையிலும் அதேவகையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இரண்டு மாநிலங்களுக்காகவும் தொடர் செலவினமாக ரூ. 7 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ஆணை 5-6-1998-லே பிறப்பிக்கப்பட்டு, இப்போது அது செயல்படத் தொடங்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், டெல்லி போன்ற தமிழ்ச் சங்கங்களுக்கு ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 10 இலட்சம் வழங்கி, அந்த டெல்லித் தமிழ்ச் சங்கம் செய்கிற பணிகளை விரிவுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுபோக, மும்பை போன்ற இடங்களில், கல்கத்தா போன்ற இடங்களில் ஏற்கெனவே தமிழ்ச் சங்கங்கள் இயங்குகின்றன. அவர்களும் அதுபோன்ற பணிகளைச் செய்கிறார்கள். என்றாலும், தமிழக அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொண்டு மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் பணிகள் ஓராண்டுக்கு 2 பணிகள் என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான் தீவில் 5 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அதில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழர்கள். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர்கூட அந்தமான் சென்று வந்து, ஒரு நல்ல பயண நூலை எழுதியிருக்கிறார். அங்கிருக்கிற தமிழர்களுக்கு, தமிழர் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கேள்வித்தாள் ஆங்கிலத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். காரணம், அது யூனியன் பிரதேசமாக இருப்பதால், டெல்லியிலிருந்து ஆங்கிலத்தில் கேள்வித்தாள் வருகிறது. அது எங்களுக்கு மிகுந்த சிரமமாக இருக்கிறது என்று அந்தப் பெற்றோர்கள் சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அங்குள்ள 2 இலட்சம்



1999 ஏப்ரல் 30]

தமிழர்களுடைய குழந்தைகளுக்குத் தமிழிலேயே கேள்வித்தாள் வழங்குவதற்கும், மேலும் நல்ல தமிழ்ப் பள்ளிக்கூடங்களை உருவாக்குவதற்கும், கல்லூரியே இல்லை என்று சொல்வதால், அங்கே நல்ல கல்லூரியை ஏற்படுத்துவதற்கும் உதவி புரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமானைப் பொறுத்தவரையில், அவர்கள் சொன்னதைப்போல, அது நடுவண் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வருகிறது. என்றாலும்கூட, 3 முறை அந்த மாநிலத்திற்குச் சென்று முழுமையாகப் பார்த்து அறிந்தவன் என்ற முறையில் அங்கிருக்கிற தமிழ் வழியிலே பயிலுகின்ற பிள்ளைகளாக இருந்தாலும், வினாத்தாள் மட்டும் ஆங்கிலத்திலேயும், இந்தியிலும் இருக்கிறது என்ற குறை ஏற்கெனவே இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துப்படி, மைய அரசோடு தொடர்புகொண்டு, தமிழ் பயிற்று மொழியிலே உள்ள தேர்வுகளுக்கு தமிழிலேதான் வினாத்தாள் அமைய வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.. அதேநேரத்திலே, தமிழ்பயிற்று மொழியிலே எழுதுகிறவர்களுக்குப் பாடநூல்கள் ஆங்கிலத்திலே இருக்கிறது என்பதுதான் பெரிய குறை. எனவே, ஆங்கிலத்தில் நூல்கள் இருக்கின்றன. ஆசிரியர்கள் தமிழில் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆங்கிலத்திலே இருக்கிற நூலைப் படித்துவிட்டு, தமிழிலே எழுத வேண்டுமென்ற நிலை அங்கு நெடுநாட்களாக நிலவுகிறது. அதைப் போக்குவதற்காகத்தான் நான் முதன்முறையாக அந்தமான் சென்று வந்தபோது, நம்முடைய கல்லூரி ஆசிரியர்களைகொண்டு, சமூக அறிவியல் தொடர்பான நூலை, இந்த நாட்டிலேயே தயார் செய்து, அங்கு அன்பளிப்பாக நாம் வழங்கியிருக்கிறோம். எனவே, அது முதல்கட்ட முயற்சியாக, ஒரு தனிப்பட்ட கல்லூரி முயற்சி செய்து, இங்கிருந்து அன்பளிப்பாக அது கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்தப் பணியைத் தொடருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது, இடைப்பட்ட காலத்தில், நான் அந்தப் பணியில் இல்லாத காரணத்தால். எனவே, அரசே அந்த முயற்சியை மேற்கொண்டு அவர்களுக்கு வேறுசில வேதியியல், இயற்பியல் போன்ற பாடங்களிலும் இதுபோன்ற நூல்களை வழங்குவதற்கு ஆவன செய்ய முடியுமா என்பதை ஆய்வு செய்வோம். அதேநேரத்தில் அந்தமான் பகுதியில் நிறைய தமிழ் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நானே நிறைய தமிழ்ப்

[1999 ஏப்ரல் 30

பள்ளிக்கூடங்களில் பேசியிருக்கிறேன். அதிலே எந்தக் குறையும் கிடையாது. 12-வது வகுப்பு வரைக்கும் முற்றிலும் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கிறது. தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எல்லாப் பாடங்களிலும் தமிழ் வழியிலே பயிற்சி நடைபெறுகின்றன. எனினும், எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து மனதில் கொள்ளப்பட்டு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசானது திராவிட மொழிகளுக்குள்ளே ஓர் இணக்கத்தையும், திராவிடப் பண்பாடுகளை மேம்படுத்தக் கருதியும், திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவி வழங்கியது. எனவே, அந்தத் திராவிடப் பல்கலைக்கழகத்தினுடைய செயல்பாடுகள், தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த அளவில், தற்பொழுது எந்த அளவிற்குச் செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநில அரசினால் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு, குப்பம் பகுதியில் தொடங்கப்பட்டிருக்கிற திராவிடப் பல்கலைக்கழகம், அதனுடைய அடிப்படையானக் கட்டடப் பணிகள் முதலானவற்றைக்கூட இன்னும் முடிக்கவில்லை. எனவே, எப்படிப்பட்டப் பாடங்களை, அதாவது மொழிப் பாடங்களை அந்தப் பல்கலைக்கழகம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பது இனி வருகிற காலங்களில்தான் தீர்மானிக்கப்படும். அதிலே தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற முடியுமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறச் செய்ய கருதியிருக்கின்றனர். விவரமான முடிவு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 574, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 30]

**574—**

**உயர்நிலைப் பள்ளிக்குக் கோயில் நிலம்**

***15952—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், இடுவம்பாளையம், இடும்ப குமாரசுவாமி கோயில் நிலத்தினை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றக் கோரி அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் இடுவம்பாளையம், அருள்மிகு இடும்ப குமாரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள 30.04 ஏக்கர் நிலத்தில் 7.06 ஏக்கர் நிலத்தினைப் பள்ளிக்கூடம் கட்ட இலவசமாகக் கேட்கப்பட்டது. திருக்கோயில் நிலத்தை இலவசமாகக் கொடுக்க இயலாது. பள்ளிக்கூடத்திற்குத் தேவையான நிலத்தினை, சந்தை மதிப்புப்படி, தொகை செலுத்த முருகம்பாளையம் ஊராட்சிமன்றம் ஒப்புக்கொண்டால், பள்ளிக்கூடம் கட்ட இந்நிலத்தை அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் என்ன துணை வினா இருக்கிறது?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனின் பிள்ளைகள்தான் பள்ளிக் குழந்தைகள்.

ஆண்டவனுடைய இடத்தைப் பிள்ளைகள் அனுபவிப்பதைத் தார்மீக ரீதியாக—சட்ட ரீதியாக அல்ல—தடுக்க இயலாது. ஏனென்றால் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருவது நாம் எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் என்பதுதான். எனவே ஆண்டவனின் பிள்ளைகள் அமர்ந்து படிப்பதற்கு பொருத்தமான சட்டத் திருத்தத்தைச் செய்து, கல்விப் பணிக்காக அறநிலையத் துறை நிலத்தை இலவசமாக வழங்க வழிவகை செய்ய அரசு மறுசிந்தனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கின்ற அத்தனை பேருமே, அவருடைய கூற்றுப்படி ஆண்டவனின் பிள்ளைகள்தான். எனவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேரும், அவரவர்களும் நாங்கள் ஆண்டவனின் பிள்ளைகள்தான் என்று சொல்லி, ஆண்டவனுடைய இடத்தை எல்லாம் ஆக்கிரமித்துக்கொள்ள முயன்றால், அறநிலையத் துறையையே ஒட்டுமொத்தமாக, ஆண்டவனுடைய பிள்ளைகளிடத்திலே கொடுத்துவிடலாம். எனவே, இப்போது ஆளுகின்ற அரசு கண்டிப்பாக இலவசமாக வழங்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 575, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**575—**

### ஓமலூரில் பால் நிலையம்

***12884—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் பால் விநியோகம் செய்யும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூரில் பால் விநியோகம் செய்யும் நிலையங்கள் அமைக்க வாய்ப்பில்லை. முகவர்களை அமர்த்திப் பால் விநியோகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.





**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் நகரம் சேலம் மாநகராட்சி எல்லையை ஒட்டிய தேர்வுநிலைப் பேரூராட்சியாக இருக்கிறது. அது விரைவில் நகராட்சியாக ஆவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ள நிலையில், அங்கே மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, மக்களுடைய வசதியைக் கருதி, அங்கே பால் விற்பனை நிலையங்கள் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரில் பால் விற்பனை செய்ய முகவர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒரே ஒரு நபர் நியமிக்கப்பட்டார். 3-2-1999 முதல் பால் விற்பனை செய்யப்பட்டது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 30 லிட்டர் பால் மட்டும் அவரால் விற்பனை செய்யப்பட்டது. கடந்த 29-3-1999 முதல் பால் விற்பனை செய்ய இயலாது என்று அவர் தெரிவித்துவிட்டார். அதற்கு முன்பு 4 முகவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களும் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் யாரையாவது பரிந்துரை செய்து முகவராக நியமித்தால் கண்டிப்பாக அனுமதி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 576, திரு. செங்கை சிவம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**576—**

### நிலைப்படுத்திய ஆவின் பால் விற்பனை

***22409—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல்வேறு தனியார் விற்பனை அங்காடிகளில் நிலைப்படுத்திய ஆவின் பால் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1999 ஏப்ரல் 30

(ஆ) சென்னை நகரில் தனியார் கடைகள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 7000 லிட்டர் நிலைப்படுத்திய பால் விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் தற்சமயம் 218 முகவர்கள் மூலம் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைப்படுத்திய பாலினுடைய தரம்— Grade என்ன? இப்பாலைத் தமிழகம் முழுவதும் விற்க ஏற்பாடு செய்யப்படுமா? தற்போது ஒரு நாளைக்கு எவ்வளவு விற்கப்படுகிறது? அதுமட்டுமல்லாமல் ஆவின் மற்றும் தனியார் துறைகள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் துணை வினாவில் 5 வினாக்களைச் சேர்த்து கேட்க முடியாது, இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். இதுவரையில் கேட்ட வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைப்படுத்திய பாலினுடைய கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதமும், இதர சத்துக்கள் 8.5 சதவிகிதமும் ஆகும். ஆவின் நிறுவனம் மூலம் லிட்டர் ஒன்று 12 ரூபாய்க்குத் தற்போது சென்னை மாநகரில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 577, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**577—**

### சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***18099—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளியில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளியிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 578, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**578—**

### கால்நடை மருத்துவப் பார்வை நிலையங்கள்

***15286—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதியில் கால்நடை மருத்துவப் பார்வை நிலையங்கள் அமைக்கக் கோரி அரசிற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையிலே நானே பெருந்துறை தொகுதியிலே பல்வேறு இடங்களிலே கிளை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று, விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன்; அதன்மீது எந்தவிதமான தகவலும் அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார். எனவே, அதுகுறித்து ஆய்வு செய்து தேவையான இடங்களில் மருத்துவக் கிளை நிலையங்கள் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 30

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களது கோரிக்கையின்படி, அவருடைய பரிந்துரையில், ஏற்கெனவே அந்தத் தொகுதியில் செயல்பட்டு வருகின்ற கால்நடைக் கிளை நிலையங்களான பாலப்பாளையம், பெரியவெட்டுவப்பாளையம், விஜயமங்கலம், வீரணம்பாளையம், புதூர், பள்ளக்கவுண்டன்பாளையம், திங்களூர், பெட்டான்பாளையம், நல்லான்பட்டி, புதுக்குமாரபாளையம், கன்னிவாடி ஆகிய இடங்களில் உள்ள கால்நடைக் கிளை நிலையங்களுக்கு, முறையாக இஞ்சிப்பாளையம், பணிக்கம்பாளையம், பொன்முடி, பட்டக்காரன்பாளையம், நடுப்பட்டி, பாப்பம்பாளையம், நாகப்பபாளையம், ராமநாயக்கனூர், சித்தாம்பாளையம், காசிப்பாளையம் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் 23-1-1998 முதல் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருவதாகத் துறையின் சார்பிலே குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. இதில் ஏதாவது தொடங்கப்படவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 579, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**579—**

**கால்நடைப் பண்ணை அமைத்தல்**

***19106—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்க அரசு முயற்சிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதியில் தனியாக ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரணமல்லூர் தொகுதியிலே நாளொன்றுக்கு 60,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் செல்கிறது. அதேபோல, தினந்தோறும் ஆயிரம் கால்நடைகள், குறிப்பாக ஆடுகள், இறைச்சிக்காக வெளிமாவட்டங்களுக்கும் சென்னைக்கும் வருகின்றன. அதாவது, என்னுடைய தொகுதியிலே ஒவ்வொரு இல்லத்திலும் ஒவ்வொரு கால்நடை இருக்கிறது. போதுமான அளவில் அறிவியல் ரீதியான பயிற்சியும், அதைப்போல உறைவிந்து மூலம் கருவூட்டல் பயிற்சியும் கால்நடை மருத்துவர்களுக்குச் சொல்லிக் கொடுக்காத காரணத்தால் கால்நடை உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. சரியான பயிற்சிகள் கிடையாது. எனவே, இதை அரசு கருத்தில்கொண்டு, ஏற்கெனவே 8 கால்நடைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன, 9-வது கால்நடைப் பண்ணையாக, எனது தொகுதியிலே மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, கால்நடைப் பண்ணை ஒன்றை அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் ஏழு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளும், ஓர் உயரினக் கால்நடைப் பெருக்குப் பண்ணையும், மூன்று ஆட்டுப் பண்ணைகளும் செயல்பட்டு வருகின்றன. மாவட்டந்தோறும் கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைக்கக் குறைந்தது 500 ஏக்கர் பரப்பளவு நிலம் தேவை. மேலும், கால்நடைப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான நிலத்தடி நீர் வளம், கால்நடைகளுக்கான கொட்டகை வசதிகள் மற்றும் அதற்குத் தேவையான மனிதவள சக்திகள்

[1999 ஏப்ரல் 30

இவற்றையெல்லாம் அமைக்க பெருத்த நிதிவசதி தேவைப்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு பார்க்கும்போது புதிதாக மாவட்டக் கால்நடைப் பண்ணை தோற்றுவிப்பதற்குப் பதிலாக ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாவட்டக் கால்நடைப் பண்ணைகளைப் பலப்படுத்தி, தமிழக விவசாயிகளுக்குத் தேவையான, தரமான கால்நடைகள் மற்றும் கோழி இனங்கள் ஆகியவற்றை அரசு நிர்ணயிக்கும் நியாயமான விலையில் விற்பனை செய்து, பால், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியைப் பெருக்குவதே இவ்வரசின் நோக்கம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கருவூட்டல் செய்தல் மற்றும் இனப்பெருக்கம் போன்ற அந்தச் செயல்முறைகளைத் தற்போது செய்வதற்கு 3510 கருவூட்டல் நிலையங்களும், 2126 கால்நடைக் கிளை நிலையங்களும், அதைப்போல பார்வைக் கிளை நிலையங்களாக 2126-ம் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, அதன்மூலமாக இவற்றையெல்லாம் செயல்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 580, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**580—**

## ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

***22618—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாணிப்பாடியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் தாணிப்பாடியில் தொடக்கப் பள்ளிகளிலே



1999 ஏப்ரல் 30]

300-க்கும் அதிகமான ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் கிடைக்கின்ற நலத் திட்டங்களையும், உதவிகளையும் முழுமையாகப் பெறாத நிலையிலுள்ள அந்த மாணவர்களுக்கு ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் தொடக்கப் பள்ளி தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதோடு, என்னுடைய தொகுதியிலுள்ள சு.பாப்பம்பாடி, கீழ்வணக்கம்பாடி ஆகிய இடங்களில் ஆதிதிராவிட நலத் துறையின் கீழ் இயங்குகின்ற ஆரம்பப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தருவார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் பள்ளிகள் தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை. தொடக்கப் பள்ளிகள் கல்வித் துறையின் மூலமாகத் தொடங்கப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 22 பள்ளிகள் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு அருகில் தொடங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் 18 விழுக்காடு பள்ளிகள் தொடங்கப்படும் என்று கல்வி இலாகா முடிவெடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே தாணிப்பாடி கிராமத்திற்குப் பள்ளி தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் மணிவர்மா அவர்களிடமிருந்து முன்மொழிவு இதுவரை வரவில்லை. ஆகவே, அப்படி வரப்பெற்றால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு, கல்வித் துறைக்கு அனுப்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இரண்டு பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேட்கிறார். எதிர்காலத்தில் நிதிநிலைமை இடம் கொடுத்தால், கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இருந்தால் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*[1999 ஏப்ரல் 30*

## 3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக ஆக்குதல் குறித்து ஆய்வு செய்யக் குழு அமைத்தல் பற்றி கல்வி அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க வேண்டும் என்று அனுமதி வேண்டியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பாடமொழியாக ஆக்குவது குறித்து ஆய்வு செய்யக் குழு அமைத்தல் தொடர்பாகத் தமிழ் அறிஞர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். ஒன்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் இருக்க வேண்டும். 6 ஆம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்படலாம். 2. பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ் வழிப் பாடநூல்கள் தயாராகவும், அறிமுக நிலையிலும் இருப்பதால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். 3. தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி பயின்றவருக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும்.

மேற்குறிப்பிட்ட 3 கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் அறிஞர்கள் உண்ணாநோன்பு இருந்தனர். அதனையொட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது வேண்டுகோளினை ஏற்று, உண்ணாநோன்பைக் கைவிடுமாறு தமிழ் அறிஞர்களைக் கேட்டுக்கொண்டார். அதில் தமிழ் அறிஞர்களின் கோரிக்கை குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதன்படி பின்வருபவர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படுகிறது. நீதியரசர், திரு. மோகன், குழுத் தலைவர், முனைவர் வ.செ. குழந்தைசாமி, முன்னாள் துணை வேந்தர், முனைவர் ச. முத்துக்குமரன், முன்னாள் துணை வேந்தர், முனைவர் தமிழ் அண்ணல், புலவர் இரா. இளங்குமரன்.





இந்தக் குழு ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வழிகாட்டிக் குறிப்பினை வழங்கியுள்ளார். Terms of Reference. தமிழ்நாட்டில் கல்வித் துறையில் அனைத்து மட்டங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக அமைந்திட தமிழக அரசு கொள்கை ரீதியாக விரும்புகிறது. குறிப்பாக, இளஞ்சிறார்கள் பள்ளிகளில் தங்கள் கல்வியை தாய் மொழியாம் தமிழ் மொழியிலேயே பெற வேண்டும் என்றும் தமிழக அரசு விரும்புகிறது. இந்தக் கொள்கையை நோக்கி முன்னேற முதற்கட்டமாக ஓர் ஆணையையும் அரசே பிறப்பித்துள்ளது. எனவே, தமிழ் அறிஞர்கள் வைத்துள்ள கோரிக்கைகளையும், அரசின் சார்பில் வழங்கப்படும் வழிகாட்டிக் குறிப்புகளையும் ஒருசேர அலசி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு விரைவில் கூடி எவ்வெவ்வகையில் எல்லாம் தமிழ் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்குமோ, அவற்றை ஆய்வு செய்து தங்கள் பரிந்துரைகளை 31-5-1999-க்குள் அரசிடம் வழங்குமாறு வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வீராணம் ஏரி வாய்க்கால்களைப் பொதுப்பணித் துறையின் மூலம் தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. வீராணம் ஏரியிலிருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால்களில் வருவாய்த் துறையின்கீழ் வரும் 26 வாய்க்கால்களைப் பொதுப்பணித் துறையின்கீழ் கொண்டுவர வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருக்கிற பெரும்பாலான கால்வாய்கள் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் வருவாய்த் துறை அவைகளைச் சீரமைப்பதே கிடையாது. காரணம் அவர்களிடம் போதிய நிதி வசதி இல்லை. எனவே, பொதுப் பணித் துறையே வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்துக் கால்வாய்களையும் எடுத்து, அவைகளைத் தூர் வாரி, இரண்டு பக்கங்களிலும் சிமெண்டால் lining செய்து, தண்ணீர் விரயமாகாமல் தடுத்து, அவைகளைச் சீர் செய்ய பொதுப்பணித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருந்து மொத்தம் 34 கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன. இந்த 34 கால்வாய்களில் வருவாய்த் துறையின்கீழ் வருபவைகள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவருடைய சிறப்புக் கவன ஈர்ப்பில் குறிப்பிட்டிருப்பதைப் போல 26 அல்ல, மொத்தம் 29. மீதி 5 மட்டும்தான் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவை. இந்த 29 கால்வாய்களில் தூர் வார வேண்டுமென்று, 1998 ஆம் ஆண்டு, ஜூன், ஜூலை மாதங்களில் அரசு திட்டமிட்டு, அதன்படி தூர் வாரப்பட்டது. 20 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டது. இந்த 29 கால்வாய்களில், 26 கால்வாய்களை எடுத்துக்கொண்டு, 106 கிலோமீட்டர் தூரத்திற்குத் தூர் வாரியிருக்கிறோம். ஆனாலும், அது போதாது. அதற்காகத்தான் 110 கோடி ரூபாய் புதிய வீராணம் திட்டத்திற்கு குடிநீர்பெற வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த 34 கால்வாய்களையும், அவை பொதுப்பணித் துறையின்கீழ் வந்தாலும் சரி, வருவாய்த் துறையின்கீழ் வந்தாலும் சரி, அவற்றைச் சரி செய்வதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அடுத்து, வேலைகள் ஆரம்பிக்கப்படும். எனவே, வருவாய்த் துறையின்கீழ் இருக்கிற காரணத்தினால், நிதி போதாது என்ற காரணத்தினால், தூர் வாருகிற பிரச்சினை தள்ளிப்போடப் படமாட்டாது.

முற்பகல் 10-40

## 5. கவன ஈர்ப்பு

### (அ) தொப்பூர் மலைப் பாதை வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கு. மனோகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி தொகுதி, தொப்பூர் மலைப் பாதையில் உள்ள N.H.7, தேசிய நெடுஞ்சாலைக் குறுகலாக இருப்பதால், விபத்துகள் ஏற்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை





மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

ரூ. 25 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலை-7-ல் கி.மீ. 156/0-லிருந்து 163/4 வரை உள்ள தொப்பூர் மலைப் பாதையை நான்கு வழிப்பாதையாக மாற்றும் பணி 1998-1999 ஆம் வருடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மைய அரசு இப்பணிக்கான மதிப்பீட்டையும், ஒப்பந்தக் குறிப்புகளையும், அங்கீகரிக்கப்பட்ட கருத்துரைஞர் (approved consultant), மூலம் முதன்மை முக்கியத்துவம் அளித்து தயாரிக்கும்படி கேட்டிருந்தது. இதன்படி இப்பணிக்கான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தக் குறிப்புகள் தயாரிக்கும் பணி 'ரைட்ஸ்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது நில ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நில ஆய்வுப் பணிகள் முடிந்து, மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்குப் பின்பு இப்பணி தொடங்கப்படும்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில், ரூ. 25 கோடிக்கு ஒரு திட்டம் எடுக்கப்பட்டு, அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளித்து, நில ஆய்வுப் பணிகள் நடைபெறுவதாகவும், அந்தப் பணிகள் முடிவுற்றதும், இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை குறித்து நான் கவன ஈர்ப்பு கொடுத்து வருகிறேன். இதேபோன்ற பதிலைத் துறை கொடுத்து வருகிறது. அந்தப் பாதை மிக முக்கியமான பாதை. தொப்பூர் மலைப் பாதையில் தினம் தினம் விபத்துகள் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான போக்குவரத்து வாகனங்கள் பாதிக்கப்பட்டு, அந்தப் பகுதி தினமும் ஸ்தம்பிக்கும் பகுதியாகவே காட்சியளிக்கிறது. கடந்த வாரம்கூட, 2 நாட்கள், 5 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஆகவே,

[திரு. கு. மனோகரன்] [1999 ஏப்ரல் 30

இத்திட்டத்தை விரைவுபடுத்தி, ஆய்வுப் பணிகளை முடித்து, இவ்வாண்டே இத்திட்டத்தை எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாகும். தேசிய நெடுஞ்சாலை எண் 7. இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கோ, உறுதிப்படுத்துவதற்கோ அல்லது நேர்ப்படுத்துவதற்கோ எடுத்துக்கொள்ள வேண்டுமானால், மத்திய அரசுதான் நிதி வழங்க வேண்டும். எனவே, மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி, தொப்பூர் Ghat Road, மலைப் பாதைச் சாலையை, நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று துறையின் சார்பில் வலியுறுத்தி, நேரடியாக டெல்லிக்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளோடும், அமைச்சரோடும் பேச்சுவார்த்தை நடத்தி, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, அதற்கு அனுமதியும் அளித்திருக்கிறார்கள். இந்த மலைப் பாதைச் சாலையை விரிவுபடுத்துவதற்கு, நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுதவிர, தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐ வேறு பல இடங்களிலேயும் விரிவுபடுத்துவதற்கு, நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தர்மபுரி நகரத்திலேகூட, நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியை ஆய்வு செய்யும் பணி—consultancy—மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்துத் துறையிலே இருக்கிற பட்டியலில் கண்டுள்ள 'ரைட்ஸ்' என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த consultancy தான் மதிப்பீட்டையும் தயாரிக்க வேண்டும்; ஒப்பந்த அறிக்கையையும் அவர்கள்தான் தயாரிக்க வேண்டும். இதுதான் முறை. எனவே, அவர்கள் தயாரித்து முடித்தவுடன் tender விடப்படும். இந்தப் பணி, இந்த ஆண்டேகூட நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 30]

## (ஆ) செங்கோட்டை — சாம்பவர் — வடகரை சாலையில் பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கே. ரவி அருணன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு நெடுஞ்சலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை-சாம்பவர்-வடகரைச் சாலையில் நித்திய கல்யாணி அம்மன் கோவில் அருகே பாலம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளதாலும், தற்காலிகப் பாலம் அமைக்கப்படாததாலும், பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10-45

***மாண்புமிகு திரு. பரிதி பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் செங்கோட்டை—சாம்பவர்—வடகரைச் சாலையில் கி.மீ.0/4-ல் ஹரிகரா நதியின் குறுக்கேயுள்ள பாலமாகும். அரசாணை எண் 644, விவசாயத் துறை, நாள் 16-11-1994-ன்படி மேற்கண்ட பாலத்தினை திரும்பக் கட்டும் பணிக்கு ரூ.30.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பால வேலையானது தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் 23-10-1997-ல் ஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்ட பால வேலையானது தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தி திட்டக் கோட்டம், திருநெல்வேலி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாலத்தின் தற்போதைய, நிலை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

1. அடித்தளம் வேலை 50% முடிந்துள்ளது;

2. செங்கோட்டை பக்கமுள்ள பகுதியில் ஒரு தூண் முடிவடைந்துள்ளது மற்றும் abutment 2.5 மீட்டர் உயரம் கட்டப்பட்டுள்ளது.

3. வெள்ளத்தின்போது சேதமடைந்த பாலம் உடைக்கப்பட்டு வருகிறது.

பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் பொதுமக்களின் போக்குவரத்திற்காக மாற்றுப் பாதை அமைக்கப்பட்டது. தற்காலிக மாற்றுப் பாதையானது கடந்த 1998-ல் ஏற்பட்ட வெள்ள மழையினால் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்பேரில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணி நிதியின் மூலம் ஒரு மரப்பலகை நடைபாதை பாலம் ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரும்பு தாங்கிகளை அடுக்கி (ஸ்டீல் க்ரைல்ஸ்) 26.00 மீட்டர் நீளத்திற்கும், 2.00 மீட்டர் அகலத்திற்கும் மரப் பலகையிலான நடைபாதைப் பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.1.25 இலட்சத்திற்கு வெள்ள நிவாரணப் பணியின்கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் நிருவாக ஒப்புதல் பெற்று, இந்நடைபாதைப் பாலம் அமைக்கப்பட்டு, தற்பொழுது போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பாலத்தைக் கட்டுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. விரைவில் பாலம் கட்டி முடிக்கப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-2-1999 அன்று நான் இந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த உடனே உடனடியாக செயல்பட்டு மாற்றுப் பாதையை அமைத்துத் தந்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும்கூட, இந்தப் பாலம் கட்டுகிற பணி தொடங்கப்பட்டு இரண்டரை ஆண்டு காலம் ஆகிறது. கடந்த ஆறு மாத காலமாக எந்தவிதப் பணியும் நடக்காமல் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுக் கட்டுமானக் கழகத்திற்கும், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த வேளாண்மை அபிவிருத்தித் திட்டக் கோட்டத்திற்கும் அடிக்கடி ஏற்படுகின்ற கருத்து வேறுபாடு காரணமாக, இந்தப் பாலம் கட்டும் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் அவர்கள் இப்போது நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக



இங்கே தெரிவித்தார்கள். எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலேயே எல்லா செய்திகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்திருக்கின்றேன். இந்தப் பாலம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 30.90 இலட்சம் ஆகும். இப்பணி தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பணியை நிறைவேற்றுவதிலே தடங்கல் இருந்ததை நான் ஒத்துக்கொள்கிறேன். இப்போது, அந்தத் தடங்கல் விலக்கப்பட்டு, பணி விரைவாக, நடைபெறுகிறது. இந்தப் பணி நடைபெறும்போது, மாற்றுப் பாதை அமைக்கப்பட்டிருந்தது, அந்த மாற்றுப் பாதை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட மாற்றுப் பாதைக்கு இன்னொரு மாற்றுப் பாதை வேண்டுமென்று, அந்தப் பகுதி மக்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து ரூ. 1.2 இலட்சம் நிதியைப் பெற்று, மரப்பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இரு சக்கர வாகனங்கள் மற்றும் மக்கள் நடந்து போகிற வாய்ப்பு, இவைகள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுமானப் பணியில் இப்போது அடித்தள வேலை 50 சதவிகிதம் முடிவுற்று இருக்கிறது. செங்கோட்டை பக்கமுள்ள பகுதியில் ஒரு தூண் அமைக்கும் வேலை முடிவடைந்துள்ளது. அபட்மென்ட் 2.5 மீட்டர் உயரம் கட்டப்பட்டுள்ளது. வெள்ளத்தின்போது சேதம் அடைந்த பாலம் உடைக்கப்பட்டு வருகிறது. ஆகவே, விரைவில், இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. ரங்கநாதன், குழுவின் தலைவர்.

*** திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான

[திரு. ப. ரங்கநாதன்] [1999 ஏப்ரல் 30

பொதுக் கணக்குக் குழுவின் 179 முதல் 183 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ஆ. நடராசன், குழுவின் தலைவர்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 78 முதல் 82 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. தகவல் கோரல்

### சந்தனக் கடத்தல் வீரப்பன் மூன்று வன ஊழியர்களைக் கடத்திச் சென்றது

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பன் மூன்று வன ஊழியர்களை ஏற்கெனவே கடத்திச் சென்று அவர்களை வைத்திருக்கிற காரணத்தால்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து உங்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்தால் எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். உட்காருங்கள். முதலமைச்சர் அவர்களிடம் கலந்துகொண்டு பிறகு பதில் சொல்லச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

## 8. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, 1999-2000 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 98,65,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4655, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் நலன் கருதி அவர்களுக்கு வேலூர் ஊராட்சி ஒன்றியம் கருகம்பத்தூர், அலமேலுமங்காபுரம் ஆகிய கிராமங்களில் மருத்துவமனைகளையும் வீடுகளையும் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1995, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் அரசின் சலுகைகள் கிடைக்க வகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4323, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிர்வாகமும், தொழிற்சங்கமும் ஏற்படுத்திக்கொள்ளும் தொழிற் தகராறு சட்டம் 12(3)இன்கீழ் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களை அரசுத் துறைகள் அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3339, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கும் அரசு எல்லா சலுகைகளையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3545 திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2354, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரிய தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போன்று விவசாயத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் அரசு எல்லா சலுகைகளும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3782, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவகத் தொழிலாளர்களுக்கென தனியாக தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2778, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு என வாரியம் அமைத்து அனைத்துத் தொழிலிலும் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள், சலுகைகள் கிடைக்கச் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4394 திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, தளவாயில் உள்ள ராம்கோ, சங்கர் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு நிலம் கொடுத்த அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3039, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2231, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய சந்தா தொகையை வருடத்திற்கு ரூ.100 என மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4050 திரு. அ.வ. அப்துல் நாசர். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2555. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீண்ட நாட்களாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் நபர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3717, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவு விடுதிகளில் துப்புரவுப் பணிகளுக்கு குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதைக் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2729, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு பதிவைப் புதுப்பித்திட சலுகை வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,65,22,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துக்

---

@ 159 முதல் 260 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் இந்த விவாதத்தில் பேச இருக்கிறார்கள். காலத்தின் அருமை கருதி தங்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து எனது கருத்துகளை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, தொழில் துறையும் வேளாண்மைத் துறையும் இணைந்து சிறப்பாகச் செயல்பட்டால்தான் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்க முடியும். இப்படிப்பட்ட சூழலில் நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே உரையாற்றுகின்றபோது, தமிழகம் இந்தியாவிலேயே தொழில் துறையிலும், ஏற்றுமதித் துறையிலும் முதல் நிலையிலே சிறப்பாக இருக்கக்கூடிய சூழ்நிலையும், மொத்தமாக இந்திய நாட்டினுடைய ஒதுக்கீட்டிலே 11.50 சதவிகிதம் என்ற அளவிற்கு நம்முடைய தமிழகம் இருக்கிறது என்றும் குறிப்பிட்ட பெருமையான சூழ்நிலை, எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக, இன்று இந்திய நாட்டிலேயே நூற்பாலைகள் எல்லாம் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி தமிழகம் என்பதை எல்லோரும் உணர்ந்து இருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். இப்படிப்பட்ட சூழலில் நூற்பாலைகளிலே பணியாற்றக்கூடிய 2 இலட்சத்திலேயிருந்து 2 ½ இலட்சத்திற்கு மேலான தொழிலாளர்கள் கட்சிமாச்சரியம் இல்லாமல் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து, அரசிடம் கூக்குரல் இட்டு, மூடிய ஆலைகள், மூடக்கூடிய அபாயத்தில் இருக்கக்கூடிய ஆலைகள், தடுமாறிக் கொண்டிருக்கக்கூடிய ஆலைகள் எல்லாவற்றையும் சரி செய்து கொடுக்க வேண்டும் என்றும் எங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றக்கூடிய



அளவிற்கும், எதிர்கால வாழ்விற்கு ஏற்ற வகையிலும், தேவையான ஊதியம் கிடைக்க மத்திய மாநில அரசுகள் முனைப்போடு செயல்பட்டு, செய்து கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இதில் அரசு தங்களால் முடிந்த அளவிற்கு உதவி செய்ய வேண்டும். எதிர்காலத்திலே நூற்பாலைகள், அதேபோல், கோயம்புத்தூரிலே இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய வார்ப்பகங்கள் ஆகியவற்றிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் ஆலைகள் மூடக்கூடிய நிலையிலே, பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள சூழ்நிலையை மாற்றி அமைத்து, நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு, அதுபோல வார்ப்பகங்களிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு, வாழ்வு கொடுக்கக் கூடிய அளவிற்கு இந்த அரசு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேள்வி கேட்ட நேரத்திலே, பழையன கழிதலும், புதியன தோன்றுதலும் இயல்பே என்ற கருத்தைக் கூறினார்கள். இன்று பல்வேறு கார் தொழிற்சாலைகள் எல்லாம் புதியதாக ஆரம்பிக்கப்பட்டு தொழில் துறையிலே கார் தொழிற்சாலைகளும், பல்வேறு புதிய தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டாலுங்கூட பழைய தொழிற்சாலைகள் எல்லாம் ஒழுங்காக, சிறப்பாக நிருவகிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கினால்தான், தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு எல்லாம் ஒழுங்கான வாழ்வு கிடைக்கும். ஆகவே, அந்தப் பழையனவற்றை மறந்து புதியனவற்றை மாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல், பழைய ஆலைகளையும் புதுப்பிக்கக்கூடிய அளவிற்கு, நவீன அறிவியல் தொழில் நுட்பங்களானாலும் சரி அல்லது நிதியாதாரமாக இருந்தாலும் சரி, அவற்றைக் கொடுத்து உதவக்கூடிய வகையிலே, தனியார் ஆலைகளாக இருந்தாலும், அவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

குறிப்பாக, பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் எல்லாம், Auditor-களினுடைய கணக்கின்பிரகாரம் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குவதாகப் புள்ளி விவரத்திலே கூறியிருப்பதை நீங்களெல்லாம் அறிந்திருப்பீர்கள். அரசின் மூலமாக உதவி செய்து, அந்த ஆலைகள்

எல்லாம் நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில், அந்த நிலையிலே தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய தனியார் ஆலைகளாக இருந்தாலும் அதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை, தேவையான தொழில் நுட்பங்களை, அரசின் மூலமாகச் செய்து கொடுத்து, அவைகளும் சிறப்பான முறையிலே இயங்குவதற்கு ஏற்றவகையிலே செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது குறிப்பாக நாட்டினுடைய தாராளமயக் கொள்கையின் மூலமாக மற்ற நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில், கடுமையான சூழலாக இருந்தாலும்கூட, திறமையாகப் பொருள்களை உற்பத்தி செய்து, இப்போது நாட்டிலே போட்டி போடக்கூடிய சூழலில், எதிர்காலத்திலே நாம் சிறப்பாக மனித சக்தியை, இங்கே இருக்கக்கூடிய திறனை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு அரசு எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்று பல்வேறு கட்டமைப்புகள் இருந்தாலும்கூட தொழிற்சாலைகள் நசிந்துகொண்டு போகக்கூடிய சூழ்நிலையில், மின்சாரம் சீராகக் கிடைத்தாக வேண்டும். இப்போது மின்சாரம் சீராகக் கிடைக்காத சூழ்நிலையிலேயும், பல்வேறு காரணங்களினாலே, கடந்த ஆண்டிலே மின்சாரக் கட்டணங்களையெல்லாம் ஆலைகளுக்கு அதிகப்படுத்திய காரணத்தினாலேயும், தடுமாறிக் கொண்டிருக்கக்கூடிய அந்த நூற்பாலைகளின் நிர்வாகிகளுக்கெல்லாம் உதவிகரமாக, பழைய நிலையிலே கொண்டுவந்து, அந்தத் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, தொழில் துறை சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அவைகளை நிருவகிக்கக்கூடிய நிருவாகத்திலே இருக்கக்கூடிய நிருவாகிகளும் அந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களும் அத்தனைபேரும் ஏகோபித்து, ஒற்றுமையாகச் செல்ல வேண்டும். மாட்டு வண்டியிலே 2 மாடுகளைக்கட்டி ஓட்டுகின்றபோது இரண்டும் ஒன்றாக, ஒற்றுமையாகச் சென்றால்தான் போக வேண்டிய இடத்தை அடைய முடியும் என்பதைப்போல, தொழில் துறையிலே இருக்கக்கூடிய நிருவாகிகளும், தொழில் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளிகள் அத்தனைபேரும் ஏகோபித்து, மனம் ஒத்து, சிறப்பான முறையிலே



பணியாற்றி மற்ற நாடுகளோடு போட்டி போட்டு நாமும் சிறப்பாக பொருள்களை உற்பத்தி செய்ய முடியும். நம்முடைய முழு சக்தியையும் திறனையும் உபயோகித்து, இந்திய நாடு தலை நிமிரக்கூடிய அளவில் பொருள்களை உற்பத்தி செய்து, மற்ற நாடுகளோடு போட்டி போடக்கூடிய அளவிற்கு நாட்டை எண்ணி, நமது தேசத்தை எண்ணி அத்தனைபேரும் ஒற்றுமையாகச் செயல்படுவதற்கு ஏற்றவகையிலே இங்கே அரசு செயல்பட்டு, எதிர்காலத்திலே தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், பஞ்சு விலையேற்றம் என்று ஒரு புறத்திலே கூறுகின்றார்கள். விவசாயிகள் பஞ்சுக்கு விலை போதவில்லை என்று மறுபுறத்திலே கூறுகின்றார்கள். எதிர்காலத்திலே பஞ்சை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று நூற்பாலையிலே இருக்கக்கூடியவர்கள் கூறக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, மத்திய, மாநில அரசுகள் பேசி பஞ்சுக்கு நியாயமான விலையை விவசாயிகளுக்குக் கொடுத்து, அதேநேரத்தில் தரமான பஞ்சை, நியாயமான விலையிலே நூற்பாலைகளுக்குக் கொடுத்து, எதிர்காலத்திலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படக்கூடிய நிலையை, விரைவாகத் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த வாரத்திலே சட்டமன்றத்திலே கூறுகின்றபோது, மூடப்பட்டிருக்கக்கூடிய ஆலைகள் 43, தற்காலிகமாக மூடப்பட்டு இருக்கக்கூடிய ஆலைகள் 19 என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த 43 ஆலைகள் மற்றும் 19 ஆலைகள் மாத்திரமல்ல, இப்போது பல்வேறு, பெரிய ஆலைகள், நடுத்தர ஆலைகள், சிறு சிறு ஆலைகளை மூடிக்கொண்டிருக்கக்கூடிய, மூடுகின்ற அபாயத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையை, மூடுவதற்கு முன்பாகவே மாற்றியமைத்து, தொழிலாளர்கள் சிறப்பாக வேலை செய்யக்கூடிய அளவிற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, தொழிலாளர்களின் பெயரில் E.P.F., மற்றும் L.I.C. போன்றவற்றுக்குக் கட்ட வேண்டிய பணத்தையெல்லாம் தொழிற்சாலைகள் கட்டுவதில்லை. நிதியாதாரம் போதாத காரணத்தினாலே, இன்று பல்வேறு தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் குறித்து அரசு விதிகளின் மூலமாகச்

சொல்லியிருந்தாலும்கூட, அந்த விதிகளை முழுமையாகச் செம்மைப்படுத்தி, செயல்படுத்தி அங்கே ஆலைகளை நிருவகிக்கக்கூடிய நிருவாகிகள் கட்டுவதில்லை. காரணம், எங்களிடத்திலே பணவசதி இல்லை, ஆலைகள் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று கூறுகின்றார்கள். இதையெல்லாம் திட்டமிட்டு அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் முழுமையாகக் கிடைப்பதற்கு ஏற்றவகையிலே அரசு செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, இன்று, மேல்நாட்டிலே இருக்கக்கூடிய தொழில் நுட்பங்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தியாக வேண்டும். இன்று மேலை நாடுகளிலே, குறிப்பாக ஜப்பான் போன்ற நாடுகளிலே 500 தொழிலாளர்கள் வேலை செய்து சிறப்பான, தரமான பொருட்களை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், அதே வேலையை இங்கே 2,000 தொழிலாளர்களைக் கொண்டு செய்வதுடன், அந்த அளவிற்குத் தரமான பொருளை நம்மிடமுள்ள திறனை முழுமையாகப் பயன்படுத்தி செய்யாத காரணத்தாலே விலையும் அதிகமாகி, அவர்களோடு போட்டி போட முடியாத சூழ்நிலையிலே இருக்கின்றோம். அந்த நிலையை மாற்றி முழுமையாக தொழிலாளர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, எதிர்காலத்திலே தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு நாம் செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

குறிப்பாக, இன்று தாராளமயக் கொள்கையின் காரணமாகப் போட்டியைத் தவிர்க்க முடியாது. இருந்தபோதிலும், தொழிலாளர்கள் கஷ்டத்திலே இருக்கக்கூடிய நிலையைக் கருத்தில்கொண்டு எதிர்காலத்திலே இதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்போது எல்லாம் மலைப் பகுதியிலே தேயிலைத் தோட்டங்களிலே, காபித் தோட்டங்களிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு முடிந்த அளவிற்கு, வசதிகளை, வாய்ப்புகளை, தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய இடங்களிலே எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அதுபோல, மருத்துவமனை தேவைப்படும் இடங்களிலே எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோல சிவகாசியிலே பட்டாசுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களாலும், திருப்பூரிலே பனியன் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களாலும், சிறுவர்கள் வேலையிலே அமர்த்தப்படுவதாகக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே குடும்பக் கட்டுப்பாடு பற்றி முழுமையாகத் தெரியாத சூழ்நிலையின் காரணமாகவும், கல்வி அறிவு இல்லாததன் காரணமாகவும் 6, 7 குழந்தைகளைப் பெற்று, வறுமையின் காரணமாக அந்தக் குழந்தைகளை அத்தகைய நிறுவனங்களுக்கு வற்புறுத்தி அனுப்பி, வேலையில் சேர்க்கின்றனர். இத்தகைய நிலையை மாற்றுவதற்கு தொடக்கக் கல்வி அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். 14 வயதுவரை தொடக்கக் கல்வி கொடுக்க வேண்டும் என்றுதான் கூறியிருக்கிறீர்கள். அந்த நிலையை ஏற்படுத்துவதற்கு கட்டாயமாக அத்தனைக் குழந்தைகளும் படிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, வறுமையைப் போக்குவதற்குண்டான வழியை எதிர்காலத்திலே அரசு விழிப்போடு இருந்து செயல்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஓரேயொரு கருத்து. பவானியிலேகூட, H.M.S-ஐச் சேர்ந்த 351 தொழிலாளர்கள் அந்த நூற்பாலையிலே பணியாற்றிக்கொண்டிருந்த சூழ்நிலையிலே, அங்கே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டு, அங்கே இருக்கக்கூடிய நிறுவனர் தியாகராஜன் என்பவர் ஆலையை மூடிவிட்டுச் செல்லக்கூடிய சூழ்நிலையிலே, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே என்னை அழைத்த நேரத்திலே, அங்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தி, அந்தத் தொழிலாளர்கள் 115 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்த சூழ்நிலையிலே, தொழிலாளர்களுக்காக தொழில் நிறுவனத்திடத்திலே 105 ரூபாய் என்று பேசி, இப்போது அந்தத் தொழிற்சாலை நடந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைச் சொல்வதற்குக் காரணம், எதிர்காலத்திலே தொழிலாளர்கள், தொழிலை நடத்தக்கூடியவர்கள், காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து, நாட்டினுடைய எதிர்காலத்தை உணர்ந்து எல்லோரும் ஒற்றுமையாக, திறமையாகச் செயல்பட்டால்தான், நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி உயரும். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், எதிர்காலத்திலே தொழிலாளர்களும், தொழில் நடத்தக்கூடிய நிறுவனங்களும், பழைய தொழிலாக இருந்தாலும் சரி, அதைச் செம்மைப்படுத்தி சிறப்பாகச் செய்வதற்கு ஏற்றவகையில் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஓரேயொரு கருத்து.

தொழில் பயிற்சிப் பள்ளிகள் (I.T.I.) என்ற வகையில் அரசின் மூலமாக 53 தொழில் பயிற்சி நிலையங்களும், தனியார் மூலமாக 545 நிலையங்களும் ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஓட்டுநர்களை உருவாக்க தனி Trade ஏற்படுத்தி, பயிற்சி அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நல்ல கருத்து. அதைக் கண்டிப்பாக எதிர்காலத்திலே செய்தால்தான் ஓட்டுநர்களை ஸ்திரமாகப் பயன்படுத்த முடியும். அதிலேயெல்லாம் எவ்வளவு வாய்ப்புகள் கிடைக்குமோ, தையல் பயிற்சியாக இருந்தாலும் சரி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி பழுதுபார்ப்பதாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட பயிற்சியை அதிகமாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 28-ன்மேல் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கும், தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, இப்போது நல்லாட்சி நடத்திவருகின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைக் கூறி, என்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல விழைகிறேன்.

நாளை மே தினம். அந்த மே தினம் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு, தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிய தினம். அந்த மே தினத்தை கடந்த 50 ஆண்டுகாலமாக, ஆண்டிற்கு ஒரு விழாவாக, ஆண்டுவிழாவாகக் கொண்டாடி தொழிலாளர்களுடைய துயரத்தை, அவர்களுடைய நன்மைகளை எடுத்துக்காட்டி வந்தது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், பட்டி தொட்டிகளில் எல்லாம், பெரும் நகரங்களில் எல்லாம் மே தின விழா நடத்தி, பொதுக் கூட்டத்தை நடத்தி, தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியதிலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரும் பங்கு உண்டு. அந்த இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, மே தினத்தன்று விடுமுறை அளித்தது, நம்முடைய டாக்டர் கலைஞர் ஆட்சிதான். அதேபோல், தொழிலாளர்கள் நல வாரியம் அமைத்துத் தந்தது; அதேபோல, இப்போது அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு,



அவர்கள் கல் உடைப்பவர்களாக இருந்தாலும் சரி, மரம் ஏறுபவர்களாக இருந்தாலும் சரி, கட்டடத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, இன்னும் பிற தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் பல்வேறு நலத் திட்டங்களை அளித்து இன்று செயலாற்றி வருவது நம்முடைய டாக்டர் கலைஞர் அரசுதான். அந்த அளவிற்கு இந்த நாட்டிலே தொழிலாளர்கள் மத்தியிலே, தங்களுடைய பல்வேறு பணிகளுக்கிடையே சிறப்பாகத் தொண்டாற்றுகிற ஒரு அரசுக்கும், அதனுடைய அமைச்சர்களுக்கும் உள்ளபடியே நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்; பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 11-05

உதகையிலே Hindustan Photo Film தொழிற்சாலை இருக்கின்றது 'இந்து' என்றாலே பெயர் பெற்ற ஒரு பிலிம் தொழிற்சாலை. அது ஒன்றுதான் பொது நிறுவனங்களிலே மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. அது கடந்த காலத்திலே நோய்வாய்ப்பட்டு இன்றோ நாளையோ மூடக்கூடிய ஓர் அபாயம் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நம்முடைய கொறடா மூலமாக அந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள், நிருவாகிகள், அத்தனைபேரும் தலைவரவர்களைச் சந்தித்துக் கேட்ட நேரத்திலே, உடனடியாக, அந்த இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தொழிற்சாலையை மூடக் கூடாது. அதற்கு நிதியுதவி அளித்து மீண்டும் உயிர் தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதினார்கள் தலைவரவர்கள். ஆனால் இன்று மத்திய அரசும் தடுமாறிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், அந்த தொழிற்சாலையை மீண்டும் திறக்கிற வாய்ப்பு இருக்குமா, அது பொலிவோடும் வலிவோடும் முன்பு போல அமையுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருப்பினும் நம்முடைய அரசு உதகையிலே இருக்கிற அந்த Hindustan Photo Film தொழிற்சாலை சிறப்பாக அமைய ஆவன செய்ய முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், 10, 20 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தத் தொழிற்சாலையை இங்கிருந்து வட மாநிலத்திற்குக் கொண்டு செல்லலாம், நைனிடாலுக்குக் கொண்டு செல்லலாம் என்ற ஓர் எண்ணம் மத்திய அரசுக்கு இருந்தது. அந்தநேரத்திலே நாங்களெல்லாம், அங்குள்ள பொதுமக்கள் எல்லாம் தடுத்து நிறுத்தினோம். ஆகையினால், இப்போது அந்த 'இந்து' பிலிம் தொழிற்சாலையை அழியும் நிலையிலிருந்து காக்க வேண்டுமென்று நான் அரசை வற்புறுத்துகிறேன்.

அதேபோன்று உதகைக்குச் செல்லுகின்ற வழியிலே Needle Faytor ஒன்று இருக்கிறது. அந்த ஊசித் தொழிற்சாலை இப்போது தொழிற்சங்கத்தையே எதிர்க்கிறது. அதிலும் குறிப்பாக, பல தொழிற்சங்கங்கள் இருந்தும்கூட, அவை அழிந்துவிட்டன. ஆனால் தி.மு.க. L.P.F. தொழிற்சங்கம் பத்தாண்டுகளுக்கு முன்பாக அங்கு நிறுவப்பட்டது. அதேநேரத்திலே, நிறுவப்பட்ட அந்தத் தொழிற்சங்கத்தை ஒழிக்க, தொழிற்சங்கத்திலுள்ள நிருவாகிகளைப் பழி வாங்குகின்ற அளவிற்கு, தொழிலாளர்களைப் பழி வாங்குகின்ற அளவிற்கு அந்தத் தொழில் நிருவாகம் முற்பட்டது. அதன்காரணமாக, பல்வேறு பணிகளிலிருந்து வேலையிழந்த நம்முடைய தொழிலாளர்கள் இன்று வெளியிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த நிருவாகம் பழி வாங்குகின்ற காரணத்தினாலே, அவர்களுக்குத் தர வேண்டிய எந்த நிதி உதவியையும் தராமல் இன்று அது ஏய்த்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபொழுது ஊட்டி பகுதியில் இருக்கக்கூடிய ஊசி தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் நேரடியாகவே அந்தப் பகுதிக்குச் சென்று, அங்குள்ள அந்த நிருவாகத்தையும், தொழிற்சங்கத்தையும் அழைத்து, அதோடு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் குண்டன், நம்முடைய கொறடா முபாரக் ஆகியோரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறேன். இப்பொழுதும் கோவையில் இருக்கக்கூடிய J.C.L. முன்னாலே பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஊட்டி ஊசி தொழிற்சாலை குறித்து விளக்கம் தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தத் தொழிற்சாலை நிருவாகம், தி.மு.க. தொழிற்சங்கத்தையே நசுக்க வேண்டுமென்பதற்காக, குறிப்பாக தி.மு.க. தொழிற்சங்க நிருவாகிகளை வேலைநீக்கம் செய்து பழிவாங்கியிருக்கிறது. அதை மனதிற்கொண்டு மாண்புமிகு அமைச்சர்— அதுவும் தி.மு.க. தொழிற்சங்கம் அல்ல— தொழிற்சங்கமே இருக்கக் கூடாது என்பதில் ஒரு தனியார் தொழிற்சாலை குறியாக இருக்கும்பொழுது, அதை எப்படியாகிலும் முறைப்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் நிச்சயமாக தனியார் தொழிற்சாலைமீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் தனிக் கவனம் செலுத்தியதற்காக



நன்றி; இன்னும் அழுத்தமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் இப்பொழுதே பதில் சொல்லிவிட்டால், கொஞ்சம் குறைவான நேரத்திலே மற்ற கருத்துகளைப் பேச முடியும். தொழிற்சங்க உரிமைகள் இந்த ஆட்சியில் பறிக்கப்படுகிறது என்ற ஒரு பொதுவான கருத்து சிலராலே எழுப்பப்படுகிறது. அது உண்மையல்ல. நிருவாகத்தைப் பொறுத்தமட்டிலும் தொழிற்சங்க உரிமையைப் பறிப்பார்களேயானால் அவர்கள் குற்றவாளிகள். சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். சட்டத்திலே மிகத் தெளிவாக இருக்கிறது, 6 மாதம் அவர்களுக்குச் சிறைத் தண்டனை கொடுப்பதற்குக்கூட வழிவகை இருக்கிறது. Unlabour praytiye என்று சொல்லுவார்கள். துரதிருஷ்டவசமாக, பேசுகின்ற யாருமே புகார் கொடுக்கவில்லை.

முற்பகல் 11-10

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியில் நம்முடைய கொறடா அவர்களுடைய தொகுதியைச் சார்ந்த நடுவட்டம் பகுதியில், Mahaveer Plantation என்ற ஒரு பெரிய 3500 ஏக்கர் பரப்பளவுள்ள தேயிலைத் தோட்டம் உள்ளது. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ ஓர் ஆண்டுக்கு மேலாக சம்பளம் சரிவரத் தருவதில்லை. அடிக்கடி சாலை மறியல், போராட்டம் எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நேரத்திலே, அடிக்கடி நம்முடைய கொறடா அவர்கள் அங்கே சென்று அதிகாரிகளை அழைத்துக்கொண்டு போய் அங்கே சமாதானம் பண்ணி, ஏதோ கொஞ்சம் பணத்தைப் பெற்றுத்தருகிற காட்சிதான் இன்றும் நடந்துகொண்டு இருக்கிறது. அதுவும் அந்தத் தொழிற்சாலை, உதகை-மைசூர் தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கிற பெரிய தோட்டத் தொழிற்சாலை. ஆகவே அதிலே நம்முடைய அரசு மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தி, ஏறத்தாழ — 3000 தோட்டத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்—அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தைக் கூட கொடுக்க முடியாத நிலை இருப்பதை மாற்றி நடவடிக்கை எடுப்பதோடு, அந்தத் தோட்டத்தை அரசே ஏற்று நடத்தினாலும் நலமாக இருக்கும். எப்படி அரசு தேயிலை தோட்டக் கழகம் இப்போது சிறப்பாகச் செயல்படுகிறதோ, இப்போது 30 கோடி ரூபாய் லாபம்

என்று பெருமையாகச் சொல்கிற அளவுக்கு நம்முடைய அரசு தோட்டக் கழகம் எப்படிச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறதோ அதுபோல அந்தத் தனியார் தோட்டத்தைக்கூட அரசு கைப்பற்றி, மிகச் சிறந்த முறையில் அதை நிருவகித்தால், அந்த 3000 தொழிலாளர்களும் வளம் பெறுவார்கள். அத்தனை தொழிலாளர்களும் மைசூர் பகுதியைச் சேர்ந்த, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே பணியாற்றுகிற அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று அரசுக்குச் சொந்தமான TANTEA தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையான, தற்காலிகத் தொழிலாளர்களுக்குக்கூட Bonus-ஐக் கொடுத்த இந்த அரசுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நான் பேச ஆரம்பிக்கவே இல்லை. எங்கள் பகுதி, தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. ஆகக்கூடி ஒன்றரை லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் அந்தப் பகுதியில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மாதச் சம்பளம் தர வேண்டுமென்று எல்லா தொழிற்சங்கங்களும் இணைந்து கேட்கின்றன. இன்று கொடுக்கிற சம்பளம் கட்டுப்படியாகாத ஒரு சம்பளம். 61 ரூபாய் 67 பைசா தருகின்ற சம்பளம் இந்தக் காலக்கட்டத்திலே போதுமான சம்பளமாக இல்லை. அதை இரட்டிப்பாக்கி, அதேநேரத்திலே எல்லாத் தொழிற்சங்கங்களும் கேட்கிற அளவில் அதை மாதச் சம்பளமாகத் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மருத்துவமனைகள் ஆங்காங்கு அமைத்து, Ambulanye-களும் கண்டிப்பாகத் தரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் திறந்த வெளியில் பணியாற்றுகிறார்கள். அதிகமான மழை, குளிர், காற்று போன்ற நிலைகளில் பணியாற்றுகிற அவர்களுக்கு நீங்கள் மருத்துவ வசதி அதிகமாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஓர் ஏக்கருக்கு இத்தனை ஆட்கள் வீதம் தான் வேலை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இன்று ஓர் ஏக்கருக்கு அரை ஆள் வீதம்தான் வேலை செய்கிறார்கள். தோட்டத் தொழிலுக்கு ஓர் ஏக்கருக்கு ஓர் ஆள், ஒன்றரை ஆள், இரண்டு ஆள் எல்லாம் போடக்கூடிய நிலையை மாற்றி, அங்கே வேலைப்பளு அதிகமாக இருப்பதால், தோட்டத் தொழிலுக்கு நீங்கள் கண்டிப்பாக ஓர் ஏக்கருக்கு இத்தனை ஆள் என்று இருக்கும் சட்டத்தைக் கண்டிப்பாக நிலை நிறுத்த வேண்டும்.



அதேபோல், தோட்ட ஆய்வாளர்கள் ஒவ்வொரு தோட்டப் பகுதிக்கும் சென்று, அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். குடியிருப்புகளுக்குச் செல்ல வேண்டும். நாங்கள் அமைச்சர்களை ஒவ்வொரு குடியிருப்புக்கும் அழைத்துக்கொண்டு போய்க் காண்பித்தோம். நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் வந்த நேரத்திலே தோட்டப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள தொழிலாளர்களுடைய வீடுகள், வசதிகள், சாலைகள் இப்படி எல்லாவற்றையும் காண்பித்தோம். அதைப்போல அங்கே இருக்கிற ஆய்வாளர்கள் அடிக்கடி தோட்டப் பகுதிகளுக்குச் சென்று, அங்கே இருக்கிற ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளுக்குச் சென்று, அங்கேயுள்ள சாலைகளை எல்லாம் போய்ப் பார்த்து, அங்கே இருக்கிற குறைகளைக் களைவதுடன், சாலைகளைச் சீராகச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அங்கே ஒரு சாலை இருக்கிறது. நான்சச் என்ற இடத்திலிருந்து ட்ரூக் போகிற சாலை, 3 கிலோமீட்டர் தூரமுள்ள சாலை. அது ஒரு Estate-க்குச் சொந்தமான சாலை. ஆனால் அந்தச் சாலை பேருந்து போக்குவரத்து சாலை. அந்தச் சாலை இன்னும் செப்பனிடப்படவில்லை. காரணம், அது தனியாருக்குச் சொந்தமான சாலை. அதை எடுத்துக்கொண்டு, கிராமப் பஞ்சாயத்தோ, பேரூராட்சியோ பணிகளைச் செய்ய முடியாது. நகராட்சியும் செய்ய முடியாது. ஆனால் தோட்டப் பயிர்கள் உள்ள அந்த நான்சச்-ட்ரூக் சாலையைப் செப்பனிட்டு, பேருந்து போக்குவரத்துக்கு ஏற்ற சாலையாக மாற்ற முன்வர வேண்டுமென்றும், அரசு அவர்களோடு தொடர்புகொண்டு பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றதது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று குழந்தை உழைப்பு ஒழிப்பு நாள் உலகில் கடைப்பிடிக்கப்படுகிறது. இன்றைக்கு 'ஜூனியர் விகடன்' பத்திரிகையிலே பார்த்தால், சேலத்திலே ஒரு குழந்தைத் தொழிலாளி, மணிமேகலை என்ற குழந்தைத் தொழிலாளி, ஒருவருடைய வீட்டிலே வேலை செய்த நிலையில், அங்கே ஏற்பட்ட ஏதோ ஒரு திருட்டைக் காரணமாக்கி, அந்த வீட்டின் உரிமையாளர்கள் செய்த சித்திரவதையின்

காரணமாக, வார்த்தைகளால் சொல்லமுடியாத கொடிய சித்திரவதைக்கு ஆளான அந்த மணிமேகலை என்ற மிக மிக ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அந்தத் தொழிலாளி, கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு குறித்தும், குழந்தைத் தொழிலாளர்கள் உழைப்பு ஒழிக்கபபட வேண்டியது குறித்தும ஒரு தெளிந்த சிந்தனை மாநில அரசுக்கு இருக்கிறது என்பதில் நான் மாறுபட்ட கருத்தைக் கொள்ளவில்லை. ஆனால் நம்முடைய வாழ்க்கை அனுபவத்திலே, இதே தமிழகத்தில் domestiy worker என்ற முறையில் சேலத்திலே பணியாற்றிய அந்தப் பெண் தொழிலாளி கொல்லப்பட்டு இருப்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் கொலைக் குற்றவாளிகளின்மீது உரிய சட்டப்பிரிவுகளில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதோடு, மிக மிக ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த அந்த மணிமேகலையின் பெற்றோருக்கு மாநில அரசு, முதலமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து உதவித் தொகையும் வழங்க வேண்டுமென்பதையும் நான் வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 11-15

இங்கே தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்னால் 1997-98 ஆம் ஆண்டிற்கு இடையில் நடைபெற்றிருக்கிற மனித நாள் இழப்பு குறித்து நான ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். 1997 ஆம் வருடம் 20,97,873 மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், 1998 ஆம் வருடம் 30,55,614 மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 1997 ஆம் ஆண்டைக் காட்டிலும், 1998 ஆம் ஆண்டு குறைந்திருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனால், கூடியிருக்கிறது. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மனிதநாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 1997 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் என்று பார்த்தால், 11,075 தொழில் தகராறுகள் நடந்திருக்கின்றன. ஆனால் 1998 ஆம் ஆணடு 12,182 தொழில் தகராறுகள் நடந்திருக்கின்றன.

அதேபோல, Strike, Loyk-out என்பதும் 1997-லே 225 ஆக இருந்தது, 1998-லே 230 ஆக மாறியிருக்கிறது. இத்தகைய மனித நாட்கள் இழப்புக்குக் காரணமாக இருப்பதற்கான விவரங்களைப்பற்றி நான் விரிவாகப் பேச நேரமில்லை. எப்படியெல்லாம் தமிழ்நாட்டில் இன்றைக்குத் தொழிலாளர்கள் பல்வேறு வழிமுறைகளில்



சட்டவிரோதமாக நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பதற்கான சில குறிப்புகளை நான் இங்கே கொடுக்க விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே ELNET நிறுவனத்திலே பணியாற்றுகின்ற அதனுடைய M.D. ஆக இருந்தவர் செய்த முறைகேடுகளின் காரணமாகவும், அந்த நிருவாகத்தை நடைமுறையில் செயலிழக்கச் செய்து, தன்னுடைய சொந்த ஆதாயத்திற்காக, முற்றிலும் அதனுடைய வளத்தைக் கையாடிவிட்டுப் போய்விட்ட அந்த M.D.-யின் குற்ற நடவடிக்கைகளுக்குத் தண்டிக்கப்பட்டிருக்கிறவர்கள் அந்த ELNET-ன் தொழிலாளர்கள் ஆவார்கள். குற்றவாளி தப்பித்துக் கொண்டார். அப்பாவித் தொழிலாளர்கள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள், வேலை இழந்து. இதற்கு எங்கே போய், எப்படி முறையிடுவது? இந்தப் பிரச்சினைக்கு எப்படி நாம் தீர்வு காண்பது என்பதுதான் இன்றைக்குத் தொழிலாளர்களுக்கிடையிலே இருக்கின்ற பிரச்சினையாகும். அதுமட்டுமல்ல, P.F., E.S.I., L.I.C., இது உட்பட தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பணம், உரிய துறைகளில் செலுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல்வேறு துறைகளில் இருக்கின்றன. இதன்மீது I.P.C. சட்டப்பிரிவின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கலாம். ஆறு மாத காலம் கூட தண்டிக்கலாம். அதற்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்திருக்கிறதா? தமிழநாட்டில் E.S.I., P.F., மற்றும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குச் செலுத்த வேண்டிய பணப் பிடித்தம் ஆகியவற்றை தொழிலாளியின் உழைப்பு ஊதியத்திலே இருந்து பிடித்து, அதை வைத்துப் பிழைத்துக் கொள்கின்ற நிறுவனங்களின்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன; அதனால் கிடைத்திருக்கின்ற விவரங்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தொழிற்சங்கங்களில் சிறப்பாகப் பணியாற்றி வரக்கூடியவர். அவருடைய சங்கத்திலே இன்னோர் அன்புச் சகோதரர் தியாகராசன் பணியாற்றுகிறார். Statutor benefits என்று சொல்லக்கூடிய, தொழிலாளர்களுடைய E.S.I. ஆக இருந்தாலும், Provident Fund ஆக இருந்தாலும், Insuranye ஆக இருந்தாலும், சம்பள பாக்கியாக இருந்தாலும், இன்னும் பல சட்டரீதியான பலன்கள் எதுவாக இருந்தாலும், அவைகளைப் பெற்றுத் தருவதற்காக, கோயம்புத்தூரிலும்,

மதுரையிலும், சென்னையிலும், சம்பந்தப்பட்ட E.S.I. அதிகாரி, அதேபோல P.F. அதிகாரி, அதேபோல benefits கொடுக்கக்கூடிய அத்தனை அதிகாரிகளையும் அழைத்துப்பேசி, எத்தனை வழக்குகள் போட்டிருக்கிறீர்கள்; எவ்வளவு பணம் கட்டப்பட வேண்டியிருக்கிறது; இதைப் பெறுவதற்கான வழிமுறைகளைச் செய்யுங்கள் என்பதை முந்தாநாள்கூட பேசி, நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். பாராட்டியிருக்கிறார்கள். உங்களுடைய சகோதரரும், கட்சிக்காரரும் பாராட்டியிருக்கிறார். இந்தத் தகவலை நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைப் பாராட்டுகிறேன். ஆனால், தொழிலாளர்கள் நடைமுறையில் இழந்துவிட்ட அந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு நடவடிக்கை இல்லை. I.P.C. Seytions 406, 409 இவைகளின்கீழ் அவர்கள்மீது வழக்குத் தொடுக்கலாம். ஆனால், சில இடங்களில் புகார்கள் பதிவு செய்து . . . . .

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தவறான தகவல் என்பதற்காகச் சொல்கிறேன். வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ELNET மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்பது பற்றித்தான் நான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அடிக்கடி குறுக்கிடுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் மன்னிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், நீங்கள் பேசிய பிறகு, என் பேச்சின் பின்னாலே அதற்கு நேரடியாக விளக்கம் கொடுக்காத சூழ்நிலை ஏற்பட்டு விடும். ELCOT-ஐ பொறுத்தவரையிலே மிகத் தெளிவாக இருக்கக்கூடிய விஷயம் என்னவென்று கேட்டால், ELCOT-ன் ஒரு பிரிவாக, Joint venture-ஆக இப்போது உருவாக்கப்பட்டிருப்பதுதான் இந்த ELNET துறை. நான் சொல்வது அத்தனை finanyial institutions-ம் இதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்று சொல்லி விட்டன. தியாகராஜ செட்டியார் அந்தப் பணத்தை divert பண்ணிக்கொண்டு போய்விட்டார். எனவே, இப்போதுள்ள நிதி நெருக்கடிதான் மூலாதாரமான பிரச்சினை. அந்தப் பணத்தை



mis-appropriate செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான் உங்களிடத்திலே சொல்ல விரும்புவது, இப்போது இதை மீண்டும் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்று எல்லோரும் கையை விரித்து விட்டார்கள். காரணம் நிதி சம்பந்தமானது. இருந்தாலும் தொழிலாளர்களுக்கு சம்பள பாக்கி, Bonus பாக்கி இருக்கிறது, இவைகளையெல்லாம் மனிதாபிமானத்தோடு இந்த அரசு உணர்ந்து, அதற்கு வழிவகை செய்ய முடியுமா என்பதை சட்டத்திற்கு உட்பட்டு பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ELNET நிறுவனத்தை ELCOT எடுத்துக்கொள்ள வேண்டும், ELCOT ஏற்று நடத்த வேண்டும். அப்படி நடத்துவதுதான் பிரச்சினைக்குத் தீர்வு மட்டுமல்ல, அந்த மாவட்டத்தின் மிக முக்கியமான பகுதியாக இருக்கக்கூடிய அந்தத் தொழில் துறை காப்பாற்றப்பட்டு, அந்த மாவட்டத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும் அது பலனளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, Standard Motors-ல் பணிபுரிகின்ற 2400 தொழிலாளர்கள் 1989-லிருந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இதில் நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இப்போது H undai, Ford போன்ற பல்வேறு அந்நிய Motor Compan -கள் சென்னையை மையமாகக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் இந்த மண்ணிலேயே விளைந்த இந்த Motor தொழில் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக உதிரி பாகங்களை உற்பத்தி செய்வதைக்கூட அரசே ஏற்று நடத்தினால், கடன், மற்ற பிரச்சினைகளிலேகூட பல தீர்வுகளைக் காண முடியும். இதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அங்கிருந்த தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைத்து, அந்த ஆலை சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக 3 கோடி ரூபாயை கஜானாவிலிருந்து அள்ளிக் கொடுத்தார்கள். ஆனாலும் துரதிருஷ்டவசமாக தீர்வு காண முடியாமல் போய் விட்டது B.I.F.R. என்று சொல்லுகின்ற அந்த அமைப்பு இதை நடத்தவே இயலாது என்று சொல்லிவிட்டது. இப்போது liquidation அதிகாரி

(கலைப்பு அதிகாரி) நியமிக்கப்பட்டு நீதிமன்றத்திலே இருக்கிறது. திரு. தா. பாண்டியன் போன்ற தொழிற் சங்கத் தலைவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும்கூட அதைக் காப்பாற்ற முடியவில்லை, நாங்களும் அதைக் காப்பாற்ற முயற்சி செய்தும் முடியவில்லை. காரணம், நிதி நெருக்கடியின் காரணமாக, liquidation அதிகாரி- கலைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு வழக்கு இருக்கிறது. கடன்காரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் settle பண்ண வேண்டிய ஒரு சூழ்நிலையிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, Standard Motors-ல் 3 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. (மணி அடிக்கப்பெற்றது) நான் பேசாமல் வேண்டுமானால் விட்டுவிடுகிறேன். நான் இன்னும் பிரச்சினையைத் தொடங்கவில்லை. ஏனென்றால் தொழிலாளர் பிரச்சினையில் பல்வேறு serious-ஆன பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிப்பேன், நீண்ட நேரம் இழுத்துக்கொண்டு போக விரும்பவில்லை. ஆனால் சொல்ல வேண்டிய சில முக்கியமான பிரச்சினைகளைச் சொல்லாமல் விட்டுவிட்டால் இந்தச் சட்டமன்றத்தில் இயல்பாகச் செயல்பட்டு தீர்வு காணவேண்டிய பிரச்சினை தீர்வு காணப்படாமல் போய்விடும் என்பதற்காகத்தான் தெரிவிக்கிறேன். 3 கோடி ரூபாய் அரசு கொடுத்ததை நான் மறுக்கவேயில்லை. முதலமைச்சர் கலைஞர் அவர்களின் மாநில அரசு 3 கோடி ரூபாய் கொடுத்தது. ஆனால் அதை ஏ.சி. முத்தையா சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார், அது தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கவில்லை. எனவேதான் நான் இங்கே குறிப்பிட விரும்புவது, 5 மாத சம்பளப் பாக்கி, அதையெல்லாம் அவர்கள் கொடுக்கவில்லை, அதனால் அதை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்தினேன்.

அதேபோல ஓசூர் SIPCOT-ஐப் பொறுத்தவரையிலே, கிட்டத்தட்ட 600 சிறிய தொழிற்சாலைகளும், 30 பெரிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன, அவற்றில் 25% தொழிற்சாலைகள் இயங்கவில்லை. கிட்டத்தட்ட 40,000 பேர் ஊரைக் காலி செய்துவிட்டார்கள், அவர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து அரசு கவனிக்க வேண்டும். அதேபோல இன்னொரு முக்கியமான பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



தமிழ்நாட்டில் 250-க்கு மேற்பட்ட உருட்டாலைகள் இருக்கின்றன. அவற்றிலே ஒரு லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கும் இப்போது வேலை இழப்பு ஏற்படுகிற பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால், தமிழ்நாட்டிலே ஒரு டன் இரும்பை உருக்குவதற்கு 3,000 ரூபாய் மின்சாரச் செலவு செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் புதுச்சேரியில் 1,800 ரூபாய்தான் செலவழிக்க வேண்டியிருக்கிறது. கோவாவிலே 1200 ரூபாய் செலவழித்தால் போதுமானது. ஆனால் இங்கே ஒரு டன் உற்பத்தி செய்வதற்கு மின்சாரத்திற்கு அதிகமாக செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதேபோல பஞ்சாபிலே ரூ.2.20 தான் ஒரு யூனிட்டின் விலை, கோவாவிலே 1 ரூபாய் 25 காசுகள். ஆனால், தமிழ்நாட்டிலே 4 ரூபாய் 3 காசுகள் என்பதால் உற்பத்திச் செலவு அதிகரிப்பதால் பிற மாநிலங்களோடு அவை போட்டியிட இயலவில்லை. அதனால் அந்தத் தொழில் துறையில் பணிபுரிகிறவர்களுக்கு வேலை இழப்பு அபாயம் ஏற்படுகிறது என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*முற்பகல் 11-25*

அம்பத்தூரிலே இருக்கின்ற தொழிற்பேட்டை. இதிலே மிகப் பெரிய பிரச்சினை, பெரும் பகுதி தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இவற்றை திறப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோல, Dunlop-ல் 2100 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். Dunlop தொழிற்சாலையை எதற்கு கதவடைப்பு செய்திருக்கிறார்கள்? கடந்த ஆண்டுகூட இலாபமாக இருந்திருக்கிறது. இலாபமாக இருந்தும்கூட கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், I.D. Ayt 10(டி)-ன்படி அது தடை செய்யப்படவில்லை, அது தடை செய்யப்பட வேண்டும். அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தொழிற்சங்க.........

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது, அதனால் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், டன்லப்பைப் பொறுத்தமட்டில் கதவடைப்பு illegal என்று deylaration செய்து we referred this matter to the Tribunal. Tribunal-க்கு நாங்கள் கொடுத்துவிட்டோம். ஆனால், துரதிருஷ்டவசமாக நிருவாகத்தினர் உயர்நீதிமன்றத்தில் sta வாங்கி இருக்கிறார்கள். அதுதான் நடந்தது.

**திரு. கே. சுப்பராயன்:** சரி, திருத்திக்கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த டன்லப் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலும், உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு, அந்தத் தொழிற்சங்கத்தோடு இணைந்து செயல்முறையை உருவாக்குவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும்.

அடுத்து, Southern Swityhgear-ஐப் பொறுத்தவரைக்கும் மூடுவதற்கு நிருவாகம் என்ன காரணம் சொல்லியிருக்கிறது தெரியுமா? தொழிலாளர்களுக்கு அடுத்த மாதம் சம்பளம் கொடுப்பதற்கு நிருவாகத்திடம் பணம் இல்லை, அதனால், அடுத்த மாதம் சம்பளம் கொடுக்க முடியாது என்பதால் தொழிலாளர்கள் தொழிற்சாலையைச் சேதாரப்படுத்திவிடுவார்கள் என்பதற்காக நாங்கள் loyk-out செய்கிறோம் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். இது எவ்வளவு முறைகேடான விஷயம் என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதுபோல, Binn -யில் போட்ட agreement ஒரு landmark என்று சொல்லப்படுகிறது. Binn -யில் 28-3-1998 அன்று முதலமைச்சர் முன்னால் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. V.R.S.-க்கு 1¼ இலட்சம் plus gratuit கொடுக்க வேண்டும். ஆனால், முதல் தவணை 27-5-1998-ல் 1702 பேருக்குக் கொடுத்திருக்கப்படவேண்டியது, கொடுக்கப்படவில்லை. அதேபோல, இரண்டாம் தவணை 15-9-1998-லே 3251 பேருக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இன்று வரை கொடுக்கவில்லை. இதை landmark என்று சொல்வதற்குப் பொருள் இல்லாமல் போய்விடுகிறது.

அதேபோல, 15,040 தாவாக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி விரிவாகச் சொல்ல நேரம் இல்லை. ஆனால், land mark ஒப்பந்தத்தில் மீனாட்சி மில் ஏறக்குறைய மூடப்பட்டுவிட்டது. ஒரு landmark agreement என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம், நடைமுறையில் எந்த அளவிற்கு தொழில் உரிமைப் பிரச்சினைகள் நிலவுகின்றன என்பதைக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கோலப்பன் குழு பரிந்துரை, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கே கொடுக்கப்படவில்லை. அது கொடுக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்கிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கை அமல்படுத்தப்படும் என்று அரசு சொல்கிறது. ஆனால், தொழிலாளர் துறையில் ஓர் அரசாணைகூடத் தமிழில் வந்ததே கிடையாது. எனவே, இனிமேலாவது தமிழில் அரசாணை வருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பஞ்சாலைப் பிரச்சினை, தமிழ்நாட்டிலே மிக முக்கியமாக இருக்கிற பிரச்சினை. அந்தப் பஞ்சாலை நெருக்கடிக்குக் காரணமாக இருப்பவைபற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றன. மாநில அரசுக்கும் அதிலே பங்கு இருக்கிறது. அது என்னவென்றால், விற்பனை வரி பிரச்சினை மற்றும் மின்சாரக் கட்டணம் பற்றிய பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினைகளும் மாநில அரசு சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், மாநில அரசு இவற்றிலே ஒரு நிலை எடுக்க வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு தமிழ்நாட்டிலே 155 பஞ்சாலைகளில் மட்டும், P.F., E.S.I., மற்றும் இதர விஷயங்கள் பிடிக்கப்பட்டது ரூ. 16 கோடியே 32 இலட்சம் அது கட்டப்படவில்லை. இந்தமாதிரி தொடர்ச்சியான பிரச்சினைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆ. நடராசன்.

**திரு. கே. சுப்பராயன்:** முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** சில முக்கியமான பிரச்சினைகளில் தலையீடு இருந்தன. என்னால் பிரச்சினைகளை முழுமையாகச் சொல்ல முடியவில்லை. ஓரிரண்டு நிமிடங்களில் முடிக்கிறேன். நீங்கள் இவ்வளவு கறாராக இருப்பதன்மூலம் பிரச்சினைகள் வெளியே வரக் கூடாது என்று விரும்புகிறமாதிரி ஒரு தோற்றம் அளித்துவிடும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியெல்லாம் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. பேரவைத் தலைவர் 10 நிமிடங்கள் ஒதுக்கினார். நீங்கள் 16 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலையீடுகள் இருந்தன. தலையீடுகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு பிரச்சினை குறித்து நான் மிக விரைவாகச் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லியும்கூட, தாங்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பது வருத்தம் தருகிறது. என்ன செய்ய முடியும்? இப்படி ஒரு torture செய்கிறபோது, விஷயங்களைச் சொல்லவே முடியாது. விஷயங்களைச் சொல்லக்கூடாது என்பதற்காகவே torture செய்கிறமாதிரி அமைந்துவிடும் என்பதற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, எதைச் சொல்வது? பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டங்கள் பற்றிச் சொல்லும்போது, குறைந்தபட்சக் கூலி, இது ஒரு பாதுகாப்பு வளையம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையில் அது பாதுகாப்பு வளையம் அல்ல. பல விஷயங்கள் Court-லே sta செய்யப்பட்டிருக்கின்றன. sta -ஐ vayate செய்வதற்குக்கூட அரசுத் தரப்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதற்கான தனித் துறை என்பதும் இல்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, கட்டுமானத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும், 25 ரூபாய் செலுத்துவதற்கு 3 நாட்கள் அலைய வேண்டியிருக்கிறது. 25 ரூபாய் சந்தா செலுத்த 250 ரூபாய் செலவழிக்க வேண்டிய பிரச்சினை இருக்கிறது. அதிலே அரசு கவனமாக இருந்து அவர்களுக்கு ஏதாவது ஒரே முறையில் பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் 20 இலட்சம் பேரில் ஓர் இலட்சம் பேர்தான் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்து அமைப்புசாராத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இப்போது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 10 ரூபாய் என்பதை மாற்ற வேண்டும் என்று கடந்த முறை குறிப்பிட்டோம்; ஒப்புக் கொள்வதாகச் சொன்னார்கள். எனவே, இப்போதும் சொல்கிறோம். வருடச் சந்தா 100 ரூபாய் என்று ஆக்குங்கள். 10 ரூபாய் என்பதை மாற்ற வேண்டும். ஓய்வுகாலப் பயன்களைப் பெறுவதற்குரிய ஆண்டுகள் 5 ஆண்டுகள் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். குறைந்தபட்ச Pension 500 ரூபாய் என்று தீர்மானிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழ்நாட்டில் மூடப்பட்டு இருக்கிற தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு மேற்கு வங்கத்தில் வழங்கி இருப்பதைப்போல, பிழைப்பு ஊதியம் வழங்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 500 ரூபாய் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நிறைவாக, திருப்பூர் தனலட்சுமி ஆலை மூடப்பட்டு இருக்கிறது. அதுபற்றிப் பலமுறை சொல்லப்பட்டு இருக்கிறது. மூடப்பட்டு இருக்கிற தனலட்சுமி ஆலையை மீண்டும் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உழைக்கின்ற மக்களுடைய உரிமையைப் பாதுகாக்கவும், பாட்டாளிகளுடைய நல்வாழ்வுக்காகவும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள். இந்த மே நாளிலே, மே நாளுக்கு சம்பளத்தோடு விடுமுறை தந்த தமிழக - முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். போராட்டங்கள் எழுகின்றபோதும், தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் எழுகின்றபோதும் நம்முடைய முதல்வர் அவர்கள், ஆளுகிற கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், உழைக்கின்ற மக்கள் பக்கத்திலேதான் தொடர்ந்து இருந்து வருகின்றார்கள் என்பது நல்லமுறையிலே உங்களுக்கெல்லாம் தெரியும். 1986 ஆம் ஆண்டு மே நாள் நூற்றாண்டு விழாவிலே, கோவையிலே பேசுகிறபோது அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். அமைப்புசாரா தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கவும், கோடிக் கணக்கான அந்த மக்களைக் காப்பாற்றவும் மே நாள் விழா பிரகடனமாக அறிவித்தார்கள். அவர்கள் நான்காவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன், 1998 ஆம் ஆண்டு அதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவந்தார்கள். அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வாரியம் கண்டு, விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத் திட்டம், பணி முடிவு நலத் திட்டம் போன்ற நலத்

திட்டங்களை அந்த கோடிக்கணக்கான மக்களுக்குத் தந்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வீட்டுவேலை செய்கின்ற தொழிலாளர்களையும், அதைப்போல சைக்கிள் பழுதுபார்க்கும் தொழிலாளர்களையும் சேர்த்து, 54 பணிகள் செய்கின்ற அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்து, நல்வாழ்வை கலைஞர் அவர்கள் தந்து இருக்கிறார்கள்.

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூடப்பட்ட ஆலைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 43 ஆலைகள் நீண்டகாலமாக மூடப்பட்டு இருக்கின்றன. சமீபகாலத்திலே மேலும் 19 ஆலைகளைச் சேர்த்து மொத்தம் 62 ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அந்த ஆலைகளுக்கு 25 ஆயிரம் கோடியை மத்திய அரசாங்கம் அவற்றின் நிவாரணத்திற்காக ஒதுக்கி....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் B-group பஞ்சாலைகளிலே மட்டும் கிட்டத்தட்ட 300 பஞ்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன என்பது Joint Committee-யால் ஆதாரபூர்வமான முறையிலே அரசுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற தகவல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** 25 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியும், அதிலே நூற்பாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை என்று மத்திய அரசாங்கம் தெரிவித்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் முறையீடு செய்து, அதிலே அந்த நூற்பாலைகளும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன என்பது உள்ளபடியே உழைக்கின்ற தொழிலாளர்கள் அத்தனைபேருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும்.

கோவையிலே இருக்கிற தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்திய சங்க கூட்டு நடவடிக்கைக் குழு, வருகிற மே மாதம் 8ஆம் தேதி வேலை நிறுத்த அறிவிப்பு தந்து இருக்கிறது. அதுபோல மே 18 அன்று இரயில் மறியல் போராட்டத்தையும் அறிவித்து இருக்கிறார்கள். இந்தப் போராட்டங்களை எல்லாம் தவிர்க்கிற வகையில், அந்த உழைக்கின்ற மக்களுடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் அவர்கள், சம்பந்தப்பட்டவர்களை



அழைத்துப் பேசி, போராட்டங்களைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு அறிவித்துள்ள பஞ்சு ஏற்றுமதியை ரத்துச் செய்யக் கோரி நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசாங்கத்திடத்திலே முறையீடு செய்து இருக்கிறது. அந்த முறையீட்டை மத்திய அரசாங்கம் ஏற்று, அதன்மூலம் தமிழ்நாட்டிலே குறிப்பாக கோவையிலே, மூடப்பட்டு இருக்கிற ஆலைகளைத் திறக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்டு இருக்கிற ஆலைகளைத் திறப்பதற்கு டில்லியிலே B.I.F.R. என்ற மன்றம் இருக்கிறது. அந்த மன்றத்திலே போய் முறையீடு செய்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கத்தின் மூலம் சென்னையிலேயும் ஒன்று தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகைக்கு 500 ரூபாய் வழங்கப்பட்டது. அதன்மூலம் 14051 தொழிலாளர்கள் பயன்பெற்றார்கள். 1-1-1990-க்கு முன்பு மூடப்பட்ட 27 ஆலைகளுக்கு அது வழங்கப்படவில்லை. அந்த ஆலைத் தொழிலாளர்களுக்கும் இனிமேல் பண்டிகை அன்பளிப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

கோவை மாவட்டத்தில் உள்ள பொறியியல் தொழிலாளர்கள் கூட்டு நடவடிக்கைக் குழு, 5-10-1998 முதல் வேலை நிறுத்தத்தை அறிவித்தது. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 6-10-1998 அன்று சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அந்தப் பிரச்சினையிலே முடிவு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். அந்தப் பிரச்சினையை விரைவில் முடித்துத் தரும்படி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளுக்குத் தடை விதித்து, கையால் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப்பாளையத்திலே இருக்கிற TAN INDIA தொழிற்சாலை கடந்த 14 மாதங்களாக ஊதியம் தராமல் இருக்கிறது. 3 வருட Bonus வழங்கப்படவில்லை. அரசு மூலப் பொருள்களுக்கு விலையை ஏற்றிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்லிவந்தார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கம் அந்த மூலப் பொருள்களுக்கு விலையைக் குறைத்த பிறகும் தொழிற்சாலையை நடத்துவதற்கு நிருவாகம் மறுத்து வருகிறது. உடனடியாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

S.R.S.I. தொழிற்சாலை பல மாதங்களாக பூட்டப்பட்டிருக்கிறது. அதைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன். VISCOSE தொழிற்சாலையின் ஒரு பகுதி சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதன் காரணமாக மூடப்பட்டுள்ளதால் பல தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடனடியாகத் தலையிட்டு சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது முதல்வர், 1¼ இலட்சம் அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் பயன்பெறும்வகையில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். 17,000 பேருந்துகள் தமிழகத்திலே ஓடுகின்றன. இந்தியாவில் பிற மாநிலங்களில் 1,000, 2,000 பேருந்துகள்தான் அரசுத் துறையிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் பொது நிறுவனங்களை வலுப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், தொழிலாளிகள் அத்துக்கூலிகளாக இருப்பதை மாற்ற வேண்டுமென்கிற அடிப்படையில், அந்தப் போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்கி, அதன்மூலம், 17,000 பேருந்துகள் தமிழ்நாட்டிலே விடப்பட்டு, அதன்மூலம், 1¼ இலட்சம் தொழிலாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். அந்தத் தொழிலாளிகள் மூலம் நாட்டிலே ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக பல்வேறு சதித் திட்டங்களைப் பல பேர் போட்டார்கள். அவற்றையெல்லாம் முறியடித்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஒப்பந்தத்திலே ரூ. 500/- முதல் 2000/- ரூபாய் வரை, யாரும், எந்த ஒப்பந்தத்திலும், கொடுக்காத அளவிற்கு உயர்வைத் தந்து, நஷ்டத்திலே இயங்கினாலும் பொது நிறுவனங்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று, 130 கோடி ரூபாயை அள்ளித் தந்து, அந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அதற்காக போக்குவரத்துத் தொழிலாளர்கள் சார்பிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, புனரமைப்புத்



திட்டத்தின் மூலம், 185 கோடி ரூபாயைச் செலவழித்து 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளித்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

60 வயதை அடைவதற்கு முன் இறந்துவிட்டால், கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை, கடந்த ஆண்டு 25,000 ரூபாய் என்றிருந்ததை 35,000 ரூபாயாக மாற்றினார்கள். இந்த ஆண்டு 40,000 ரூபாயாக உயர்த்தியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் நல வாரியப் பணியாளர்களின் பிரச்சினை. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே ஏறத்தாழ 500 கோடி ரூபாயை நம்முடைய முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு அள்ளி வழங்கினார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தைக் கொடுத்தார்கள். ஆனால் தொழிலாளர் நல வாரியத்திலே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு, ஊழியர்களுக்கு இதுவரை அம்மாதிரி கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் ஊழியர்கள் அதிகமாக இருக்கிறார்கள்; வருமானம் இல்லை என்றெல்லாம் நிதித் துறை சொல்வதாகச் சொல்கிறார்கள். பல்வேறு துறைகளிலே உள்ள காலியிடங்களில் அத்தகையவர்களை மாற்றி, தொழிலாளர் நல வாரியப் பணியாளர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கரையிலே ACC Cement தொழிற்சாலை இருக்கிறது. அங்கே ஆலைத் தொழிலாளர்களுக்கு E.S.I. பிடிக்கப்படுகிறது. குவாரியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பிடித்தம் இல்லை. ஒரே ஆலையில் இரு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆலைத் தொழிலாளர்களுக்கும் E.S.I.-யிலிருந்து விதிவிலக்கு தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஒத்தக்கால் மண்டபம், மதுக்கரை, குனியமுத்தூர், சுந்திராபுரம், போத்தனூர் ஆகிய ஊர்களிலே E.S.I. தொழிலாளர்கள் மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட இடம் வாங்கியும், நீண்ட காலமாகக் கட்டப்படாமல் இருக்கிறது. அந்த இடங்களிலே கட்டடங்களைக் கட்டி, மருந்தகங்களை ஏற்படுத்தித் தரும்படி இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியத்திற்கு ஒரு I.T.I. என்கின்ற முறையிலே சென்ற ஆண்டு ஒவ்வோர் ஒன்றியத்திலேயும், ஒவ்வோர் I.T.I. தொடங்கப்பட்டது. I.T.I. இல்லாத ஒன்றியமே இல்லை என்கின்ற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்தார்கள். ஆனால் மக்கள் தொகை அடிப்படையிலே மேலும் ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் ஒரு I.T.I வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

D.C.L. Offiye ஒவ்வொரு நகரத்திலேயும் அமைக்க வேண்டும். திருப்பூர், ஈரோடு போன்ற பல்வேறு நகரங்களில் தொழிலாளர் துணை ஆணையாளர் அலுவலகம் இல்லாமல் இருக்கிறது. தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் உள்ள நகரங்களில் தொழிலாளர் துணை ஆணையாளர் அலுவலங்களைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் கல்வி நிலையம் இப்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் கல்வி நிலையத்தை உருவாக்கிக் கொடுத்தது நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு நீண்டகாலமாக சொந்தக் கட்டடம் இல்லாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது தாம்பரத்திற்குப் பக்கத்தில் பள்ளிக்கரணை என்ற இடத்திலே 23 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே முதல்வர் அவர்களோடு கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல கோவையிலும், மதுரையிலும் இதுபோன்ற கல்வி நிலையத்தை நிறுவ வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலேதான் தொழிலாளர் நல வாரியம் மற்றும் பல்வேறு வாரியங்கள் உருவாக்கப்பட்டன.



அதைப்போல வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பத்தை மேலும் தொழிலாளர்கள் பெறுவதற்காக தொழில்நுட்பப் பயிற்சி வாரியம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். Indian Labour Organisation இப்படிப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சிகளை தொழிலாளர்களுக்குத் தர வேண்டுமென்ற ஆலோசனையை வழங்கியிருக்கிறது. அந்த வகையிலே அந்த வாரியத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோலப்பன் குழு மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஊதிய உயர்வை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, அரசு கடைபிடிக்கின்ற மனிதநேயக் கொள்கையின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்ததைப்போல (மணியடிக்கப்பெற்றது) மனிதக் கழிவுகளை அகற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுடைய பணியை மாற்றி, அவர்களுக்கு வேலைவாய்ப்பு, தொழில் செய்ய வசதி போன்ற மறு வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கொத்தடிமைகளைக் கண்டறிய 1997-லே ஆய்வு செய்யப்பட்டு, அதன்மூலம் 25 ஆயிரம் கொத்தடிமைகள் இருப்பது கண்டறியப்பட்டு, அதிலே 4774 தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு தேங்கிய நல்வாய்க்காலும், வகைப்படுத்தி, நெற்சேர உழுது உழுது பயன் விளைவிக்கும் நிறை உழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்? தொழிலாளியின் தோள்கள்.

கல்பிளந்து, மலைபிளந்து, கனிகள் வெட்டிக் கருவியெல்லாம் செய்து தந்த கைதான் எவர் கை? உழைப்பாளர் கைகள்.

பொன்துகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப் போய் எடுக்க அடக்கிய மூச்சு, எவரின் மூச்சு? பாட்டாளியின் மூச்சு. அந்த மூச்சை ஆதரிக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்துவோம் என்று 'மே நாள்' வாழ்த்துக் கூறி, என் பேச்சை நிறைவு செய்துகொள்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டினுடைய தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மானியத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளைக் கூற விழைகிறேன். இன்றைய நிலையிலே நம்முடைய தமிழக அரசு பல்வேறு தொழிற்சாலைகளையெல்லாம் தொடங்கி, வேலைவாய்ப்புகளைப் பெருக்கி, சாதனை படைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே நாங்கள் அதை மிகவும் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதேநேரத்திலே படித்த இளைஞர்களெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்திலே Ford Motor Compan , H undai Compan போன்ற பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்கியதைப்போல, ஆயிரக்கணக்கில் வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய தொழிற் சாலைகளை இன்னும் தொடங்குவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் எல்லாம் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று போற்றி வந்தாலும்கூட, பல்வேறு ஆலை நிருவாகங்கள் தொழிலாளர் விரோதப் போக்கில், தொழிலாளர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கக்கூடிய அந்த அணுகுமுறைகளையெல்லாம் எப்படியாவது மாற்றுவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலை நிருவாகமும், தொழிலாளர்களும், இரட்டை மாட்டு வண்டியில் உள்ள இரட்டை மாடுகளைப் போல பணியாற்ற வேண்டுமென்ற அந்த மனப்பக்குவத்தை உருவாக்குவதற்கு எல்லா வகைகளிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையிலே வேலைவாய்ப்பு என்பது மத்திய அரசுத் துறையிலும், மாநில அரசுத் துறையிலும் 4% தான் இருந்து கொண்டிருக்கிறது.

வேலைவாய்ப்புகள் எல்லாம் தனியார் துறையிலே இருக்கின்ற காரணத்தினாலே, குறிப்பாக தொழிற்சாலைகளிலே இருக்கின்ற காரணத்தாலே, தனியார் துறையிலேயும், தொழிற்சாலைகளிலேயும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலே



இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துவதற்கு தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

Granite தொழிற்சாலை என்பது நாட்டினுடைய வருமானத்தைப் பெருக்கக்கூடிய மிகப்பெரிய தொழிலாக இருக்கின்றது அந்த Granite தொழில் நலிவடைந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக தனியார் பட்டா நிலங்களிலே granite வெட்டி எடுக்கும் உரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கின்ற நேரத்திலே Polishing unit வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அரசு நிலத்திலே, புறம்போக்கு நிலத்திலே அல்லது வனத் துறைக்குச் சொந்தமான நிலத்திலே பல்வேறு இடங்களிலே அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு Polishing unit தேவை என்ற நிலையை உருவாக்கினாலும்கூட, பட்டா நிலங்களில் அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு Polishing unit தேவை இல்லை என்ற நிலையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

Granite கற்களை ஏற்றுமதி செய்கின்ற நேரத்திலே ro alt விதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் ro alt கூடுதலாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று பலரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பெண்ணாகரம் தொகுதி என்பது சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் வாழக்கூடிய பகுதி. எந்தவிதமான தொழில் வசதியும் இல்லாத பகுதி. எங்களுடைய பகுதியிலே இருந்து பலர் தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் சென்று கல் உடைக்கக்கூடிய அல்லது அறுவடை செய்யக்கூடிய பல்வேறு கூலித் தொழில்களைச் செய்து, நிரந்தரம் இல்லாமல் வாழக்கூடிய ஒரு நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று சொல்லி நான் 3 ஆண்டுகளாக இந்த மாமன்றத்திலே வற்புறுத்தி வேண்டிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து நடப்பாண்டில் பெண்ணாகரத்தில் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பஞ்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. நலிவடைந்த பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இழந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளைப்போல தனியார் நூற்பாலைகள் எல்லாம் மூடப்பட்டு, வேலைவாய்ப்பு இல்லாத நிலையிலே தொழிலாளர்கள் எல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகளில் மூடியவற்றைத் திறக்கவும், அதுபோல் தனியார் நூற்பாலைகளில் மூடியவற்றைத் திறக்கவும் நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிலாளர்களது வாழ்வு மீண்டும் மலர்வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக Mettur Textiles Mill என்பது பிரசித்தி பெற்ற ஆலையாகும். ஏறக்குறைய 3000-க்கும் மேற்பட்டவர்கள் நீண்டகாலமாக அந்த ஆலையிலே பணியாற்றி வந்தார்கள். ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக அந்த ஆலை மூடப்பட்டு வேலை இல்லாத நிலையிலே தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, தனியார் யாராவது அதை நடத்துவதற்கு ஏற்ப, அரசே எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு அந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திண்டிவனம் அருகே சாணம் கூட்டுறவு நூற்பாலை என்று இருக்கிறது. அந்த ஆலை மூடப்பட்டு தொழிலாளர்கள் எல்லாம் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அந்த ஆலையை செவ்வனே தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தமிழக அரசு வாரியம் கண்டதை உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதேபோல, அமைப்பு சாராத் தொழில்களில் ஈடுபடக்கூடியவர்களுக்கு பணிப் பாதுகாப்பும், அவர்களுக்கு அரசின் அனைத்து நலத் திட்டங்களையும் வழங்குவதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறையை நாம் அமல்படுத்தி வருகிறோம். இருந்தாலும் எல்லா இடங்களிலும்



குழந்தைத் தொழிலாளர் முறை, அவர்கள் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற நிலை, அதனால் பாதிக்கப்படக்கூடிய நிலை, கல்வி இல்லாத நிலை எல்லாம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு நல்ல திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று சொன்னாலும் அந்தத் தொழிலிலே பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. டென்மார்க் நாட்டிலே கால்நடை வளர்ப்பு அதிகமாக இருக்கிறது. அங்கே மாட்டுப் பண்ணை வைக்க வேண்டுமென்று சொன்னால்கூட, Cattle Teyhnolog -ல் பயிற்சிகள் எல்லாம் வழங்கப்பட்டு, அவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கி, அந்தத் தொழிலை அவர்கள் மிகவும் செவ்வனே செய்வதற்கு உண்டான வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே, எந்தத் தொழிலாக இருந்தாலும், ஒவ்வொரு தொழிலுக்கும் பயிற்சியை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி எங்களுடைய மாவட்டத்தின் தலைநகராகும். மாவட்டத் தலைநகரில் வேலைவாய்ப்பு அலுவலகம் கிடையாது. கிருஷ்ணகிரியிலே அது இருக்கிறது. ஆகவே, கிருஷ்ணகிரியிலே இருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்டத் தலைநகருக்கு மாற்ற வேண்டுமென்று நாங்கள் வேண்டுகோள் வைக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அங்கே அவசியம் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தை நடப்பு ஆண்டிலே தொடங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, அரசு விதைப் பண்ணைகளிலே தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் இல்லை. ஊதியம் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு என்ற வகையிலே நிரந்தரமும், ஊதிய உயர்வும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, அரசு போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றக்கூடியவர்கள் மிகப் பெரிய கோரிக்கையை வைத்துப் போராட்டம் நடத்திய வரலாறை எல்லாம் தமிழ்நாடு சந்தித்தது.

(மணியடிக்கப்பெற்றது) விரைவில் முடித்துக்கொள்கிறேன். ஆகவே, மீண்டும் அதிலே தனிக் கவனம் செலுத்தி, அரசு போக்குவரத்து கழகத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மேட்டூர் அனல் மின் நிலையத்திலே பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்துவோம் என்ற நிலையை உருவாக்குகின்ற நேரத்திலே, 188 பேர் அங்கே வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கல்வித் தகுதி இல்லை என்ற அடிப்படையில், இப்போது அவர்களுக்கு Notiye வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று நாட்களாக பாட்டாளி மக்கள் கட்சி தொழிற் சங்கத்தின் சார்பிலே சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற தலைமைப் பொறியாளர், உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டுமென்றும், தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவோம் என்றும் வாக்குறுதி அளித்து, உண்ணாவிரத்தை விலக்கிக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் நேற்று அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை நீக்கம் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. ஆகவே, மீண்டும் அங்கே ஒரு பதட்டம் ஏற்படாமல், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையிலே அவர்களுக்குப் பணி நிரந்தரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களையெல்லாம், மாவட்டத்தைவிட்டு மாவட்டம், நான்கு ஐந்து மாவட்டங்கள் தாண்டி பணி மாறுதல் செய்கின்றார்கள். அவர்கள் சாதாரணத் தொழிலாளர்கள், கல்லுடைக்கும் தொழிலாளர்கள், மிகவும் குறைந்த ஊதியத்திலே பணியாற்றக்கூடியவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட மாறுதலெல்லாம் இல்லாமல், அந்தந்தக் கோட்டங்களிலே பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஒசூரிலே ELCOT தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் மீண்டும் புனர்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாம்பரத்திலே Madras Export Proyessing Zone இருக்கிறது. அது மூடப்பட்டு, அந்தத் தொழிலாளர்களெல்லாம் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அதிலே 90 சதவிகிதம்பேர் பெண்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கையிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, Standard Motors தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் வேலைக்குச் செல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜல்லி உடைக்கும் தொழிலாளர்களுக்கு, Granite கல் உடைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு தனி வாரியம் அமைத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். உழைப்பவர்களுடைய வியர்வை காய்வதற்கு முன்னாலே அவனுக்குரிய கூலியைத் தர வேண்டுமென்று சொல்லி, நபிகள் நாயகம் அவர்கள் உழைப்பினுடைய மேன்மையைப் பற்றி உயர்த்திக் கூறியிருக்கிறார்கள். அத்தகைய வகையிலே நாளை, தொழிலாளர் நாளாக, மே தினச் சிறப்பு நாளாகக் கொண்டாடப் பட இருக்கிற முகத்தான், அதற்கு முன்னாலே தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே நான் சில கருத்துகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சங்க இலக்கியங்களை எடுத்துக்கொண்டால்கூட, தொழிலினுடைய மேன்மையை எடுத்துச் சொல்கின்ற வகையிலே, "வினையே ஆடவர்க்கு உயிரே; மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'' என்று சொல்லப்படுகின்ற குறுந்தொகைப் பாடல் வரிகள், தொழில்களுடைய மேம்பாட்டை, சிறப்பியல்புகளை எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் அமைந்திருக்கின்ற வரிகளாகும். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, "சித்திரச் சோலைகளே, உமை நன்கு திருத்த இப்பாரினிலே; எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ, உங்கள் வேரினிலே" என்று சிறப்பித்துப் பாடக்கூடிய அளவிற்கு இருக்கின்ற தொழிலாளர் வர்க்கமானது மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக, மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்தது மட்டுமல்ல, இலட்சக்கணக்கிலே இருக்கக்கூடிய அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஒரு மிகப்பெரிய அளவிற்குப் பாதுகாப்பையும், அவர்களுக்காக ஒரு வாரியத்தையும் கண்ட தமிழக முதல்வர் டாக்டர்

கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்திலே நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைப்பு ரீதியாக இருக்கிற தொழிலாளர்களுக்கு மட்டுமே இதுவரை இருந்த பாதுகாப்பானது, இப்போது உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கும் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவிற்கு தமிழகமானது இப்போது முன்னணியில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஒழிப்பதற்கு, கட்டாயக் கல்வியை அமலாக்குகின்ற வகையிலே இப்போது தொடக்கக் கல்விக்கு முன்னுரிமை அளித்து, தொடக்கக் கல்வி இயக்கம் ஒன்று இந்த ஆண்டு முதல் நடத்தப்படும் என்றும், அதற்குத் தொண்டு நிறுவனங்களையெல்லாம் பயன்படுத்திக்கொள்வோம் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருப்பது, உண்மையிலேயே குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட வேண்டுமென்பதில் தமிழக முதல்வர் அவர்களுக்கு உள்ள அக்கறையை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட இப்போது குழந்தைத் தொழிலாளர் முறையை அமல்படுத்துகிறபோது, அதிகாரிகள் செல்கிறபோதெல்லாம் பல சிரமங்கள் இருக்கின்றன. இப்போதும் நாம் உணவகத்திற்குச் செல்கிறபோது, குழந்தைத் தொழிலாளர்களை தூய்மைப்படுத்துகிற, துப்புரவு செய்கின்ற பணிகளிலே ஈடுபடுத்தி இருப்பதை நாம் காண்கிறோம்.

*முற்பகல் 11-55*

அதுமட்டுமல்ல, தாம்பரம் MEPZ வளாகத்திலேகூட அதிகாரிகள் சோதனையிடச் செல்கிறபோதெல்லாம் குழந்தைத் தொழிலாளர்களை கழிப்பறைக் கூடங்களிலேயும், மற்ற மற்ற சாக்குப்பைகளிலேயும் போட்டு மறைத்து, கண்ணிலே மண்ணைத் தூவக்கூடிய அளவுக்குத்தான் இப்போது பலபேர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இப்போது அனைத்து மாவட்டங்களிலும் அபாயமான தொழிலிலே 9493 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலிலே 8828 குழந்தைகளும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்கிற அந்தக் கணிப்பு மிக மிகக் குறைவான கணிப்பு. ஆக, நடைமுறையிலே உள்ள சிரமங்களைத் தீர்ப்பதற்கு தமிழக அரசானது தொழில் உரிமம் வழங்கப்படுகிறபோதே குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பதற்கு ஏதேனும் கட்டுப்பாடுகளை விதித்து தொழில் உரிமங்கள் வழங்கினால் அது



உண்மையிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதைப்போல, குழந்தைத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்கள் நீதிமன்றத்திற்கோ, நுகர்வோர் நீதிமன்றத்திற்கோ விண்ணப்பித்தால் அவர்களுக்கு ஒரு மாத காலத்திலிருந்து இரண்டு மாத காலத்திற்குள்ளாக நிவாரணமோ அல்லது பாதுகாப்போ கிடைப்பதற்கு வழிவகை சட்டத்திலே காணப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விருமபுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு பணிவான வேண்டுகோளையும், முக்கியமான பிரச்சினையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். ஏற்கெனவே தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட செய்திதான் அது. கல் உடைக்கும் தொழிலில், கல் குவாரி தொழிலில் ஏறத்தாழ 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது ஓர் உன்னதமான, கட்டுமானத் தொழிலிலே இருக்கக்கூடிய ஓர் அற்புதமான தொழில் பிரிவு. ஆனால் 16.6.1994 முதல், G.O. Ms. No. 166-ன் மூலமாக கடந்த கால ஆட்சியானது கல் குவாரி குத்தகையைப் புதுப்பிக்கும் முறையை. அந்த உரிமத்தை ரத்து செய்த காரணத்தினாலே, இப்போது அந்தத் தொழிலானது நலிவடைந்து, அந்தத் தொழிலாளர்கள் பலபேர் வேலைவாய்ப்பை இழக்கக்கூடிய அபாயகரமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

இப்போது siliya மணல் குவாரி, சுண்ணாம்புக்கல் குவாரி போன்றவற்றிற்கு குத்தகைக் காலம் 30 ஆண்டுகள் என்றும், உரிமம் புதுப்பிக்கின்ற காலம் 20 ஆண்டுகள் என்றும் தரப்படுகிறது. அதுபோல கல் குவாரித் தொழிலுக்கும் அரசு அனுமதிக்குமேயானால் அது இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய வேலையை இழக்காமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அதற்கான seigniorage கட்டணங்கள் இப்போது 10 கனஅடிக்கு 7 ரூபாய் வீதம் ஒரு load சக்கைக்கு ரூ.87.50 காசு என உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிலே உற்பத்திச் செலவே 90% ஆகிவிடுகிறது. ஆனால் பெரும் கடினத் தொழிலாக இருக்கக்கூடிய Quartz போன்ற தொழில்களிலேயே டன் ஒன்றுக்கு 13 ரூபாய்தான் மத்திய அரசு ro alt விதித்திருக்கிறது. ஆனால் 10% கூட இலாபம் வராத கல் குவாரி தொழிலிலே மிகக் கனிசமான அளவுக்கு seigniorage கட்டணம் விதித்திருப்பதை

தயவுசெய்து தமிழக அரசு குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கல் குவாரி உரிமம் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிவகை கண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைத் துடைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தூத்துக்குடி நூற்பாலையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதுகுறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே நான் கொண்டு வந்திருக்கிறேன். ஏறத்தாழ 19 பேர்களை, ஏதோ தொழிற்சங்க நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்ற காரணத்திற்காக அந்த நிருவாகமானது பணிநீக்கம் செய்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அந்தத் தொழிற்சாலையினுடைய விதிமுறைகளுக்கு மாறாக சிறு தவறுகள் செய்தால் 50 காசு அல்லது ஒரு ரூபாய் ஒறுத்தல் கட்டணம் போடலாம் என்று விதிமுறைகள் இருந்தாலும்கூட, சிறு. சிறு தவறுகளுக்குக்கூட அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து பணிநீக்கம் செய்யக்கூடிய அளவிற்கு ஈடுபட்டு வருகிறார்கள். உதாரணமாக, டி. கூடலிங்கம் என்ற தொழிலாளி மருத்துவ விடுப்பிலே சென்றபோது, அதைக் காரணம் காட்டி அவரைப் பணிநீக்கம் செய்துவிட்டார்கள். அதேபோல, அமிர்தகணேசன் என்பவர் ஒரு தொழிற்சங்கவாதி. அவர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற காரணத்திற்காக அந்த நிருவாகமானது ஒரு பொய் புகாரைக் கொடுத்து, அண்ணா நகரிலே ஒரு கலாட்டா நடந்தது. அதற்கு அவர்தான் காரணம் என்று ஒரு காரணத்தைச் சொல்லி, அவர் இப்போது குண்டர் தடுப்புக் காவல் சட்டத்திலே சிறைபட்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) எனவே, இவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தயவுசெய்து தூத்துக்குடி நூற்பாலைப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் அந்த 19 தொழிலாளர்களுக்கும் மறுபடியும் பணிவாய்ப்புத் தர அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

'ELCOT' நிறுவனமானது இப்போது மூடப்பட்டிருக்கிறது. 200 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் நிருவாகி தியாகராஜன் செட்டியார் என்பவர் செய்த தவறுக்கு இப்போது தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு அதற்கு முறையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சொன்னாலும்கூட, உடனடியாக



7 மாத காலமாக அவர்களுக்கு வழங்கப்படாத சம்பளத்தை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

சென்னை, தாம்பரம் ஏற்றுமதி வளாகத்திலே, செயல்முறை வளாகத்திலே, J.T.S. என்ற ஒரு Teyhnolog Compan இருக்கிறது. அது Computer உதிரி பாகங்களை ஏற்றுமதி செய்கிற நிறுவனம். ஏறத்தாழ 627 கோடி ரூபாய் இலாபத்திலே, 1996-97-லே இயங்கிவந்த அந்த நிறுவனத்தை, இப்போது மூடிவிட்டு, அதன் முதலாளி பம்பாயிலே போய், வேறொரு நிறுவனத்தைத் தொடங்குவதற்காக முயன்று கொண்டிருக்கிறார். ஆகவே, முதலாளிகள் எல்லாம் தொழிலாளிகளை ஏய்ப்பதற்காக, வஞ்சிப்பதற்காக siyk industr என்று சொல்லிவிட்டு, வங்கிகளிடம் வாங்கிய கடன்களையெல்லாம் மோசடி செய்துவிட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பேசி முடித்துவிடுகிறேன். இப்பொழுதுதான் பேச வந்திருக்கிறேன்.

இப்போதுள்ள நிலையில், இத்தகைய தொழிற் தகராறுகளில் முதலாளிகளை அழைப்பதற்கு வழியே இல்லாமல் இருக்கிறது. கர்னாடகா மாநிலத்தில், நிருவாகத்தைச் சார்ந்தவர்கள், பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு summon அனுப்பி, அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வற்புறுத்தி அழைத்து வருவதற்கான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. அதேபோல் ஒரு சட்டத்தை தமிழக அரசானது தமிழ்நாட்டிலே இயற்றி, தொழில் பிரச்சினைகளிலே ஒத்துழைக்க மறுக்கிற நிருவாகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 70 ஆயிரம் பெண்கள் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான

தொழில் சட்டங்களையும் நிறைவேற்றுவது கிடையாது. எனவே, அதையும் அரசு கவனத்திலே கொண்டு, பெண்களுக்கு என்று ஒரு தனி தொழிலாளர் நல வாரியம் அமைப்பதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

Dunlop தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது; அதையும் திறப்பதற்கு ஆவன செய்யவேண்டும். மேற்கு வங்கத்திலே ஓராண்டிற்கு மேலாக மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளிலே பணி செய்கிற தொழிலாளர்களுக்கு மாத உதவித் தொகையாக 500 ரூபாய் தரப்படுகிறது. இதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கிறேன். எனவே, அதேபோன்று இங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கும் உதவி செய்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வெளிநாடுகளிலே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பல தனியார் நிறுவனங்கள் மோசடி செய்கின்றன. ஆகவே, அந்தத் தனியார் நிறுவனங்களை தயவுசெய்து தடை செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இத்தகைய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலே அரசே பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுகுறித்து பத்திரிகைகளிலே விளம்பரம் செய்து, தவறான வழிகளிலே பலர் இடர்படாமல் இருப்பதற்கு, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு மேலாகக் காத்திருப்பவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.250 அல்லது ரூ.500 வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார், 5 நிமிடங்கள் மட்டும்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கருங்குளம் பகுதியில், லாரி விபத்தில் இறந்த ஏழைத் தொழிலாளிகள் 19 பேர்களின் குடும்பத்திற்கும் அதேபோல் என்னுடைய தொகுதியில், கருங்குளம் பகுதியிலுள்ள மரமேறும் தொழிலாளி, மதுரை மாவட்டம், திருமங்கலம்



பகுதியில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு இறந்ததால் அவருடைய குடும்பத்திற்கும் பணத்தை அள்ளிக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை 1952-லே இருந்து நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருந்தது. 1991-க்கு மேல், கடந்த ஆட்சியாளர்களுடைய குறையினால் அந்தத் தொழிற்சாலையில் 12 கோடி ரூபாய் நஷ்டமாகி, அந்த நஷ்டத்தை ஈடுகட்ட முடியாமல், இப்போது அந்தத் தொழிற்சாலை நடத்த முடியாத அளவுக்கு தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, தொழிற்சாலையிலே ஏறத்தாழ 100 தொழிலாளிகள் ஓய்வுபெற்று, ஓய்வூதியம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தொழிலை நடத்துவதற்கு முடியாமல் அங்கே ஓடுகின்ற இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அது ஒரு நல்ல ஆலை. அதை நிரந்தரமாக நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. ஏறத்தாழ 15 கோடி ரூபாய் முதலீடு இருந்தால்தான் அந்த ஆலையை நடத்த முடியும் என்ற நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தொழிலாளிகளினுடைய நலனைக் கருதி, இந்த அரசு அந்த ஆலையை நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஆலைக்கு ஆலைத் தொழிலாளிகளே முதலீடு செய்திருக்கிறார்கள். அந்த ஆலைக்குச் சொந்தக்காரர்களாக இருந்து அவர்கள் பணியைச் செய்கிறார்கள். இருந்தாலும், அவர்கள் அதை சரிவர நடத்த முடியவில்லை என்ற ஒரு குறைபாட்டினால் அங்கே தத்தளித்துக் கொண்டு இருக்கின்ற அந்த ஆலையின் மேல் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கவனத்தைச் செலுத்தி, அதை திறம்பட நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

என்னுடைய தொகுதியிலே, மதுரை மாவட்டத்திலே, மரம் ஏறும் ஏழைத் தொழிலாளி ஒருவர் திருமங்கலம் காவல் சரகத்திற்கு உட்பட்ட பட்டிபுரத்திலே பனை ஏறும் தொழிலைச் செய்துகொண்டு இருந்தார். அவர் பனை மரம் ஏறி பதநீர் இறக்கினால், அங்கேயுள்ள வியாபாரிகள், எங்களுக்கு அதைக் கள்ளாக மாற்றிக் கொடு, அப்படி கள்ளைக்

கொடுத்தால்தான் உன்னை பனைமரம் ஏற விடுவோம் என்று மிரட்டி, அவருடைய 10 பேர் கொண்ட குடும்பத்தை வீட்டிற்குள்ளேயே நெருப்பை வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். அந்தச் சம்பவத்தில் மிஞ்சியது அந்த மரம் ஏறுகிற தொழிலாளி ஒருவரும் மற்றும் வயது வந்த இரண்டு பெண் குழந்தைகள் மட்டும்தான். மற்றவர்களை அவர்கள் சாகடித்து, இரண்டு குழியை வெட்டி, குழிக்கு மூன்று பேராக, அங்கேயே தூக்கிப் போட்டு புதைத்து இருக்கின்றார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை கொடுத்து இருக்கின்றார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், அந்த ஏழைத் தொழிலாளியினுடைய குடும்பத்தில் உள்ள அந்த இரண்டு பெண்கள் எந்தவித ஆதரவும் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தயவுகூர்ந்து தலா ஓர் இலட்சம் ரூபாய் கொடுத்து நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, அந்த இரண்டு பெண் குழந்தைகளையும் அரசு நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதியிலே சாத்தான்குளம் பகுதியில் நல்ல ரகக் கற்கள் கிடைக்கின்றன. அந்தக் கற்களை சோதனை செய்து அதனைப் பயன்படுத்தும் வகையில் அங்கே ஏதேனும் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) வெளிநாட்டிற்கு அனுப்புவதற்குகூட, தூத்துக்குடியிலே நமக்கு நல்ல கப்பல் போக்குவரத்து வசதி இருக்கிறது. ஆகவே, அங்கேயிருந்து நீங்கள் அந்த நல்லரகக் கற்களை எல்லாம் தேர்ந்தெடுத்து அதனைப் பயன்படுத்தி, அங்கு ஒரு தொழிற்பேட்டையினை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன். மூன்று நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கையினை வரவேற்று, என்னுடைய கருத்துகளை விரைவில் கூறி முடித்துக்கொள்கிறேன். இப்போதைய சூழ்நிலையில் வெளிநாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம், வெளிநாட்டிலே வேலை வாங்கித் தருகிறோம் என்று சொல்லி, கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு



ஓடிவிடுகின்றார்கள். அவர்களை சட்ட ரீதியாக முழுமையாக தண்டிக்கக்கூடிய அளவிற்கு வழிவகை இல்லை. பல்வேறு இடைஞ்சல்களுக்கிடையில் படித்துவிட்டு, வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே, வீட்டிலே உள்ள அண்டா, குண்டாக்களை அடகு வைத்து, மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான ரூபாயையும் இதற்காகக் கொடுத்து விடுகின்றார்கள். இதுமாதிரி தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே பல நூறு பேர்களிடம், பல கோடி ரூபாயை சுருட்டிக்கொண்டு, அவர்கள் நாட்டை விட்டு ஓடி விடுவது வாடிக்கையாக நடந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த அரசு இவற்றை முழுமையாக கவனத்திலேகொண்டு, இதுகுறித்து முறையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே பாதிக்கப்படுவது நம்முடைய படித்த இளைஞர்கள். இன்றைய காலகட்டத்தில் இது ஒரு பெரிய பிரச்சினையாக வளர்ந்துகொண்டு இருக்கிறது. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இதுபோன்ற வழக்குகள் தேங்கிக் கொண்டேயிருக்கின்றன. காவல் நிலையத்திற்குச் சென்று கேட்டால், இது பணப் பிரச்சினை, ஆகவே சிவில் நடவடிக்கை எடுங்கள் அல்லது நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள் என்று அலைக்கழிக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு, அரசு இதில் முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 480 நாட்கள் பணிபுரிந்தால் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்கிற ஒரு நிலை இருக்கிறது. இதனை அரசு சார்ந்த நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும். குறிப்பாக, பல நகராட்சிகளில் N.M.R. ஆக, 10 வருட காலமாக தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். ஆகவே, அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது படித்த இளைஞர்கள் தினமும் செல்லக்கக்கூடிய ஓர் அலுவலகம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாக இருந்து கொண்டு இருக்கிறது. அங்கே பதிவு விட்டுப் போனவர்கள் மீண்டும் பதிவு செய்ய முடியாமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைக் கவனத்திலேகொண்டு அவர்கள் மீண்டும் பதிவு செய்வதற்கு வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, வேலைக்காகப் பதிவு செய்து காத்திருப்போர் பட்டியல்

நீண்டுகொண்டே போகிறது. ஆகவே, இப்போது வழங்கப்படுகின்ற வேலைவாய்ப்புகளிலே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இடமாற்றம். எந்த ஒரு பகுதியிலே வேலைவாய்ப்பு வந்தாலும், அதற்காக, உண்மையிலேயே வசிப்பிடத்தை மாற்றாமல், அந்த வேலைக்காக விலாசத்தை மட்டும் மாற்றக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. பெயர்களை மாற்றிக்கொள்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளை நீக்குவதற்கு, சற்று முறைப்படுத்துவதற்கு சட்டம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தையும் தொலைபேசி வசதி, கணினி வசதி இருக்கக்கூடியதாகவும் மாற்ற வேண்டும். ஏனென்று சொன்னால், தங்கள் பதிவுகள் குறித்து தெரிந்துகொள்வதற்காக தினந்தோறும் வரிசையிலே மாணவர்கள் அங்கே செல்கின்றார்கள். அவர்கள் அதை easy-யாகத் தெரிந்துகொள்வதற்காக, கணினியிலே பதிவதற்கான முறையையும், தொலைபேசி வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அடுத்து, உழவுத் தொழிலாளர்களுக்காக ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டுமானத் தொழில் செய்பவர்களுக்கு தனி வாரியம் இருக்கும்போது, மாவட்ட வாரியாகப் பணி செய்வதற்காக மாவட்டந்தோறும் அவர்களுக்கு மன்ற அலுவலகங்கள் தவிர்த்து, மாவட்ட அலுவலகங்களும் ஏற்படுத்த வேண்டும். அதேபோல, அவர்கள் பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டுள்ளார்கள். திருமண உதவித் தொகையை உயர்த்திக் கேட்டிருக்கிறார்கள். ஈமச் சடங்கு உதவித் தொகையை உயர்த்திக் கேட்டிருக்கிறார்கள். இதுபோன்ற உதவித் தொகைகளை உயர்த்தி வழங்குவதற்கும், மழை, வெள்ளம் போன்ற காலங்களில் இவர்களுக்கு மீனவர்களுக்கு வழங்குவதைப்போல உதவித் தொகை வழங்குவதற்கும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, இன்னும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தனித் தனியாக நல வாரியங்களை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

221806.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறையில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி, நாளை உலகத் தொழிலாளர்களுடைய தினம் என்பதைத் தெரிவித்து, இந்த நேரத்திலே நான் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மனிதக் குரங்கிலேயிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம் என்ற புத்தகத்தில் உலகப் பொதுவுடமை தத்துவத்தின் பிதாக்கள் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் உழைப்பினுடைய உன்னதத்தைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால், அப்படிப்பட்ட உழைப்பினுடைய அந்தப் பெருமை இப்போது முறையாக இந்த மனித இனத்தை முன்னேற்றுவதற்குப் பயன்படுகிறதா அல்லது அனுமதிக்கப்படுகிறதா என்றால், அது கேள்விக்குறியாக இருக்கிறது.

தமிழ் மண்ணில் அரசு ஊழியர்களுக்கு அடுத்தபடியாக ஒரே துறையில் அதிகமாகப் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்றால், நாட்டுப் புறங்களிலே இருந்து பல மைல்களுக்கு அப்பாலே, ஒதுக்குப்புறமாக காடுகளிலே தோட்டத் தொழிலாளர்களாகப் பணிபுரியக் கூடியவர்கள்தான் இலட்சக்கணக்கிலே அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். தேயிலை, coffee, ஏலத் தோட்டங்களிலே நிரந்தரமான தொழிலாளர்களாக, 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம், 30 ஆண்டு காலம் என்று தற்காலிகத் தொழிலாளர்களாக ஏறக்குறைய 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழகத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்காக 1951, 1955, 1960 ஆகிய ஆண்டுகளிலே பல சட்டங்கள் வந்திருந்தாலும்கூட, அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கெல்லாம் இன்னும் முடிவு காலம் வரப்பெறவில்லை என்பதை இந்த நேரத்திலே வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ‘மே தினம்’ நாளை நாம் கொண்டாடுகின்றோம். எதற்காக என்றால் 100 ஆண்டு காலத்திற்கு முன்பு சிகாகோ நகரிலே 8 மணிநேர வேலை முறையைப் போராடி பெற்றதை நினைவு கூறும் வகையில் அந்த தினத்தைக் கொண்டாடுகின்றோம். ஆனால், 100 ஆண்டு காலத்திற்கு முன்பு 8 மணி நேரம் வேலை வந்தது. அந்த உத்தரவு நடைமுறைக்கு வந்தது. ஆனால் தேயிலைத் தோட்டங்களின் நிலைமை என்னவென்றால், காலையில் 6 மணிக்கோ, 6 ½ மணிக்கோ புறப்பட்டுச் சென்று மாலை 6 மணி வரையிலும் பணிபுரிந்தால்தான் அவர்கள் அரை



D
V21, 31N99 N99.7.1

வயிற்றுச் சாப்பாட்டுக்காவது ஏதோ ஒரு கூலியைப் பெற முடியும் என்ற அவல நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருந்தாலும்கூட, அந்தச் சட்டங்களை அமலாக்கக்கூடிய அதிகாரிகள் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்பதனை வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்னுடைய நண்பர். அவர் தொழிலாளர் நலத் துறையிலே அக்கறை கொண்டவர். ஆனாலும்கூட, மிழ்நாட்டிலே இருக்கிற பல துறைகளிலே மிக மோசமாக இருக்கக்கூடிய துறை எது என்றால் தொழிலாளர் நலத் துறை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அதிகாரிகள் ஒரு தொழிற்சாலையை, தோட்டத்தை எதற்காக பார்வையிடச் செல்கிறார்கள் என்றால் டீ சாப்பிடுவதற்கும், பிஸ்கெட் சாப்பிடுவதற்கும், அவர்கள் கொடுக்கக்கூடிய கவர்களை வாங்கிக்கொண்டு வருவதற்கும்தான். தொழிலாளர்களுக்கானச் சட்டங்களை. அமல்படுத்துவதற்காக அவர்கள் செல்வது கிடையாது. அமலாக்சக்கூடிய நிலையிலேயும் அவர்கள் இல்லை என்ற நிலையை நான் சுட்டிக்காட்டித்தான் ஆக வேண்டும். எனவே, அப்படிப்பட்ட நிலையை மாற்றி, அதிகாரிகள் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தக்கூடிய அதிகாரிகளாக மாற்றப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பொதுவாகச் சொல்கிற குற்றச்சாட்டை அமைதியாக நான் கேட்டுக்கொண்டு இருந்தால், அவைகளை நான் ஏற்றுக்கொண்டது போன்ற ஒரு தவறான கருத்து வரும். இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர் சட்டங்கள், குறைபாடுகள் உடையதாக இருக்கலாம். அப்படி இருக்குமேயானால், அது திருத்தப்பட வேண்டும். அதில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்காக இருக்கக்கூடிய அந்தச் சட்டங்களைத் துறையின் சார்பாக அமல் நடத்துகிறார்களா, இல்லையா என்று கேட்டார். இந்த இந்த சட்டங்கள், இன்னின்ன பிரச்சினைகளிலே அமல்படுத்தப்படவில்லை என்று சொல்லி நீங்கள் பரிகாரம் காண்பதற்கு வழியிருக்கிறது. மூன்றாவதாக எல்லாத் துறைகளிலும் இந்தத் துறை மோசமானது, இங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள்



அத்தனை பேரும் சரியாகச் செயல்படவில்லை என்று ஆதாரம் இல்லாமல் பொதுவாகச் சொன்னால், நானும்கூட திருப்பி இதேபோன்ற குற்றச்சாட்டை டாக்டர் மீது சொல்லலாம். ஆதாரத்தோடு சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கத் தயார்.

*பிற்பகல் 12-15*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே குற்றச்சாட்டு அல்ல. ஆனால், பொதுவாகத் தொழிலாளர் நலத் துறையின்மீது எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒரு கருத்தைப்பற்றி நான் சொல்கின்றேன். எனவே, அது திருத்தப்பட வேண்டும். தொழிலாளர் நலத் துறை இன்னும் ஒரு வலிமை வாய்ந்த அமைப்பாக, அதிகாரிகளைக் கண்டு முதலாளிகள் பயப்படக்கூடிய துறையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் சொல்கிறேனே தவிர ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது தொழிலாளர் நல அமைச்சர் எனக்கு மிக நெருங்கிய நண்பர், ஆனால், அந்தத் துறை மோசமாக இருக்கிறது என்று சொன்னார். ஒருவேளை நண்பராக இருக்கிற காரணத்தால் இந்தத் துறை மோசமாக இருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். (சிரிப்பு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பராக இருந்தாலும் துறை சரியாக இருக்க வேண்டும் என்பதுதான். துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் சொல்கின்றேன்.

அடுத்தபடியாக, ஏறக்குறைய ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதியிலேயிருந்து மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் 5000-த்திற்கு மேற்பட்டவர்கள் போராடி வருகிறார்கள். இப்பொழுது எந்தவிதமான போராட்டமோ, உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாதபோதுகூட, காலை 7-30 மணிக்கு, 7-00 மணிக்குச் சென்று, அவர்கள் 8 மணி நேரம் வேலை செய்துவிட்டுத் மாலை திரும்புவதற்காக, அமைதியான முறையிலே கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றபோதுகூட, தேவையில்லாமல் 600 தொழிலாளர்கள் இப்போது பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். 150 பேருக்குமேல் Notice

கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு......

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். அவரைப் பேசவிட்டுக் கடைசியாகச் சொல்லலாம் என்று சொன்னாலும்கூட, உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பதிவாகிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லி, நிருவாகம் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடுமையாகச் சொன்னார்கள். சொல்லியதற்குப் பிறகு, குறிப்பிட்டபடி 2, 3 நாட்களுக்கு முன்பாகப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையிலே நானும் கலந்துகொண்டேன். நிருவாகத்தைச் சேர்ந்தவர்களைக் கேட்டேன். ஒரு பேச்சுவார்த்தை நடந்துகொண்டு இருக்கின்றபோது, நீங்களாக 700 பேருக்கு மேற்பட்டவர்களை வேலை நீக்கம் செய்வது எப்படிப் பொருத்தமாகும், இது சரியில்லை என்று சொன்ன நேரத்திலே, நாங்கள் உடனடியாக எடுத்துக்கொள்கிறோம், ஆனால், ஒரு நியாயமான காரணமும் இல்லாமல், இஷ்டத்திற்கு ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு தொழிலாளர்கள் 8 மணி நேரமும் வேலை செய்யாமல் ஒரு மணி நேரம்கூட வேலை செய்யாமலேயே சம்பளம் கேட்கிறார்கள், எப்படிக் கொடுக்க முடியும் என்று நிர்வாகம் சொன்ன அந்த நேரத்திலே, நான் அதைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க முடியும், உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன். அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவிக்கிறேன்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் அங்கு எந்தத் தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை, செய்யப்பட்டிருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்வதாக உறுதியளித்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) எடுத்துக்கொண்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு இரவுகூட எனக்கு அந்தப் பகுதியிலேயிருந்து ஏறக்குறைய 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேலையில்லாது, வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள், நாளைக்கு வருகின்ற தொழிலாளர் நலன் மானியத்திலே இதை நீங்கள் எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்



கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலை இன்னும் தொடருகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 3 நாட்களுக்கு முன்பாக அவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தியபோது அத்தனை பேரையும் நாங்கள் மீண்டும் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னார்கள். துறையின் சார்பாகக் கேட்டபோது அதை உறுதி செய்தார்கள். இப்போது அவ்வாறு சேர்க்கப்படவில்லை என்று ஒரு புகாரை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அது உண்மையானால், உடனடியாக அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் உண்மையாக இருந்தால் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்களே, திரு. சந்தானம், நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகாலம், 20 ஆண்டுகாலம் என்று தற்காலிகத் தொழிலாளர்களாக இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 40 ஆண்டுகாலம் 50 ஆண்டுகாலம் பணிபுரியக்கூடிய தோட்டத் தொழிலாளர்களுக்கு Time Scale-ல் சம்பளம் கொடுக்கப்படுவது கிடையாது. அவர்கள் நிரந்தரத் தொழிலாளிகளாக இருந்தாலும்கூட, தினம் 50 ரூபாயோ, 60 ரூபாயோதான் கூலி. தினக் கூலியாகக் கணக்கிட்டுதான் கொடுக்கப்படுகிறதே தவிர, அவர்களுக்கு Time Scale-ல் கொடுக்கப்படுவது கிடையாது. எனவே, அவர்களுக்கு Time Scale fix செய்யப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-20

அடுத்தபடியாக, சம்பளப் பேச்சுவார்த்தை நான்கு மாதங்களுக்கு முன்பாகவே தொடங்கியிருக்க வேண்டும். அந்த முத்தரப்புப்

பேச்சுவார்த்தையை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படவில்லை. அதுவும் தொடங்கப்பட வேண்டும்.

• தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் 150 ரூபாயாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். ஏனென்றால், மற்ற தொழில்களிலேயிருந்து தோட்டத் தொழில் வித்தியாசமானது. அவர்கள் எப்போதும் காடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்களைவிட மிகவும் மோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, காலை 6-00 மணியிலிருந்து மாலை 6-00 மணி வரையிலும், 5 கிலோமீட்டர், 6 கிலோமீட்டர், 8 கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதேபோல், வேலை முடிந்த பிறகும் நடந்து வர வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்கள் கடுமையான மழை பெய்தாலும்கூட மழையிலே நின்றுகொண்டு வேலை செய்ய வேண்டுமே தவிர 10 நிமிடங்கள்கூட ஒதுங்க முடியாது. அவர்கள் வேலை செய்யக்கூடிய தேயிலை, காபி தோட்டங்களிலேயிருந்து கோடிக் கணக்கில் இலாபம் வருகிறது. எனவே, ஒரு பொருள் வெளியே வருகிறது என்றால், தொழிலாளர் உழைப்பு ஒரு பகுதி இருக்கிறது. உழைப்பு ஒரு ரூபாய் என்று கணக்கிட்டால் முதலாளியினுடைய முதலீடு ஒரு ரூபாய். எனவே, ஒன்றும் ஒன்றும் சேர்ந்துதான் இரண்டு ஆகிறது. எனவே, அதிகமாக சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; இலாபத்திலே அவர்களுக்கும் பங்கு கொடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலே தொழிலாளர் நலத்தைப் பேணுகிற கலைஞரின் தலைமையிலேயுள்ள இந்த அரசுக்கு எந்தவிதமான எதிர்ப்பும் கிடையாது. ஆனால், அதே நேரத்திலே நிருவாகமும், தொழிற்சங்கங்களும் கலந்துபேசி, சட்டத்திற்குட்பட்டு அந்த அதிகமான சம்பளத்தை அவர்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக, கர்நாடகமாக இருந்தாலும், மேற்கு வங்காளமாக இருந்தாலும், அஸ்ஸாமாக இருந்தாலும், கேரளாவாக இருந்தாலும், எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக தமிழ்நாட்டில்தான் 63 ரூபாய் 88 பைசா தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்பது அதிகாரபூர்வமான புள்ளிவிவரம். இன்னும்



சொல்லப்போனால், கோவையிலே இதுகுறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீண்டும் இதை உயர்த்துவதற்கான பேச்சுவார்த்தையை, சாதாரணமாக தொழில் சங்கமும் நிருவாகமும் பேசலாம். அரசு இதை ஏற்றுக்கொள்கிறது. அரசின் உதவி தேவைப்பட்டாலும் அரசு அதற்குத் தயாராக இருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் 16 எஸ்டேட்டுகள், தலைஞாயிறு, சக்தி என்று அழைக்கப்படுகின்ற அந்த 16 எஸ்டேட்டுகளுக்கு வால்பாறைக்கு முன்பாக 15 கிலோமீட்டர்கள் உள்ளே செல்ல வேண்டும். அங்கே தினக் கூலியாக 37 ரூபாய் 50 காசுதான் கொடுக்கிறார்கள். அங்கே 60 ரூபாய் கொடுப்பது கிடையாது. எனவே, அதை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கோயம்புத்தூரில் P.L.R. Textiles நிறுவனம் ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடக்கிறது. நிர்வாகம் தானாகக் கதவடைப்பு செய்திருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அவர்களுக்கு கடந்த ஆண்டு கிடைக்க வேண்டிய Bonus இல்லாமல், அதுபோல அவர்கள் வேலை செய்த நாட்களுக்குச் சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள். அதைக் கொடுப்பதற்கும், தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல், 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய MEPZ பகுதியில் எந்தவிதமான தொழில் சட்டங்களும் அமல்படுத்தப்படாமல், பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அங்கு இருக்கக்கூடிய குறைகளை எல்லாம் களைவதற்கு அங்கே தொழிலாளர் நலச் சட்டங்கள் உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு நிமிடம். ராணிப்பேட்டை Elcot நிறுவனத்திலே வேலை செய்யும் தொழிலாளர்கள் சம்பளம் இல்லாமல் 8 மாதங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். Mahaveer Plantation-ல் 6 மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படாமல் தொழிலாளர்கள் வால்பாறை, குன்னூர் பகுதியில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாஞ்சோலையிலே அந்தத் தொழிலாளர்கள் இன்னும்

வேலைக்கு அமர்த்தப்படவில்லை என்பதுதான் உண்மையானது. எனவே, எல்லோருக்கும் வேலை கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டி வலியுறுத்தி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தொழிலாளர் நலத் துறையின் மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக எங்கள் தன்னிகரில்லாத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னை இரண்டாவது முறையாக வெற்றி பெறச் செய்த என் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-25*

1935-ல் கோயம்புத்தூரில் ஓர் ஆலை வாயில் கூட்டத்தில் கவிஞர் ஜீவா பாடினாராம்.

காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழும் இல்லை
பாழுக்கு உழைத்தோமடா நாம்
பசையற்றுப் போனோமடா
குண்டிக்கு ஒரு துணியும் இல்லை
கொல் வறுமை தாளவில்லை
ஒண்டக் குடிசை இல்லை
நாம் உழைத்திளைத்துப் போனோமடா
கையில் ஒரு காசும் இல்லை
கடன் கொடுப்பார் யாருமில்லை
செய்யும் தொழில் கிட்டவில்லை
திண்டாட்டம் கொல்லுதடா
பாலின்றிப் பிள்ளையழும்
பட்டினியால் தாயழுவாள்
வேலையின்றி நாம் அழுவோம்
வீடும் முச்சூடும் அழும்



என்று 1935-இல் தொழிலாளர்கள் படுகின்ற துன்ப துயரங்களையெல்லாம் எண்ணிப் பார்த்து, கசிந்துருகிப் பாடிய அமரர் ஜீவாவினுடைய புகழ் நிலைத்து நிற்கின்ற வகையில் நாகர்கோவிலில் அந்த ஜீவாவிற்கு மணிமண்டபம் கட்டிய எங்கள் தன்னிகரில்லாத் தலைவர் டாக்டர் கலைஞருக்கு நான் மனப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிலாளர் தோழர்களுக்காக முதலில் குரல் கொடுத்த சிங்காரவேலர் பெயரை சென்னை மாநகரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சூட்டியமைக்காக மீண்டும் ஒருமுறை நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நன்றி என்ற வார்த்தை இப்பொழுது எல்லோருடைய வாயிலும் இருக்கிறது. சட்டமன்றத்தில் மட்டும் நன்றி சொல்லுகின்ற இந்தப் பெருந்தன்மைக்குரியவர்கள், நாளை மக்கள் மன்றத்திலும் நன்றி என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளையும் இந்த நேரத்தில் நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதல்வராக நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற கலைஞர் அவர்கள், இந்த நாட்டில் இருக்கக்கூடிய அடித்தள மக்களுக்காகப் பல்வேறு சாதனை சரித்திரத்தைப் படைத்திருக்கிறார்கள். நிதிநிலையறிக்கையில்கூட மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கின்ற அவலநிலையைப் போக்குவதற்காக ஓர் அற்புதமான திட்டத்தை தந்திருக்கின்றார்கள். அதுபோலத்தான், முதன் முதலாக முதல்வராகப் பொறுப்பேற்ற காலத்தில், சென்னையிலும், செங்கற்பட்டிலும், கடலூரிலும் கொதிக்கின்ற தார் ரோட்டில், மிதிக்கின்ற செருப்பில்லாமல், காலுக்குச் சாக்கைக் கட்டிக்கொண்டு மனிதனை மனிதன் இழுத்துச் செல்லுகின்ற மனிதாபிமானமற்ற தொழிலை அறவே நீக்குவேன் எனச் சொல்லி கைரிக்ஷா இழுத்தவர்களுக்கெல்லாம் இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கி, அவர்கள் வாழ்க்கையில் வளம் சேர்த்தவர்கள் நம்முடைய தமிழக முதல்வரவர்கள். அதுபோலவே, இந்த நாட்டில் வெயிலுக்கும், மழைக்கும் தங்கள் வாழ்வைப் பலியிட்டு, வேதனைத் தீயில் கருகிக் கொண்டிருந்தவர்களுக்கு, மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து, நலிந்து, நலமிழந்து, வலிவிழந்து, பொலிவிழந்து, கூனிக் குறுகி எட்டடிக் குடிசைக்குள் குந்திக் கொண்டிருந்தவர்களுக்கு, ஓலைக் குடிசையிலே

ஒட்டிய வயிறோடும், கட்டிய துணியோடும், பட்டினியோடும், பசியோடும், நாதியற்றவனாய், நடைபிணமாய், வக்கற்றவனாய், வாழ வழியற்றவனாய் அலைந்து திரிந்த, என் போன்ற தாழ்த்தப்பட்ட இனத்திலே பிறந்த என் சகோதரர்களுக்கெல்லாம் அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தந்தது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் ஒழுகாத, தீப்பிடிக்காத concrete வீடுகளைக் கட்டித் தந்து எங்கள் வாழ்க்கையிலே வளம் சேர்த்தவர் நம்முடைய தமிழக முதல்வரவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி நீங்கள் ஆட்சிக்கு வந்து பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றீர்கள். தமிழக மக்களுக்கு, குறிப்பாகத் தொழிலாளர் தோழர்களுக்கு. மரம் ஏறும் தொழிலாளர்கள் கீழே விழுந்து இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய், ஒரு விவசாயி பூச்சிமருந்து தெளிக்கின்ற வேளையில் விஷ வாயு பட்டு இறக்க நேரிட்டால் 15 ஆயிரம் ரூபாய், ஒரு விவசாயி பாம்பு கடித்து இறந்துபோனால் அந்தக் குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய், அதுபோல மீன் பிடிக்கச் சென்று மீன் பிடிக்கிற நேரத்தில் அந்த மீனவன் செத்துப்போனால் இலட்சம் ரூபாய் என்று பல்வேறு நலத் திட்டங்களைத் தந்து, தொழிலாளர் வாழ்க்கையில் வளம் சேர்த்திருக்கிறீர்கள்.

அதுபோலவே, தாங்கள் இந்த நாட்டில் பல்வேறு தொழிலாளர் தோழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறீர்கள். தொழிலாளர்களுக்கென்று வாரியம் அமைத்தீர்கள். தொழிலாளர் துறைக்குப் பல்வேறு சலுகைகளைத் தந்திருக்கிறீர்கள். ஆகவே, நான் மனப்பூர்வமாகச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களே, தாங்கள் காலத்தால், ஏன் இன்னும்கூடச் சொன்னால், மழையால், தீயால், புயலால், வெள்ளத்தால், ஏன் துரோகத்தால்கூட அழிக்க முடியாத வகையில் நிலைத்து நிற்கிறீர்கள், தமிழக மக்கள் நெஞ்சமெல்லாம் நிலைத்து இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மனப்பூர்வமாகச் சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதல்வரவர்களுக்கு ஒரு பணிவான கோரிக்கை, எனது தொகுதி சம்பந்தமாக. அதோடுமட்டுமல்லாமல், மரியாதைக்குரிய எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் இரகுமான்கான் அவர்களுக்கும் ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து நான் விடை பெற விரும்புகிறேன்.



இராஜபாளையம் தொகுதியில் அழகப்பா நூற்பாலையில் 1-8-1998 முதல் சட்டத்திற்குப் புறம்பாகக் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. கதவடைப்பு செய்யப்பட்டு சுமார் 9 மாத காலம் ஆகிறது. 800 குடும்பங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் இன்றைக்கு வீதியில் நிற்கிறார்கள். வீதியிலே நிற்கின்ற தொழிலாளர்கள் மதுரை தொழிலாளர் துணை ஆணையாளர் மூலம் பலமுறை சம்பந்தப்பட்ட நிருவாகத்தோடு பேசிப் பார்த்து இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை; எந்தப் பயனும் விளையவில்லை. அவர்கள் பல்வேறு வகையில் போராட்டத்திற்கு ஆயத்தமானார்கள். போராட்டத்திற்கு ஆயத்தமாகி, சாலை மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைக்குக்கூடச் சென்று விட்டார்கள். ஆனால் நிருவாகம் இதைப்பற்றி இன்னமும் கிஞ்சித்தும் கவலைப்படாமல், கேளாக் காதாய், படுத்துறங்கும் செவிட்டு விரியனைப்போல இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் பணிவோடு சொல்வதெல்லாம் அழகப்பா நூற்பாலை நிறுவனத்தை கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய Eastern Rayon என்ற ஒரு நிறுவனம் குத்தகைக்கு எடுத்து, சட்டத்திற்குப் புறம்பாக அந்த ஆலை மூடப்பட்டு, 800 குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஏற்கெனவே ஒருமுறை இதைக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்களும் ராஜபாளையத்திற்கு வருவதாகச் சொன்னீர்கள். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக வரமுடியாமல் போய்விட்டது. நீங்கள் தயவுசெய்து எங்கள் தொகுதிக்கு வருகைதந்து, சம்பந்தப்பட்ட ஆலை நிருவாகத்தையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் உட்கார வைத்துப் பேசி, ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, கிட்டத்தட்ட இருபது தினங்கள் சிறைக்கொட்டடிக்குள் அடைபட்டு, மீண்டும் அவர்களுக்கு ஒரு வழியும் கிடைக்காமல், குடும்பத்தோடு, பிள்ளை குட்டிகளோடு தெருவுக்கு வந்து சாலை மறியல் செய்யப் போவதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு வரவிடாமல் இருக்க, ராஜபாளையம் தொகுதிக்கு பல்வேறு சலுகைகளைத் தந்து இருக்கிறீர்கள், அதைப்போல இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

நான் கடந்தமுறை சட்டமன்றத்தில் பேசுகின்றபோது எங்கள் பகுதியில் 20,000 தொழிலாளர் தோழர்கள் விசைத் தறியில் Guaze Bandage உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் மிகவும் பெருந்தன்மையாக ஒரு கோடி ரூபாய் வரி விலக்கு தந்து, அந்த இருபதாயிரம் தொழிலாளர் தோழர்களின் வயிற்றில் பால் வார்த்திருக்கிறீர்கள். அந்த அளவுக்கு நல்ல சலுகைகளை நீங்கள் தந்திருக்கிறீர்கள். 8 கோடி ரூபாய் பெறுமான ஒரு சாஸ்தான்குள அணைக்கட்டுத் திட்டத்தைத் தந்து, இந்த எளியவன் பெயருக்கு அங்கே ஒரு மரியாதையை ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள். அதைப்போல, பல்வேறு சலுகைகளை நீங்கள் தந்துகொண்டிருக்கிறீர்கள். அதுபோல், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நான் விடுக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலம் 50 ஆண்டுகாலமாக அங்கே வாழ்ந்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைப்பதற்கான நடவடிக்கையை வெகுவேகமாகச் செய்திருக்கிறார்கள். அதைப்போலவே, இப்போது பல்வேறு சலுகைகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி, நான் விடைபெற விரும்புகின்றேன். அதற்கு துணைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுகின்றேன்.

இராஜபாளையம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய தொழில் நகரம். அந்தத் தொழில் நகரத்தில் புறவழிச் சாலை கேட்டு இதே மன்றத்தில் 1997-ல் பேசியிருக்கிறேன். கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் மக்கள் அங்கே வாழ்ந்து வருகிறார்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களால் திருமங்கலத்திலிருந்து இராஜபாளையம் வழியாக தென்காசி செல்கிற சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டு தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது புறவழிச்சாலை என்பது மிகவும் அவசியம். அந்த புறவழிச்சாலையும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற செய்தியை அவர்கள் தந்து, அது முன்னுரிமையில் இருக்கிறது என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றரை இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த இராஜபாளையம் தொகுதியில் தினமும் விபத்துகள் ஏற்படுகின்றன. அன்றாடம் பிரச்சினைகள்



எழுகின்றன. சில நேரங்களில் நான் அந்தப் பிரதான பாதைகளில் செல்கிறபோது எல்லாம் என்னைப் பார்த்துக் கிண்டல் செய்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தோடு செயல்பட வேண்டுமென்று மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். என்னுடைய அண்ணன், அவருடைய பெயர் செல்லையன். அவர் மின்சார வாரியத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து இறந்துபோனார். இறந்த பிறகு வாரிசு அடிப்படையில் அவருடைய பிள்ளைக்கு வேலை கேட்டு மனுச் செய்கிற வேளையில், என்னுடைய அண்ணியாருக்கும் என்னுடைய அண்ணனின் மூத்த மகனுக்கும் ஏற்பட்ட ஒரு வாய்த் தகராறு விளைவாக பி.எஸ்.ஸி. படித்துக்கொண்டிருந்த மாணவனுக்கு, அதாவது இளைய மகனுக்கு வேலை கேட்டு மனுச் செய்ய, படித்துக்கொண்டிருந்த அந்தப் பையனுக்கு வேலைக்கான உத்தரவும் சென்று, அதற்குப் பிறகு நடந்த தவறை என்னிடம் சொன்னபிறகு நான் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசி, சிறப்புக் கவனம் செலுத்தி மீண்டும் அந்த மூத்தவனுக்கே வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். நான் மரியாதைக்குரிய தலைவர் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அதுபோல் வாய்ப்புத் தரமுடியாது என்று சொல்லி ஒரு தகவல் வந்திருக்கிறது. என்னுடைய அண்ணன் மகனுக்கு வயது 28 ஆகிவிட்டது. இன்னமும் திருமணமும் முடிக்காமல் இருக்கிறான். இந்த வேலையை நம்பித்தான் இருக்கிறான். ஆகவே, தயவுசெய்து சிறப்புக் கவனம் செலுத்தி இளையவனுக்குத் தந்த அந்த வேலையை மாற்றி மூத்தவனுக்குத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கு ஒரேயொரு வேண்டுகோள். இராஜபாளையத்தில் ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளியில் 200-க்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகளும் படிக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் பல்வேறு மேல்நிலைப் பள்ளிகள் இருந்தாலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 65 சதவீதம் மாணவிகள், இராஜபாளையம் மேல்நிலைப் பள்ளியில் குறைந்த மதிப்பெண்கள் பெற்று வந்து சேர்ந்து,

இப்போது நல்ல மதிப்பெண்கள் பெறுகிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அப்படி நல்ல கல்வியை, தரம் வாய்ந்த கல்வியைத் தருகின்ற அரசு மேல்நிலைப் பள்ளியில் பெண்கள் அதிகம் பேர் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு மகளிர் மேல்நிலைப் பள்ளி வேண்டும் என்பதற்கான மனுக்கள் தந்திருக்கிறோம். அதற்கான முயற்சியில் ஈடுபட்டு ஓர் இலட்சம் ரூபாயும் செலுத்தியிருக்கிறோம். ஆகவே பெண்களுக்காக என்று தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

*பிற்பகல் 12-35*

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளையதினம் நம்முடைய தொழிலாளி வர்க்கத்தினுடைய, உழைக்கும் வர்க்கத்தினுடைய 'மே தின' நாள். 1886 ஆம் ஆண்டு ஆரம்பித்த, அந்த 8 மணிநேர வேலை; 8 மணிநேர ஓய்வு என்ற அவர்களுடைய உரிமைக் குரல், இப்போதும் அது அமலாக்கப்பட வேண்டுமென்று பல்வேறு பகுதிகளிலே கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை உள்ளது. அதனுடைய பின்னணியில், நம்முடைய நாட்டிலே ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களின் அடிப்படையில், 1957-ல் கேரள மாநிலத்தில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அரசாங்கம் 'மே தின'த்தை முதல் முறையாக 1987 ஏப்ரல் 25 ஆம் தேதியன்று விடுமுறையாகப் பிரகடனம் செய்தார்கள். அந்த நல்ல செய்தியைச் சொல்லி, இங்கே நம்முடைய மானியக் கோரிக்கையின்மீது சுருக்கமாகச் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

ஏற்கெனவே பல்வேறு தொழில்கள் நம்முடைய மாநிலத்தின் மையப் பகுதிகளிலே வளர்ந்து வருகின்ற அல்லது ஏற்படுகின்ற அந்த நல்ல செய்தியைப் பாராட்டி, வரவேற்று, அதேபோன்று பிற மாவட்ட மையங்களிலே தொழில் வளர்ச்சிக்கு, ஏதுவாக, எந்தத் தொழிலுக்கு வாய்ப்பு இருக்கின்றதோ அந்த அடிப்படையில் பிற மாவட்டங்களில் தொழில் துறையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதைக் கோரிக்கையாக வைக்கின்றேன்.



அடுத்து, நம்முடைய நாட்டில் மூடியிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்னே வைத்து, அதனுடைய பின்னணியிலே நம்முடைய Binny ஆலையிலே இன்னும் 1800 தொழிலாளர்கள் எந்தவிதமான சலுகையும் பெறாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, Binny ஆலையைத் திறப்பதற்கான உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் MEPZ-ன் கதையை இங்கே சொன்னார்கள். அதில் ஏறத்தாழ 11 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள், பெருவாரியாக 10 ஆயிரம் பெண்கள் வேலை செய்கிற அந்த இடத்தில் MEPZ நிர்வாகம் இரவு நேரம்கூட பெண்களை வைத்து வேலை செய்கின்ற நிலை இருக்கிறது. எந்தவிதமான Factory சட்டங்களும் முழுமையாக அங்கே அமலாக்கப்படவில்லை. ஏற்கெனவே, 1997-98-க்கான போனஸ் வழங்கப்படவில்லை. 1998 டிசம்பர் மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. இவற்றையெல்லாம் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இப்போது வேலை நிறுத்தம் என்று வருகின்றபோது, பல நேரங்களிலே அது தடை செய்யப்பட்டாலும், அதேபோன்று ஆலைகளை மூடுகின்ற நிலை வருகின்றபோதுகூட அது தடை செய்யப்பட்டாலும், அந்தக் கதவடைப்பை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கிறது. அதுபோல, நிர்வாகத்திற்கு வருமான வரி விலக்கு, குறைந்த வட்டியில் கடன், மானியம், ஏற்றுமதிக்கு அரசு incentive, இயந்திரங்கள் இறக்குமதிக்குச் சுங்க வரி விலக்கு போன்றவை தரப்படுகின்றன. சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் கிடைக்கிறது. ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், 4 வருடங்கள் இப்படி அரசாங்கத்தினுடைய சலுகைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு, அடுத்து, இன்னொரு பெயரிலே நிருவாகத்தை இன்னொரு பகுதிக்கு மாற்றி, அவர்கள் அடுத்த ஆலையைத் தொடங்குகிறார்கள். என், அந்த MEPZ நிர்வாகத்திலே இருக்கின்ற முதலாளி எங்கே என்று கேட்டால், இங்கே ஊரில் இல்லை, பம்பாயில் இருக்கிறார், அமெரிக்காவில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். எனவே, பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 12 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த தொழிலியல் கூட்டுறவு விசைத்தறித் தொழிற்கூடங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. அவைகள் தொடர்ந்து செயல்பட, இலவச வேட்டி, சேலைகள் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து, ஆண்டு முழுவதும் அவற்றுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பீடித் தொழிலாளர்களுக்கு அரசு புதிய சம்பளச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அந்தச் சம்பளச் சட்டம் மூலம் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ரூபாய் 30, 35 கொடுத்துவிட்டு, ரூ. 43.98 கொடுத்ததாகப் பதிவேடுகளில் பதிவு செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை பரசேரி என்ற இடத்திலே இருந்து வருகிறது. இதையும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோல, Container Corporation of India, மதுபான உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் வேலை செய்து வந்த 58 தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோன்று, ரப்பர், தேயிலை, காப்பித் தோட்டங்களிலே பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் 63 ரூபாய் அல்லது 70 ரூபாயாக இருந்தாலும்கூட, இன்றுள்ள விலைவாசியின் அடிப்படையில் அந்தச் சம்பளத்தின் அளவை 100 ரூபாய் என்று உயர்த்தி அடிப்படைச் சம்பளம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அரசுத் துறையிலே வருகின்றபோது 8.33 சதவீதம் Bonus வழங்குகிறார்கள். காலத்தினுடைய தேவை வேறுவிதமாக இருக்கின்ற காரணத்தினாலே Bonus என்பதைக் குறைந்தபட்சம் 20 சதவீதம் என்று கொண்டுவர வேண்டும். அதுபோல, 20 சதவீதத்திற்கு மேலே Bonus வரக்கூடாது என்று மத்தியச் சட்டத்திலே இடமிருக்கிறது. எனவே, மத்தியச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு ரப்பர் கழகமானது முன்மாதிரியாக நடப்பதன் மூலமாகத்தான் தனியார் துறையை நாம் முடுக்கிவிட முடியும். அந்த அடிப்படையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் வேலை செய்யும் பெண்கள் இப்போது சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பெண்களுக்கு மகப்பேறு விடுப்புச் சலுகைகள் அங்கே கிடையாது. மேலும், அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், Factory Inspector ஒரு பெண்ணாக இருந்தால் எங்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலே பாதுகாப்பை அதிகரிப்பதற்குப் பெண் காவலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு பல்வேறு விதமான, பாலியல் பலாத்காரம் போன்ற நடவடிக்கைகள் நடப்பதாகக் குறை கூறியிருக்கிறார்கள், குற்றச்சாட்டை வைத்திருக்கிறார்கள். ஆகவே அதிலே அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, தோல் சாயப் பட்டறைகள், - Foundaries. ஜவுளித் தொழிலிலே ஆயிரக்கணக்கில் ஆட்குறைப்பு, ஆலை மூடல், சம்பள வெட்டு, இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. ஓசூர், கும்மிடிப்பூண்டி, அம்பத்தூர் போன்ற இடங்களில் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். காந்திமதி தோட்டம் மூடப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் ஆகிறது, 110 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதைத் திறப்பதற்கான எந்த முயற்சியை நாம் எடுத்தாலும், அந்த முதலாளியைப் பொறுத்தமட்டில் திறப்பதற்குத் தயாராக இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஏற்கெனவே இந்த மாநிலத்தில் 50,000-க்கும் அதிகமான முந்திரி ஆலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை நேரம் 8 மணி என்பதற்குப் பதிலாகக் குறைந்தபட்சம் 12 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்கு E.S.I. திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வைத்தோம். அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டாலும் அமலுக்கு வராத ஒரு நிலையிருக்கிறது. அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் 3 மருத்துவமனைகளுக்கான கட்டடங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் மருத்துவமனையைத் தொடங்கவில்லை. அதுபோன்று, தரையிலே உட்கார்ந்துதான் காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும் வேலை செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை அந்தத் தொழிலாளர்களுக்கு இருந்துகொண்டு இருக்கிறது.

Factory சட்டங்கள் முழுமையாக அமல்படுத்தப்படுவதில்லை. எனவே அரசு கவனம் செலுத்தி அவர்களுக்கு உரிய பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், தேவக்கோட்டை, சோமசுந்தரம் Super Mill-லிலே 1994-ல் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் இவ்வளவு வருடங்கள் ஆகியும் அமல்படுத்தப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இராஜபாளையம் அழகப்பா மில் 1990-ல் மூடப்பட்டது. 800 தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதுபோன்று சர்க்கரைத் தொழிலாளர்கள் ஊதியப் பிரச்சினை......

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் நீண்டகால்மாக ஒரு கோரிக்கையை இந்தச் சபையிலே வைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர், பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலர், கலைஞர் அவர்களுடைய அரிய முயற்சியால் நீங்கள் நீண்டகாலமாகக் கேட்டுவந்த E.S.I. மருத்துவ வசதியை அந்தப் பகுதிகளில் செய்து கொடுப்பதற்கு ஆணைகள் 29-4-1999-லே போடப்பட்டிருக்கின்றன. ஆகையால், பணியாட்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மருந்தகத்திற்கும் 13 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமாகவும், 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தொடராச் செலவினமாகவும் செலவு மேற்கொள்ள ஒப்புதல் அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த 50,000 தொழிலாளர்களின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று சுமை தூக்கும் தொழிலாளர்களுடைய நிலையிலே ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு வாரியங்களை நாம் அமைத்திருந்தாலும் இப்போது அவர்களுக்குப் பாதுகாப்பான சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாகவும், சம்பள உயர்வு வழங்கி பாதுகாக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒசூர் ELCOT நிறுவனம் 8 மாதங்களாக மூடப்பட்டுள்ளது. பல தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகின்றனர். அதுபோன்று, அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 30 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு 13 வருடங்களாகக் கொடுக்கப்படும் சம்பளம்



என்பது மாதம் 300 ரூபாய்தான். நம்முடைய மாநிலத்தினுடைய மையப் பகுதியிலே இருக்கக்கூடிய Work shop-லே வேலை செய்யக்கூடிய ஒரு தொழிலாளி இந்தச் சம்பளத்தை வைத்து எப்படி தன்னுடைய குடும்பத்தை வாழ வைக்க முடியும்? எனவே, இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி, அவர்களுடைய நிலையிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வழங்கிவந்த பல்வேறு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சாப்பாடு என்கிற பெயரிலே ஏதோ வழங்கி வந்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். சேஷசாயி தொழிற்சாலையை மூடி 9 வருடங்கள் ஆகிவிட்டன. 1200 தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இறுதியாக, மூடி இருக்கிற ஆலைகளைத் திறப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளையதினம் உலகத் தொழிலாளர்களுடைய 'மே தினம்' கொண்டாடப்படுகின்ற நிலையில் தொழிலாளர்களுடைய நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்த அகில இந்திய Forward Block கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன். நாட்டில் தொழில் துறை ஏற்றம் காண வேண்டுமென்றால், தொழிலாளர் நலன் பேணிக்காக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கு அனைத்துவிதமான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். நாட்டில் தொழில் அமைதி வேண்டும். அதையெல்லாம்விட தொழிலாளி—முதலாளிகளுக்கிடையே நல்ல சுமூகமான உறவு நிலவினால்தான் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். எனவே, தொழிலாளர்களுடைய நலனில் அதிகப்படியான அக்கறை செலுத்த வேண்டிய தார்மீகக் கடமை ஒரு மாநில அரசுக்கு இருக்கிறதென்றால் அது மிகையாகாது.

நமது கலைஞர் அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் மே தினத்தை, சம்பளத்துடன்கூடிய விடுமுறை தினமாக அறிவித்ததோடு, நேப்பியர் பூங்காவை மே தினப் பூங்காவாக அறிவித்து, இந்த அரசு

தொழிலாளர்களின் அரசு என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். எனவே, கலைஞர் அரசு ஒரு தொழிலாளர் நல அரசு என்றால் அது மிகையாகாது.

இந்திய சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும்கூட இல்லாத அளவிற்கு தமிழகத்தில் தொழிலாளர் நலத் துறையானது, அமைப்பு சாராத தொழிலாளர்களுக்கு, ஏறக்குறைய 52 வேலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இப்போது ஒரு தனி வாரியம் அமைத்து, ஒரு புதிய வரலாறு படைத்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இப்போது மூன்று நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. Group Insurance, மகப்பேறு நலத் திட்டம், பணி முடிவு நலத் திட்டம் என்று மூன்று நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு, சமூக ரீதியான பாதுகாப்பு இருக்கிறதா என்றால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனவே, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்போர் நலச் சட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் வாழ்கின்ற தொழிலாளர்களில் 8½ சதவீதம் பேர் தான் இப்போது அமைப்பு சார்ந்த தொழிலாளர்களாக இருக்கிறார்கள். 91½ சதவீதம் பேர் அமைப்பு சாராத தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள் 60 சதவீதம் இருக்கிறார்கள். எனவே, தமிழக அரசு, அந்த அமைப்பு சாராத தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைத்து ஒரு வரலாறு படைத்திருக்கிறது என்ற நிலையில் நான் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தமிழக அரசால் அமைக்கப்பட்ட கோலப்பன் குழுவானது விவசாயத் தொழிலாளர்களுடைய நிலையை ஆராய்ந்து அரசுக்கு ஒரு பரிந்துரை செய்துள்ளது. இந்தக் குழுவினுடைய அறிக்கையை முழு அளவில் சட்டசபையில் வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், 60 சதவீத விவசாயத் தொழிலாளர்கள் இந்த மாநிலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கோலப்பன் குழுவானது 43 பரிந்துரைகளை விவசாயத் தொழிலாளர்களுக்காகச் செய்தது



என்றாலும், முக்கியமான குறைந்தபட்சக் கூலி குறித்த குழுவின் பரிந்துரையை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அப்படியே ஏற்று, இதே சட்டசபையிலே அறிவித்திருக்கிறார்கள். எனவே, விவசாயத் தொழிலாளர்களின் சார்பிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் உலக குழந்தைத் தொழிலாளர்கள் எதிர்ப்பு தினமாக அமைந்திருக்கிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும், ஏழை, எளிய மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள், தங்களுடைய குழந்தைகளை வேலைக்கு அனுப்பினால்தான் தாங்கள் வாழ முடியுமென்ற கட்டாயச் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள்தான், இப்போது குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குழந்தைத் தொழிலாளர் முறையை நாம் நீக்க வேண்டுமென்றால், ஏழை, எளிய மக்களுடைய வறுமை நிலையைப் போக்குவதற்கு, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களின் நிலையை உயர்த்துவதற்குப் பாடுபட்டால்தான் உண்மையிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஒழிக்க முடியும். அதற்கேற்ப அரசு ஆழ்ந்த சிந்தனையோடு செயல்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், (மணியடிக்கப்பெற்றது) குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டுபிடித்து, அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி, கல்வியறிவு புகட்டவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தமிழகத்திலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே 40 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலைக்கு பதிவு செய்திருக்கிறார்கள், வேலைக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள், அலைந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற அளவிற்கு, புதிய பயிற்சி நிலையங்களை, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு விரைந்து செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாழ்க்கை வழிகாட்டி மையங்கள் இப்போது 21 மாவட்டங்களில் உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை நான் பாராட்டுகிறேன். எனது உசிலம்பட்டி

தொகுதியில் இருக்கிற அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அந்த வாழ்க்கை வழிகாட்டி மையங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இப்போது தொழிலாளர்களுக்கு 8.33 சதவீதம் Bonus வழங்கப்படுகிறது. இன்றைய பொருளாதார சூழ்நிலையில் அது போதாத நிலையாக இருக்கின்ற காரணத்தால் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலையை எண்ணி அவர்களுக்கு கலைஞர் அரசு Bonus-ஐ 15 சதவீதமாக் உயர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு 1000 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. அதை 1500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

450 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்களை (மணியடிக்கப்பெற்றது) பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சிப் பிரிவையும் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தமிழகத்திலே தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்படுகின்ற நிலையில் இருக்கின்றன; மூடிக்கொண்டே இருக்கிறார்கள். அரசு கணக்குப்படி 1990 ஆம் ஆண்டுக்கு பின்பு 35 தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருந்ததாகக் கணக்கிடப்பட்டு இருக்கிறது. ஆனால், பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 300-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. வாரம் ஒரு தொழிற்சாலை வீதம் மூடப்பட்டு இருக்கிறது. இதற்கு இந்த அரசுதான் காரணம் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை; சொல்லவும் முடியாது. காரணம் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, கிட்டத்தட்ட 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் தொழில்களை நடத்தி மிகப் பெரிய லாபம் அடைந்துவிட்ட பின்பு, தொழிலாளர்களுக்கு அதிகமாக ஊதியங்கள்



தரவேண்டிய காலக்கட்டத்தில், இந்த ஆலையை நாம் முறையாக நடத்த வேண்டிய அவசியம் இல்லை; காரணம் நல்ல லாபம் ஏற்பட்டுவிட்டது; ஆகவே, அதில் இருக்கின்ற வருமானங்களை எல்லாம் வேறு தொழில்களுக்கு மூலதனம் செய்துவிட்டு அந்த ஆலையை மூடிவிட்டால்கூட, ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் காட்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆலை, இப்போது நகரினுடைய மையப் பகுதிக்கு வந்துவிட்ட காரணத்தால், நகரத்தினுடைய வளர்ச்சியினால், பல கோடி ரூபாய் மதிப்புக்கு அந்த ஆலையே சென்றுவிடுகிறது என்ற ஒரு கணக்கில் அவர்கள் அந்த ஆலையை மூடுவதற்குத் தயாரான நிலையிலேயே அனைத்து ஆலை அதிபர்களும் இருப்பது நாம் கண்கூடாகக் கண்ட ஒன்று. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1990-க்கு பிறகு மூடப்பட்ட ஆலைகளில் பணியாற்றிய சுமார் 14 ஆயிரம் பேருக்குக் கடந்த ஆண்டு தீபாவளி Bonus 500 ரூபாய் வீதம் கொடுத்தார்கள். அதற்கு நன்றி சொல்கிறேன். இவ்வாறு அவர்களுக்கு நிவாரணம் கொடுத்து ஒருபோதும் அவர்களுடைய குடும்பத்தை நாம் வாழவைக்க முடியாது. ஆகவே, ஆலைகளை மூடுகின்ற ஒரு நிலைக்கு ஒரு நிருவாகம் வந்தால், அந்த ஆலையை அங்கு வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கே கொடுக்க இந்த அரசு உதவுவதோடு, அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பத்து தினங்களுக்கு முன்னால் தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், தூத்துக்குடி மற்றும் மதுரை போன்ற பகுதிகளில் சிறப்பாகச் செயல்படுகின்ற Madura Coats நிறுவனத்தில் 11 ஆயிரம் பேர் வேலை பார்க்கின்றார்கள்; அந்தத் தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளாக ஊதிய உயர்வு வழங்கவில்லை என்பதைபற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருப்பதாகத் தெரிவித்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்; அதோடு இன்று தொழிலாளர் நல மானியமாக இருப்பதால், அதிலே சேர்த்துப் பேசுங்கள் என்றார்கள்; அதற்காக 2 நிமிடங்கள் எனக்குக் கூடுதலாக நீங்கள் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அம்பை, தூத்துக்குடி, மதுரை ஆகிய இடங்களில் 'A' grade தொழிற்சாலையாக Madura Coats மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட 11 ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே பணியாற்றி வருகின்றார்கள். 11-6-1993 அன்று அனைத்து தொழிற்சங்கக் கூட்டு அமைப்பின் சார்பாக

நிருவாகத்தோடு ஒப்பந்தம் செய்து, ஊதிய உயர்வு வருகின்ற 11-6-1998 வரை இந்த ஊதியத்தில் செயல்பட வேண்டுமென்று சொல்லிவிட்டு, அந்த ஒப்பந்தத்தை மீறுகின்றவண்ணமாக 10 மாத காலமாகத் தொடர்ந்து ஊதிய உயர்வுக்கு நிருவாகம் இதுவரை ஒத்துக்கொள்ளாத நிலை இருக்கின்றது. கிட்டத்தட்ட 5 முறை அனைத்து தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கை குழுவும் நிருவாகத்துடன்—17-7-1998, 10-8-1998, 10-2-1999, 29-2-1999, 17-4-1999 ஆகிய தேதிகளில் 5 முறை பேசிய பின்பும், எந்த முடிவுக்கும் நிருவாகம் வராமல் இருக்கின்றது. ஆனால், திருநெல்வேலி தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர், நிருவாகம் அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கத் தயாராக இருக்கின்றது; தொழிற்சங்க ஊழியர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப்போன்று மாண்புமிகு அமைச்சருக்கெல்லாம் தகவல் அனுப்பியிருப்பது விந்தையாக இருக்கிறது கிட்டத்தட்ட 119 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையானது, 59 இலட்ச ரூபாய் தொழில் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அந்தத் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 391 கோடியே, 87 இலட்ச ரூபாய் reserve-ல் இருக்கின்ற அளவிற்கு அந்தத் தொழிற்சாலை வளர்ந்திருக்கிறது. ஆலை ஆண்டுதோறும் மிக அதிகமான இலாபத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்தாலும், 11,000 தொழிலாளர்களுக்கும் ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் நிருவாகத்திடம் இல்லை. ஆனால் நிருவாகத்திலே பணியாற்றுகின்ற 108 நபர்கள் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய்க்கு மேலே ஊதியம் பெறுகிறார்கள். கிட்டத்தட்ட வருடத்திற்கு 108 நபர்களுக்கு மட்டும், நிருவாகத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு மட்டும், 3 கோடி ரூபாய் சம்பளமாக அளிக்கப்படுகிறது. 1997-க்குப் பிறகு 3 மடங்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலை நிருவாகம் தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. நிருவாகத்திற்கும் . . . .

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. அப்பாவு அவர்களுக்கு இப்போதே பதில் சொல்லிவிடுகிறேன். ஒரு பகுதியை அவர்கள் இங்கே சொல்லவில்லை. ஊதிய உயர்வு சம்பந்தமான ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இப்போது ஊதியம் அதிகமாகக் கேட்டு, பேச்சுவார்த்தை நிருவாகத்திற்கும், தொழிற்சங்கத்திற்கும் இடையில் நடைபெறுகிறது. அது இறுதியாகப் பேசி முடிக்க வேண்டிய ஒன்று.



துறையைச் சார்ந்த அதிகாரிகள் மத்தியிலே இந்தப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் go slow என்று சொல்கின்ற விதத்திலே பணிகளை ஆற்றாமல், அங்கு உற்பத்திக்கு ஊறு விளைவிக்கின்ற அளவில் நிலைமை இருக்கிறது. ஆகையினால் பிரச்சினை இன்னும் கடினமாகி இருக்கிறது. இருந்தாலும், முறையாகப் பேசி, தீர்வு காணப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. மு. அப்பாவு:** தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழுவானது 20 அம்ச கோரிக்கையை வைத்திருக்கிறது. அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும்கூட, நியாயமான கோரிக்கையான 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தொழிலாளிக்கு 1,500 ரூபாய் கூடுதலாகச் சம்பளம் கேட்பதை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Learners சம்பளம் முதல் 6 மாதங்களுக்கு 50 ரூபாய் என்றும், இரண்டாவது 6 மாதங்களுக்கு 60 ரூபாய் என்றும், மூன்றாவது 6 மாதங்களுக்கு 70 ரூபாய் என்றும் நான்காவது 6 மாதங்களுக்கு 80 ரூபாய் என்றும் வழங்குமாறு கேட்டிருக்கிறார்கள். பகுதி ஆட்களுக்கு 790 ரூபாய்க்குப் பதிலாக 850 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். பணியில் இருக்கும்போது இறந்தால் 20,000 ரூபாய் அவர்களுடைய குடும்பத்தினருக்கு வழங்கப்படுகிறது. அதை ஓர் இலட்ச ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி கேட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் தொழிற்சங்கத்தோடு பேசி, செய்து கொடுத்து, தொழிலாளர் நலனில் அக்கறை செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

11,000 பேர்கள் பணியாற்றுகின்ற இந்தத் தொழிற்சாலையில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அந்தப் பகுதி மிகப் பெரிய பாதிப்படையும். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் சொன்னதைப் போன்று அம்பையில், தூத்துக்குடியில் "மெது வேலை" செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு நின்றுவிடாமல், அந்த நிருவாகம் பேச்சுவார்த்தையில் முடிவுக்கு வரவில்லையென்றால் 18-5-1999 முதல் நிரந்தரமான வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றும் அறிவித்து இருக்கிறார்கள். அனைத்து தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கை குழுவோடும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பேசி, சிறந்த முறையிலே செயலாற்றுகின்ற இந்தத் தொழிற்சாலை தொடர்ந்து

நடைபெறுவதற்கும், சிறப்பாக நடைபெறுவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகத்தில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தொழிற் சங்கச் சட்டப்படி வேலை நிறுத்தத்திற்கு அறிவிப்பு கொடுத்து பணியாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட அந்த நாட்களுக்கான சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மற்ற அனைத்துத் தொழிற்சங்கப் பணியாளர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மாநிலக் காங்கிரஸ் தொழிற் சங்கப் பணியாளர்களுக்கும் அந்த நாட்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசானது 24 Calendar மாதங்களில் 480 நாட்களுக்குக் குறையாமல் தொடர்ந்து பணியாற்றினால் அவரை நிரந்தரமாக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. சட்டத்தை நாமே இயற்றிவிட்டு 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாகத் தற்காலிகமாக வேலையில் வைத்திருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எங்களுடைய பகுதியிலே, தாழையுத்திலே ஒரு நவீன அரிசி ஆலை இருக்கிறது. வாணிபத் தொழில் நுட்பக் கழகத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. அங்கே 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளாக நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அதேபோன்று மின் வாரிய ஊழியர்கள் 11,000 பேர்களை நிரந்தரமாக்குவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அதிலே விநியோகப் பிரிவில் இருக்கிறவர்களுக்கு அந்தச் சலுகை வழங்கப்படவில்லை. ஆகவே விநியோகப் பிரிவில் இருக்கின்றவர்களுக்கும் அந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அரசுத் தேர்வுத் துறையில் 14 ஆண்டு காலமாக தற்காலிக வேலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாகப் பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய ராதாபுரம், நாங்குநேரி பகுதிகளில் ஓர் உயர்தர தொழில் பூங்கா 1½ இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்காகத் தற்பொழுது அங்கு நிலம்



கையகப்படுத்தப்பட்டு அந்தப் பணி முடிவடைகின்ற நிலையில் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றுகூட அதைப்பற்றி அறிவிப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அறிவிக்கவில்லை. ஆகவே 1½ இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெறுகின்ற அந்த உயர்தர தொழிற் பூங்காவை நீங்கள் உடனடியாக ஆரம்பித்துத் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு பொறுப்பேற்றதும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, அதைப் புதுப்பிக்காமல் விட்டவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இன்னும் பலபேர் அதில் பயனடையாமல் இருக்கிறார்கள். எனவே, மீண்டும் ஒருமுறை அவர்கள் புதுப்பித்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முதுகலை பட்டப் படிப்பு, பொறியியல், மருத்துவம் போன்ற படிப்பு முடித்தவர்களுக்கான வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. அதுபோன்று என்னுடைய பகுதியில் நெல்லைக்கும் ஓர் அலுவலகம் அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடியுங்கள் என்று சொன்னால் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே? உட்காருங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது முறையாக இந்த மாமன்றத்திலே தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் குறித்த மானியக் கோரிக்கையிலே உரை நிகழ்த்தக்கூடிய பெரும் வாய்ப்பை எனக்கு வழங்கிய என்னுடைய அன்பிற்குரிய இனிய தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தலை வணங்கி, கரம் கூப்பி, என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே ஆர்வத்தோடு பல அருமையான கருத்துகளை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. எம். ரங்கநாதன்,

திரு. கே. சுப்பராயன், திரு. ஆ. நடராசன், திரு. ஜி.கே. மணி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. எஸ்.எஸ். மணி நாடார், திரு. ஜி. நிஜாமுதீன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வி.பி. ராசன், திரு. டி. மணி, திரு. பி.என். வல்லரசு, இப்படி அருமை நண்பர்கள் அத்தனை பேரும் சிறப்பாகக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திரு. மு. அப்பாவு அவர்கள் இறுதியாக, நிறைவாக தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"

என்று வள்ளுவர் சொல்லியதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமாகச் சொல்லிய ஆலோசனைகளையெல்லாம் இந்த அரசு கவனத்திலே கொண்டு சிறப்பாகச் செயல்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

64-க்கும் மேற்பட்ட வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாகவும் பல கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக ஆயிரம் மலர்கள் பூக்க அனுமதிக்கும் ஜனநாயகத்தைப் போற்றுகின்ற கலைஞருடைய ஆட்சியில் இந்தத் துறை அவைகளையெல்லாம் கவனத்திலேகொண்டு செயல்படும் என்பதைப் பணிவோடு பேரவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் 'மே தின' சிறப்பைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அனைவருக்கும் இந்தப் பேரவையில் முதல்வர் அவர்களின் சார்பாகவும், தொழிலாளர் நலத்திலே அக்கறையுடைய இந்த அரசின் சார்பாகவும், என் சார்பாகவும் 'மே தின' வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுரண்டலையே மூலதனமாகக் கொண்ட முதலாளித்துவத்தை எதிர்த்து, அன்றைக்கு சிகாகோ நகரத்து வீதிகள் சிவந்த பூமியாகின்ற விதத்திலே துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய குண்டுகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், தூக்கு மேடையை முத்தமிட்டு, மரணமுற்று பல தியாகங்களைச் செய்து, 8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர உரிமை என்பதைப் பாட்டாளி வர்க்கம் பெற்றுத் தந்த நாள்தான் இந்த 'மே நாள்'. 1886 ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதி பெற்ற உரிமையை உலகம் முழுவதும் மே தினமாகக் கொண்டாடுகிறோம். இந்த நாள் சாதாரண நாள் அல்ல. சரித்திரத்தை உருவாக்கிய நாள். இங்கே ஒன்றை நான்



சொல்ல விரும்புகிறேன். இந்த மே தினத்தை இந்தியாவிலேயே முதன்முறையாகக் கொண்டாடிய பெருமை நம்முடைய தமிழ் மண்ணுக்குத்தான் உண்டு.

பிற்பகல் 1-05

குறிப்பாகச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் அந்த நாட்களில், 1923 ஆம் ஆண்டு முதலே முறையாக நீதிமன்றத்திற்கு அருகே இருக்கக்கூடிய கடற்கரைப் பகுதியிலே மே தின விழா கொண்டாடினார்கள். அப்போது ஒரு தீர்மானம்கூடப் போட்டார்கள். அந்த நாளை அரசு அரசாங்க விடுமுறையாக அறிவிக்க வேண்டுமென்று 1923-லேயே கேட்டார்கள். ஆனால் ஆண்டுகள் பல உருண்டோடின. யாருமே மே தினத்தை அரசாங்க விடுமுறையாக அறிவிக்கவில்லை. ஆனால், ஏழை, எளிய மக்களுடைய பாதுகாவலனாக இருக்கக்கூடிய, தொழிலாளர் வர்க்கத்தினுடைய காக்கும் கரமாக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, பல ஆண்டுகளுக்குப் பிறகு சிங்காரவேலருடைய அந்தத் தீர்மானம் கனவாக, காகிதமாக, கற்பனையாகப் போய்விடாமல் அதற்கு உருவம் கொடுக்கின்ற விதத்திலே, செயல்வடிவம் கொடுக்கின்ற விதத்திலே, மே தினத்தைச் சம்பளத்துடன் கூடிய அரசாங்க விடுமுறையாக அறிவித்தார்கள். மாநில அரசோடு அவர் நிற்கவில்லை. அன்றைக்குச் சமூக நீதிக் காவலரான வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தார். மத்திய அரசாங்கத்திலே அவர்கள் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி, அன்றைய மத்திய அரசும் அதை நடைமுறைப்படுத்துகின்ற விதத்திலே ஏற்பாடு செய்தார்கள்.

அதுமட்டுமல்ல, சேப்பாக்கம் தொகுதியிலே இருக்கக்கூடிய நேப்பியர் பூங்காவை மே தின நினைவுச் சின்னமாக, காலங் காலமாக, கால நதியைக் கடந்து நிற்கின்ற விதத்திலே, தொழிலாளர் வர்க்கத்தின் நினைவுக்காக ஏற்பாடு செய்தார்கள், ஆக மே தினத்தை இன்றைக்குக் கொண்டாடுகின்ற நாளிலே நம்முடைய ஒபபற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை நாம் மறக்க முடியாது, காரணம், சொல்வதைச் செய்கின்ற விதத்திலே அவர்கள் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

இங்கே வெட்டுப் பிரேரணைகள் கொடுத்த பல அன்புச் சகோதரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கையைப் பற்றி கேட்கிறார்கள். பேச வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். நான் பல்முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய ஒப்பற்ற

தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அண்மையிலே சொன்ன ஒரு வாசகம் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பெரியாரும், அண்ணாவும் தோன்றி திராவிட இயக்கம் உருவாகாது இருந்திருக்குமேயானால் நான் ஒரு கம்யூனிஸ்டாகவே இருந்திருப்பேன் என்று அவர்கள் அறிவித்தார்கள். எனவே, இவ்வளவு அறிவிப்புக்குப் பிறகும், இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை எதுவாக இருக்கும் என்பதை நான் இந்தப் பேரவையிலே நீண்ட நேரம் விளக்கித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதைப்போலவே வங்கக் கடலோரம் உறங்குகின்ற வரலாற்றுத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆளுங்கட்சியாக இன்றைக்கு இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலே 'உண்மையான தென்னாட்டின் பொதுவுடைமைப் பூங்கா தி.மு.க. தான்' என்று சொன்னார்கள். ஆக இன்றைய அரசு தொழிலாளர் நலனிலே அக்கறை உடைய அரசாகச் செயல்பட்டு வருகிறது.

தொழில் அமைதி காக்கப்பட வேண்டும், தொழில் உறவு வலுப்படுத்தப்பட வேண்டும், அதேபோல தொழில் வளம் பெருக வேண்டும், தொழிலாளர்கள் சுரண்டப்படக்கூடாது, அச்சுறுத்தப்படக் கூடாது, அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படக்கூடாது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக வந்துசேர வேண்டும், தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள். நீதிமன்றத் தீர்ப்புகள், அவார்டுகள் கண்டிப்பாக அமல்நடத்தப்பட வேண்டும், இவற்றை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும், நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. இவைகளுக்கெல்லாம் மேலாக Mutual trust and confidence இருக்க வேண்டும். கடல் என்றால் அலைகள் இருக்கும்; உடல் என்றால் நோய் இருக்கும். அதேபோல தொழிலாளி, முதலாளி என்று சொல்லுகின்ற நேரத்தில் பிரச்சினைகள் வந்து போய்க் கொண்டுதான் இருக்கும். இந்த இலாகா வெறும் உத்தரவு போடுகின்ற இலாகா அல்ல. தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தி உத்தரவு போடுகின்ற இலாகா. ஆகவே, பிரச்சினைகள் இருப்பதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதும்தான் இந்த இலாகாவின் பெரும் பணியாகும். அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கும் முதலாளிமார்களுக்கும், நிருவாகத்தினருக்கும் ஒரு Mutual Trust and confidence இருந்து, ஒருவரை ஒருவர் நம்பிச் செயல்பட வேண்டும். இருவருமாக 18(1) settlement போட்டுக்கொண்டால் அரசாங்கத்திற்கு வேலை இல்லை. அரசும் அதைத்தான் விரும்புகிறது. தேவையில்லாத சூழ்நிலையில்தான் பிரிவு 13-ன்கீழ் சொல்லப்படுகின்ற அந்த ஒப்பந்தத்திற்கு நாங்கள் வரவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்ல, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லுகின்ற உதாரணத்திலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடிகாரத்திலே இருக்கக்கூடிய இரண்டு முட்களைப்போல தொழிலாளர்களும், முதலாளியும் ஆவார்கள். அந்த இரண்டு முட்களும் ஒழுங்காகச் செயல்பட்டால்தான் கடிகாரம் காலத்தைக் காட்டும். ஆகவே, அந்த உறவை இந்த அரசு பெரிதும் விரும்புகிறது.



அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள், அதேபோலக் குறைந்தபட்ச ஊதியம், இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம். மொத்தத்தில் தொழில்கள் வளர வேண்டும், தொழில் வளம் பெருக வேண்டும், தொழிலாளர் நலன் பெருக வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

குறிப்பாக நம்முடைய Un-organised sector, ஸ்தாபன ரீதியற்ற, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களைப் பற்றி இந்தியாவிலே, ஏன் உலகத்திலேயே முதல் முதலாகச் சிந்தித்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான். அவர்களுக்கென்று ஒரு வாரியம் உருவாக்கி, பல சமூக நலத் திட்டங்கள் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டன. அப்படிப்பட்டவர்கள் யார்? இன்னும் சொல்லப்போனால் இந்த சமுதாயத்திலே எத்தனையோ தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். ஏழையெளியவர்களுக்காகக் கவலைப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இப்போது சாலை ஓரத்திலே சிரமங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற அந்த இலட்சக்கணக்கான சகோதரர்கள், குறிப்பாக, நான் நினைவூட்ட விரும்புகிறேன்; உங்களுக்கெல்லாம் தெரியும்; முடி திருத்துவோராக இருந்தாலும், பொற்கொல்லராக இருந்தாலும், பந்தல் கட்டுபவராக இருந்தாலும், அப்பளம் தயாரிப்பவராக இருந்தாலும், சலவைத் தொழிலாளியாக இருந்தாலும், மண்பாண்டம் தயாரிப்பவராக இருந்தாலும், இன்னும் சொல்லப்போனால் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்கள், தையல் கலைஞர்கள், சமையல் கலைஞர்கள், இப்படிப்பட்ட அத்தனை பேர்களுக்காக ஒரு வாரியத்தை அமைத்து எப்படி அமைப்புரீதியான தொழிலாளர்களுக்கு எல்லாச் சட்டங்களும் Bonus ஆக இருந்தாலும், Gratuity ஆக இருந்தாலும், E.S.I. ஆக

இருந்தாலும், Provident Fund ஆக இருந்தாலும் பொருந்துமோ, அதுபோல் அமைப்பு ரீதியற்றவர்களுக்கும் பொருந்தும் என்பதோடு, பல நல்ல திட்டங்களையும் அதன் மூலமாக இன்றைக்கு அவர்கள் அறிவித்து இருப்பது சாதாரண விஷயம் அல்ல. நான் இன்னும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். கவிஞர் தாகூர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். ஜெபமாலையை உருட்டிக் கொண்டிருக்கக்கூடிய ஆலயத்திலே ஆண்டவன் இல்லை. சாலை ஓரத்திலே ஏழையெளிய மக்கள் இருக்கிறார்களே, கல் உடைக்கும் தொழிலாளி போன்றவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய கண்ணீரிலும், வியர்வையிலும்தான் ஆண்டவன் இருக்கிறான் என்று குறிப்பிட்டார். அதைத்தான் அண்ணா அவர்கள் அழகாக "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன்" என்று சொன்னார்கள். இப்போது நமமுடைய தலைவர் அவர்கள் அந்த ஏழையெளிய அமைப்பு ரீதியற்ற மக்களின் வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்காக ஒரு குழு போட்டு, குழுவின் அறிக்கையைப் பெற்று, வாரியம் அமைத்து, அந்த வாரியத்திலே அரசுத் தரப்பு பிரதிநிதிகள், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், வேலை அளிப்பவருடைய பிரதிநிதிகள் இப்படி அனைத்துத் தரப்பினரையும் சேர்த்து இன்றைக்குப் பல நலத் திட்டங்கள்—விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத திட்டம், பணி முடிவு நலத் திட்டம் (Terminal Benefit Scheme) போன்ற பல திட்டங்களை, ஒரு சரித்திர சாதனையாக இந்த ஆட்சி செய்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்மில் பெரும்பாலானவர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமக்கெல்லாம் ஒரு வாக்கியம் தெரியும். விவசாயி சேற்றிலே கால் வைக்கத் தவறினால், நாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்று சொல்வார்கள். ஒரு கவிஞன் கூட "தேரோடும் வீதியிலே எங்கள் ஏரோட்டம் நின்று போனா, உங்கள் காரோட்டம் என்னவாகும்?" என்று பாடினான். ஆகவே, விவசாயிகள்தான் இன்று தமிழக மக்களின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்கள் முப்பது ரூபாய், முப்பத்தைந்து ரூபாய் என்று மிகக் குறைந்த கூலி வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொடுமைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற விதத்திலே கோலப்பன், ஐ.ஏ.எஸ். அவர்களை ஒரு குழுவின் தலைவராக நியமித்து, விவசாயிகளுடைய பிரச்சினைகள், அவர்களுடைய நன்மைக்காக என்ன செய்ய வேண்டும்



என்பதையெல்லாம் ஆய்ந்து, ஓர் அறிக்கையைப் பெற்று, முதற்கட்டமாக அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, மறுநிர்ணயம் செய்ய வேண்டுமென்ற முறையிலே இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், பலபேர் சில உண்மைகளை மறந்துவிடுகிறார்கள். இந்த அரசாங்கம் எவ்வளவோ காரியங்களைத் தொழிலாளர்களுடைய நலனுக்காகச் செய்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இவைகளெல்லாம் தொழிலாளர் நல விரோதக் காரியங்களா? நான் இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 Calendar மாதங்களில் 480 நாட்களுக்குக் குறையாமல் பணி முடித்தவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யும் வகையில், தமிழக அரசு தொழிலாளர்களுக்காக 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் நிரந்தரத் தகுதி இயற்றுதல் சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் 15 வருடம், 20 வருடம், 30 வருடம் தற்காலிகத் தொழிலாளர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்யாமல் வைக்கப்பட்டிருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில்தான் அந்தக் கேள்வியை நான் தொடுக்க விரும்புகிறேன். அதோடு நிரந்தரம் ஆக்கப்படாமல் இருப்பவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்கப்போகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்குவதற்கு Conferment of permanent status என்று ஒரு சட்டமே இருக்கிறது. ஆனால், சிலபேர் ஏமாற்றுகிறார்கள். 480 நாட்கள் முழுமையடைவதற்கு முன்பாகவே இரண்டு நாட்கள் வெளியேற்றப்பட்டதுபோல ஒரு தோற்றத்தைக் காட்டி, இந்த ஆட்சியிலே மட்டுமல்ல, காலங்காலமாக தொடர்ந்து இதைச் செய்து வருகிறார்கள். இருந்தாலும், நீங்கள் முறையான புகார் கொடுத்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, மாதவரம் பால் பண்ணை குறித்து நான் தெரிவிக்க விரும்புகிறேன். 18 ஆண்டுகளுக்கு முன்னாலே மதுரையிலே பால்வளத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். அதற்காக மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் 1,000-க்கும் மேற்பட்டவர்கள் பழிவாங்கப்பட்டார்கள். எத்தனையோ பேர் பேசுகிறார்கள், தொழிலாளர்களைப்பற்றி. ஆனால், நான் கேட்கிறேன், கலைஞர் அவர்கள்தான், அவர்கள் ஆட்சிக்கு வந்தற்குப் பிறகுதான், 18 ஆண்டுகளுக்கு முன்னாலே வேலை இழந்த அந்தத் தொழிலாளர்களுக்காகச் சிந்தித்து, அவர்களை மீண்டும் அண்மையில் வேலைக்கு எடுத்துக்கொண்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயனைப் போன்றவர்கள் சட்டமன்றத்திலே சொல்லிய நேரத்திலே, நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய முதலமைச்சர் அவர்கள் continuous service, தொடர்ச்சியாக அவர்கள் வேலையில் இருந்ததாக ஆக்கலாம்; அதுமட்டுமல்ல, அவர்கள் ஆரம்ப காலத்திலேயிருந்து வேலையில் இருந்திருந்தால் என்ன சம்பளம் பெற்றிருப்பார்களோ அதே சம்பளத்தையும் மறுநிர்ணயம் செய்யலாம் என்று சொல்லி, அந்தத் தொழிலாள சகோதரர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அது சாதாரண விஷயம் அல்ல. ஒரு மாதத்திற்கு மட்டும் அந்தச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்குக் கூடுதலாக ஆன செலவு ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாய் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே, இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். குறிப்பாக, இங்கே பேசுகிறபோது குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புப்பற்றி பேசினார்கள். இது மிக முக்கியமாக நாம் அனைவரும் சேர்ந்து கவனிக்க வேண்டிய ஒரு சமூகக் கொடுமை. இன்னமும் சொல்லப்போனால், ஒரு சமுதாயம் பொருளாதார ரீதியாக எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பது முக்கியம் அல்ல, அது ஆரோக்கியமான சமுதாயம்தானா, பண்பாடு மிகுந்த சமுதாயம்தானா, என்பதுதான் மிக முக்கியம். ஆனால், துரதிருஷ்டவசமாக இப்போது குழந்தைத் தொழிலாளர் முறை அகில உலக அளவிலேயும், இந்தியாவிலேயும், இந்தியாவின் பல மாநிலங்களிலேயும்,



தமிழ்நாட்டிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. இது மிகப்பெரிய ஒரு international phenomena, மிகப் பெரிய கொடுமை.

*"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்"*

என்று குறளிலே படிக்கிறோம்.

*"ஈன்றுபுறந்தருதல் எந்தலைக் கடனே,*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"*

என்று புறநானூற்று வரிகளைப் படிக்கிறோம். ஆனால், இப்போது அந்தத் தாய் பட்டாசுத் தொழிற்சாலையிலேயும், பூட்டுத் தொழிற்சாலையிலேயும், வெடிமருந்து தொழிற்சாலையிலேயும், பீடித் தொழிற்சாலையிலேயும் தன்னுடைய மகன் சென்று சம்பாதித்து என்னைக் காப்பாற்றமாட்டானா என்று கருதுகிற ஒரு சமுதாயமாக இந்தச் சமூகக் கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பிள்ளைகள் படிக்க வேண்டும், அந்தப் பிள்ளைகளுக்குக் கட்டாயப் படிப்புச் சொல்லித் தருவோம் என்று சொன்னால், இலவசக் கட்டாயப் படிப்பு, ஆரம்பப் பள்ளிப் படிப்புத் தருவோம் என்று சொன்னால், நிச்சயமாக இந்தக் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க முடியும். ஆகவேதான், இந்தியாவினுடைய அரசமைப்புச் சட்டம் தெளிவாகச் சொல்கிறது. ''The State shall endeavour to provide within a period of 10 years from the commencement of this Constitution for free and compulsory education for all children until they complete the age of 14 years.'' அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குள்ளாகவே, 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கெல்லாம் இலவசமாக, கட்டாயமாக கல்வி கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்தியாவிலே யாரும் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. தமிழகத்திலேதான், இந்த ஆட்சியிலேதான், கலைஞருடைய ஆட்சியிலேதான், இப்போது நாம் உத்தரவு போட்டு, அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நான் மேலும் ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு வைக்கக்கூடாது என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது, எல்லா சட்டங்களும் சொல்லுகின்றன. ஆனால், வறுமையின் காரணமாக, பட்டினியின் காரணமாக, வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, இப்போது

குழந்தைத் தொழிலாளர்கள் வேலைப் பார்க்கிறார்கள். இதைப் பார்க்கும்போது வெறும் சட்டங்கள் மூலமாக மட்டுமே இவற்றை மாற்றிவிட முடியாது. இந்தியாவினுடைய Supreme Court இதுகுறித்து மிக வேதனையோடு தீர்ப்பு எழுதியிருக்கிறது. எங்கே குழந்தைத் தொழிலாளர் முறை அமலில் இருக்கிறதோ, அங்கெல்லாம் 20,000 ரூபாய் அவர்களுக்கு அபராதம் விதிப்பதோடு, அரசாங்கமும் அவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுத்து அவர்களை மீட்டு, அந்தப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இந்தப் பணியை நாங்கள் செய்து வருகிறோம்.

இன்னொன்றையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக awareness-ஐ camps மூலமாக மக்கள் மத்தியிலே நாம் உருவாக்க வேண்டும். எனவே குழந்தைத் தொழிலாளர் முறையை நாம் எல்லோரும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து ஒழிப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அடுத்து, கட்டுமானத் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும் கழக அரசுதான், கலைஞருடைய அரசுதான், அவர்களின் பிள்ளைகளின் திருமணத்திற்காக 1,000 ரூபாய்; அவர்களின் பிள்ளைகளின் படிப்பிற்காக ஊக்கத்தொகை 750 ரூபாய் மற்றும் 1,000 ரூபாய்; விபத்திலே இறந்தால் ஓர் இலட்சம் ரூபாய்; ஈமச் சடங்கிற்காக 500 ரூபாய்; அதுமட்டுமல்ல; சென்னையில், மதுரையில், கோவையில், மட்டும்தான் இந்தத் திட்டம் அமலில் இருக்கும் என்று இருந்ததை, தமிழகம் முழுவதும் இருக்கும் என்று மாற்றிய பெருமை, இலட்சக் கணக்கானவர்களை இந்த வாரியத்திலே உறுப்பினர்களாக ஆக்கி, இந்தப் பயனைப் பெறவைத்த பெருமை, இந்த அரசாங்கத்தையே சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு வருகிறது. உங்களுக்கெல்லாம் தெரியும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்திற்கு HUDCO மூலமாக நிதியுதவி செய்யப்படுகிறது. HUDCO மட்டுமல்லாமல் மத்திய அரசாங்கமும் பீடித் தொழிலாளர் நல வாழ்வு நிதியிலிருந்து கொடுக்கிறது. ஆனால், அவர்கள் தருகிற அந்த 13,000 ரூபாய், 9,000 ரூபாய் என்பது போதாத காரணத்தினால், இப்போது HUDCO மூலமாக, 13,000 ரூபாய் என்பதை மாற்றி 22 ஆயிரம் ரூபாயாக,



அதிகமான கடன் தொகையை நீண்டகாலத் தவணையிலே பெற்றுக் கொள்கிறோம். அதுபோன்ற பீடித் தொழிலாளர்களுக்காக வீடு கட்டுகின்ற திட்டம் முக்கூடலிலும், மேலப்பாளையத்திலும் தொடரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் பகுதியிலும், மற்ற பகுதிகளிலும் பீடித் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தை உருவாக்க இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கும், அதுபோல பீடித் தொழிலாளர்களைப்பற்றிப் பேசிய சட்டசபை உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; minimum wages-ஐபற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன். இந்த அரசு, தொழிலாளர் நல அரசு என்பதற்கு அடையாளம் என்ன என்று கேட்டால், சட்டத்திலே ஒரு தொழிலாளிக்கு minimum wages, குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்வதற்கு 5 ஆண்டுக் காலம் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு ஐந்தாண்டுக் காலம் வரைக்கும் காத்திருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நாம் நிர்ணயிக்கிறோம். அதுமட்டுமல்ல; உங்களுக்காகத்தான் சொல்கிறேன்; தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறோம்; பீடித் தொழிலாளர்களுக்கும் மறற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, இங்கே அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், குறைந்தபட்சக் கூலி 75 தொழில்களுக்கு இதுவரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது மீண்டும் 10 தொழில்களைச் சேர்த்து, மருத்துவமனை மற்றும் மருத்துவ இல்லம், கடல் உணவு பதப்படுத்தல், அதேபோன்று ஆட்டோ-ரிக்ஷாக்கள், டாக்ஸிகள், லாண்டரி, பட்டாசு தயாரித்தல், கயிறு தயாரிக்கும் தொழில், அரிசி ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகள், செங்கல் தயாரிக்கும் தொழில், அதுபோல புகையிலை மற்றும் காபி பதப்படுத்துதல், இப்படி 75 தொழில்கள் என்பதல்லாமல், இன்னும் 10 தொழில்களை அதிகப்படுத்தி, குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்கிறோம். இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை மறுநிர்ணயம் செய்கிற அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்; சுருக்கமாக நான் முடிக்க விரும்புகிறேன். திரும்பத் திரும்ப, ஆலைகள்

மூடப்பட்டிருப்பதைக் குறித்து இங்கே சொன்னார்கள். அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல தனலெட்சுமி மில்லைப் பற்றி நம்முடைய சகோதரர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய நிலை என்ன? B.I.F.R, A.A.I.F.R. என்கிற அமைப்புகளிடம், ஆலை நிருவாகம், நிதிப் பற்றாக்குறை காரணமாக, 'எங்களால் செயல்படுத்த முடியாது' என்று கைவிரித்ததற்குப் பிறகு, அந்த அமைப்புகளும், புனர் நிர்மாணத் திட்டங்கள் கொண்டு வாருங்கள், பார்க்கலாம் என்று சொல்லி—இது அரசின் காரணமாக அல்ல—அவர்களுக்குள்ள பிரச்சினையின் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதில் எப்படி அரசு தலையிட முடியும், நான் கேட்கிறேன். மூடப்பட்டிருக்கிற பல ஆலைகள், நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, B.I.F.R., A.A.I.F.R. Labour Court, Tribunal என்கிற நிலைகளிலே இருக்கிறபோது, அரசு என்ன செய்ய முடியும் என்பதை நான் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது B.I.F.R., A.A.I.F.R. போன்ற அமைப்புகளில், அதற்கான வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கக் கூடிய ஆலைகளை அரசு எப்படி பொறுப்பேற்க முடியும் என்று சொல்கிறார்கள். அரசு பொறுப்பேற்க வேண்டிய, கூட்டுறவு நூற்பாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே, அரியூர் கூட்டுறவு நூற்பாலை யாரால் மூடப்பட்டிருக்கிறது, அதற்காக B.I.F.R-ல் வழக்கு இல்லையே, அதை இந்த அரசு தலையிட்டு செய்யக்கூடியதை இன்னும் செய்யாமல் ஒன்றரை ஆண்டு, காலம் கடத்திக்கொண்டு இருப்பதற்கு அமைச்சர் என்ன விளக்கம் அளிக்கிறார்?

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் அமைச்சரை அடிக்கின்ற மாதிரி பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள். இதையெல்லாம் சட்டமன்றத்திலே அனுமதிக்க முடியாது. இந்த அரியூர் கூட்டுறவு நூற்பாலையைப்பற்றி நீங்கள் 10 தடவை கேட்டாகிவிட்டது. அதுபற்றி திரும்பவும் கைத்தறி அமைச்சரைத்தான் கேட்க வேண்டும், நீங்கள் உட்காருங்கள்.



**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் திறக்கவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திறக்க முடியாது என்றால் திறக்க முடியாது. (பலத்த சிரிப்பு) நீங்கள் எத்தனை முறை கேட்டாலும் நான் அனுமதி கொடுத்துக்கொண்டு இருக்கிறேன். அவரை ஏன் வம்புக்கு இழுக்கிறீர்கள்? கைத்தறித் துறை அமைச்சரிடம் கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள், அவரும் பதில் சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக அந்த ஆலைகளைத் திறப்பதற்காக என்னென்ன புனர்நிர்மான நிதியையெல்லாம் முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்கள், எவ்வளவு கோடி ரூபாய் என்பதையும், எவ்வளவு சலுகைகள் என்பதையும் மற்றும் அறந்தாங்கியிலே ஆலை திறக்கப்பட்டு இருப்பதையும், வேலூரிலே ஆலை திறப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று இருப்பதையும் சொல்லிய பிறகும்கூட, ஒரே பாடலை ஒரே இராகத்திலே தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தால் என்ன நியாயம்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தனலெட்சுமி மில்லைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். A.A.I.F.R.-ஆக இருந்தாலும் சரி, B.I.F.R.-ஆக இருந்தாலும் சரி, நடைமுறையில் இப்போது எடுத்துக்கொள்கிற கோவை பவானி ஆலையைச் சார்ந்த நிருவாகம், திருப்பூர் தனலெட்சுமி ஆலையை எடுத்து நடத்துவதற்காக, எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். அவர்களோடு நேரடியாக அரசு பேச்சவார்த்தை நடத்துமானால், அந்த ஆலை திரும்பவும் இயங்குவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, அரசு தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட பவானி மில் அதிபர் மூலம் திருப்பூர் தனலெட்சுமி ஆலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனலெட்சுமி ஆலை சம்பந்தமாக நான் பலமுறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களோடும், நிருவாகத்தோடும், தொழிற்சங்கத்தோடும் பேசியிருக்கிறேன். இது ஒன்றும் புதுமையில்லை. ஏ,பி என்று இரண்டு வகை ஆலைகள் இருக்கின்றன. ஏ வகை மில்லை நடத்தவே முடியாது என்ற முடிவை இவர்களே

ஒத்துக்கொண்டார்கள். ஏ வகை ஆலையை நடத்த வேண்டுமானால், பி வகை ஆலையினுடைய சொத்தை விற்று நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதற்கிடையிலே பட்டிமன்றம் நடத்துவதுபோல, நான் கொண்டு வந்திருக்கிற திட்டம்தான் சரி என்று B.I.F.R-ல் போட்டி நடந்து கொண்டே இருக்கிறது. இதற்கிடையிலே பேச்சுவார்த்தை இல்லாத காரணத்தினாலே, அரசு அக்கறை எடுக்காத காரணத்தாலே, அதிகாரிகள் பேசாத காரணத்தினாலே இந்த நிலை என்று சொல்ல முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. தனலெட்சுமி ஆலையை பொறுத்து மட்டுமல்ல, இதுபற்றி இங்கே ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்கள், மிகத் தெளிவாக நேற்றைய மானியத்திலும் சொன்னார்கள், அதற்கு முன்பாகவும் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்ல விரும்புவது உங்களுக்கெல்லாம் தெரியும், State Labour Advisory Board...

**திரு. ஜி.கே. மணி:** Mettur Textiles Mill என்பது மிகவும் பிரசித்தி பெற்ற ஆலை. இந்தியாவிலேயே தரமான துணியைச் தயாரிக்கக்கூடிய ஆலை. அந்த ஆலை மூடப்பட்டு, 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நீண்ட காலமாக அவதியுறுவதுபற்றி நன்றாக அறிந்திருக்கிறீர்கள். எனவே, அந்த ஆலையையும் இந்த ஆண்டிலே திறப்பதற்கு ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அதைத்தான் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நான் அதைத் திரும்பவும் சொல்வதற்கு சிரமமாக இருக்கிறது. நிதி நெருக்கடியின் காரணமாக, விற்பனை சந்தையினால் இடர்பாடு, நிருவாகத் தகராறு, சொத்துகளை ஏலம் விடும் நிலைமை, நீதிமன்ற வழக்கு, பங்குதாரர்களிடமுள்ள கருத்து வேறுபாடு, தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியத்திலே முறையீடுகள் இருக்கக்கூடிய ஒரு காலகட்டத்திலேதான் இன்றைக்கு Liquidation போன்ற சூழ்நிலையில் இருக்கிறது. ஓர் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். Standard Motors Liquidation ஆகிவிட்டது. Court-லே இருக்கிறது. Promoters வந்தால் கவனிக்கலாம். Promoters இல்லை என்று சொல்கிறபோது, Liquidation இருக்கிறபோது, அதிலே அரசு நிச்சயமாகத் தலையிட முடியாது. அது அவர்களுக்கும் தெரியும். இதிலே ஒரு வேடிக்கை என்ன என்று கேட்டால், நான் நம்முடைய தொழிற்சங்கத் தலைவர்களைக் கூட்டி வைத்து சில மில்களிலுள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்க முடியும். தற்காலிகமாக Lay-off இருக்கலாம். தற்காலிகமாக Lock-out இருக்கலாம்.



அவற்றையெல்லாம் களைந்து நாம் பேச்சுவார்த்தை மூலமாக அவர்களுக்கு ஒரு Financial Market-ஐ ஏற்படுத்தி, அரசும் தலையிட்டு, இன்னும் சொல்லப்போனால், Relief undertaking என்று இருக்கிறது. Electricity Concession கொடுப்பது என்று இப்படி சில காரியங்களையும் சில நேரங்களிலே சில தொழிற்சாலைகளுக்கு, ஆலைகளுக்கு அரசு செய்கிறது. மகாலெட்சுமி மில்லுக்கு Sales Tax-ஐயே கடனாகக் கருத வைத்தோம். இந்த அரசு செய்யாமல் இல்லை. கழக அரசு வந்ததற்குப் பின்னாலேதான், கலைஞர் அரசு வந்ததற்கு பிறகுதான், மகாலெட்சுமி மில்லுக்கு அந்த concession கொடுக்கப்பட்டு, அரசு எடுத்துக் கொண்டது. அதுபோல பல காரியங்களை நாம் செய்துகொண்டு இருக்கிறோம். ஆனால், நான் சொல்ல விரும்புவது தொழிற்சங்கத் தலைவர்களோடு விவாதம் செய்யும்போது, Lay-off, Lock-out பிரச்சினை என்றால் பேசித் தீர்ப்பதை பேசித் தீர்த்து விடலாம். அது ஒரு வகையான மில்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பாகவே, கடந்த காலத்திலேயிருந்து தொடர்ச்சியாக பல மில்கள் மூடியே கிடக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்ன பிரச்சினைகள்தான் இதற்குக் காரணம். நான் கேட்கிறேன் அப்படிப்பட்ட ஆலைகளை என்ன செய்வது என்று நாங்கள் கேட்டால் அவர்கள் சொல்லுகிறார்கள்—

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள். அவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** ஆகையினாலே, நான் சொல்ல விரும்புவது 57-வது மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டம் ஒரு supreme body. தொழிலாளி வர்க்கத்திலே இது ஒரு மிக மிக முக்கியமான ஓர் அமைப்பு. இவர்கள்தான் எல்லாவற்றையுமே தீர்மானிக்கிறார்கள். தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மீண்டும் திறக்க வாய்ப்பு இல்லாத நிறுவனங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகைப் பெற்று அளிக்கலாம். இந்த முடிவின்படி, அவர்கள் இந்த statutory benefits பெற்றுத் தரலாம் என்று சொல்கிறபோது, அந்த ஆலைகளை நடத்தமுடியவில்லை என்றால், அவற்றை விற்றுவிட்டு statutory benefits-க்கு ஏற்பாடு செய்யலாம் என்று தீர்மானமே போட்டிருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளக்கூட இல்லை. பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி

இன்னும் திறப்பதற்குத்தான் இந்த அரசு முயற்சித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மேற்கு வங்காளத்திலே ஜோதிபாசு அவர்கள் கொடுக்கக் கூடியதைப் போல ஆலைகள் மூடப்பட்டால். ரூ.500 கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை நானும் படித்துப் பார்த்தேன். முதலமைச்சர் அவர்களும் அதுகுறித்து இந்த அவையிலே பேசுகிறபோது, பரிசீலித்து யோசனை செய்து, சாத்தியமா என்பதை எல்லாம் பார்த்துச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரையை ஏற்று, அவர்களுடைய உத்தரவை ஏற்று, எங்கள் துறையும் என்ன செய்யலாம் என்பது குறித்துப் பரிசீலித்து, ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறோம். மேற்கு வங்காளத்திலே 500 ரூபாய் வழங்கப்படும் என்றிருக்கிறது. அதற்கு பல நிபந்தனைகள் எல்லாம் வைத்து இருக்கிறார்கள். நமக்கு அது பொருந்துமா, பொருந்தாதா அல்லது எவ்வளவு கோடி ரூபாய் வரும் என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினாலே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுசென்று, நம்முடைய அதிகாரிகளிடம், மற்றவர்களிடம் பேசி, அரசினுடைய நிதிச் சுமையையும் கவனத்திலேகொண்டு, உடனடியாக இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டாலும், அதுகுறித்து பரிசீலித்து, நல்ல முடிவை முதலமைச்சர் அவர்கள்மூலம் அறிவிக்கவிருக்கிறோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், இப்போது தீபாவளியின்போது தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை முதலமைச்சர் நிவாரண நிதி என்பது உங்களுக்கும் தெரியும்.

அடுத்து, B & C Mill-ஐ பற்றிப் பேசினார்கள். எந்த முதலமைச்சருமே, இந்த முதலமைச்சர் மாதிரி பேச்சுவார்த்தையிலே கலந்து கொண்டு, முயற்சி செய்தது கிடையாது. அந்தக் காலத்திலே B & C Mill திறப்பது சம்பந்தமாக அப்போதிருந்த முதலமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிய நேரத்தில் பார்க்க மறுத்து, நம்முடைய C.I.T.U.-வுடைய, கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய தலைவர் திரு. வரதராஜன் சாகும்வரை உண்ணாவிரதமே இருந்தார். இதெல்லாம் பழைய காலம். ஆனால், இப்போது அப்படி இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 8 முறை B & C Mill நிருவாகத்தோடும், தொழிற்சங்கத் தலைவர்களோடும் தொடர்ந்து பேசினார்கள். கடைசியாக ஓர் ஒப்பந்தம் போட்டோம். அந்த ஒப்பந்தத்தினுடைய



அடிப்படையிலே எல்லோரையும் வீட்டிற்கு அனுப்புவது அல்ல, V.R.S-ல் விரும்பினால் போகலாம். அந்த Voluntary Retirement Scheme என்பது சட்ட விரோதமானதல்ல. விரும்பினால் போகலாம். யாரும் தடுக்க முடியாது. மற்றவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு கொடுப்பது என்பது குறித்து நிர்வாகமும், தொழிலாளர்களும், முதலமைச்சரும் உட்கார்ந்து தீர்மானிக்கலாம் என்று ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். பயிற்சித் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலே, அவர்களுக்கு ரூ.50,000 வாங்கிக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். அத்தனை பேரும் போய்விட்டார்கள். 750-க்கு மேற்பட்டவர்கள் போய்விட்டார்கள். பாக்கி இருக்கக்கூடிய தொழிலாளர்களிலே 450 பேர்தான் V.R.S-ல் செல்வதற்கு உடன்பாடு இல்லாமல் இருக்கிறார்கள். மற்றவர்கள் 2 தவணையாக V.R.S-ல் போக அனுமதி கொடுக்க வேண்டும். ஆனால், நிருவாகத்தைப் பொறுத்தமட்டிலும் பணம் கொடுத்து இருக்கிறார்களா, இல்லையா என்றால் முதல் தவணை கொடுத்திருக்கிறார்கள். அதற்கான புள்ளி விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனாலும், அவர்கள் முழுமையாகக் கொடுக்கவில்லை. அதற்காக கொடுக்காமல் இல்லை. பல instalment கொடுத்திருக்கிறார்கள். நீதிமன்றமும் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறது. அதையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், என்ன பிரச்சினை என்று கேட்டால், இப்போது Agreement-படி முழுவதுமாகச் செய்வதற்கு 40 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்லி அரசாங்கத்திடமே guarantee கேட்டார்கள். இது தனியாருக்கு அல்ல, தொழிலாளர்களுக்குத்தான். தொழிலாளர்களுடைய நன்மைக்காகத்தான். ஆகையினாலே நம்முடைய முதல்வர் அவர்கள்கூட ஒத்துக்கொண்டார்கள். ஆனாலும், Consortium of Banks நீங்கள் date-wise ஆகக் கொடுத்தால்தான், நாங்கள் guarantee ஏற்றுக்கொள்ள முடியுமே தவிர, அதுவரைக்கும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி, இப்போது பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய பிரதிநிதிகள் அங்கே போயிருக்கிறார்கள். நாளைக்குப் பேச்சுவார்த்தை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே நம்முடைய சகோதரர் திரு. வி.பி. இராசன் அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அழகப்பா Cotton Mills ஒரு தகராறுக்குரிய ஆலையாக இருக்கிறது. அந்த மில்லைப் பொறுத்தமட்டிலே செந்தாமரை அவர்களுடைய M.D.-க்கும், அவர்களுடைய வளர்ப்புத் தாயாரான தமிழ்ச்செல்வி அம்மையாருக்கும் சொத்துத் தகராறு. ஆகையினாலே, 1.8.1998 முதலே அது மூடப்பட்டுவிட்டது. பல தடவை D.C.L., J.C.L.,

மதுரையிலே பேசியிருக்கிறார்கள். திரு. வி.பி. இராசன், சட்டமன்ற உறுப்பினர் சொல்ல மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். நேரடியாக என்னிடத்திலே வந்து சொல்லிய நேரத்திலே, நீங்கள் அதிகாரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வாருங்கள் என்று நான் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் சட்டத்திலே 25-ஓ பிரிவு என்று ஒன்று இருக்கிறது. யார் வேண்டுமானாலும் ஆலையை மூடுவதற்கு இந்தச் சட்டபபிரிவின் கீழ் மனு கொடுத்தால், 60 நாட்களுக்குள்ளாக நாங்கள் பதில் சொல்லியாக வேண்டும். மூடலாம், ஆனால் இதுவரைக்கும், இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு அந்த 25-ஓ-பிரிவிலே நாங்கள் எந்த மில்லையும் மூடவில்லை என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Labour dispute-காரணமாகவும் மூடவில்லை. இப்படிப்பட்ட காரியங்களை தனிப்பட்ட முதலாளிகள் செய்கிற நேரத்தில், permission வாங்காமல் lay-off செய்தால் நடவடிக்கை எடுக்கிறோம். தொழில் துறை ஒப்பந்தங்கள் மீறப்படுகின்றன என்றால் நடவடிக்கை எடுக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சட்டரீதியாக என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவையெல்லாம் Proforma-விலே கொடுக்கப்பெற்றிருக்கின்றன. எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, என்னென்ன செய்திருக்கிறார்கள் என்கிற விவரங்கள் உள்ளன. ஆக, அவர்களுக்கு அந்தப் பதிலைச் சொல்லி மீண்டும் பேச்சுவார்த்தையின் மூலமாகப் பேசி அதற்குத் தீர்வு காணலாம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

அடுத்து G.O. தமிழில் இல்லையென்று ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதற்கு நான் சொல்வது என்னவென்றால், துறையைப் பொறுத்தமட்டிலே இப்போது என்ன நடைமுறை என்று கேட்டால், ஆங்கிலத்திலே இருப்பது தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டு உடனடியாக வந்து சேரும். ஆகையினாலே, தமிழிலே G.O. இல்லை என்று பொருள் அல்ல.

அடுத்து, இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக I.T.I. பற்றி பலபேர் பல சர்ச்சைகளைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலே இது ஏதோ ஒரு பெரிய பூதாகாரமான பிரச்சினைபோலத் தெரிந்துகொண்டிருக்கிறது. நம்முடைய



முதலமைச்சர் அவர்கள் எந்த ஊராட்சி ஒன்றியத்திலே தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I.) இல்லையோ அங்கெல்லாம் அது திறக்கப்பட வேண்டும் என்று சொல்லி 3 கட்ட அளவிலே செய்துகொண்டு வருகிறோம். ஆனால், இதிலே என்ன கொடுமை என்று கேட்டால், I.T.I.-யை நடத்துகின்ற முதலாளிகள், affiliation, அங்கீகாரம் வாங்காமலேயே பிள்ளைகளிடத்திலேயிருந்து பணத்தை வாங்கி, அவர்களை அந்த I.T.I.-யிலே சேர்த்துவிடுகிறார்கள். ஆனால் affiliation டில்லியிலேயிருந்து கொடுக்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய National Council for Vocational Training தான் கொடுக்க வேண்டும். ஆனால், afffliation இவர்கள் காலதாமதப்படுத்துகின்ற காரணத்தினாலே, வாங்காமலேயே பிள்ளைகளைச் சேர்த்துவிடுகிற காரணத்தினாலே, அங்கிருந்து affiliation வருவதற்குக் காலதாமதம் ஆகிறது. Standing Committee-க்கு போக வேண்டும். அந்த Standing Committee-யில் மத்திய அரசினுடைய உறுப்பினர் ஒருவர் இருப்பார். ஒரு பல்கலைக்கழகத்தினுடைய உறுப்பினர் இருப்பார். எங்கள் துறையைச் சார்ந்த ஒருவர் இருப்பார். அவர்கள் Report எழுதி, முதலிலேயே எங்கள் துறையைச் சார்ந்தவர்கள்போய் infrastructure, tools, machines எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து, Standing Committee போய் பார்த்து, Director-இடம் அந்த மனு போய், அவர் சிபாரிசு செய்து, அடுத்து இந்த N.C.V.T-க்குப்போய், அவர்கள் அங்கீகாரம் கொடுத்தால்தான் மாணவர்கள் பரீட்சை எழுத முடியும். ஆனால், இதற்கு முன்பாகவே அவர்கள் சேர்த்துவிடுகிறார்கள். இதிலே என்ன கொடுமை என்று கேட்டால் 2 ஆண்டு Course, 1996-97, 1997-98. ஆனால், 1997-லே அவர்கள் பரீட்சை எழுத வேண்டும் என்று சொன்னால் அவர்கள் தேர்வு எழுத முடியாது. ஏனென்றால் 1998-லேதான் affiliation வருகிறது. இப்படித்தான் பிரச்சினைகள் வருகின்றன. ஏறத்தாழ 4,000, 5,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற முறை, அந்த நேரத்திலே ஐக்கிய முன்னணி ஆட்சியிலே அமைச்சர் அருணாசலம் அவர்கள் அமைச்சராக இருந்தார். நான் அப்போது அவரிடத்திலே எடுத்துச்சொல்லிய நேரத்திலே, எழுதுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். இப்போதும் இந்தத் துறையினுடைய டில்லி மந்திரி அவர்களிடத்திலே நான் தொடர்புகொண்டு பேசினேன். அவருக்குக் கடிதமும் எழுதியிருக்கிறேன். நம்முடைய சேலத்தைச் சேர்ந்தவர்தான் அங்கே N.C.V.T-யில் Director General of Training and Employment என்கிற பதவியில் இருக்கிறார். அவர்களும் இங்கு வந்து என்னைப் பார்த்தார்கள். அதைப்போலவே, நான் நம்முடைய மைய அரசு

Labour Secretary, Mishra அவர்களையும் நேரடியாகத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு பேசினேன். காரணம், technical ground-லே affiliation வரவில்லையென்ற காரணத்தினாலே அதையெல்லாம் பார்க்காமல் சேர்க்கிற தவறைச் செய்தாலும்கூட, இனியும் அது நடத்தக்கூடாது என்பதற்காகத்தான் முயற்சி செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. அப்படிச் செய்தால் நாங்கள் பொறுப்பல்ல என்று பத்திரிகைகளிலே விளம்பரம் கொடுத்திருக்கிறோம். நாங்கள் அங்கீகாரம் கொடுக்கக்கூடிய மனுவிலேயும் அதுபற்றி சொல்லியிருக்கிறோம். இருந்தாலும், தொடர்ந்து செய்கிறார்கள். ஆனாலும், இந்த அரசு அவர்கள் தேர்வை எழுதுவதற்கு அனுமதிப்பது குறித்து கருணையோடு இன்றைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டத் திருத்தங்களைப்பற்றி ஒரு கருத்துச் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதாவது, தொழிலாளர் நல இலாகாவிலே இருக்கக்கூடிய பல சட்டங்கள் வெள்ளைக்காரர்கள் காலத்திலே, ஏகாதிபத்தியம் இருந்தபோது கொண்டுவரப்பட்டச் சட்டம். நம்முடைய உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. 750 ரூபாய் சம்பளம் வாங்கினால் Plantation Act-ஐ அவர்களுக்கு நடைமுறைப்படுத்த முடியாது. இதைச் சட்டரீதியாக யாரும் கேட்கவே முடியாது. நீங்கள், தொழிற் சங்கத் தலைவர், உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அதேமாதிரி 5 பேருக்கு மேலே இருந்தால்தான் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டமே அவர்களுக்குப் பயன்படும். நான்கு பேரை வைத்துக்கொண்டு செய்தார்கள் என்று சொன்னால் எதுவும் செய்ய முடியாது.

*பிற்பகல் 1-40*

அடுத்து, சட்டங்களைப் பற்றி பேசினார்கள்' சம்பளம் பட்டுவாடா சட்டப்படி மாதம் 7 ஆம் தேதியானால் சம்பளம் கொடுக்க வேண்டும். 100 பேருக்கு மேலே இருந்தால் ஒரு நிலை; 100 பேருக்குக் கீழே இருந்தால் ஒரு நிலை. ஆனால், சம்பளம் பட்டுவாடா சட்டத்தை அமல்படுத்த முடியாது. 1,600 ரூபாய் தான் Ceiling. அதற்கு மேலே போக முடியாது. இப்படி ஏராளமான சட்டங்கள் இருக்கின்றன. இதிலே இன்னொரு வேடிக்கை என்ன என்று கேட்டால் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு முறைபற்றி நாம் பேசுகிறோம். ஆனால்- அந்தச் சட்டத்திற்கு பெயர்-நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்



சட்டம் தெரிந்தவர்-"Prohibition and Regulation of Child Labour", Child Labour Act-ன் நோக்கம் என்ன? "Elimination of Child Labour" தான் நோக்கம். அதாவது, குழந்தைத் தொழிலாளர்கள் முறையை ஒழிக்க வேண்டும். தலைப்பு என்ன? "Prohibition"—தடை செய்கிறோம் and "Regulation"—ஒழுங்கு படுத்துகிறோம். திருட்டை ஒழிக்க முடியுமே தவிர, திருட்டை ஒழுங்குபடுத்த முடியுமா என்பதுதான் கேள்வி. ஆனால், இந்த சட்டத் திருத்தங்களைப்பற்றியெல்லாம் நம்முடைய அரசின் சார்பாக டெல்லியிலே "Labour Ministers Conference" நடந்தபோது பேசியிருக்கிறோம். அதிகாரப்பூர்வமாக, அரசின் சார்பாகவும், சட்டத் திருத்தங்களுக்கு நாம் எழுதியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு மாநில சட்டத்தைப்பற்றி கேட்கிறார்கள். கர்நாடகத்திலே, என்ன நிலைமை என்று கேட்டால், நம்முடைய சகோதரர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நிருவாகம், தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாகப் பேச்சுவார்த்தை நடத்துகிறபோது அவர்களில் பல பேர் வர மறுக்கிறார்கள். Documents கொடுக்க மறுக்கிறார்கள். இப்போதுள்ள நம்முடைய சட்டத்தின் அடிப்படையிலே வைத்து அவர்களைக் கைது செய்து வழக்கு போட முடியாது. சிறைக்கு அனுப்ப முடியாது. ஆனால், கர்நாடகாவிலே அப்படி ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால், இந்த அரசு வெறும் சட்டத்தின் மூலமாகவே காரியங்களைச் செய்ய விரும்பாமல் மனமாற்றத்தின் மூலமாக அவர்களைத் தயார்படுத்த முடியும் என்கிற நம்பிக்கை ஒரு காலகட்டம் வரை இருக்கிற காரணத்தாலே, அந்த சட்டத்தைக்கொண்டு வரவில்லை. ஆனால், ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பல பேர் பல அதிகாரிகள் அதை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இந்த மானியக் கோரிக்கை மீதான பதிலுரையின் வாயிலாகச் சொல்கிறேன். இருக்கிற சட்டத்திலேயே D.C.L.,-ஆக இருந்தாலும், J.C.L.,-ஆக இருந்தாலும் அவர்களுக்கு Civil Court Judge-க்கு உள்ள அதிகாரங்கள் அத்தனையும் இருக்கின்றன. All the powers of Civil Court are conferred on D.C.L. and J.C.L. ஆகையினாலே அவர் summon அனுப்பலாம். இன்னும் சொல்லப்போனால், அவரை arrest செய்வதற்கு உத்தரவிடலாம். பிரயோகிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலே, அதை யாரும் பிரயோகிப்பதில்லை. காரணம், அவர்கள் மனம்திருந்தி வருவார்கள் என்று. எனவேதான் அதற்கு அவசியம் இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக அறிவிப்புகள். நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்புகள் அத்தனையையும் சொல்லிய மாத்திரத்திலேயே மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு எங்களுடைய துறைக்கும், தொழிலாளர்களுக்கும் மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறார்கள். எங்களுடைய துறையின் சார்பாகவும், ஆயிரக்கணக்காக தொழிலாளர் மக்களின் சார்பாகவும், இவை அத்தனையையும் அப்படியே ஏற்றுக்கொண்டு, எனக்கு அறிவிப்புகளைச் செய்வதற்கு அனுமதி கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திரும்பத் திரும்ப என்னுடைய நன்றியை எல்லோர் சார்பாகவும் நான் தெரிவிக்கிறேன்.

முதல் அறிவிப்பு. கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (Shops and Establishments Act) தவறிழைப்போர்மீது நடவடிக்கை எடுத்து, வழக்கு தொடுத்து, அவை முடிவிற்கு வருவதற்குப் பல காலம் ஆவதுடன் அதில் பல இடையூறுகளும் உள்ளன. அந்தத் தவறுகளைத் திருத்தி இணக்க முறையில் (Compounding) விரைவில் நிவாரணம் அளிக்க சட்டமுன்வடிவு நடப்புக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவது, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது இந்த அரசின் கொள்கை, இந்தக் கொள்கையை தொழிலாளர் நலத் துறை அமல்நடத்தி வருகிறது. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனச் சட்டம் 1947-ன்படி கடைகள் மற்றும் நிறுவனங்களில் வைக்கப்படும் விளம்பரப் பலகைகளில் உள்ள எழுத்துகள் கட்டாயமாக முதலில் பெரிய அளவிலே தமிழில் இருக்க வேண்டும்; இரண்டாவது இடத்திலே தமிழைவிட சிறிய அளவிலே ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். மூன்றாவது, ஆங்கிலத்தைவிட சிறிய அளவிலே வேறு மொழிகளிலே இருக்க வேண்டும். இதனை அமல் நடத்தாத நிறுவனங்கள்மீது வணிகவரிச் சட்டத்தில் இருப்பதுபோல ரூபாய் 1,000 அபராதம் விதிக்கப்படுவதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பழைய சட்டத்திலே அபராதம் 50 ரூபாய்தான்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

Hon. Thiru. A. Rahman Khan: I am not yielding. (Interruption) முதலில் பேசி முடித்துவிடுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடாசலம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** உடலுழைப்பை மட்டும் மூலதனமாகக்கொண்டு பாடுபட்டு வரும் கட்டுமானத் தொழிலாளர்கள் நலனுக்காகக் கடந்த ஆண்டு இந்தத் துறை மானியக் கோரிக்கையின்போது பல்வேறு நலத் திட்டங்களை முதல்முறையாக அறிவித்து செயற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டும் கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

கட்டடத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 5 ஆயிரம். இதுவரைக்கும் இயற்கையாக மரணம் அடைந்தால் கட்டடத் தொழிலாளர்களுக்கு இதுமாதிரி பணம் கொடுப்பதற்கு வழி இல்லை. முதல்முறையாக இந்தியாவிலேயே நாம்தான் இதைச் செய்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) அதைப்போலவே இறந்த கட்டடத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு இதுவரைக்கும் 500 ரூபாய். இப்பொழுது அதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

பெண் தொழிலாளர்களுக்குப் பேறு காலங்களில் வழங்கப்படும் பேறு கால நிதியுதவி ஏற்கெனவே ஆயிரம் ரூபாய்தான் இருந்தது. இப்பொழுது ஆயிரம் ரூபாயிலிருந்து ரூபாய் இரண்டாயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, வேலை பளு அதிகமாக இருப்பதாலும், தொழிலாளர் நலச் சட்டங்களை முழுமையாகவும், விரைவாகவும் அமல் நடத்தவும், தோட்டத் தொழிலாளர்களின் நன்மை கருதியும், திண்டுக்கல் மற்றும் குன்னூரில் மாற்றல் முறை மூலம் redeployment—இரண்டு தொழிலாளர் துணை ஆணையர் பதவிகள் ஏற்படுத்தப்படும். அதேபோன்று, தேனி, கோத்தகிரி மற்றும் போத்தனூர் ஆகிய இடங்களில் மாற்றல் முறை மூலம்—redeployment—3 தோட்ட நிறுவன ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

அடுத்து, மிக முக்கியமான அறிவிப்பு. 1997 ஆம் ஆண்டு இத்துறை மானியக் கோரிக்கையின்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களில்

பதிவு செய்து பல வருடங்களாகக் காத்திருந்து, 1992, 1993, 1994 மற்றும் 1995 ஆகிய வருடங்களில் பதிவுகளைப் புதுப்பிக்காததன் காரணமாகக் காலாவதியான பதிவுகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளும் வகையில் இந்தச் சட்டப் பேரவையில் ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்டது. இதன்மூலம் 1 இலட்சத்து, 8 ஆயிரம் பேர் பயனடைந்தார்கள். அதேபோன்று இப்பொழுதும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்து 1996 ஜனவரி முதல் 1998 டிசம்பர் முடிய உள்ள காலத்தில் தங்களது பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அவர்களுடைய பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள அரசு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1993 ஆம் ஆண்டே பதிவு செய்ய யாராவது தவறி விட்டால் இப்பொழுது பதியலாம். (குறுக்கீடு) ஆம். 1993.

அடுத்து, தற்பொழுது, 10ஆம் வகுப்பிற்குக் கீழே கல்வித் தகுதி பெற்ற நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 15 முதல் 20 ஆண்டுகள் வரை வேலைக்காகக் காத்திருக்கிற நிலை உள்ளது. இதனால் அவர்களுக்கு வேலைக்கான நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்ப வாய்ப்பு வரும்பொழுது அவர்கள் அரசு வேலைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பினைக் கடந்து விடுகிறார்கள். ஆகையினாலே, அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 20 ஆண்டுகள் வரை காத்திருந்தும் வேலை பெற இயலாமற் போகிறது. எனவே, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு, அவர்கள் வேலைக்கு என்று பதிவு செய்து காத்திருக்கும் காலத்தில் 3 ஆண்டுகளுக்கு ஓர் ஆண்டு வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை வயது விதியைத் தளர்வு செய்து ஆணை வழங்குவதுபற்றி இந்த அரசு தீவிரமாக ஆராய்ந்து ஆணை வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பொதுத் துறையிலே ஏற்படுகிற காலி பணி இடங்களுக்குக் கிட்டத்தட்ட 90 விழுக்காடு வரையில் போட்டித் தேர்வுகளின் வாயிலாக நிரப்பப்படுகின்றன. கிராமப்புறத்து மக்கள் மற்றும் ஏழை எளிய விவசாயிகளின் பிள்ளைகள் எந்தக் கல்வி பயிலுவது, எந்தத் துறைக்குத் தேர்வு எழுதுவது, தேர்வு எழுதுவதற்கு எப்படித் தயார் செய்து கொள்வது என்பது போன்ற விவரங்கள் தெரியாத இக்கட்டான நிலையில் உள்ளார்கள். இத்தகைய மாணவர்களுக்குப் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு பணி நியமனம் பெறுவதற்கு ஓரளவிற்குத் தங்களது திறமைகளை அதிகரித்துக் கொள்ளுகின்ற விதத்திலே,



அவர்களுக்கு வழிகாட்டுகின்ற விதத்திலே, 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், வேலை தேடுவோருக்கான தன்னார்வ பயிலும் வட்டங்கள், Study Circle ஏற்படுத்தப்படும். இதற்கான இட வசதிகள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அமைத்துக் கொடுக்கப்படும். அதுமட்டுமின்றி, பல்வேறு துறைகள் தொடர்புடைய வல்லுநர்களை அழைத்து, இதுசம்பந்தமான பயிற்சி கொடுக்கப்படும். இந்தப் பயிலும் வட்டங்களில் போட்டித் தேர்வுகள் தொடர்பான சஞ்சிகைகளும் வழங்கப்படும்.

அடுத்து, தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போது பெரும்பாலான தொழிற் பிரிவுகளுக்கு Trades-க்கு பாடப் புத்தகங்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. இந்தப் பாடப்புத்தகங்கள் ஆங்கிலத்தில் உயர்நிலையில் இருப்பதால் தொழிற் பயிற்சி நிலையங்களிலே பயிலும் பயிற்சியாளர்களால் எளிதில் புரிந்து கொள்ள இயலவில்லை. இவற்றினைத் தமிழில் மொழிபெயர்த்து அளித்தால், தொழில் நுணுக்கங்களை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். எனவே, மையப் பயிற்சி வழி நிலையத்தால்— C.I.M.I.—வெளியிடப்பட்ட பாடப் புத்தகங்கள் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும்.

அடுத்து, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிபுரிந்த சிறந்த பயிற்றுநர்களுக்கு மட்டும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டு வந்தது. இனி சிறந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படும்.

அடுத்து, மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் அளிப்பதில் கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு 15 சதவீத ஒதுக்கீடு அரசு வழங்குகிறது. அதேபோன்று, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ளூர் மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்து இடங்கள் ஒதுக்கப்படும்.

அடுத்து, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெறும் அனைத்துத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் உதவித் தொகை மாதம் ரூ.55.00 அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து பழங்குடி வகுப்பினருக்கும் ரூ.82.50 வழங்கப்பட்டு வருகிறது. தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு 1/3 பகுதியினருக்கு அவர்களுடைய பெற்றோர்களின் வருமானத்தின் அடிப்படையில் மாதம் 25 ரூபாய்

உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. சுமார் 45 ஆண்டு காலத்திற்கு முன்பாக நிர்ணயம் செய்யப்பட்ட இந்த உதவித் தொகையினை கருணை உள்ளத்தோடு நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இனி 150 ரூபாய், பழங்குடி வகுப்பினருக்கு 175 ரூபாய் மற்றும் வருமான அடிப்படையில் ஐம்பது ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-50*

நீண்ட நேரத்தை எடுத்துக் கொண்டதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. நிச்சமாக உங்களுடைய எண்ணங்களை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறோம். ஆகவே, அருள்கூர்ந்து அவைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madura Coats நிறுவனத்தில் ஊதிய உயர்வு காரணமாக 18-5-1999 அன்று Strike Notice கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் உரையில் இதற்கு என்ன பதில் என்று கேளுங்கள். திரும்பவும் இந்த Subject-ஐப் பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. மு. அப்பாவு:** அமைச்சர் அவர்கள் அதிலே தலையிட்டு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அம்பாசமுத்தரம் Madura Coats Mill-லிருந்து கழிவு நீர் தாமிரபரணியில் வந்தால்கூட, நிறைய பேருக்கு வேலை கொடுக்கிறார்களே என்ற ஓர் எண்ணத்தோடுதான் அதை மக்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நல்லமுடிவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, என்ன முடிவு செய்யப் போகிறீர்கள், எப்போது முடிப்பீர்கள் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறதுபோல நல்ல முடிவாக இருக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லி, வணிகர்கள் வைக்கிற விளம்பரப் பலகைகளில் முதலில் பெரிய எழுத்தில் தமிழிலும், இரண்டாவதாக ஆங்கிலத்திலும், மூன்றாவதாக எந்த மொழியிலும் எழுதலாம் என்று அறிவித்திருக்கிறார்களே, அண்ணா அவர்கள் கொண்டுவந்த இருமொழிக் கொள்கையை இந்த அரசு கைவிட்டு இருக்கிறதா? அப்படியானால், இந்தியிலும் தமிழகத்தில் எழுதுவதை அனுமதிக்கிறார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருமொழிக் கொள்கைக்கும், இந்தத் திட்டத்திற்கும் நேரடிச் சம்பந்தம் கிடையாது. அது கல்விப் பயிற்சி வழங்குகிற மாணவர்களுக்குக் கல்வி வழங்குகிற முறையில் உள்ளதுதான் இருமொழித் திட்டம். இதில், ஏற்கெனவே தங்களுடைய பெயர்ப் பலகைகளை, கடை நடத்துகிறவர்களான வணிகர்கள் வேறு மொழியிலே எழுதி வைத்திருக்கிறார்கள். தமிழிலே வேண்டுமானால் அடியிலே சிறிய எழுத்துகளில் எழுதுகிறார்கள். எனவே, நம்முடைய மக்கள் நேரடியாக அந்த விளம்பரத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ள ஏதுவாக ஒருவேளை அந்தப் பெயர்கூட தமிழ்ச் சொல்லாக இல்லாவிட்டாலும்கூட அதைத் தமிழ் எழுத்துகளில் அந்தப் பெயர்ப் பலகைகளில் எழுத வேண்டும். அடுத்து ஆங்கிலம். அவர்கள் பயன்படுத்துகிற முறையில், அது இரண்டாவது இடத்தில்தான் வரவேண்டும். ஒருவேளை தங்களுடைய தாய் மொழியிலே, தெலுங்கிலோ, குஜராத்தியிலோ எழுதுவார்களேயானால் அது மூன்றாவதாக இடம்பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. இது விளம்பரம் செய்யும் முறைக்காக மட்டுமே, பொதுமக்களுடைய பார்வையில் படுகிற விளம்பரப் பலகை எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக தீர்மானிக்கப்பட்டது. இது அரசின் இருமொழிக் கொள்கையோடு தொடர்புடையது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 98,65,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 9. அறிவிப்பு

**சட்ட அமைச்சர் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீதான விளக்கத்தினை திரு. சொ. கருப்பசாமி உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு பேரவைத் தலைவர் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 25-3-1999 ஆம் நாளன்று, அவை உரிமைப் பிரச்சினை குறித்த ஓர் அறிவிப்பைக் கொடுத்தார்கள். இது 22-3-1999 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவர்களை செருப்புக் காலுடன் மிதித்ததாகவும், தாக்கியதாகவும் நிருபர்களுக்குப் பேட்டியளித்து, அது 25-3-1999 ஆம் நாளிட்ட 'தினமலர்' நாளிதழில் வெளியாகியிருந்தது தொடர்பான உரிமை மீறல் பிரச்சினையாகும்.

*பிற்பகல் 1-55*

மேற்படி பிரச்சினையை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், 25-3-1999 அன்று பேரவையில் எழுப்பியபோது, எழுப்பப்பட்ட பிரச்சினை வேறோர் உறுப்பினர் தொடர்பானது என்பதால், சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறையின் அடிப்படையில், திரு. கருப்பசாமி அவர்களுக்கு, அவர் தொகுதி முகவரியிட்டு 26-3-1999 அன்று பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்ட கடிதம், 3-4-1999 அன்று சம்பந்தப்பட்ட உறுப்பினரால் பெறப்பட்டது. உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள், எனக்கு அனுப்பிய 20-4-1999 ஆம் நாளிட்ட கடிதத்தில், தாம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, எலும்பு முறிவு ஏற்பட்டு, உடல்நலம் குன்றி



மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், மேற்படி கடிதத்திற்கு உடனடி விளக்கம் அளிப்பதற்குப் போதிய தகுதியான உடல்நிலை இல்லாத காரணத்தால், இரண்டு மாத கால அவகாசம் அளிக்குமாறும் கேட்டுள்ளார். இக்கடிதம் 21-4-1999 அன்று பேரவைச் செயலகத்தில் பெறப்பட்டது. அவர் கேட்டுக்கொண்டுள்ளபடி, இரண்டு மாத கால அவகாசம் தருவதாயின், 20-6-1999 வரை கால அவகாசம் தர வேண்டியிருக்கும். நடைபெற்றுவரும் சட்டமன்றக் கூட்டத் தொடர் 18-5-1999 அன்று முடிவுற உள்ளது. இந்தக் கூட்டத் தொடர் முடிந்த ஒருசில நாட்களில் பேரவைக் கூட்டத் தொடர் இறுதி செய்யப்பட்டு விடும். அவ்வாறு கூட்டத் தொடர் இறுதி செய்யப்பட்டால், அந்நாளில் நிலுவையில் உள்ள அனைத்து அறிவிப்புகளும் செல்திறனற்றதாக ஆகிவிடும். எனவே, உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்களது கோரிக்கையை ஏற்க இயலாது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, மேற்படி சட்டமன்ற உறுப்பினர், அவையின் உரிமையை மீறியுள்ளதாகத் தெரிகிறது. எனவே, அவர் தனது விளக்கத்தை எனக்கு அனுப்பி, அதன்மீது நான் முடிவெடுத்து குழுவிற்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக, உறுப்பினர் தன் விளக்கத்தைக் குழுவிற்கே அளிக்கலாம் என்றும், அதன் அடிப்படையில் குழுவே இதன்மீது முடிவெடுக்கலாம் என்றும் தெரிவித்து, இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும், 3-5-1999, திங்கட்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

150. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-12-1998 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

166. மானியக் கோரிக்கை எண் 28—தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (ஆங்கிலம்)

167. மானியக் கோரிக்கை எண் 28—தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிறசி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000.(தமிழ்)

168. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் செயலாக்கம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

169. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)

170. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

171. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பதாவது அறிக்கை, 1998-99.

172. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

173 பொதுக கணக்குக் குழுவின் நூற்று எண்பத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

174. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்துமூன்றாவது அறிக்கை, 1998-99.

175. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

176. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

177. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பதாவது அறிக்கை, 1998-99.

178. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

179. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்திரண்டாவது அறிக்கை, 1998-99.





## இணைப்பு

[57 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 28

### தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1999-2000

*முன்னுரை*

"தொழிலாளர் நலன்" என்கிற பொருள் நமது இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் "பொதுப்பட்டியலில்" இடம் பெற்றுள்ள நிலையில், தொழிலாளர்களின் பணி நிலைமைகளிலும், அவர்களது வாழ்க்கைத் தரத்திலும் முன்னேற்றமடையச் செய்யும் பணிகளைச் செய்ய மாநில அரசுகளும், மத்திய அரசும் கடமைப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இந்த அரசானது தொழில் அமைதியைக் காத்திடுவதோடு, தொழிலுறவை மேம்படுத்தும் நோக்கத்தையும் கொள்கையாகக் கொண்டு. பொருளாதார முன்னேற்றமடைந்து அதனால் நமது மாநிலத்தின் மக்களும், குறிப்பாக தொழிலாளர்களும் நன்மை அடையும் விதத்தில் தனது பணியைச் செயலாற்றி வருகிறது. தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களும் நல்லதொரு அமைதியான சூழ்நிலையில் வாழ வேண்டுமென்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளது. இந்த நோக்கங்களை எட்டும் விதத்தில், இந்த அரசு 1972-ம் ஆண்டில் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை இயற்றி அதன் மூலம் நிதி ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இந்த நல நிதி மூலம் தொழிலாளர்களுக்குப் பொழுதுபோக்கு வசதிகள், விடுமுறை இல்லங்கள், அவர்களது மனைவி, பெண் பிள்ளைகளுக்குத் தையற்கலையில் பயிற்சி, குழந்தைகளுக்குக் காப்பகங்கள், சிறார்பள்ளிகள் ஆகியவை தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழிற்தகராறுகள் பற்றிய பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளவும், தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவும் சென்னைக்கு வருகை தரும் பொழுது, அவர்கள் சிரமம் ஏதுமில்லாமல் மிகக் குறைந்த வாடகையில் தங்குவதற்காக 'ஜீவா இல்லம்' என்ற தங்கும் விடுதி ஒன்றை இந்த அரசு அமைத்து நடத்தி வருகிறது.

*[1999 ஏப்ரல் 30*

2. இது வரையில் உதாசீனப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலன் காக்க இந்த அரசு தற்போது தீவிரமாக முனைந்துள்ளது, அதன்படி, இந்த மாமன்றம் 27-11-1998-ல், 1998-ம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைபடுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொண்டு, அது 28-12-1998-ல் சட்டமாக இயற்றப்பட்டது. இத்திருத்தச் சட்டமானது, அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதியை உருவாக்க வகை செய்கிறது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமுகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டதென்று 17-3-1999 அன்று நிதிநிலை அறிக்கையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள 52 வேலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கீழ்க்காணும் நலத் திட்டங்களை இந்த வாரியம் செயல்படுத்தும்:-

(i) விபத்து நிவாரணத் திட்டம்;

(ii) மகப்பேறு நலத் திட்டம் மற்றும்

(iii) பணி முடிவு நலத் திட்டம்.

வீட்டு வேலைப் பணியாளர்களும் மற்றும் சைக்கிள் பழுது பார்க்கும் தொழிலாளர்களும் மேற்சொன்ன சட்டத்தின் அட்டவணையில் சேர்ககப்படுவார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். இந்த இரண்டு வேலைகளையும் இச்சட்டத்தில் சேர்த்தவுடன் இந்தத் தொழிலாளர்களும் உரிய நலன்களைப் பெற இயலும்.

3. விவசாயத் தொழிலாளர்களின் நிலைமைகள் குறித்தும் இந்த அரசு நன்றாக அறியும். கோலப்பன் குழுவானது விவசாயத் தொழிலாலர்களின் நலனைக் காக்கும் பொருட்டு 43 பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. அவற்றை இந்த அரசு மிகத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. அவற்றில் மிகவும் முக்கியமானதொரு பரிந்துரையானது, அவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியத்தைத் திருத்தி அமைப்பது பற்றியதாகும். அதனை இந்த அரசு ஏற்று, இந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை திருத்தி அமைப்பதற்கான அறிவிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.



*1999 ஏப்ரல் 30]*

4. ஒவ்வொரு குடிமகனையும் ஏதாவது ஒரு வகையில் நுகர்வோராகக் கருதலாம். எனவே, நுகர்வோரின் நலனில் அக்கறை கொண்டு, அவர்களைப் பாதுகாக்கும் வகையில், 1985 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்தையும், 1977ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றைத் தொழிலாளர் துறை மிகத் தீவிரமாக செயலாற்றி வருகிறது. இதைத்தவிர, 28-ற்கும் அதிகமான தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் மிகச் செவ்வனே இந்தத் துறை நடைமுறைப்படுத்தி வருகிறது.

5. தொழிலாளர்களின் நலனுக்காக வேண்டி சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும், பல்வேறு நலத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, தொழிலாளர் நலச் சட்டங்களை நிருவகிப்பதை தொடர்ந்து இந்த அரசு ஆய்வு செய்து வருகிறது.

6. மேற்சொன்ன கொள்கைகளின் அடிப்படையில், இந்தத் தொழிலாளர் நலத் துறையானது தொழிலுறவைக் கடைபிடிப்பது, நுகர்வோரைப் பாதுகாப்பது மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்குவது என்கிற மூன்று சிறப்பு நோக்கங்களுடன் தனது பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது.

## அத்தியாயம்-1

### தொழில் நல்லுறவுகள்

1.1. தொழிலாளர்களுக்கும், நிருவாகத்திற்குமிடையே தொழில் அமைதி, இணக்கமான நல்லுறவுடன் கூடிய சூழ்நிலையை உறுதி செய்வதே தமிழக அரசின் தீர்மானிக்கப்பட்ட கொள்கையாகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றின் முதுகெலும்பாக விளங்குவது நல்லதொரு தொழில் நல்லுறவைப் பேணிக் காப்பதேயாகும். ஆரோக்கியமான கட்டுப்பாடுடைய, உற்பத்தித் திறனுடைய, மேம்படுத்தப்பட்ட உழைப்பும், நன்மைபயக்கும் தாயுள்ளம் கொண்ட நிருவாகமும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே, தொழில் நல்லுறவிற்கு மூலதனமாகவும், அடையாளமாகவும் அமையும். திறமையான சமரசப் பேச்சுவார்த்தையின் மூலமாக, அடிப்படை யுக்திகளைக் கையாண்டு, உரிய தருணத்தில் தலையிட்டு தொழிலாளர் துறை அதிகாரிகள் வெற்றிகரமாகச் செயல்பட்டு முக்கிய பங்காற்ற முடியும் என்பது கடந்த கால தொழில் நல்லுறவுகளில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

வேலை நிறுத்தம், கதவடைப்பு, ஊதிய மாற்றம், வேலைப்பளு, ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள் என்பதிலிருந்து, தற்சமயம் நேரடிப் பேச்சுவார்த்தைகள் வாயிலாகத் தீர்வு காண வழி ஏற்பட்டுள்ளது. உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல் என்ற புதிய கொள்கைகள் அறிமுகத்தினால், போட்டி மிகுந்த தொழில் தொடங்கும் சூழ்நிலையை உருவாக்குவது தற்போது முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். தற்போது நிலவி வருகின்ற அமைதி, தொழில் சூழ்நிலை, தொழிலாளர்களுக்கும், நிருவாகத்திற்குமிடையே உள்ள தொழில் நல்லுறவு போன்றவைகளால் பல வெளிநாட்டுத் தொழில் அதிபர்களின் கவனம் தமிழ்நாட்டின் பக்கம் திரும்பியுள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

தொழிற்தகராறுகளில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள்

1-2-1998 ஆம் ஆண்டில எழுப்பப்பட்ட 15,040 தொழிற்தகராறுகளில் 11,869 தொழிற்தகராறுகள் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டன. தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை மூத்த அதிகாரிகளின் மூலம் செய்யப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள் இதில் அடங்கும். இவைகளில் ஊதியம் மற்றும இதரப் படிகள் உயர்வு, ஊதிய ஏற்றமுறை மற்றும் பணிநிலை, வேலை நிறுத்தத்தைக் கைவிடுதல் போன்றவற்றில் சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு ஏற்படுத்தப்பட்டவைகளில் முக்கியமானவை பின்வருமாறு:-

| நிறுவனத்தின் பெயர் | | சமரச ஒப்பந்த நாள் |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனம் (மண்வாரி இயந்திரப் பிரிவு), திருவள்ளூர். | : | 02-01-1998 |
| 2. ஸ்ரீமீனாட்சி மில்ஸ், மதுரை | : | 26-02-1998 |
| 3. பி அண்டு சி மில்ஸ், சென்னை. | : | 28-03-1998 |
| 4. ப்யூச்ரா பாலிமார்ஸ் லிட்., மணலி, சென்னை. | : | 30-03-1998 |
| 5. காவேரி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிட்., பேட்டைவாய்த்தலை. | : | 06-04-1998 |
| 6. டான்சி, கிண்டி, சென்னை. | : | 06-04-1998 |
| 7. ஹோட்டல் காஞ்சி, சென்னை. | : | 20-04-1998 |
| 8. மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிட்., சென்னை. | : | 24-04-1998 |
| 9. ஆல்பம்ப் லிமிடெட் பெருங்குடி சென்னை. | : | 07-05-1998 |
| 10. பீடித் தொழிலாளர்கள். | : | 20-05-1998 |
| 11. இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், திருவள்ளூர். | : | 19-06-1998 |
| 12. சங்கம் அலுமினியம் லிட்., ஓசூர். | : | 03-08-1998 |
| 13. அரியண்ட் இன்டர்மீடியட் பிரைவேட் லிமிடெட், காஞ்சிபுரம். | : | 10-08-1998 |
| 14. பாட்டா இந்தியா லிமிடெட், ஓசூர். | : | 19-08-1998 |
| 15. சதர்ன் ஸ்டரக்சரல்ஸ் லிட்., பட்டாபிராம், சென்னை. | : | 20-08-1998 |
| 16. இன்டெக் இன்ஜினியரிங் சர்வீசஸ் (பி) லிட்., சென்னை. | : | 05-10-1998 |
| 17. தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் | : | 06-10-1998 |
| 18. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன். | : | 13-10-1998 |
| 19. டிசிடபிள்யு லிட்., சாகுபுரம். | : | 08-11-1998 |



தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

1.3. பஞ்சு பற்றாக்குறை, மூலப்பொருள் விலையேற்றம், நிதிப்பற்றாக்குறை, மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை ஆகிய காரணங்களினால், பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவும், தமிழ்நாட்டில் பஞ்சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும், இந்த நெருக்கடியைப் போக்க அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்காவிடில், தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழில்

நசிந்து, சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும், தமிழ்நாட்டில் பஞ்சாலை நிருவாகங்களைச் சார்ந்த SIMA, SISPA போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளும், பஞ்சாலைத் தொழிலாளர்களின் மத்திய தொழிற்சங்கங்களும் இதர தொழிற்சங்கங்களும் ஒருமித்த குரலில் மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என வேண்டுகோள் விடுத்தன.

1.4. இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அறிவுறுத்தியபடி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் ஆகியோர், 16-7-1998 அன்று அரசு அதிகாரிகள், பஞ்சாலை நிருவாக அமைப்புப் பிரதிநிதிகள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்திய தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழுவில் உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோருடன் கூட்டம் நடத்தினர்.

1.5. இக்கூட்டத்தில் மேற்கண்ட பிரச்சினை குறித்து விவாதிக்கையில் தொழிற்சங்கத் தலைவர்கள், மூடப்பட்ட நிறுவனங்களைத் திறப்பது சம்பந்தமாகவும், இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி சில பஞ்சாலை நிருவாகங்கள் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சட்டரீதியான தொகைகளை வழங்காமல் இருப்பது குறித்தும், எல்.ஐ.சி., பி.எப்., போன்ற அமைப்புகளுக்குப் பணம் செலுத்தாமல் இருப்பது குறித்தும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இவை குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி மாநில அளவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தன. இதனையடுத்து, 24-7-1998 மற்றும் 25-7-1998 ஆகிய தேதிகளில் இப்பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட ஆலை நிருவாகங்கள் இ.எஸ்.ஐ., பி.எப்., எல்.ஐ.சி., போன்ற அமைப்புகளின் அதிகாரிகளுடன் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தி உரிய தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதன் விளைவாகவும், தொழிற்சங்கங்களை, வேலை நிறுத்தத்தைக் கைவிட அறிவுறுத்தியதன் பயனாகவும் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இ.எஸ்.ஐ., பி.எப்., எல்.ஐ.சி., அமைப்புகளுக்கு இவ்விவரம் தெரிவிக்கப்பட்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளவும் அரசால் கடிதம் எழுதப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1.6. இதன்பின்னர், நிருவாகப் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கங்கள், மாண்புமிகு முதலமைச்சர் இப்பிரச்சினையில் தலையிட்டுப் பேச வேண்டும் எனக் கோரியதன் பேரில், மாண்புமிகு முதலமைச்சர்



இப்பொருள் தொடர்பாக 26-9-1998 அன்று அனைத்துத் தரப்பினரையும் அழைத்து கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட துறையின் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். அனைத்துத் தரப்புக் கருத்துகளையும் கேட்டறிந்த பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் மாநில அரசிடம் கேட்கப்பட்ட சலுகைகளைப் பொறுத்த அளவில், சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, மத்திய அரசிற்குக் கடிதம் எழுதுவதாகவும், தூதுக் குழு அமைத்து டெல்லிக்குச் சென்று தீர்வு காணலாம் எனவும் தெரிவித்தார்கள்.

1.7. இதன்படி உடனடியாக மத்திய அரசு அறிவித்துள்ள பஞ்சு ஏற்றுமதியை ரத்து செய்யக் கோரி மத்திய அரசிற்குத் தமிழக அரசு கடிதம் அனுப்பியது.

1.8. மேலும், மத்திய அரசு அமைத்துள்ள பஞ்சாலைத் தொழிலுக்கான முத்தரப்புக் கமிட்டியின் கூட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினையை விவாதத்திற்கு ஒரு பொருளாகச் சேர்க்க கோரி அரசு அதன் கடிதம் எண் 39011/டி.2/98-3, நாள் 24/12/1998 மூலம் மத்திய தொழிலாளர் துறையின் செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. இது தொடர்பாக மத்திய அரசின் பதில் எதிர்நோக்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்திலுள்ள பொறியியல் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பான குறிப்புரை:**

1.9. கோவை மாவட்டத்திலுள்ள பொறியியல் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கைக் குழு இத்தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, 5-10-1998 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்ததன் தொடர்பாக, 6-10-1998 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அக்கூட்டத்தில் இருதரப்பினரும் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், இந்த அரசு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

*முதலமைச்சரின் பொது நிவாரண நிதி*

1.10. பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக மூடப்பட்டதால் அல்லது கதவடைப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு

நிதி உதவி வழங்கும் பொருட்டு, 1998-ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இவ்வரசு 1-1-1990-க்குப் பிறகு மூடப்பட்டு இயங்காமல் உள்ள 35 தொழில் நிறுவனங்களில் உள்ள 14,051 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.70,25,500/- நிவாரணத் தொகை வழங்கியது.

தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்

1.11. நலமார்ந்த தொழில் உறவை மேம்படுத்தும் முகத்தான், தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிருவாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கும் வகையில், தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கிச் செயலாற்றி வருகிறது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில், நிருவாகத்தினர் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், முறையே நான்கு பேர் கொண்ட ஒரு முத்தரப்பு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.12. இத்திட்டத்தின்கீழ் 1988 ஆம் ஆண்டு வரை பரிசு பெற்றவர்களுக்கு சுழல் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன. 1989 ஆம் ஆண்டு முதல் நிரந்தரக் கேடயம் மற்றும் சான்றிதழுடன் ரொக்கப் பரிசுத் தொகையாக முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.2,000/-ம், இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.1000/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

1.13. மேற்படி தொழில் நல்லுறவு பரிசுக்குழு, 1993 மற்றும் 1994-ம் ஆண்டிற்கான பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து 28-7-1998 அன்று கோயம்புத்தூரில் நடந்த பரிசளிப்பு விழாவில் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 1995, 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுக்களுக்கான பரிசுக்குரியவர்கள் தேர்வு பரிசீலனையில் உள்ளது.

தொழிலாளர் நீதிமன்றங்கள்

1.14. இம்மாநிலத்தில் 10 தொழிலாளர் நீதிமன்றங்களும், ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. தொழில் தீர்ப்பாயத்தின் தலைமையிடம் சென்னை ஆகும். தொழிலாளர்கள் சட்டப் பூர்வமான பலனை விரைந்து பெற இவை உதவுகின்றன. இவற்றின் ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது:-





| தொழிலாளர் நீதிமன்றங்கள் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|
| 1 முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |
| 2 முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | |
| 3 இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | |
| 4 தொழிலாளர் நீதிமன்றம், வேலூர். | வேலூர் மற்றும் திருவண்ணாமலை. |
| 5 தொழிலாளர் நீதிமன்றம், சேலம். | சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் நாமக்கல். |
| 6 தொழிலாளர் நீதிமன்றம், கோவை. | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி. |
| 7 தொழிலாளர் நீதிமன்றம், கடலூர். | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர். |
| 8 தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி. | திருச்சி, கரூர், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை. |
| 9 தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி. |
| 10 தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி. |

[1999 ஏப்ரல் 30

1.15. நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தொழிற்தகராறுகள் பற்றிய விவரங்கள் செயலாக்கக் குறிப்பில் (Performance Budget) கொடுக்கப்பட்டுள்ளன.

*தொழிலாளர் புனரமைப்பு நிதி*

1.16. தொழில்நுட்பங்களை நவீனப்படுத்துதலாலும், நலிவுற்ற மற்றும் மூடப்பட்ட தொழிற்சாலைகளால் பாதிக்கப்படும் கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத் துறையினைச் சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக ரூ.1 கோடி மானியத்தில் தொழிலாளர் புனரமைப்பு ஒன்றினை அரசு உருவாக்கியுள்ளது. இப்புனரமைப்பு நிதியினைச் சரியான முறையில் பயன்படுத்துதலுக்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு 1998 அக்டோபர் மாதத்தில் வழிகாட்டுதல் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக்குழு, கீழ் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களுடன் செயல்படுகிறது:-

1. அரசுச் செயலாளர்,

   தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.
2. அரசுச் செயலாளர், தொழில் துறை.
3. அரசுச் செயலாளர், சிறு தொழில்கள் துறை.
4. அரசுச் செயலாளர், நிதித் துறை.
5. அரசுச் செயலாளர்,

   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.
6. தொழில் மற்றும் வாணிபத் துறை இயக்குநர், உறுப்பினர்-செயலர்.

இக்குழு, இது தொடர்பாகப் பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, அதன் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கும்.

## அத்தியாயம் 2

### சட்ட அமலாக்கம்

2.1. தொழிலாளர் நலனுக்கான அனைத்துத் தொழிலாளர் நலச் சட்டப் பிரிவுகள் முறையாக நிருவாகத் தரப்பினராலும் தொழிலாளர்களாலும் நல்லெண்ண அடிப்படையில் சரிவர அமல்படுத்துதல் மூலமே, தொழிலாளர் நலன் பேணுதலுக்கான குறிக்கோள்கள் நிறைவேறும். தொழிலாளர் நலச் சட்டங்களைச் சரிவர



1999 ஏப்ரல் 30]

அமல்படுத்துதலுக்காக, நிருவாகம் மற்றும் தொழிலாளர் தரப்பினருக்கு ஆலோசனை வழங்குதலையும், அதற்கான உரிய உதவிகளைச் செய்வதையுமே இத் துறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்களுடன் இத் துறை தொழிலாளர்களுக்கு உரிய பயன்களைப் பெற்றுத்தர சட்டப் பூர்வமாகச் செயல்படுவதுடன், அதேநேரத்தில் தொழில் அமைதியை பராமரிப்பதிலும் முனைப்புடன் செயல்படுகிறது. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் செயலாக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

*தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1947*

2.2. இச்சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை தொடங்கும் நேரம் மற்றும் முடியும் நேரங்களைக் கண்காணிக்கவும் வழிவகை செய்கின்றது. இச்சட்டத்தின் மூலம் அனைத்து கடைகள் மற்றும் நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாள் மூடப்பட வேண்டும். அதாவது, பணியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க இச்சட்டம் வகை செய்கின்றது. மேலும், இச்சட்டத்தின்கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்டச் செயலாக்கம் குறித்து அவர்தம் கடமையினை உணரவும் அரசு, இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காண உரிய அதிகாரங்கள் வழங்க முடிவு செய்துள்ளது. எனவே, அரசு இது தொடர்பான சட்ட முன்வடிவை நடப்புக் கூட்ட தொடரில் அறிமுகப்படுத்தவுள்ளது.

2.3. மேலும், இச்சட்ட அமலாக்கத்திற்காக இத்துறையில் 210 தொழிலாளர் உதவி ஆய்வர்களும், அதனை மேலாய்வு செய்திட 67 தொழிலாளர் துணை ஆய்வர்களும் மற்றும் 29 தொழிலாளர் ஆய்வர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2.4. மேலும், தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட 1948 ஆம் வருட தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் விதிகளின்கீழ் கடைகள் நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் தவறாது வைத்திடல் வேண்டும். மேலும், விதி 15-ன்படி தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், தமிழில் பெரிய . அளவிலும்,

இரண்டாவது இடத்தில் ஆங்கிலத்தில் தமிழ் எழுத்துக்களைவிட அளவில் சிறியதாகவும், வேறு மொழிகளில் ஆங்கிலத்திற்கு அடுத்தும் எழுதி வைக்கப்படவேண்டும். தமிழ் எழுத்துகள் சீர்திருத்திய வடிவத்தில் எழுதப்பட வேண்டும்.

2.5. அரசின் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்கின்ற கொள்கையினைக் கருத்தில்கொண்டு, தமிழில் பெயர்ப்பலகை வைத்தலுக்கான, தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் விதியினை அமல்படுத்துதலிலும் இத்துறையின் அலுவலர்கள் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

*சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936*

2.6. சம்பளப் பட்டுவாடா சட்டம் பணியாளர்களின் ஊதியத்தினை உரிய காலத்தில் வழங்க வகை செய்யவும், சம்பளப் பட்டுவாடா தொடர்பான கேட்பு மனுக்களை விரைவில் தீர்த்திடவும் மற்றும் பணியாளர்கள் சம்பளத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுத்திடவும் உருவாக்கப்பட்ட சட்டமாகும்.

2.7. இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர் ஆய்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பிரிவுகள் மூலம் வேலையளிப்போர், 1,000 தொழிலாளர்களுக்குக் கீழ் பணிபுரியும் நிறுவனங்களில் அவர்களது தொழிலாளர்களுக்கு பிரதி மாதம் 7-ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ சம்பளம் வழங்கிடல் வேண்டும். 1,000 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தியுள்ள நிறுவனங்கள் பிரதி மாதம் 10-ம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ சம்பளம் வழங்கிடல் வேண்டும். மேலும், இச்சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத சம்பளப் பிடித்தங்கள் குறித்தும் விரிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.8. தற்போது இச்சட்டம் மாதம் ரூ.1600/- வரை சம்பளமாகப் பெறும் பணியாளர்களுக்கு மட்டுமே பொருந்துவதால், மேற்குறிப்பிட்டுள்ள சம்பளக் கட்டுப்பாட்டினை நீக்கிட அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

2.9. இச்சட்டத்தின் கீழ் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்க இத்துறையின் 7 மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



*மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961*

2.10. இச்சட்டம், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டத்தின்கீழ் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் சட்ட அமலாக்கம் மேற்கொள்ள தொழிலாளர் துணை ஆணையர் (குறைந்தபட்ச ஊதியம்) அவர்கள் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளார். இச்சட்டம் தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்களால் அமலாக்கம் செய்யப்படுகிறது.

2.11. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு மோட்டார் போக்குவரத்து நிறுவனமும் இச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தினைச் செலுத்தி பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். அவ்வாறே அப்பதிவுச் சான்றிதழினை ஒவ்வோர் ஆண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஐந்து தொழிலாளர்களுக்குக் கீழ் பணிபுரியும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும் வகையில் உரிய சட்டத் திருத்தத்தினைக் கொண்டுவர அரசு உரிய முன்மொழிவினை மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது.

*.தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958*

2.12. இச்சட்டம், தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை நாட்களில் விடுமுறை அளிக்க வழிவகை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்களாக ஐந்து பண்டிகை விடுமுறை நாட்களும், நான்கு தேசிய விடுமுறை நாட்களாக அதாவது ஜனவரி 26 குடியரசு தினம், ஆகஸ்டு 15 சுதந்திர தினம், அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி தினம் மற்றும் மே மாதம் முதல் தேதி தொழிலாளர் தினம் ஆகிய நாட்களிலும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

2.13. மேலும், மே தினத்தினை ஊதியத்துடன் கூடிய தேசிய பண்டிகை தினமாக அறிவித்த முதல் அரசு இந்த அரசாகும் என பெருமிதத்துடன் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

2.14. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த இயற்றப்பட்ட ஒரு சமூக நலச் சட்டமாகும்.

2.15. இச்சட்டம் மற்றும் இச்சட்டத்தின் கீழான விதிகளை அமல்படுத்த தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் மூலம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் விடுமுறை தினங்கள், பணி நேரங்கள், விடுப்பு மற்றும் சம்பளம், மிகை நேர ஊதியம் போன்ற பயன்கள் முறையாக வரையறுக்கப்பட்டுள்ளன.

2.16. மேலும் இச்சட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உணவு நிறுவனங்களிலும் தமிழில் பெயர்ப் பலகை வைக்க சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, இச்சட்டப் பிரிவு தீவிரமாக அமலாக்கம் செய்யப்படுகிறது.

**உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதரப் பிரிவுகள்) சட்டம், 1955**

2.17. இச்சட்டம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும்.

2.18. இச்சட்டத்தின் மூலம் மத்திய அரசு அவ்வப்போது உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர் அல்லாத பிற தொழிலாளர்களின் ஊதிய விகிதத்தினை மாற்றியமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர் அல்லாத பிற தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம், மறு நிர்ணயம் செய்ய அவ்வப்போது மத்திய அரசு இத்தொழிலாளர்களுக்காக ஊதியக் குழு அமைக்கவும், இச்சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.





2.19. இச்சட்டத்தின்கீழ் உள்ள பிரிவுகளை இத் துறையின் தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆணையர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் அமலாக்கம் செய்கின்றனர்.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981**

2.20. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குதலே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

2.21. இருபதும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்துவதாக அமைந்துள்ளது. மேலும், இச்சட்டத்தின் கீழ் தொழில் நிறுவனத்தில் தொடர்ந்து 24 காலண்டர் மாத காலத்தில் 480 நாட்கள் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளியையும் நிரந்தரமாக்க வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தோட்ட தொழிலாளர் ஆய்வர்கள், ஆய்வர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட தொழிலாளர் மேற்குறிப்பிட்டுள்ள ஆய்வர் முன்னிலையில் மனு செய்து உரிய நிவாரணம் காணலாம்.

**தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

2.22. இச்சட்டம், தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்து வேலையளிப்போர் அவர்களது கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக இத்துறையின் மூன்று மண்டல இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.23. இச்சட்டம் 20 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் வேலையளிப்போர் அவர்களது நிறுவனத்தின் நிலையாணைகளைக் குறித்து சான்று பெற வேண்டும். நிலையாணைகள் சான்றிதழ் பெறப்படாத தொழில் நிறுவனங்களுக்கு, மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தில் உள்ள மாதிரி நிலையாணைகள் அத் தொழில் நிறுவனங்கள் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெறும் வரை பொருந்தும்.

*தொழிற்சங்கங்கள் சட்டம், 1926*

*2.24.* தொழிற்சங்கங்கள் பதிவு செய்தல் குறித்தும் தொழிற்சங்கம் பதிவு செய்வது குறித்தான சட்டத்தை விளக்கவும், தொழிற்சங்கங்கள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சங்க பதிவாளர்களாக ஏழு மண்டல துணை ஆணையர்கள் செயல்படுகின்றனர். இச்சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவாக கூறப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் பொதுநிதி மற்றும் அரசியல் நிதிகளை உருவாக்கவும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வழிவகை உள்ளது. இச்சட்டத்தில் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு வகை செய்யப்படவில்லை. எனவே இது தொடர்பாக 6-3-1999 அன்று நடந்த மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதனை மேலும் விரிவாக ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் பொருட்டு தொழிலதிபர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பெற்று, அக்குழு இப்பணியை செய்து வருகிறது. அதன் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

*2.25.* தற்பொழுது வேலைக்குச் செல்லும்/உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதினால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் பெண்கள் முன்வந்து ஈடுபட வேண்டும் என்பதை இந்த அரசு வரவேற்கிறது. இதற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்யவும், பெண்களை ஊக்குவிக்கவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

*தமிழ்நாட்டில் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களின் நலன்களும்*

*2.26.* தோட்டத் தொழிலாளர் சட்டம் பழமையான சட்டங்களில் ஒன்று. நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறையிலும், சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலையிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் மற்றும் தேனி மாவட்டத்திலும் தேயிலை, காபி, ரப்பர் மற்றும் ஏலக்காய் ஆகிய தோட்டப் பயிர்கள் பயிரிடும் தோட்ட நிறுவனங்கள் உள்ளன.

*2.27.* தமிழ்நாட்டில் தோட்ட நிறுவனம் உள்ள மொத்த பரப்பளவு 47,434.28 ஹெக்டேர் ஆகும். அதில் நேரடியாக பணிபுரியும் மொத்த





தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,07,569 ஆகும். (66,440 ஆண்கள் மற்றும் 41,129 பெண்கள்) காபி தோட்ட நிறுவனங்கள் போன்றே தேயிலை தோட்ட நிறுவனங்களும் அதிக பங்கை வகிக்கிறது.

*சட்டம் மற்றும் விதிகள்*

*2.28.* தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கவும், வேலையின் தரத்தை முறைப்படுத்துவதிலும் அங்கம் வகிக்கிறது. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலும், காபி, ரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களில் 15 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால் அவற்றிற்கு இச்சட்டம் பொருந்தும்.

*2.29.* 5 ஹெக்டேர் மற்றும் 15 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள தோட்ட நிறுவனங்களில் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டி அரசாணை மூலம் மேற்படி சட்டத்தை அதுபோன்ற தோட்ட நிறுவனத்திற்குப் பொருந்தும் வகையில் அறிவிக்கை செய்ய அரசிற்கு அதிகாரம் உள்ளது.

*தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்தல்*

*2.30.* இச்சட்டம் தமிழ்நாட்டில் 7 இடங்களில் தோட்ட நிறுவன ஆய்வர்களாலும் இரண்டு உதவி மருத்துவ அலுவலர்களாலும் (தோட்ட நிறுவனங்கள்) அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. சென்னை, தலைமை தோட்ட நிறுவன ஆய்வரின் கீழ் இந்த அமலாக்க அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள். 7 தோட்ட நிறுவன ஆய்வாளர்களின் அலுவலகங்கள் குன்னூர், ஊட்டி, கூடலூர், ஏற்காடு, வால்பாறை, வத்தலகுண்டு மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊட்டி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உதவி மருத்துவ அலுவலர்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

*2.31.* பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களில் தோட்ட நிறுவன ஆய்வாளர்களால் கீழ்க்காணும் இதர தொழிலாளர் சட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன:—

1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948.
2. சம்பள பட்டுவாடா சட்டம், 1936.

[1999 ஏப்ரல் 30

3. மகப்பேறு நலச் சட்டம், 1961.

4. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958.

5. தமிழ்நாடு பிழைப்பூதிய வழங்கல் சட்டம், 1981.

6. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981.

7. சம ஊதியச் சட்டம், 1976.

8. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972.

9. போனஸ் பட்டுவாடா சட்டம், 1965.

10. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972.

பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களுக்குக் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், தமிழ்நாடு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம் ஆகியவை பொருந்தும்.

*தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் நல வசதிகள் வழங்குதல்*

2.32. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக இலவச மருத்துவ வசதி, கம்பளி வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றிற்கு இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.

*வீட்டு வசதி*

2.33. இச்சட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தினர் வீடு கட்டித்தர வழிவகை உள்ளது.

2.34. இத்தொழிலாளர்களுக்கு வாடகையின்றி வாழ்க்கை நடத்த ஏதுவாக நல்ல நிலையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் நிருவாகத்தினரால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய வீடுகளின் தரம் குறித்து அரசு விரிவான ஆணை வெளியிட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் வீட்டின் அளவு 287 சதுர அடியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மொத்தம் 43,691 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டுள்ளது. தோட்டத்



1999 ஏப்ரல் 30]

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள தோட்டத் தொழிலாளர்களில் 98 சதவிகிதம் தொழிலாளர்கள், வீட்டு வசதி பெற்று தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலாவதாக திகழ்கிறது.

*தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்*

2.35. வீட்டு வசதி தொடர்பாக பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம், அரசுச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு நிருவாக பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவாகும். இக்குழு 15-9-1998 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அரசுக்கு தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி குறித்து பரிந்துரை செய்யும் பொருட்டு நீலகிரி மாவட்டம் குன்னூரில் 30-10-1998 அன்று கூடியது.

*மருத்துவ வசதி*

2.36. தோட்ட நிறுவனங்களில் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக செயல்பட 129 தனி மருந்தகங்களும், 77 கூட்டு மருந்தகங்களும், 133 தோட்ட (Garden) மருத்துவமனைகளும் மற்றும் 4 தொகுப்பு மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகிலுள்ள அரசால் நடத்தப்படும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளும்போது, அதற்கான செலவுத் தொகை நிருவாகத்திடமிருந்து திரும்பப்பெற்றுக் கொள்கின்றனர். தோட்ட நிறுவனங்களில் உள்ள மருத்துவமனைகளில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய மருந்துகள் விவரம் குறித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அவர்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் உள்ளது.

*மருத்துவப்படி*

2.37. உடல் நிலை சரியில்லாத தோட்டத் தொழிலாளர்கள் நிருவாகத்தினரிடமிருந்து, உடல் நிலை சரியில்லா நாட்களுக்கு

[1999 ஏப்ரல் 30

சான்றிதழ் பெற்று மருத்துவபடி பெற தகுதியுடைவராகின்றனர். இம்மருத்துவபடி அவர்களது தினக்கூலியில் 2/3 பகுதி பெறக்கூடியதாகும். இது ஆண்டிற்கு 14 தினங்களுக்கு மட்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு வசதி

2.38. தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் மகப்பேறு சலுகைகள் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். ஒவ்வொரு பெண் தொழிலாளியும் பிரசவிக்கும் தேதியின் முன்பிலிருந்து 80 நாட்கள் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால் 84 நாட்கள் பேறு கால விடுப்பிற்கு (12 வாரம்) தகுதியுடையவர் ஆகிறார்.

குழந்தைகள் காப்பகம்

2.39. தோட்ட நிறுவனங்களில் 50 பெண் தொழிலாளர்களுக்குமேல் பணிபுரிந்தாலும் அல்லது அப்பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை 20-ம் அதற்கு மேலும் இருந்தாலும் குழந்தைகளின் பராமரிப்பு குறித்து குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். குழந்தைகள் காப்பகத்தை சுத்தமாக வைத்திருப்பதோடு, குழந்தைகள் விளையாட மைதானமும், விளையாடும் பொருட்களும் குழந்தைகள் உபயோகத்திற்காக வைத்திருக்க வேண்டும். குழந்தைகளுக்கு சுத்தமான பால் வழங்க வேண்டும் மற்றும் முறையான இடைவெளியில் குழந்தைகளுக்குப் பால் புகட்ட தாய்மார்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள தோட்ட நிறுவனங்களால் 328 குழந்தைகள் காப்பகங்கள் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

மின்சார வசதி

2.40. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின்வசதி செய்து கொடுக்க வேண்டியது நிருவாகத்தினரின் பொறுப்பாகும். தற்போது தோட்டத் தொழிலாளர்களுக்கான 43,691 வீடுகளில் 40,384 வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. மின் வசதி அளிப்பதில் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க மாவட்ட ஆட்சியரின்கீழ் நிருவாக தரப்பினர், தொழிலாளர் தரப்பினர் மற்றும் அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



1999 ஏப்ரல் 30]

கல்வி வசதி

2.41. ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும் 6 வயதிற்கும் 12 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகள் 25-ம் அதற்கும் மேலும் இருந்தால், அவர்களுக்கு நிருவாகம் கல்வி வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். தோட்ட நிறுவனங்களிலிருந்து 1.6 கி.மீ. தொலைவு சுற்று வட்டாரத்திற்குள் அரசு கல்வி நிறுவனம் இருந்தால், நிருவாகம் தனியாக கல்வி வசதி செய்ய வேண்டிய அவசியமில்லை. தோட்ட நிறுவனங்கள் மொத்தம் 88 பள்ளிக்கூடங்களைப் பராமரித்து வருகிறது.

குளிர்கால பாதுகாப்பு

2.42. தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒரு காட்டு கம்பளியும் இரண்டு வருடங்களுக்கு ஒரு போர்வை கம்பளியும் குளிரிலிருந்து தோட்ட தொழிலாளர்களைப் பாதுகாக்க தோட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றது. இக் கம்பளிகளின் தரத்தினை நிர்ணயிக்க சம்பந்தப்பட்ட மண்டல தொழிலாளர் துணை ஆணையர்களுக்கு அதிகாரமுள்ளது.

உணவகம்

2.43. தோட்ட நிறுவனங்களில் 150 தோட்டத் தொழிலாளர்களுக்கு மேல் பணி புரிந்தால் உணவகம் ஒன்று (கேண்டீன்) அமைக்கப்பட வேண்டும். அவ்வுணவகத்தில் காபி, டீ ஆகியவை இலாப நஷ்டம் இல்லாமல் வழங்க வேண்டும். மொத்தம் 104 உணவகங்கள் தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் உள்ளன.

குடிநீர் வழங்கல்

2.44. தோட்டத் தொழிலாளிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தோட்ட நிருவாகத்தினரின் தலையாய கடமையாகும். இக்குடிநீர் சுகாதாரத் துறையின் சுகாதார அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் ஆலோசனைக் குழு

2.45. தொழிலாளர் ஆணையர் தலைமையில் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலிக்க துணைக் குழுக்கள்

அமைப்பதற்கும் வழிவகை உள்ளது. மேற்படி குழு 21.12.1998 அன்று சென்னையில் கூடியது.

**ஒப்பந்தத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1970**

2.46. இச்சட்டம் சில நிறுவனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணியமர்த்துதலை முறைப்படுத்துதலுக்காகவும் சில சந்தர்ப்பங்களில் நீக்குதலுக்காகவும் வழிவகை செய்கின்றது. ஒப்பந்தத் தொழிலாளர் முறையால் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய உரிய சம்பளம் மற்றும் பிற தொழிலாளர் நலச் சட்டங்களில் உள்ள பயன்களைப் பெற இயலாத நிலை ஏற்படுவதால் ஒப்பந்தத் தொழிலாளர் பணியமர்த்துதலை முறைப்படுத்தவும் மற்றும் நீக்கவும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

2.47. ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தும் முதன்மை வேலையளிப்போர் அதற்கென நியமிக்கப்பட்டுள்ள பதிவுச் சான்று அலுவலர்களிடம், உரிய பதிவுக் கட்டணத்தினை செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

2.48. ஒப்பந்தகாரர் ஒப்பந்தப் பணியாளர்களை பணியில் அமர்த்த உரிமம் வழங்கும் அலுவலரிடமிருந்து உரிய உரிமக் கட்டணம் செலுத்தி உரிமம் பெற வேண்டும். உரிமத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப் பணியாளர்களின் பணிநிலை, வேலை நேரம் மற்றும் இன்றியமையாத வசதிகள் ஆகியவை நிறைவேற்றப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்படுதலை உறுதி செய்யும் பொருட்டு ஒப்பந்தகாரர் உரிமம் வழங்கும் அலுவலரிடம் உரிய காப்பீடு தொகையினைச் செலுத்த வேண்டும்.

**ஒப்பந்தப் பணியாளர்களைப் பணியில் அமர்த்துதலைத் தடை செய்தல் அல்லது முறை படுத்தல்.**

2.49. அரசு அவசியம் ஏற்படின் எந்தவொரு நிறுவனத்திலோ அல்லது எந்தவொரு தொழிலிலோ ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்துதலை மாநில ஆலோசனை குழுவின் ஆலோசனையின் பேரிலோ அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிலைமை மற்றும் அவர்களுக்குக் கிடைக்க கூடிய பயன்களைக் கருத்தில் கொண்டோ ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துதலைத் தடை செய்யலாம் அல்லது முறைப்படுத்தலாம்.



**மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்**

2.50 இச்சட்டத்தின் கீழ் மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழு 8.11.1996-ல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஒரு முத்தரப்புக் குழுவாகும். இக்குழுவின் 35-வது கூட்டம் 24-12-1998 அன்று சென்னையில் நடைபெற்றது.

**பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் அதன் விதிகள், 1968**

2.51 பீடித் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு சட்டப்படியான சலுகைகள் அவர்களைச் சென்று அடைய வேண்டும் என்ற சீரிய நோக்குடன் இந்தச் சட்டம் மற்றும் அதன் விதிகள் ஆகியவற்றையும் மற்றும் தொடர்புடைய ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் தீவிரமாக அமல்படுத்தும்படி இத்துறை அமலாக்க ஆய்வர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி வருகிறது. இதன் தொடர்பாக சட்டப்படி அளிக்கப்பட்ட புத்தகங்கள் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | பொருள் | புத்தகங்கள் வழங்கப்பட்டது | வழங்கப்பட வேண்டியுள்ளது |
|---|---|---|---|
| 1. | வீட்டுத் தொழிலாளர்களுக்கான லாக் புத்தகம் | 2,12,057 | 3,330 |
| 2. | சர்வீஸ் கார்டுகள் | 2,11,965 | 12,601 |
| 3. | விடுப்பு புத்தகம் | 2,12,348 | 12,218 |

2.52 சர்வீஸ் கார்டைப் பொறுத்தவரையில் வேலூர், திருச்சி மாவட்டங்களில் உள்ள பீடித் தயாரிப்பாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடையுத்தரவு பெற்றிருந்தனர். எனவே அவ்விடங்களில் சர்வீஸ் புத்தகம் வழங்கப்பட வேண்டியுள்ளது. தற்போது வேலூர் மாவட்டம் சம்பந்தப்பட்ட 4 ரிட் மனுக்களை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள 19 ரிட் மனுக்களை முடிவிற்குக் கொண்டு வர வழக்குரைஞரை அணுகி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 ஏப்ரல் 30

**பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்:**

2.53. பீடித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசால் அமல்படுத்தப்படும் 1978 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல விதிகளின்படி குடும்பத்தினரின் விவரங்களுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்த அடையாள அட்டை பீடித் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருந்தகங்களில் மருத்துவ வசதி பெற்றுக் கொள்ள பெரிதும் உதவியாக இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது மத்திய அரசின் பணி என்றாலும் பீடித் தொழிலாளர்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொண்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி தேவையான பிரதிகளை மத்திய அரசின் நல அமைப்பு அலுவலகங்களிடமிருந்து பெற்று அனைவருக்கும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்:**

2.54 தமிழ்நாட்டில் உள்ள பீடித் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் இந்த ஆண்டும் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் ரூ.226.05 இலட்சம் செலவில் 974 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம், ஏற்கெனவே அரசு அங்கீகாரம் பெற்று செயல்படுத்தப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. கட்டுமானப் பணிக்கான செலவுகள் உயர்ந்து விட்டதாலும், வீடுகள் கட்டும் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்பதாலும் ஹட்கோவிடமிருந்து பெறப்படும் கடன் தொகையான ரூ. 138.39 இலட்சத்தினை ரூ.204.54 இலட்சங்களாக உயர்த்தி கடன் பெறுவதற்காக அரசு 9-4-1999 அன்று ஆணைகள் வெளியிட்டது. இதன்படி ஒவ்வொரு வீடு கட்டுவதற்கும் ரூ. 30,000 செலவாகும். இதில் மத்திய அரசு பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 9,000 மானியமாக வழங்கும். மீதமுள்ள தொகை ரூ. 21,000 ஹட்கோ மூலம் கடனாக வழங்கப்பட உள்ளது.

2.55 இந்த ஆண்டும் வேலூர் மாவட்டத்தில் ரூ.129.36 இலட்சம் செலவில் 588 வீடுகளும், ஈரோடு மாவட்டம், பவானி தாலுகா, அந்தியூர் கிராமத்தில் ரூ.19.80 இலட்சம் செலவில் 90 வீடுகளும் கட்டிக் கொடுக்க இந்த அரசு 18-1-1999-ல் உத்தரவிட்டுள்ளது. இத் தொகையில் ஹட்கோ நிறுவனம் முறையே ரூ.76.44 இலட்சம் மற்றும் ரூ.11.70 இலட்சம் கடனாக அளிக்க முன்வந்துள்ளது. எஞ்சியுள்ள



1999 ஏப்ரல் 30]

தொகை மத்திய அரசின் பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மானியமாக அளிக்கப்பட உள்ளது. இந்த மேற்கண்ட இடங்களில் பீடித் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.56. மேலும் பீடித் தொழிலாளர்கள் செறிந்துள்ள மாவட்டங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

2.57. பீடித் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி திட்டம் ஆந்திர மாநிலத்தில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதே அடிப்படையில் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் நோக்குடன் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலரும் மற்றும் தொழிலாளர் துறையின் மூத்த அதிகாரிகளுடனும் சேர்ந்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் ஆந்திர மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. ஆந்திர மாநில நடைமுறையைப் பின்பற்றுவது குறித்து அரசளவில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம், 1985:**

2.58. சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வு) மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்-நிருவாக அலுவலர் (எடைகள் மற்றும் அளவைகள்) மற்றும் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்-தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். இவர் தொழிலாளர் ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகிறார். ஏழு வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள், கூடுதல் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் மாவட்ட அளவில் 29 தொழிலாளர் ஆய்வர்கள், துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாகவும், வட்ட அளவில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் எடையளவு சட்டமுறை ஆய்வர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

[1999 ஏப்ரல் 30

2.59. எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களுக்கு 1985ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் 1977ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும், முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

2.60 வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளைப் பரிசீலனை செய்து முத்திரையிட மாநிலம் முழுமையிலும் 101 முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர். நுகர்வோர் நலனைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டமானது திடீர் ஆய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு முரணாகச் செயல்படும் வியாபாரிகள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களின் நிகர எடையைப் பொட்டலம் செய்யப்படும் உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும் பொருட்டு துறையில் உள்ள மின்னணு எடைக்கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபாரச் சந்தையில் பல்வேறு வணிகச் சின்னங்களைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில் நுகர்வோர் நலன் காக்க இந்த எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகிறது.

## அத்தியாயம்-3

### குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு

3.1 அபாயகரமான தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தை தொழிலாளர்களின் அவல நிலையை 1931ஆம் வருட இராயல் கமிஷன் அறிக்கை மூலம் வெளிக் கொணர்ந்து காட்டப்பட்டது. 1933 ஆம் வருடம் குழந்தை தொழிலாளர் சட்டம் (குழந்தை தொழிலாளர்களை அடகு வைத்தல்) முதன்முதலில் இயற்றப்பட்டது. அதன் பிறகு குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து பல்வேறு சட்டங்கள்



1999 ஏப்ரல் 30]

இயற்றப்பட்டன. 1948ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம், 1951ஆம் வருட தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1952ஆம் வருட சுரங்கச் சட்டம், 1961ஆம் வருட தொழில் பழகுவோர் சட்டம், 1961ஆம் வருட மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், 1966ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிபந்தனைகள்) சட்டம், 1947ஆம் வருட கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1958ஆம் வருட உணவு நிறுவனங்கள் சட்டம் மற்றும் இறுதியாக 1986ஆம் வருட குழந்தை தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. குழந்தை தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 3-ன்படி அபாயகரமான தொழில்களில் குழந்தை தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்தில் பகுதி-3-ல் அபாயகரமற்ற தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தை தொழிலாளர்களின் வேலைமுறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டங்கள் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை துறையின் ஆய்வர்களால் அமல்படுத்தப்படுகின்றன.

3.2. கீழ்க்காணும் காரணங்களினால் குழந்தை தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள் என்று இந்த அரசு நன்றாக அறியும்:-

(1) வறுமை (2) வேலையின்மை (3) தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி வழங்குதல் (4) நகரங்களுக்குக் குடியேறுதல் (5) கட்டாயக்கல்வி இல்லாமை (6) பெற்றோர்களின் அறியாமை மற்றும் கல்வி இல்லாத தன்மை (7) குழந்தை தொழிலாளர்களுக்காக தொழிற் சங்கங்கள் ஈடுபடாமை (8) மரபு பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல் மற்றும் (9) மக்கள் தொகைப் பெருக்கம்.

எனினும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு அனைத்துச் சிறார்களுக்கும் 14 வயதுவரை இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டி, தொடக்கக் கல்விக்கு முன்னுரிமை அளித்து "தொடக்கக் கல்வி இயக்கம்" இந்த நிதி ஆண்டு முதல் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 17-3-1999 அன்று அறிவித்துள்ளார்கள். இதனால் பள்ளிகளிலிருந்து இடையே வெளியேறும் நிலை ஏற்படாமல் அனைத்துக் குழந்தைகளும் தொடக்கக் கல்வி பெற வாய்ப்பு ஏற்படும். எனவே, இனி வரும் காலங்களில் வேலையில் அமர்த்தப்படுவதற்குத் தேவையான குழந்தைகள் இடைக்கும் நிலை ஏற்படாது.

3.3. மேலும் உச்ச நீதிமன்றத்தினால் 10-12-1996 அன்று ரிட் மனு எண் 465/86-ல் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1997ஆம் வருடம் ஏப்ரல் மாதம், இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்தும் முக்கிய நடவடிக்கையாக குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றி அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. அபாயகரமான தொழிலில் 9493 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலில் 8828 குழந்தைகளும் கண்டறியப்பட்டனர். குழந்தை தொழிலாளர்களை அபாயகரமான வேலையில் ஈடுபடுத்தும் உரிமையாளர்களுக்கு ரூ.20,000/- வரை அபராதம் விதிக்கப்படும். இது வரை 8 குழந்தை தொழிலாளர்களுக்கு ரூ.1,60,000/- வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதர உரிமையாளர்கள் குற்றத்தினை மறுத்து அபராதத் தொகையைக் கட்ட மறுத்துள்ளனர். மைய அரசின் அறிவுரையின்படி அவர்களது பட்டியல் உச்ச நீதிமன்றத்தில் அவர்களிடமிருந்து அபராதத்தை வசூலிக்கும் முறை குறித்து ஆணை வேண்டி தாக்கல் செய்யப்படும். 1997-ஆம் வருடம் ஏப்ரல் மாதக் கணக்கெடுப்பு மூலம் அறியப்பட்ட விவரங்களினால் திருப்தி ஏற்படவில்லை என்பதால் மாவட்ட ஆட்சியர்களால் கூடுதல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி 1148 குழந்தை தொழிலாளர்கள், அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

3.4. அவ்வாறு குழந்தை தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள உரிமையாளர்கள்மீது வழக்கு தொடரப்படவுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தை தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு வேலையளிக்க வேண்டும். இல்லையென்றால் அரசு தன் பங்காக ரூ.5000/- அளிக்க வேண்டும். இதுவரை ரூ.4 கோடியே 75 லட்சம் தொகை இதற்கான நிதி ஏற்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அபாயகரமற்ற தொழிலில் குழந்தை தொழிலாளர்களை ஈடுபடுத்தியுள்ள நிறுவன உரிமையாளர்களுக்குச் சட்டபூர்வ அறிவிப்புகள் அளிக்கப்பட்டவுடன் குழந்தை தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

3.5. நேஷனல் சைல்ட் லேபர் பிராஜகட்-ன் கீழ் விருதுநகர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 361 தனிப் பள்ளிகள், அமைக்கப்பட்டு அவற்றில் 14,660 குழந்தைகள் படிக்கின்றனர். மேலும்,



குழந்தை தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகையாக மாதம் ரூ.100/- அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் குழந்தைகளுக்கு இலவச உணவு, புத்தகம், நோட்டுப் புத்தகம் மற்றும் கல்விக்குரிய அனைத்து சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

3.6. குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக யூனிசெப் நிதி நிறுவனம் ரூ.24,31,500/-நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியில் குழந்தை தொழிலாளர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களில் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்த ரூ.1,18,500/-ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர்கள் குறைவாக உள்ள மாவட்டங்களுக்கு ரூ.12,500/-வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் பல்வேறு வழிகளில் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகின்றனர்.

3.7. குழந்தை தொழிலாளர் சட்டமும் இதுசம்பந்தப்பட்ட இதர சட்டங்கள் அமலாக்கமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர் ஆய்வாளர்கள் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். குழந்தை தொழிலாளர்களை அகற்றுவதற்காக ஒற்றுமையுடன் செயல்படவும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்தவும் தீவிர நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சென்னை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, செயலாளர் அவர்கள் தலைமையில் கொடைக்கானல் மற்றும் கோயம்புத்தூரில் மாவட்டாட்சியர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

## அத்தியாயம்—4

## குறைந்தபட்ச ஊதியம் என்ற பாதுகாப்பு வளையம்

4.1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்பது ஒரு திருப்பு முனைச் சட்டமாகும். குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க உறுதி செய்வது என்பது நற்பாங்கான மனிதவாழ்வை உறுதிசெய்வது என்பதாகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது பொதுவாக பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதை வழங்க மறுக்கும் பட்சத்தில் வாழ்க்கையில் மனிதத் தன்மை என்ற மூலப் பொருளை எடுப்பதற்கு ஒப்பாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 73 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், குழு முறை அல்லது அறிவிக்கை முறையைப் பின்பற்றி

அரசானது குறைந்த பட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்கிறது. முதன்முதலாக அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில் இனத்திற்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் குழு முறையில் நிர்ணயம் செய்வது என்பது பழக்கத்தில் உள்ளது. ஏனெனில், அந்தத் தொழில் குறித்து ஆழமாக ஆராய்வு செய்து முடிவெடுக்க வேண்டியதுள்ளது. இதற்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியங்கள் மறுநிர்ணயம் குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படுகிறது. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அறிவிக்கை முறை பின்பற்றப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம், மறுநிர்ணயம் செய்யும்பொழுது அடிப்படை ஊதியத்துடன், விலைவாசிக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட மாறுகின்ற அகவிலைப்படி என்கிற அகவிலைப்படியையும் அரசு நிர்ணயம் செய்கிறது.

4.2. குறைந்தபட்ச ஊதியம் மாற்றம் செய்யப்பட்டு அறிவிக்கை செய்யும் சமயங்களில் இந்த அறிவிப்புகள் மீது வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களில் மனு செய்து தடை உத்தரவு பெறுகின்றனர். இதன் விளைவாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியம், தொழிலாளர்களுக்குக் கிடைப்பது தடுக்கப்படுகிறது. இந்தத் தடையிலிருந்து விடுபட தமிழ்நாடு அரசு, இந்தியன் லேபர் கான்பரன்ஸ், தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற அமைப்புகளின் மூலம் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை இந்திய அரசமைப்பு சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்க பரிந்துரை செய்துள்ளது. இதனால் நீதிமன்றத்தின் முன்பு தடையுத்தரவு பெற இயலாது. மேலும் உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் எந்த ஒரு நிறுவனம் குறைந்தபட்ச ஊதியம் வழங்க இயலாத நிலையில் உள்ளதோ அந்நிறுவனம் இயங்குவதற்கு அதிகாரம் கிடையாது என்று கூறியதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

4.3. குறைந்தபட்ச தினக்கூலி ரூ.40/-க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்பதே சமீபத்திய மத்திய அரசின் கொள்கையாகும். எந்த ஒரு தொழிலின் இனத்திற்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்/ மறுநிர்ணயம் செய்யப்படும்பொழுது இந்தக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். பல நேர்வுகளில் இந்த அரசு இதனை ஏற்கெனவே ரூ.40/-க்கு அதிகமாக நிர்ணயித்துள்ளது. உதாரணமாக:-



| | | நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியம் |
|---|---|---|
| | | ரூ.பை. |
| 1. | சினிமாத் தொழில் | 70.35 |
| 2. | கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் பராமரித்தல் தொழில் | 67.37 |
| 3. | தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் தயாரிக்கும் தொழில் | 53.90 |
| 4. | மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள் தொழில் | 58.32 |
| 5. | லாண்டரீஸ் மற்றும் துணி துவைக்கும் தொழில் | 72.27 |
| 6. | பொதுமோட்டார் போக்குவரத்து தொழில் | 74.58 |
| 7. | சோப்பு தயாரிக்கும் தொழில் | 67.93 |
| 8. | மர ஆலைத் தொழில் | 65.87 |
| 9. | பணிமனைத் தொழில் | 57.28 |
| 10. | எலக்ட்ரானிக்ஸ் தொழில் | 55.74 |

4.4. 1998 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட தொழில் இனங்களுக்கு அரசானது குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை மறுநிர்ணயம் செய்துள்ளது.

1. புகையிலை (பீடி தயாரிப்பு உள்பட) தயாரிப்பு
2. உணவுப் பதப்படுத்தும் தொழில்
3. புகையிலை (பீடி சுற்றுதல்) தயாரிப்பு
4. தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் தயாரிக்கும் தொழில்

4.5. கீழே குறிப்பிடப்பட்ட தொழில் இனங்களில் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்ய வேண்டி முதல் நிலை அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

1. கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள்
2. பொது மோட்டார் போக்குவரத்து நிறுவனம்

[1999 ஏப்ரல் 30

3. பேக்கரி மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்
4. ஜவ்வரிசி தொழில்
5. சோப்பு தயாரிக்கும் தொழில்
6. பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்

4.6. கீழே குறிப்பிடப்பட்ட தொழில் இனங்களில் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை மறுநிர்ணயம் செய்து அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

1. கயிறு தயாரிக்கும் தொழில்
2. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகள்
3. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்
4. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும் புகையிலை) தயாரிப்பு தொழில்
5. மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ இல்லங்கள்
6. கடல் உணவு பதப்படுத்தும் தொழில்
7. ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் டாக்சிகள்
8. லாண்டரீஸ் மற்றும் துணிகள் துவைத்தல்
9. காபி பதப்படுத்துதல்
10. பட்டாசு தயாரிக்கும் தொழில்

4.7. மேலும், அரசு 20 தொழில் இனங்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் செய்வது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

4.8 கீழ்க்கண்ட தொழில் இனங்களில் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் குறித்து குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது:

(1) வர்த்தக ரீதியில் அரசு மானியம் பெறாமல் நடைபெறும் நர்சரி, பிரைமரி, ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கும் தனியார் பள்ளிகள், டுட்டோரியல் கல்லூரிகள், தொழில்நுட்ப நிலையங்கள்.

(2). தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தின்கீழ் வரும் கல்லூரிகள் . மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் விவசாயம்,



1999 ஏப்ரல் 30]

தோட்டக்கலை மற்றும் பிற அரசுத் துறைகளால் பராமரிக்கப்படும் விவசாயப் பண்ணைகள்.

4.9. அரசு பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யும்பொருட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது.

1. செக்யூரிட்டி கார்டுகள் தொழில்
2. மருந்து மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் தொழில்
3. இரசயான உரத் தொழில்
4. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்

4.10. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட ஆய்வர்கள், முறையான ஆய்வுகள் மற்றும் திடீராய்வுகள் மூலம் இச்சட்டத்தினை அமல்படுத்தி வருகின்றனர். எங்கெல்லாம் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படாதது கண்டறியப்படுகிறதோ அங்கெல்லாம் சம்பந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆணையாளர்கள் முன்பு கேட்புமனுக்கள் தாக்கல் செய்ய அமலாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

4.11. 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பிரிவு 20(1)-ன் கீழ் கேட்பு மனுக்கள் விசாரணை செய்ய 7 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

4.12. மாண்புமிகு தமிழக முதல்வரின் சீரிய தலைமையிலான இந்த அரசு தொழிலாளர்களின் மீது குறிப்பாக அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டு அவர்களின் குறைகளைக் களைந்து அவர்களின் சமூக பொருளாதார அந்தஸ்தை உயர்த்துவதில் தீவிர கவனம் செலுத்தி செயல்பட்டுவருகிறது. இந்நோக்கம் நிறைவேற ஏதுவாக, இந்த அரசால் அமைக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளை ஏற்று 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தின் அட்டவணையில் மேலும் 43 வேலைகள் சேர்க்கப்பட்டன. அதனால் அத்தொழில்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்மை பெற இயலும்.

[1999 ஏப்ரல் 30

4.13. மேலும் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் வரைவு 8-3-1999 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் 1994**

4.14. கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அரசு அமைத்துள்ளது. 1-11-1994 முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு முதற்கட்டமாக, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு அதன்பிறகு இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் 15-6-1997 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.15. இத்திட்டத்தின்படி கட்டுமானத் தொழிலாளர்களின் நலத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆதாரத்தினைப் பெருக்குவதற்காக கட்டடம் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவில் 0.3 சதவீதம் தொகையினைக் கட்டடம் கட்டுபவர்கள், சந்தாவாக செலுத்த வேண்டும். இத்தொகை உள்ளாட்சி அமைப்புகளால் வசூல் செய்யப்படுகிறது. சந்தாத் தொகையினை வசூல் செய்து வாரியத்திற்குச் செலுத்தும் முக்கிய பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருப்பதால், உள்ளாட்சி அமைப்புகள் வசூல் செய்த சந்தாத் தொகையினை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்குச் செலுத்தவேண்டும். இந்த வாரியம் இதுவரையில் ரூ.8,15,73,303 சந்தாவாக வசூல் செய்துள்ளது. இதில் ரூ.1,68,88,406 தொகையானது தனியார் வீடுகளைத் தவிர ஏனைய கட்டுமானப் பணி மேற்கொள்ளும் அரசுத் துறைகளிலிருந்தும் தன்னாட்சி அமைப்புகளிடமிருந்தும் பெறப்பட்டதாகும்.

4.16. கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் சம்பந்தமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களில் குழந்தைகள் காப்பகம் அமைத்தல், ஓய்வூதியம், மருத்துவ உதவி, கல்வி உதவி, திருமண உதவி போன்ற நலத் திட்டங்கள் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



1999 ஏப்ரல் 30]

4.17. இவ்வாரியத்தில் 31.12.1998 வரை பதிவு செய்துகொண்ட கட்டுமானத் தொழிலாளர்கள் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

| வ. எண் | பதிவு செய்து கொண்ட இடம் | 31-12-1996 வரை பதிவு செய்து கொண்டவர்கள் | 1-1-1997 முதல் 31-12-1997 வரை பதிவு செய்து கொண்டவர்கள் | 1-1-1998 முதல் 31-12-1998 வரை பதிவு செய்து கொண்டவர்கள் | 31-12-1998 வரை பதிவு செய்து கொண்ட மொத்த தொழிலாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 10,348 | 11,923 | 17,337 | 39,608 |
| 2. | கோவை | 8,391 | 1,586 | 3,042 | 13,019 |
| 3 | மதுரை | 6,121 | 1,923 | 11,351 | 19,395 |
| 4 | திருச்சி | - | 2,989 | 7,011 | 10,000 |
| 5 | சேலம் | - | 6,766 | 9,120 | 15,886 |
| 6 | திருநெல்வேலி | - | 7,875 | 4,111 | 11,986 |
| | **மொத்தம்** | **24,860** | **33,062** | **51,972** | **1,09,894** |

4.18. இவர்களிடமிருந்து தலா ரூ.25 வீதம் ரூ.27,47,350 பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. பதிவினை இரண்டு வருடம் முடிவதற்குள் ரூ.10 கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களும் குழு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் இறந்தால், ரூ.1 இலட்சம் காப்பீட்டுத் தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால், ஊனத்தின் தன்மையைப் பொறுத்தும் ரூ.1 இலட்சம் வரையில் காப்பீட்டுத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை

4.19. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின்கீழ் 1-1-1973 முதல் ஏற்படுத்தப்பட்ட நலநிதியை பராமரிக்க வேண்டி செயலாற்றி வருகிறது. மேற்கண்ட நிதிக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொழிலாளிக்கு 31-12-1997 வரை தொழிலாளர் பங்காக ரூ.3-ம் நிறுவனப் பங்காக ரூ.6/-ம் அரசின் பங்காக ரூ.3/-ம் வசூல் செய்யப்பட்டு வந்தது. 1998 முதல் தொழிலாளர் பங்காக ரூ.5/-ம் நிறுவனத்தின் பங்காக ரூ.10/-ம் அரசின் பங்காக ரூ.5/-ம் வசூல் செய்யப்படுகிறது. இதனை தவிர (1) தொழிலாளர்களுக்கு நிறுவனத்தாரால் வழங்கப்படாத தொகை. (2) நீதிமன்றம் நிறுவனங்களிடமிருந்து வசூலித்த அபராதத் தொகை. (3) தானாக முன்வந்து வழங்கும் அன்பளிப்பு ஆகியவை இந்நல நிதியில் சேரும்

4.20 அரசுப் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், நிருவாகப் பிரதிநிதிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடன் மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது. மேற்கண்ட நிதியைக் கொண்டு தொழிலாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் கீழ்க்கண்ட நலத்திட்டங்களை வாரியம் செயல்படுத்தி வருகிறது.

(I) தமிழகம் முழுவதும் 52 இடங்களில் தொழிலாளர் நல மையங்களும் 19 இடங்களில் தையற் பயிற்சி பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொழிலாளர் நல மையமும் தொழிலாளர்களை சார்ந்தோருக்கு தையற் பயிற்சி வகுப்பும் குழந்தைகள் நல மையமும் கொண்டது. தொழிலாளர்களின் மனைவி மற்றும் திருமணமாகாத மகள் மற்றும் சகோதரிகளுக்கும் தையற் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.80 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சியின் முடிவில் அரசு நடத்தும் கீழ்நிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதற் மதிப்பெண் பெறுபவர்களுக்கு தலா ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பக பிரிவில் இலவச சத்துணவு, பால், முட்டை, மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதைத் தவிர இலவச ஆரம்பப் பள்ளி கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் 2 ஜோடி டெரிக்காட்டன் சீருடைகள்



குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 10-ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களில் முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் தேர்ச்சி பெற்றவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் புதிய பரிசுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலிடத்தில் வரும் குழந்தைகளுக்கு ரூ.1,000-மும், இரண்டாம் இடத்தில் வரும் குழந்தைகளுக்கு ரூ.500-ம் பரிசுத் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

(II) மாமல்லபுரம் (44 படுக்கைகள்), குற்றாலம் (93 படுக்கைகள்) மற்றும் வால்பாறை (30 படுக்கைகள்) ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு படுக்கைக்கு ரூ.15/- எனவும், பொதுமக்களுக்கு ரூ.40/- வீதமும், இரண்டு படுக்கைகள் கொண்ட அறைக்கு தொழிலாளர்களுக்கு ரூ.25/- வீதமும், பொதுமக்களுக்கு ரூ.60/- வீதமும் வாடகை வசூலிக்கப்படுகிறது. 1998ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் 3888 நபர்களும், வால்பாறையில் 2037 நபர்களும் மற்றும் குற்றாலத்தில் 2949 நபர்களும், தங்கி பயனடைந்துள்ளனர்.

(III) சென்னையில், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக சென்னைக்கு வரும்பொழுது தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வில்லமும் மற்றும் ரூ.11/- இலட்சம் செலவில் கூடுதல் ஓய்வு இல்லக் கட்டடமும், சென்னையில் கட்டப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டில் 11133 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கி பயனடைந்துள்ளனர்.

(IV) காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம் (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிபள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (26 படுக்கைகள்) மற்றும் வேலூர் மாவட்டத்தில் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனி காச நோய் வார்டுகளை கட்டியுள்ளது.

(V) தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 9 இடங்களில் இலவச படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

*எதிர்காலத் திட்டங்கள்*

4.21. தொழிலாளர்கள் சுற்றுலா செல்லுகையில் தங்குவதற்காக ஊட்டி, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் கட்ட நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் கீழ் 15 இலட்சம் தொழிலாளர்களிடமிருந்து தொழிலாளர் நல நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக மேலும் 2 இலட்சம் தொழிலாளர்களை தொழிலாளர் நல நிதி சட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகக் கொண்டு வரும் பொருட்டு தொழிலாளர்கள் பொது வைப்பு நிதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலிலிருந்தும், நல மைய உதவி ஆய்வாளர்கள் ஆய்வு செய்து கொடுத்த விவரங்கள், தொழிற்சாலை தலைமை ஆய்வாளரிடம் இருந்து பெறப்பட்டதில் புதியதாக 9,006 நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் வேலை செய்யும் 1,50,965 தொழிலாளர்கள் இவ்வாண்டு கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் கூடுதலாகப் பெறப்படும் நிதி ரூ.30.2/- இலட்சம் ஆகும். தொழிலாளர் நல நிதி செலுத்தாத நிறுவனங்கள் மேலும் கண்டுபிடிக்கப்பட்டு கூடுதலாக தொழிலாளர்களை இச்சட்டத்தின்கீழ் கொண்டுவர தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் 5

## சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

*வேலையாள் இழப்பீட்டுச் சட்டம். 1923*

5.1. தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கவும் (விபத்தின் இழப்பீட்டுத் தன்மையை பொறுத்து) இறக்க நேரிட்டால் அவரை அவர்தம் சார்ந்தோருக்கு இழப்பீடு அளிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. 7 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் வேலையாள் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

5.2. ஆணையர்களால் வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. தீர்ப்பளிக்கப்பட்ட தொகை வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யாத





நேர்வுகளில், துணை ஆணையர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

*பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972*

5.3. தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கான திட்டம் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஐந்து வருடம் தொடர்ச்சியாக பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் கீழ்க்காணும் காரணங்களுக்காக பணியில் இருந்து விடுவிக்கும் சமயம் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

(அ) வயது முதிர்வு காரணமாக ஓய்வு.

(ஆ) பணி முடிவு அல்லது இராஜினாமா அல்லது

(இ) இறப்பு அல்லது விபத்து அல்லது நோய் காரணமாக இயலாமை.

பொதுவாக, இறுதியாக பெறப்பட்ட அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் பணிக்கொடை வழங்கப்படுகிறது. அத்தொகையானது கீழ்க்காணும் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

$$\frac{\text{மாத வருமானம்}}{26} \times 15 \times \text{பணி செய்த வருடங்கள்}$$

அதிகபட்சம் வழங்கப்பட வேண்டிய பணிக்கொடை தொகை ரூ.2.5 லட்சத்திலிருந்து ரூ.3.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

5.4. இச்சட்டத்தின்கீழ் 7 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர் துணை ஆணையர் (மேல்முறையீடு) சென்னை, தொழிலாளர் இணை ஆணையர்கள், கோவை மற்றும் மதுரை ஆகியோர் முறையே சென்னை, கோவை மற்றும் மதுரை மண்டலங்களுக்கு இச்சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

5.5. தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில் வேலையளிப்பவர்கள் பிழைப்பூதியம் வழங்க வேண்டி இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

5.6. இச்சட்டத்தின்படி, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் முதல் 90 நாட்களுக்கு இறுதியில் பெறப்பட்ட ஊதியத்தில் 50 சதவீதமும், வேலை நீக்கக் காலம் நீட்டிக்கப்பட்டால் 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரை 75 சதவீதமும், 180 நாட்களுக்கு மேல் முழு ஊதியமும் பெறத் தகுதியுடைவராகிறார்.

5.7. இச்சட்டத்தின்கீழ், 7 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 5 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் (அதாவது) திருச்சி, மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் (மேல்முறையீடு), சென்னை ஆகியோர் இச்சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**மகப்பேறு நலச் சட்டம், 1961**

5.8. பிரசவ கால நேரங்களில் பெண் தொழிலாளர்களின் பணிகளை முறைப்படுத்துதலுக்கும், பிரசவ கால சலுகைகள் வழங்குவதற்கும் ஏதுவாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, குழந்தைப் பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றின்பேரில் ஒருமாத மருத்துவ விடுப்பு, குறைபேறு காலத்திற்காக 6 வாரங்கள் விடுப்பு வழங்குதல் முதலிய சலுகைகள் உள்ளன. பேறு காலத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் அக்கறை கொண்டு ரூ.250 மருத்துவ போனசாக வழங்க இச்சட்டத்தில் வழிவகை உள்ளது. சென்னை, கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 3 மகளிர் தொழிலாளர் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு இச்சட்டத்தினை அமல்படுத்தி வருகின்றனர்.

**போனஸ் வழங்குதல் சட்டம், 1965**

5.9. இச்சட்டம் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் எந்தவொரு தொழிற்சாலைக்கும் அல்லது தொழில்



நிறுவனத்திற்கும் பொருந்தும். இந்நிலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 10-க்கும் குறைவாகும்போது, இந்நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். மேலும் இந்நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கினாலும் குறைந்தபட்ச போனஸ் தொகையை தொழிலாளர்களுக்கு வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

5.10. பணியாளர் என்பவர், எந்தவொரு நபரோ பயிற்சியாளராக இல்லாமல் அல்லது பணி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள்/மேலாண்மை மற்றும் நிருவாகப் பிரிவு பணியாளர்கள் மற்றும் அவர்களது சம்பளம் மாதம் ரூ.3,500-க்கு மிகைப்படாமலும் குறிப்பிட்ட கணக்காண்டில் 30 தினங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்திருப்பின் குறைந்தபட்ச போனசாக சம்பளத்தில் 8.33 சதவீதம் பெறவும் தகுதியுடையவராகிறார். மேலும், அதிகபட்ச போனஸ் தொகையாக சம்பளத்தில் 20 சதவீதம் வழங்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் ரூ.2501 முதல் ரூ.3,500 வரை மாத சம்பளம் பெறும் பணியாளர்களின் சம்பளம் போனஸ் வழங்குதலுக்காக ரூ.2,500 எனக் கணக்கிடப்பட வேண்டும்.

5.11. தமிழ்நாட்டில் இச்சட்டத்தினை அமல்படுத்த தொழிலாளர் இணை ஆணையர்கள், தொழிலாளர் துணை ஆணையர்கள், தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் அலுவலர்கள் அவர்கள் ஆட்சி எல்லைக்கேற்ப ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம் 6

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை-5**

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1978-ஆம் ஆண்டில் இந்த நிலையம் முதன்மை நிலையமாக உயர்த்தப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, 8-10-1987 முதல் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட ஆட்சிமன்றக் குழு இந்நிலையத்தின் நிருவாகத்தினை கவனித்து வருகிறது. இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள்:

[1999 ஏப்ரல் 30

1. தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்.

2. நிருவாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்.

3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.

4. தொழிலாளர் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

5. தொழிலாளர் மேலாண்மையில் பட்டப் படிப்புகள் நடத்துவதன் வாயிலாக எதிர்கால தொழில் நிருவாகத்திற்கு தகுதியானவர்களை உருவாக்குதல் முதலியன ஆகும்.

இக்கல்வி நிலையம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சிகள் இயல்பாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றை பொது மற்றும் தனியார் தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் நிருவாகப் பணியாளர்களுக்கும், தொழிற்சங்கப் பிரிதிநிதிகளுக்கும் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

6.2. இதைத் தவிர இக்கல்வி நிலையம், தொழிலாளர் நிருவாக முதுகலைப் பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) பகுதிநேரம் மற்றும் அஞ்சல் வழி மூலம் (இரண்டு வருடப்படிப்பு) நடத்தி வருகிறது. தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்) (3 வருடப் பட்டப்படிப்பு) தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப்படிப்பு (எம்.எல்.எம்) (இரண்டு வருடப் பட்டப்படிப்பு) ஆகியவைகளை நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகம், இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் தொழிலாளர் மேலாண்மை இளங்கலைப் பட்டப்படிப்பிற்கும் தொழிலாளர் மேலாண்மைப் முதுகலைப் பட்டப்படிப்பிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

6.3. இக்கல்வி நிலையம் 1-1-1998 முதல் 31-12-1998 முடிய 41 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தியுள்ளது. இதன்மூலம் மொத்தம் 2986 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்று பயனடைந்துள்ளனர். இக்கல்வி நிலையத்தால் ஒவ்வொரு வருடமும் பொது நுழைவுத் தேர்வின் மூலம் தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பிற்கு 50 மாணவர்களும், தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப் படிப்பிற்கு 30 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.



1999 ஏப்ரல் 30]

6.4. சென்ற கல்வி ஆண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு முடித்து வெளிவந்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு:-

| படிப்பு விவரம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்.) | 37 |
| தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப்படிப்பு (எம்.எல்.எம்.) | 32 |
| தொழிலாளர் நிர்வாகம் பற்றிய முதுகலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ.) (பகுதி நேர கல்வி மற்றும் அஞ்சல் வழிக்கல்வி உள்பட) | 56 |
| மொத்தம் | **125** |

## அத்தியாயம் 7

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிருவாகம்

7.1. தமிழக அரசின் தலையாய கோட்பாடு, தொழிலகங்களில் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவை ஆகும். இந்தக் கொள்கையினை, தொழிற்சாலைகளில் செயல்படுத்துவதில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்துறை தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகிறது.

7.2. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி, நிருவகிக்கும் இத்துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவார். அவருக்கு உதவியாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 51 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 45 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர், 8 உதவி மருத்துவ அலுவலர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு நிருவாக அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

7.3. இத்துறை தமிழக அரசின் கோட்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கீழ்க்கண்ட இரு பிரிவுகளாகச் செயல்படுகிறது.

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள்.

2. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

*முறைப்படுத்தும் செயல்பாடுகள்*

*ஆய்வுகள்*

7.4. தொழில்நுட்பம் நிறைந்த தொழிற்சாலைகள் சட்டம் தொழிலகங்களில் தொழிலாளர்களின் உடல்நலம் பாதுகாப்பு, நலவசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் முழுமையாகச் சென்றடையும் வண்ணம், தற்போதுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையைக் கொண்டு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக தொழிற்சாலைகள் சட்டப் பிரிவிற்கு உட்பட்ட அனைத்து தொழிற்சாலைகளும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அபாய செயல்முறைகள் இல்லாத சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் இல்லாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. எனினும் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு இரண்டையும் உறுதி செய்ய வேண்டி அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்றிருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி, மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டு, இத்தொழிற்சாலைகள் மூன்று





மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் குறித்து, சீரான கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

7.5. சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர்–செயலாளராக உள்ளார். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் இக்குழுவின் தலைவராகவும், தொழில் முனைவோர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இக்குழுவில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிறுதொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்த அறிக்கையில் இக்குழு தொழிற்சாலைகள் ஆய்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து மனநிறைவினைத் தெரிவித்துள்ளது.

*சிறப்புக் குழு ஆய்வுகள்*

7.6. பட்டாசுத் தொழிற்சாலைகளில் தீபாவளிப் பண்டிகையை ஒட்டிய காலகட்டத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துகள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணி நிலைமையையும் வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக்குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998ஆம் ஆண்டு தீபாவளி பருவத்தில் 370 சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக சென்ற தீபாவளி பருவத்தில் சிவகாசியில் பெரும் தீ மற்றும் வெடி விபத்துகள் ஏற்படா வண்ணம் தடுக்கப்பட்டது.

7.7. மேலும் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதை முழுமையாக தடுக்கும் பொருட்டு, சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*புகார் விசாரணை*

7.8. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு குறைபாடுகளுக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998ஆம் ஆண்டில் பெறப்பட்ட 698 புகார்களும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாதாந்தரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் வைக்கப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

*ஊறு விளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்*

7.9. தொழிற்சாலைகள் சட்டத்தில் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக 29 தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், துணை உற்பத்திப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கழிவுப் பொருள் மற்றும் நீர் வெளியேற்றங்கள் ஆகியவைகளால் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படுத்தும் அபாய நிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகள் "பெரும் விபத்து, மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்" எனப் பகுக்கப்பட்டு, இவைகளின் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்று 86 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

7.10. தமிழகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்" நிறைந்துள்ள பகுதிகளாக (1) மணலி, (2) நெய்வேலி, (3) கடலூர், (4) இராணிப்பேட்டை, (5) மேட்டூர், (6) தூத்துக்குடி போன்ற 6 மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பெரும் விபத்துகளினால் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் பேரபாயத் தடுப்பு மற்றும் நிருவாகத் திட்டங்கள் தயாரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாவட்ட அளவிலான அவசர கால ஆயத்த நிலைக் குழுவிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால



ஆயத்த நிலைத் திட்டங்கள் குறித்து தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23-04-1998 தேதியிட்ட அரசாணை எண் எம்.எஸ் 149-இல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் இரசாயன தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய பெரும் விபத்துகள் மற்றும் அபாயநிலை அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுகின்றனர்.

7.11. உண்மையில் ஏற்படக்கூடிய அபாயநிலை அவசரக் காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, அவ்வப்போது தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. இதுவரை, இதுபோன்று 213 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளில் இருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

7.12. தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41 அ-வில் குறிப்பிட்டுள்ள மனைமதிப்பீட்டுக் குழு "பெரும் விபத்து மற்றும் பேரபாயம்" விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. மனை மதிப்பீட்டுக் குழுவில் பல்வேறு அரசுத் துறை அலுவலர்களும், வல்லுனர்களும், சுற்றுச் சூழல், வானிலை மற்றும் தொழிலியல் உடல்நிலை பிரிவுகளின் விஞ்ஞானிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இம்மனை மதிப்பீட்டுக் குழு 1997ஆம் ஆண்டில் 36 விண்ணப்பங்களைப் பெற்று, பரிசீலனை செய்து, 24 விண்ணப்பங்கள் மீது ஒப்புதல் வழங்கியுள்ளது. 1998ஆம் ஆண்டில் 41 விண்ணப்பங்கள் பெறப்பட்டு,

[1999 ஏப்ரல் 30

பரிசீலனைக்கு பின் 32 விண்ணப்பங்கள்மீது ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த ஒப்புதல்களில் அரசு விதிக்கும் நிபந்தனைகள் கடைப்பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, தொடக்க நிலையிலிருந்து ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்**

7.13. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட 73 தொழில்களில், 50 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதற்கு உறுதி செய்வதை தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை முக்கியக் கொள்கையாக கொண்டு செயல்படுகிறது. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை, தீவிரமாக செயல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

7.14. ஆய்வின்போது காணப்படும் சட்ட முரண்பாடுகளுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன. 1998ஆம் ஆண்டில் 39 நீதிமன்ற வழக்குகளும் 11 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இவைகளில் 9 கோரிக்கை மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, 165 தொழிலாளர்களுக்கு ரூ.35,689/- பெற்று வழங்கப்பட்டது.

**குழந்தை தொழிலாளர் முறை நீக்குதல்**

7.15. குழந்தை தொழிலாளர் நீக்குதல் மற்றும் மறுவாழ்வு குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த சிறப்பு மிகுந்த தீர்வாணையில் சில கட்டளைகளை வழங்கியுள்ளது. இந்தக் கட்டளைகளின் அடிப்படையில் ஊறுவிளைவிக்கும் செயல்முறைகள் உள்ள தொழில்களில் குழந்தை தொழிலாளர்கள் பணி முறையை நீக்க, கூர்ந்த நடவடிக்கைகளை தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை எடுத்து வருகிறது. முறையான ஆய்வுகளில் எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகளோடு, அபாய செயல்முறை மற்றும் அபாய செயல்முறை அல்லாத தொழில்களில் தனி அளவீடுகள் மேற்கொண்டு குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்தும் நிருவாகத்தினர்மீது நீதிமன்ற வழக்குகள் தொடரப்படுகின்றன. மேலும், உச்ச நீதிமன்றத்தின் கட்டளைக்கிணங்க, குழந்தை தொழிலாளர் பணிமுறையை நீக்க அனைத்து சிறப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



1999 ஏப்ரல் 30]

7.16. இத்துடன் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு, மருத்துவ மற்றும் நல வசதிகள் செய்வதற்கென, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, தர்மபுரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட நீதிபதி தலைமையிலும் "நலநிதிக் குழுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ரூ.62,21,373/- வசூலிக்கப்பட்டு, அவற்றில் ரூ.24,10,679/- தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நன்மைக்காக செலவிடப்படுள்ளது.

7.17. மேலும், பொதுமக்கள், தொழில் முனைவோர் மற்றும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், குழந்தை தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் சிவகாசி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி போன்ற இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

7.18. தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணிநிலையை ஒழுங்குபடுத்தி, நேரடித் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளையும் சலுகைகளையும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், பெற்றுத் தருவதே இந்த அரசின் கொள்கையாகும். ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை பணிக்கமர்த்தும் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் நிருவாகத்தை முதன்மை வேலையளிப்பவராக பதிவு செய்தும், ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கியும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியம், வேலை நேரம், சம்பளத்துடன் கூடிய விடுப்பு, விடுமுறை நாள் சம்பளம் போன்ற நேரடித் தொழிலாளர்கள் பெறுகின்ற அனைத்து சலுகைகளும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க உறுதி செய்யப்படுகிறது. 1998ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் முரண்பாடுகள் காணப்பட்ட நிருவாகத்தின்மீது 14 நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல் சட்டம், 1981**

7.19. தொடர்ந்து வரும் 24 மாத கால அளவில் 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதை

இச்சட்டம் உறுதி செய்கிறது. இத்துறையின் சீரிய நடவடிக்கையால் 1998 ஆம் ஆண்டில் 35,369 தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

### இதரச் சட்டங்கள்

7.20. மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

## அத்தியாயம் 8

### உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

### உடல் நலமேம்பாடு

8.1. தமிழகத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகளில் ஒவ்வாமை, நச்சுத் தன்மை, புற்றுநோய்க் காரணிகள் போன்ற பல்வேறு கேடு விளைவிக்கும் தன்மையுள்ள இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் கையாளப்படுகின்றன. இதன் காரணமாக, தொழிலாளர்களின் உடல்நலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அபாயச் சூழ்நிலைகள் அதிகரித்துள்ளன. எனவே, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகிறது. இதன் அடிப்படையில், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அடங்கிய மருத்துவ பிரிவு இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலைகளில், சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் அவர்தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

8.2. மேலும், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்-டை ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. இத்துறையில் இயங்கி வரும் "தொழில் நலவியல் ஆய்வகம்" இப்பாதிப்பினைத் தடுக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. சிவில் சர்ஜன் தகுதியில் உள்ள மருத்துவ அலுவலரின் தலைமையில் இந்த ஆய்வகம் இயங்குகிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை, காற்றுச் சோதனை மற்றும் அளவீட்டின் வழி கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக்கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.



8.3 மாநில தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் தற்போது அளித்து வரும் மருத்துவ வசதிகளுடன், தென்னிந்திய வேலையளிப்போர் இணையம், இவைகளுடன் ஒருங்கிணைந்து தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 62ஒ-வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட வேண்டிய "தொழிலியல் மருத்துவ மையம்" அமைப்பது குறித்து ஆலோசித்து வருகிறது.

### சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்

8.4. துரித தொழில் வளர்ச்சியின் காரணமாக இரசாயனத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் தொடங்கப்படுகின்றன. இதன் காரணமாக தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதுடன் தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் உடல் நலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளிலும் தனது பணிகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

8.5 இதன் அடிப்படையில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 1988-ஆம் ஆண்டு முதல், 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலை பணியாக வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் தொழிலாளர் மற்றும் நிருவாகப் பிரதிநிதிகளுக்கு, பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. குறைவான பாதுகாப்பு அளவீடுகள் மேற்கொண்டு, விபத்துகள் அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயல் நிறைவேற்றங்கள் இக்கோட்டங்களால் கண்காணிக்கப்படுகின்றன. இக்கோட்டங்களில்,

8 உதவி மருத்துவ அலுவலர்கள் அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல் நலப் பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர்.

8.6 நச்சுத் தன்மை வாய்ந்த பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளில், முறையான காற்றுச் சோதனை மேற்கொண்டு, சுற்றுச் சூழல் பாதுகாப்பினையும், தொழிலாளர் உடல் நலத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தொழில் நலவியல் ஆய்வகம் வழங்குகிறது.

*மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்*

8.7 தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிருவாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில் அவை 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டுடனை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதம் குறைத்தல், நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ் எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ரூ.2,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள், 90 நிறுவனங்களுக்கு முதல் பரிசாகவும், ரூ.1,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கு இரண்டாம் பரிசாகவும் வழங்கப்படுகின்றன.

8.8 1996ஆம் ஆண்டிற்கான மாநிலப் பாதுகாப்பு விருதுகள் வழங்கும் விழா 04-11-1998 அன்று சேலத்தில் நடத்தப்பட்டு, நிருவாகத்தினருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இதேபோன்று விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கிய பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. சேலத்தில் நடைபெற்ற விழாவில், இந்த விருதுகள் 24 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.



*தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்*

8.9. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

8.10 இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால், இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டுமின்றி 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். இத்திட்டத்தில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1,16,503 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படும். 1998ஆம் ஆண்டில் 3 கோரிக்கைகள் பெறப்பட்டு ரூ.1,50,000/- ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

*மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு*

8.11 அரசுத் துறை, தொழிற்சாலைகள் நிருவாகத்தினர், தொழிற் சங்கங்கள் மற்றும் பாதுகாப்புத் துறையின் வல்லுநர்கள் அடங்கிய மாநில அளவிலான முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவினை 1988ஆம் ஆண்டு அரசு ஏற்படுத்தியது. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் உடல் நலவியல் குறித்த கொள்கைகளை வகுத்தும் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புக் குழுவாக இது செயல்படுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இக்குழுவின் தலைவராக உள்ளார்.

8.12 உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவிற்கு சார்பு நிலைக் குழுவாக செயற் குழு/வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அரசுத் துறை அலுவலர்களும், இரசாயனத் தொழிற்சாலைகளைச் சார்ந்த வல்லுநர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர் இக்குழுவின் தலைவராக உள்ளார். இக்குழு தனது இதர பணிகளுடன் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் தீவிர அளவீடு மேற்கொண்டு, அங்கு நிலவும் பாதுகாப்பு அமைப்புகள் குறித்து ஆராய்ந்து, தேவையிருப்பின் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனைகளை வழங்குகிறது.

8.13 உயர்மட்டக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி சர்க்கரை மற்றும் எரிசாராயத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது. இத்துணைக் குழு 1998ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள பல்வேறு சர்க்கரை மற்றும் எரிசாராயத் தொழிற்சாலைகளில், ஆழ்ந்த ஆய்வுகள் மேற்கொண்டு இத்தொழிற்சாலைகளில் மேம்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த தனது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

8.14 இந்த செயற் குழு/வல்லுநர் குழு தமிழகத்தில் 59 பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் தீவிர அளவீடு மேற்கொண்டு, தயாரிக்கப்பட்ட அறிக்கை உயர்மட்டக் குழுவில் விவாதிக்கப்பட்டது. தற்போது பெரும் விபத்து மற்றும் பேரபாயம் விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கூடியுள்ளதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் தீவிர அளவீடு மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 18-2-1999 அன்று மற்றுமொரு துணைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தனது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*பயிற்சி மற்றும் கருத்தரங்கு*

*பாதுகாப்புப் பயிற்சிப் பள்ளிகள்*

8.15 தொழிலகங்களில் விபத்துகளின் நிகழ்வுகளைத் தடுத்திட சட்டச் செயலாக்கப் பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துகளைத் தடுத்திட தொழிலாளர்களுக்கும் நிருவாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் ஏற்று செயல்பட்டு வருகின்றன.

8.16 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திற்கே சென்று, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிருவாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிருவாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த சரியானதொரு விழிப்புணர்வினை மேம்படுத்தி அதன்மூலம் விபத்துகளைக் குறைப்பதற்கு துணைபுரிந்துள்ளன. 1998ஆம் ஆண்டில் 228 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 6,255 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.



*சிவகாசி பயிற்சி மையம்*

8.17 தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதிப் பொருட்களை கையாளுகின்றனர். இவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகள் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதன்காரணமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் தவிர்த்திருக்கக் கூடிய பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேதியல் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும், செயல்படுத்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் மற்றும் இருப்பு வைத்துக் கொள்வதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு வழி முறைகளை தொழிலாளர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென்று சிவகாசியில் அரசால் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் சீரிய பணியினைத் தொடர்ந்து தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துகள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 214 பயிற்சி வகுப்பில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையைச் சார்ந்த 11,443 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

*கருத்தரங்குகள்*

8.18 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி தேசியப் பாதுகாப்புக் குழுமம் போன்ற தொழிலகப் பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசு சாரா தன்னார்வு நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிருவாகத்தினரும், தொழிலாளர்களும் ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இதுவரை இதுபோன்ற 9 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, 1850 நபர்கள் பயனடைந்துள்ளனர். எதிர்காலத்தில் தேசியப் பாதுகாப்புக் குழுமம், இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை கருத்துரு கொண்டுள்ளது.

[1999 ஏப்ரல் 30

8.19 இதுபோன்ற பயிற்சித் திட்டங்களுடன் பாதுகாப்பு விருது வழங்கும் விழாவும் தேசியப் பாதுகாப்பு நாள் விழாவினையொட்டி பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் மத்தியில் பாதுகாப்புப் பண்பாட்டினை வளர்த்து, பாதுகாப்பினையே வாழ்க்கை நெறியாக ஊக்குவிக்க இதுபோன்ற கலை நிகழ்ச்சிகள் பெரிதும் துணை புரிகின்றன. இக்கலை நிகழ்ச்சிகள் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றன.

8.20 தொழிலகப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் சீரிய பணிகளின் விளைவாக தமிழ்நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன புள்ளிவிவரங்கள் அடிப்படையில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தொழிலகங்கள் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டில் முறையே 25,443 தொழிலகங்கள் மற்றும் 11,03,763 தொழிலாளர்கள் என்ற அளவிலிருந்து 1998 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை முறையே 26,767 தொழிலகங்கள் மற்றும் 11,37,418 தொழிலாளர்கள் என்று உயர்ந்தாலும் விபத்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், 1997 ஆம் ஆண்டில் 4,112 விபத்து நிகழ்வுகளாக இருந்து 1998 ஆம் ஆண்டில் 3,766 விபத்து நிகழ்வுகளாகக் குறைந்துள்ளன.

8.21 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை பயிற்சிப் பணிகளிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களிலும் தொழிலாளர்களின் செயல்திறனை மேம்படுத்த கருத்துரு கொண்டுள்ளது. மேலும், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர சட்டங்களைச் செயலாக்கம் செய்வதோடு மட்டுமின்றி, தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளில் சேவை நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

**மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுமம்**

8.22 வளர்ந்து வரும் பொருளாதார நிலைக்கு இணையாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வை நிலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உற்பத்தித் திறன் குறித்த கோட்பாடுகளையும், நுணுக்கங்களையும் பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்டு, மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுமம் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. தொழிலாளர்களுக்குத் தற்போது



1999 ஏப்ரல் 30]

அமைந்துள்ள வள ஆதாரங்களைக் கொண்டு குறைந்த வேலை நேரத்தில், பொருட்கள் வீணாவதைத் தடுத்து, அதிக பொருட்கள் உற்பத்தி செய்ய கற்பிக்கப்பட்டு வருகிறது. அதிக உற்பத்தித் திறன், அதன் விளைவால் அதிக வருமானம், இதனை அடைய நல்ல திட்டங்கள் இவற்றை இக்குழு எடுத்துரைக்கிறது. தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன் மற்றும் அதன் நுணுக்கங்கள் குறித்து பயிற்சி பெறவும், உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தவும், உற்பத்தித் திறன் வகுப்புகள் தொழிலாளர்களுக்குக் கட்டணம் ஏதுமின்றி நடத்தப்படுகின்றன. மேலும், பணிப் பாதுகாப்பு ஆராய்வு, பணி முறைகளைச் சுலபமாக்குதல் பற்றிய ஆய்வு, பணி நேரங்கள் குறித்த ஆய்வு, பணி இயக்க ஆய்வு போன்ற பணிகளிலும் இக்குழு ஈடுபட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டில், 31 உற்பத்தித் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 683 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதுதவிர, தேசியப் பாதுகாப்புக் குழுமம், மதுரை பிரிவு மற்றும் சென்னை உற்பத்தித் திறன் குழுமம் இவற்றுடன் இணைந்து மாநில அளவிலான 2 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி வகுப்புகள் நிருவாகத்தினர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருவதால் எதிர்காலத்தில் இதுபோன்றப் பயிற்சிகளுக்குக் கட்டணம் வசூலிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள உற்பத்தித் திறன் குழுமங்களுக்கு இத்துறை முழு ஒத்துழைப்பினை நல்கி வருகிறது. மேலும், உற்பத்தித் திறன் மேம்பாட்டுப் பணிகளில் பங்குகொள்ளும் இதுபோன்றக் குழுமங்களுக்கு மானிய உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**மேம்பாட்டுப் பணிகள்**

**நவீனமயமாக்குதல்**

8.23 அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் தொடங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள் தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டுக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு

வருகிறது. மேலும், கீழ்க்கண்ட முன்னுரிமைப் பகுதிகளில் தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள:

(அ) நிருவாகம்

(ஆ) தொழில்நுட்பத் திறமை

(இ) பயிற்சி மற்றும் மேம்பாடு

நிருவாகத்தை நவீனப்படுத்துதல்

8.24 தற்போதுள்ள மனிதவளத்தைக்கொண்டு, துறையின் செயல்பாடுகளைச் செம்மைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும், நடைமுறைகளையும் வகுக்க வேண்டியுள்ளது. பயனற்றப் பணிகள் குறைக்கப்பட வேண்டும்; முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய இலக்குகள் அடையாளம் காணப்பட்டு, அனைத்துப் பணிகளும் பலன் தரத்தக்க வகையில் முடுக்கி விடப்பட வேண்டும். இவற்றை மனதில் கொண்டு கீழ்க்கண்ட முன்னுரிமைப் பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:

(1) குழந்தைத் தொழிலாளரைப் பணிக்கு அமர்த்துவதை ஒழித்தல்.

(2) இரசாயனத் தொழிற்சாலைகளில் தொழில் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

(3) தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்சக் கூலி போன்ற நல வசதிகளை உறுதி செய்திடல்.

8.25 இம்முன்னுரிமைப் பணிகளை திறம்படச் செயல்படுத்தும் நோக்குடன், குறைந்தபட்ச ஊதியச் சட்ட செயலாக்கப் பணிகள், தீப்பெட்டி, பட்டாசு மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், நிருவாகச் செயல்முறைகளை எளிதாக்கும் வகையில் ஆய்வுகள், வரைபட ஒப்புதல், உரிமம் வழங்குதல் மற்றும் நிதிநிலை அதிகாரங்கள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சீரான தகவல் பரிமாற்றத்திற்கு உகந்ததாக கணினி மற்றும் தொலை அச்சுக் கருவி போன்ற வசதிகள் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அபாய செயல்முறையுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளைக் கையாளுவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பத் தகவல்களைப் பெறும் நோக்குடன் இத்துறையில் கணினி இணையம் ஏற்படுத்தவும் கருத்துரு கொண்டுள்ளது.



தொழில்நுட்பத் திறமையை நவீனமாக்குதல்

8.26 சிக்கல் மிகுந்த இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் வளர்ந்து வருவதன் காரணமாக ஆய்வகத் துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி நவீனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக, பொதுமக்களின் பாதுகாப்பினையும், குறிப்பாக, தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. இதற்காக, இரசாயனப் பொருட்கள் குறித்த விவரக் கூறுகள் சேகரித்து, தகவல் பரிமாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, காலதாமதமின்றி செவ்வனே செயல்பட வேண்டிய நோக்குடன் இத்துறையின் அனைத்து அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவவும், தகவல் விவரக் கூறுகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் சேகரித்து வைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

8.27 மேலும், வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப ஆய்வகத் துறையின் அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையையும் காலத்திற்கேற்ப மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு இத்துறை அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பெயர் பெற்ற அமைப்புகளில் தீவிர பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, இப்பயிற்சி குறித்து முறைப்படுத்தபட்ட திட்டங்கள் வகுக்கப்பட உள்ளன.

பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நவீனமாக்குதல்

8.28 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிருவாகத்தினர் ஆகிய அனைவருக்கும் பாதுகாப்பு தொடர்பான, தரமான, பயனுள்ள பயிற்சியினை வழங்க துணைக் கருவிகள் தேவைப்படுகின்றன. நிழற்படக் கருவிகள், பாதுகாப்பு தொடர்பானத் தகவல்கள் உள்ளடக்கிய ஒலி மற்றும் ஒளிநாடாக்கள், தொலைக்காட்சி கருவிகள் ஆகியவை பெரிதும் அவசியமாகிறது. பயிற்சிக் கருவிகள் கூடுதலாகப் பெற்று பயிற்சிப் பிரிவினை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையில் உள்ள நூலகத்தில் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை அதிகப்படுத்தி, மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தொலைநோக்குக் கொள்கை

8.29 உடனடி மற்றும் பயனுடைய முடிவுகளை எதிர்நோக்கி இத்துறை முறைப்படுத்தும் பணிகளை அன்றாடப் பணியாக மேற்கொண்டுள்ளது. இத்துடன் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் சுற்றுச் சூழல் குறித்த மேம்பாட்டுத் திட்டங்களைச் செவ்வனே செய்து தொழிலகங்களுக்குத் துணைபுரிய இத்துறை அடிப்படை வசதிகளை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது. புதிய தொழில் நுட்பங்களுடன்கூடிய புதிய இரசாயனப் பொருட்களுடன் பல்வேறு தரப்பட்ட தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இடையூறுகளிலிருந்து மனித சமுதாயத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

8.30 இந்நோக்கில் தொலைநோக்குக் கொள்கையுடன் தமிழ்நாட்டில் ஒரு தொழிலகப் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிலகப் பாதுகாப்பு, தொழிலியல் உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் தூய்மை ஆகிய துறைகளில், அரசுத் துறைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், பொதுமக்களுக்கும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கக் கூடிய தகுதிபெற்ற ஒரு சிறந்த மையமாக இந்த நிலையம் திகழும். விபத்துகள் குறித்த தகவல்கள் மற்றும் அடிப்படைக் கூறுகளை சேகரித்து வைக்கும் தகவல் தொழில்நுட்ப மையமாகவும் இது விளங்கும். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் அமையக்கூடிய வசதிகள் மற்றும் திட்டங்கள் மூலம் தமிழகத் தொழிற்சாலைகளின் தேவைக்கு இந்நிலையம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதோடு தொழில்மயமாக்குவதில் தமிழகம் முதல்நிலையை மீண்டும் பெற வழிவகைகளை ஏற்படுத்தும் என்பதையும் அறுதியிட்டுக் கூறலாம்.

### குறிப்பிடத்தக்க சாதனைகள்

8.31 ஆய்வகத் துறையின் அனைத்து முகப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில், முன்னேற்றமான வளர்ச்சியை இத்துறையின் செயல் நிறைவேற்ற அறிக்கையில் காணமுடிகிறது. 1998 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 25,443-லிருந்து 26,767 ஆக அதிகரித்து 11,37,418 தொழிலாளர்கள் உள்ளடங்கியுள்ளனர். அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 26,796 முறையான ஆய்வுகளும், 1,124 சோதனை ஆய்வுகளும், 114





திடீர் ஆய்வுகளும், 4,275 தனி மற்றும் சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு வேலை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் கட்டளையின்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களின் பணிமுறையினை நீக்குவதற்கு சிறப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள முறைப்படுத்தும் பணிகளுடன்கூட 227 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளும், 9 கருத்தரங்குகளும் தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பான பணி முறைகளை செம்மைப்படுத்த நடத்தப்பட்டுள்ளன. 4-11-1998 அன்று சேலத்தில் நடைபெற்ற விழாவில் பாதுகாப்பில் சிறந்த நடவடிக்கைகள் மேற்கொண்ட நிருவாகத்தினருக்கு மாநில விருதுகளும் சிறந்த கருத்துகளை வழங்கிய தொழிலாளர்களுக்கு தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகளும் வழங்கப்பட்டன. இதுபோன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் ஏற்கெனவே குறைந்த அளவில் இருந்த விபத்துகளின் நிகழ்வுகள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன. விபத்துகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 4,112-லிருந்து இந்த ஆண்டு 3,766 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதமும் ஒரு மில்லியன் மனித நேர அடிப்படையில் 1.53 ஆக மட்டுமே உள்ளது.

## அத்தியாயம் 9

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

9.1 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களும் வேலையளிப்போரும் தொழிலாளரின் ஊதியத்தில் 1.75 சதவீதம் மற்றும் 4.75 சதவீதத்துக்கு ஈடான ஒரு தொகையை தத்தம் பங்காக அளிக்க வேண்டும். 1-1-1997 முதல் மாத வருமானம் ரூ.6,500/-க்குக் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

9.2 இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பெற்றத் தொழிலாளர்களுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன:

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி | மருத்துவப் பொருட்களும் மற்றும் சிகிச்சையுமாக அளித்தல். |
| 2. உடல் நலமின்மைக்காக உதவி<br>3. நீடித்த உடல்நலமின்மைக்காக உதவி<br>4. பேறுகால உதவி<br>5. தற்காலிகமாக இயலாமையுற்றோருக்கு உதவி<br>6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கு உதவி<br>7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி<br>8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத்தொகை<br>9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி | பணமாக அளித்தல் |

9.3 இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி அளிக்கும் பொறுப்பு மாநில அரசின் கடமையாகும். இதன்பொருட்டு ஏற்படக்கூடிய செலவினம் மாநில அரசு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் 1 : 7 என்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 31-12-1998 முடிய இத்திட்டத்தின்கீழ் நன்மை அடைந்து வரும் நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | 12,75,222 |
| 2. | பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை | - 49,47,861 |

9.4 தமிழ்நாட்டில் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் திட்டம் செயல்படுத்தப்படுகிற அனைத்துப் பகுதிகளிலும் தொழிலாளர்களின் குடும்பத்தினரும் முழு மருத்துவச் சிகிச்சை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவ உதவிக்கான தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. அதன்படி 1-4-1997 முதல் ஈட்டுறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஒரு ஆண்டிற்கு ரூ.500/-லிருந்து ரூ.600/- ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

9.5 இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் மேலும் அதிகமாக தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் தேவையான இடங்கள் கண்டறியப்பட்டு அவ்விடங்களில் மேலும் மருந்தகங்களும், மருத்தவமனைகளும் திறப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே



குறிப்பிட்டுள்ளபடி மாநிலத்தின் பல பகுதிகளிலும் படிப்படியாக புதிய மருந்தகங்கள் திறக்கப்பட அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது:-

| | | |
|---|---|---|
| 1998-1999 | - | 17 |
| 1999-2000 | - | 11 |
| 2000-2001 | - | 29 |

9.6 தமிழ்நாட்டில் இத்திட்டம் நல்லமுறையில் செயல்பட இதற்கென்று தனி இயக்ககம் ஒன்று உருவாக்கப்பட்டு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (தொ.அ.ஈ) என்பவரைத் துறைத் தலைவராகக் கொண்டு 1-1-1999 முதல் செயல்பட்டு வருகிறது

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, திருச்சி**

9.7 அனைத்து வசதிகளுடன் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று திருச்சியில் தொடங்கப்பட உள்ளது. இம்மருத்துவனை நவீன வசதிகளும் கருவிகளும் கொண்டதாக இருக்கும்.

**முந்திரித் தொழிலாளர்களுக்கானத் திட்டம்**

9.8 முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள 25,000 தொழிலாளர்களுக்கு இதர தொழிலாளர்களுடன் மார்த்தாண்டம் (இடைகோடு, நித்திரவிளை மற்றும் குழித்துறை) பகுதியிலும், பன்ருட்டி பகுதியிலும் உள்ள மருந்தகங்களின் மூலம் மருத்துவ உதவிகள் வழங்கப்படும்.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் விரிவாக்கப்படாத மாவட்டங்கள்**

9.9 இதுவரையில் இத்திட்டம் விரிவாக்கப்படாத இராமநாதபுரம், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் திருவாரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாவட்டத்துக்கு ஒரு மருந்தகமாவது தொடங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை வசதிகள்**

9.10 தொழிலாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை வசதிகள் (சூப்பர் ஸ்பெசாலிட்டி) அளிக்கும் பொருட்டு, தனித்தொகை ஒன்று (கார்பஸ் ஃபண்டு) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மண்டல அலுவலகத்தில் அமைத்து, அதன் மூலம் தொழிலாளர்கள் தனியார் மருத்துவ சிகிச்சைக்கென செலவழித்த பணத்தை மீளப்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவ்வாண்டு இதுவரையில், 17

இருதய அறுவை சிகிச்சைகளும், 6 சிறுநீரக மாற்று சிகிச்சைகளும் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் தாம் செலவழித்த தொகையான ரூ.17,07,754-ஐ மீளப்பெற்றுள்ளனர்.

9.11 உரிமம் பெற்ற இரத்தச் சேமிப்பு வங்கிகள் கோவை மற்றும் சென்னை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்கி வருகின்றன. மதுரை மற்றும் சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இதேபோல இரத்தச் சேமிப்பு வங்கிகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்ற தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் அவற்றிற்கு அருகேயுள்ள தர்மபுரி, விருதுநகர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உரிமம் பெற்றுள்ள இரத்தச் சேமிப்பு வங்கிகளில் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவற்றுடன் இணைக்க ஏற்பாடுகள் (டை அப்) செய்யப்பட்டு வருகின்றன.

*சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் நிலையை உயர்த்துதல்*

9.12 சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் தற்போது வரும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளதால் ஏற்கெனவே 50 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்திடும் திட்டம் ஆய்வில் உள்ளது.

*மருத்துவக் கருவிகள், நவீன உபகரணங்கள் வழங்குதல்*

9.13 தொழிலாளர்கள் மேலும் வளர்ச்சி பெற்று/முன்னேறிய சிறப்பு மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கெனத் தேவைப்படும் நவீன மருத்துவ உபகரணங்கள்/கருவிகள் கீழ்க்காணும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு வழங்கும்பொருட்டு அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன:

1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை .. ரூ. 48 இலட்சம்.
2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, ஓசூர் - ரூ. 14.70 இலட்சம்.
3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, திருச்சி - ரூ. 60 இலட்சம்.



இதுபோல் ஏனைய மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் அடிப்படை உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

*கழிவுப் பொருட்களுக்கென மேலாண்மைக் குழு*

9.14 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் கழிவுப் பொருட்களை நவீன முறையில் கழிவு செய்வதற்கென ஒவ்வொரு மருத்துவமனையிலும் கழிவுப் பொருட்கள் மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

*கண்காணிப்புக் குழு*

9.15 ஒவ்வொரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையிலும் நிருவாகம் செவ்வனே நடைபெற தொழிலாளர்கள், வேலையளிப்போர் மற்றும் மருத்துவமனையில் பணிபுரிவோர் ஆகியோரைக்கொண்ட மருத்துவமனைக் கண்காணிப்புக் குழு நிறுவப்பட்டு, முறையாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்குழுவினால் சுட்டிக்காட்டப்படும் குறைகள் உடனுக்குடன் களையப்படுகின்றன. மேலும் நிருவாகத்தை திறம்பட நடத்திட மருத்துவமனை கண்காணிப்பாளர் பதவியில் மூத்த குடிமை மருத்துவர்கள் ஒவ்வொரு மருத்துவமனையிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

*நிருவாகச் செலவினங்களில் கட்டுப்பாடு*

9.16 நிருவாகச் செலவினத்தை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குள் கட்டுப்படுத்துவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட நிறுவனங்களின் செயல்பாடுகள் கடுமையாக ஆய்வு செய்யப்படுகின்றன.

*மருந்தகங்களின் பணி நேர மாற்றம்*

9.17 தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் தற்போதுள்ள, காலை 7.00 முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை 4.00 முதல் 6.30 மணி வரை என்றுள்ள வேலை நேரத்தை, சோதனை முறையில் காலை 9.00 முதல் 4.00 மணிவரை (உணவு இடைவேளை 1.00 முதல் 2.00 வரை) என மாற்றி அதன்மூலம் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் தொடர்ச்சியாக சிகிச்சைபெற வகை செய்யப்பட்டுள்ளது.

**மருந்தகங்களை 12 மணி நேர மருந்தகங்களாக நிலை உயர்த்துதல்**

9.18 இதேபோல் 10,000 காப்பீட்டாளர்கள் உள்ள பெரிய மருந்தகங்களில் உள்ள காலை 7.00 முதல் 1.00 மணி வரையிலும், மற்றும் பகல் 1.00 முதல் 7.00 மணி வரையிலும் இரண்டு ஷிப்டு முறையில் சோதனையாக (சுழற்சி முறையில்) மருந்தகங்களைச் செயல்படவைக்கவும் இதன் மூலம் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை தொடர்ந்து சிகிச்சை பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**புதிய மருத்துமனைகள் ஏற்படுத்துதல்**

9.19 திருநெல்வேலி, இராணிப்பேட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான நிலம் கையகப்படுத்துதல், திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் போன்ற பணிகள் பல நிலைகளில் உள்ளன.

**ஆய்வு மையங்கள்**

9.20 ஒவ்வொரு மண்டலத்திலும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் காப்பாளர்களின் தேவை கருதி 2 அல்லது 3 பெரிய மருந்தகங்களின் வியாதிகளைக் கண்டறிய (diagnostic) ஈ.சி.ஜி., கதிரியக்கம் மற்றும் அடிப்படை ஆய்வக வசதிகள் கொண்ட நோய் கண்டறியும் ஆய்வு நிலையம் (Diagnostic centre) அமைக்கும் செயல்திட்டம் உள்ளது.

## அத்தியாயம் 10

## தொழிலாளர் வருங்கால வைப்புநிதி

**முன்னுரை**

10.1 தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு சட்டத்தின் கீழ் (1) தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (2) தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் மற்றும் (3) தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் என்ற மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தொழிலாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு அல்லது குடும்பத்தினரை நிர்க்கதியாக விட்டு பணியிலிருந்து ஓய்வு பெறுமுன்னரே இறக்க நேரிடும்போது குடும்பத்தினர் எந்த உதவியுமின்றி தவிக்கக்கூடிய





சூழ்நிலை ஏற்படாதபடி பணிபுரியும்போதே சேமிக்க வேண்டும் என்ற உணர்வைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி அவர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பினை அளிப்பதே மேற்கூறப்பட்ட மூன்று திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும். 46 வருடங்களாகத் தொடர்ந்து நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் மிக அதிகமான தொழிலாளர்கள் உறுப்பினர்களாகி வருகின்றனர். இம்மூன்று திட்டங்களும், மூன்று வேறுபட்ட விதங்களில் சமூகப் பாதுகாப்பினை அளிக்கின்றன. அதில் அரசு, தொழிலதிபர் மற்றும் தொழிலாளர்கள் நலன்கள் பேணப்படுகின்றன. தொழிலாளர்களுக்குக் கூடுதலான பயன்கள் அளிக்கும் வகையில், இத்தனை வருடங்களாக இம்மூன்று திட்டங்களின்கீழ் கிடைத்து வந்த பயன்கள் கணிசமான அளவில் இன்னும் தாராளமாக்கப்பட்டுள்ளன.

10.2 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் தேவைகளை தமிழ்நாட்டில் உள்ள மண்டல வருங்கால வைப்பு நிதி நிறுவனம் கவனித்து வருகிறது.

**தமிழ்நாட்டில் அமைந்துள்ள வருங்கால வைப்புநிதி நிறுவனத்தின் மண்டல அலுவலகம்**

**துணை வட்டார அலுவலகங்களின் அமைப்பு**

10.3 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கான வருங்கால வைப்புநிதி நிறுவனத்தின் வட்டார அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இதற்கு மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர், நிலை-I தலைவராவார். அவருக்கு உதவியாக 6 வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையர்கள், நிலை II, 8 உதவி வருங்கால வைப்புநிதி ஆணையர்கள் மற்றும் செயலாக்க அலுவலர்கள், உதவி கணக்கு அலுவலர்கள், பிரிவு கண்காணிப்பாளர்கள், மேல்நிலை எழுத்தர், கீழ்நிலை எழுத்தர் மற்றும் டி பிரிவு ஊழியர்கள், ஆக மொத்தம் 723 பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றனர்.

10.4 வருங்கால வைப்புநிதி ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் நிலை-I, நிலை-II வட்டார தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையர்களைத் தலைவராகக் கொண்டு 6 துணை வட்டார அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் புறநகர்களான அம்பத்தூர் மற்றும் தாம்பரத்தில் அமைந்துள்ள துணைக் கணக்கு அலுவலகங்கள் உதவி வருங்கால வைப்புநிதி ஆணையர்களின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

[1999 ஏப்ரல் 30

**தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம், 1952**

10.5 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டமானது, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு, அவை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தியிருந்தால் அவற்றிற்குப் பொருந்தும். இந்தத் திட்டத்திற்கு 22-9-1997 முதல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகள் பட்டியலின்கீழ் உள்ள 20 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள் / தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். எனினும் மின்சக்தி உதவியின்றி மற்றும் 50 தொழிலாளர்களுக்குக் குறைவாகப் பணிபுரியும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

**இத்திட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை**

10.6 இத்திட்டத்தின்கீழ் 31-12-1998 ஆம் நாள் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 9,918 |
| 2. | துணை வட்டார அலுவலகம், கோயம்புத்தூர் | 5,483 |
| 3. | துணை வட்டார அலுவலகம், மதுரை | 6,783 |
| 4. | துணை வட்டார அலுவலகம், திருச்சி | 5,067 |
| 5. | துணை வட்டார அலுவலகம், திருநெல்வேலி | 2,456 |
| 6 | துணை வட்டார அலுவலகம், சேலம் | 3,676 |
| 7. | துணை வட்டார அலுவலகம், வேலூர் | 3,363 |
| 8. | துணை கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 1,847 |
| 9. | துணை கணக்கு அலுவலகம், தாம்பரம் | 1,550 |
| | மொத்தம் | **40,143** |

**வளர்ச்சித் தன்மை**

10.7 கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலிருந்து இம்மண்டலத்தில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதை அறியலாம் :



1999 ஏப்ரல் 30]

| வருடம் | நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | வளர்ச்சி |
|---|---|---|
| 1995-96 | 32,219 | 1,910 |
| 1996-97 | 34,311 | 2,092 |
| 1997-98 | 37,869 | 3,558 |
| 1998-99 (டிசம்பர் 1998 வரை) | 40,143 | 2,274 |

**சந்தாதாரர்கள் பற்றிய விவரம்**

10.8 கடந்த சில வருடங்களாக இத்திட்டத்தில் பதிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கூடுதலாகி உள்ளது. 31-12-1998 வரையிலான காலத்தில் 33.43 இலட்சம் வருங்கால வைப்புநிதி சந்தாதாரர்களுக்கு இம்மண்டலம் சேவை செய்கின்றது. மண்டலம்/ துணை வட்டார அலுவலகம்/சார்பு கணக்கு அலுவலகங்களுக்கு பிரித்துவிடப்பட்ட சந்தாதாரர் பற்றிய விவரம் கீழ்வருமாறு:—

| வரிசை எண் | அலுவலகம் | சந்தாதாரர்கள் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 9.84 |
| 2. | துணை வட்டார அலுவலகம், கோவை | 3.55 |
| 3. | துணை வட்டார அலுவலகம், மதுரை | 4.53 |
| 4. | துணை வட்டார அலுவலகம், திருச்சி | 2.55 |
| 5. | துணை வட்டார அலுவலகம், திருநெல்வேலி | 4.67 |
| 6. | துணை வட்டார அலுவலகம், சேலம் | 2.17 |
| 7. | துணை வட்டார அலுவலகம், வேலூர் | 1.99 |
| 8. | துணை கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 1.84 |
| 9. | துணை கணக்கு அலுவலகம், தாம்பரம் | 2.29 |
| | மொத்தம் | **33.43** |

### கூடுதல் உறுப்பினர்களைச் சேர்த்தல்

10.9 நிறுவனங்களின் தொழிலாளர்கள் வேலையில் சேர்ந்த நாளிலிருந்து வருங்கால வைப்புநிதித் திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்ற திருத்தம் தொழிலாளர் வருங்கால வைப்புநிதிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டது. தொழிலாளர் வருங்கால வைப்புநிதியில் அனைத்துத் தொழிலாளர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளதை உறுதி செய்யும்பொருட்டு இத்திட்டத்தின் திருத்தப்பட்ட விதிமுறைகளை தொழிலாளர்களுக்கு உணர்த்த களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்சாலை/நிறுவனங்கள் மூலமும் உறுப்பினர்கள் சேர்க்கை பற்றிய விவரம் உறுதி செய்யப்படுகிறது. இத்தீவிர முயற்சியின் விளைவாக இவ்வட்டாரத்தில் கணிசமான அளவு தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க முடிந்தது.

### உறுப்பினர்களுக்குச் செய்யப்படும் சேவை பற்றிய விவரம்

10.10 ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவரது கணக்கில் நிலுவையிலுள்ள அவரது மற்றும் வேலையளிப்போரின் சந்தாத் தொகைக்கு ஆண்டு வருமான பங்கீட்டு பங்கு வட்டியாக வழங்கப்படுகிறது. 1952-53 இல் 3% ஆக இருந்த வட்டி விதம தற்போது 12% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வருங்கால வைப்புநிதியில் உறுப்பினராவதற்குத் தேவையான குறைந்தபட்ச தகுதிகளை பூர்த்தி செய்த பின்னர், அவர்களுக்குக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்புநிதியில் முன்பணம் வழங்கப்படுகிறது:—

1. உறுப்பினர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக.

2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர் / சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக.

3. குழந்தைகளின் கல்வி.

4. வீடு அல்லது வீட்டுமனை வாங்க

5. குறிப்பிட்ட முகவர்களிடமிருந்து வீடு கட்டுவதற்காக பெற்ற வீட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த.

6. உடல் நலமின்மைச் செலவுக்காக.





7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட.

8. உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக.

9. இயற்கை காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராச் செலவு.

இந்நிதியில் உறுப்பினராக உள்ள ஒருவர் அவருடைய பங்குத் தொகையை முழுவதுமாக / பகுதியாக பின்வரும் நேர்வுகளில் திரும்பப் பெற உரிமையுடையவராகிறார்:—

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது நிரந்தரமாக முழுத் தகுதியின்மை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

2. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது.

3. சில சூழ்நிலை காரணமாக உறுப்பினர் தகுதியை விலக்கிக் கொள்ளும்போது.

10.11 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1952-ல் கடந்த மூன்று வருடங்களில் வெவ்வேறு இனங்களில் தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு கீழ்வருமாறு:—

| | 1995-96 | 1996-97 | 1997-1998 | 1998-99 (டிசம்பர் 1998 வரை) |
|---|---|---|---|---|
| வருங்கால வைப்பு நிதி கடன்களின் இறுதித் தீர்வு | 1,70,361 | 1,73,361 | 1,93,421 | 1,60,610 |
| பகுதிப் பணம் திரும்பப் பெறல்/முன்பணம் | 54,382 | 73,978 | 71,509 | 62,555 |
| மாறுதல்கள் | 18,484 | 20,474 | 21,755 | 16,409 |

[1999 ஏப்ரல் 30

10.12 கடந்த மூன்று வருடங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆண்டு கணக்கறிக்கை பற்றிய விவரம் :

| 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (டிசம்பர் 1998 வரை) |
|---|---|---|---|
| 33,40,177 | 32,46,057 | 34,53,586 | 35,83,360 |

**தொழிலாளர் நல வைப்பீட்டுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம்**

10.13 1.8.1976 முதல் அமலுக்கு வந்த இத்திட்டம், 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை சட்டம், பொருந்துகின்ற அனைத்து தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்குப் பொருந்தக்கூடியதாகும். தொழிலாளர்கள் இதற்காக பங்குத் தொகை எதனையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் தொழிலதிபர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தில் 0.5%-க்கு ஈடான தொகையைச் செலுத்த வேண்டும். மத்திய அரசு தொழிலதிபரின் பங்குத் தொகையில் பாதித் தொகையினையும் இத்திட்டத்திற்கு பங்குத் தொகையாகச் செலுத்தும்.

10.14 வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வில் அவரது வருங்கால வைப்பு நிதித் தொகையை பெறும் நபருக்கு அத்தொகையுடன் முந்தைய 12 மாதங்களில் அல்லது அவர் உறுப்பினராக இருந்த கால அளவில் இதில் எது குறைவான கால அளவோ, அக்கால அளவில், இறந்து விட்ட உறுப்பினர்களின் வருங்கால வைப்புநிதிக் கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகைக்குச் சமமான உத்தரவாதத் தொகை ஒன்றும் வழங்கப்படுகின்றது.

10.15 கடந்த மூன்று வருடங்களில், பணியிலிருக்கும்போது, இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு தொழிலாளர் நல வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு தீர்வுகள் வழங்கப்பட்டன :

| | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (டிசம்பர் 1998 வரை) |
|---|---|---|---|---|
| தீர்வு காணப்பட்டவை | 3,163 | 3,073 | 3,372 | 2,260 |



1999 ஏப்ரல் 30]

**1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்**

10.16 முன்பிருந்த 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத்திற்குப் பதிலாக, புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட 1995 ஆம் ஆண்டின் ஓய்வூதியத் திட்டம் அதன் உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மாதாந்தர ஓய்வூதியம் பெறும் வகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 16.11.1995 ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. கீழ்க்காணும் பல்வேறு ஓய்வூதியங்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன :

| தகுதி | வகைபாடு |
|---|---|
| அ) பணியிலிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் 58 வயது அடைந்தவுடன் பெறும் ஓய்வூதியம் | வயது முதிர்ந்த ஓய்வூதியம் |
| ஆ) 50 வயது பூர்த்தியானவர்கள் ஆனால் 58 வயதுக்குக் கீழே உள்ளவர்கள் பணியிலிருந்து விலகி பெறும் ஓய்வூதியம். | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் |
| இ) நிரந்தர மற்றும் முற்றிலும் செயலற்ற நிலையில் உள்ளவர்கள் பணியிலிருந்து விலகுவதினால் பெறும் ஓய்வூதியம் | நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கான ஓய்வூதியம் |
| ஈ) உறுப்பினர் இறந்தவுடன் பெறும் ஓய்வூதியம் | விதவை/குழந்தைகளுக்கான ஓய்வூதியம் |
| உ) பெற்றோர் இறந்துவிட்டால் அல்லது சந்தாதாரர் இறந்தவுடன் அவரது மனைவி மறுமணம் செய்தால் பெறும் ஓய்வூதியம் | அனாதைகளுக்கான ஓய்வூதியம் |
| ஊ) சந்தாதாரர் இறந்து அவரது மனைவியும் மற்றும் 25 வயதிற்குக் கீழுள்ள குழந்தைகள் இல்லாமல் இருந்தால் பெறும் ஓய்வூதியம். | வாரிசாக நியமிக்கப் பட்டோருக்கான ஓய்வூதியம் |

10.17 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் அதன் மண்டலம் மற்றும் துணை வட்டார அலுவலகங்கள் மூலமாக நன்கு செயல்படுத்தப்பட்டு

வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு வழங்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| உறுப்பினர் ஓய்வூதியம் | மனைவி அல்லது கணவன் (விதவை/ மனைவியை இழந்தவர் ஓய்வூதியம்) | குழந்தைகள் ஓய்வூதியம் | அனாதை ஓய்வூதியம் | நியமிக்கப் பட்ட நபரின் ஓய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 33,225 | 12,110 | 15,413 | 146 | 38 | 60,932 |

10.18 வருடாந்திர அடிப்படையில் நிதியை மதிப்பீடு செய்வதற்கு 1995 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் வழிவகை செய்கிறது. முதல் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்டதும் ஓய்வூதியதாரர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 4% அவர்களது ஓய்வூதியத்திலிருந்து வழங்கப்படும்.

10.19 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளுடன் இதற்கென ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

10.20 குறிப்பிட்ட சில பெரிய தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் ஓய்வுபெறும் நாளன்றே ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணையும் வழங்கப்படுகின்றது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் பயன்களுடன், இத்திட்டத்தில் உறுப்பினர்கள் நிறுவனத்தை விட்டுவிலகும்போது திட்டச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அந்த உறுப்பினர் மற்றொரு நிறுவனத்தில் பணிக்குச் சேரும்போது, முந்தைய நிறுவனத்தில் பணியாற்றிய காலமும் ஓய்வூதியத்திற்குக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். 10 வருட பணிக்காலம் முடிக்காதவர்களுக்கு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையிலும் பணி செய்த காலத்தின் அடிப்படையிலும் பணப் பயன்கள் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

**நிலுவை நிருவாகம்**

10.21 தொழிலதிபர்கள் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, தொழிலாளர் ஓய்வூதிய நிதி மற்றும் தொழிலாளர் நல வைப்பீட்டுடன்



இணைந்த காப்புறுதித் திட்டம் ஆகியவற்றிற்கு தங்கள் பங்கினை அதனதன் கணக்கிற்கு ஒவ்வொரு மாதமும் பாரத வங்கிக்குச் செலுத்துச் சீட்டு மூலமாகப் பணம் செலுத்துகின்றனர். ஒவ்வொரு மாதமும் சந்தா தொகையினை செலுத்தாதபோது, அவர்கள் கண்டறிப்பட்டு, நிலைவையிலுள்ள தொகையினை மதிப்பீடு செய்து அதனைச் சரிகட்டுவதற்காக இத்திட்டத்தின்கீழ் சந்தாவினைக் கட்டுவதற்கு வலுக்கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கமாக ஒவ்வொரு நிதி ஆண்டிலும் நிலுவைத் தொகை பற்றிய விவரம் கண்டறியப்பட்டு அந்த நிதி ஆண்டிலேயே வசூல் செய்யப்படும். சில நேர்வுகளில், அவ்வாறு செய்ய முடியாத பட்சத்தில், நிலுவைத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு பின்னர் அதிகாரிகள் குழு மூலம் வசூல் செய்யப்படும். இவ்வாறு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதால் நிலுவைத் தொகையை வசூல் செய்வதில் முன்னேற்றம் காணப்பட்டது. அதைப் பற்றிய விவரம் கீழ்வருமாறு:—

| வருடம் | நிலுவைத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | வசூல் செய்யப்பட்ட பணம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1995-96 | 1516.66 | 279.42 |
| 1996-97 | 2040.25 | 637.95 |
| 1997-98 | 2321.63 | 519.15 |
| 1998-99 (டிசம்பர் 1998 வரை) | 3771.90 | 961.22 |

10.22 31.12.1998 ஆம் தேதிய நிலவரப்படி சந்தா செலுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கையும், சந்தாவினை பிடித்தம் செய்யாததற்கான காரணங்களும் கீழ்வருமாறு:

| வரிசை எண் (1) | நிலுவைத்தொகை வசூல் செய்யப்படாத காரணம் (2) | சந்தா செலுத்தாத நிறுவனங்கள் (3) |
|---|---|---|
| 1. | கலைக்கப்பட்ட நிறுவனங்கள் | 82 |
| 2. | உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடை பெற்றவை | 382 |

[1999 ஏப்ரல் 30

| (1) | (2) | | (3) |
|---|---|---|---|
| 3. | தேசிய துணிக் கழகத்தால் எடுக்கப்பட்டவை | .. | 17 |
| 4. | பி.ஐ.எப்.ஆர்/ ஏ.ஏ.ஐ.எப்.ஆர். நேர்வுகள் | .. | 66 |
| 5. | மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் உள்ளவாறு | .. | 3 |

10.23 சென்ற நிதியாண்டின் ஆரம்பத்தில் நிலுவைத் தொகை ரூ.18.02 கோடியாக இருந்தது. 1998-99 ஆம் நிதியாண்டில் கூடுதல் நிலுவைத் தொகை ரூ.19.70 கோடி அதனுடன் சேர்க்கப்பட்டது. மேற்கூறப்பட்ட தொகையில் சம்பந்தப்பட்ட சில நிறுவனங்கள் கலைக்கப்பட்டவை என்றும், திவாலாகிவிட்டன என்றும் மற்றும் சில நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டமையால் ரூ.22.47 கோடியை வசூலிக்க இயலவில்லை. இதனால் 15.25 கோடி மட்டும் வசூல் செய்ய வேண்டியதாக அமைந்தது. இத்தொகையில் ரூ.9.61 கோடிதான் வசூல் செய்யப்பட்டது. வசூல் செய்ய வேண்டிய மீதத் தொகை ரூ. 5.59 கோடி ஆகும். இதனை வசூல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் குறைகளைப் பற்றி கேட்கும் வழிமுறைகள் :

10.24 ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை பொது மக்களின் குறைகளைக் கேட்கும் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மண்டல ஆணையர் / உதவி ஆணையர் பொது மக்களின் குறைகளைக் கேட்கும் பற்றாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

10.25 மண்டல அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு கணினி மயமாக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களுக்கு உடனடியாக சேவை செய்வதற்கு பொது மக்களின் குறை கேட்கும் பிரிவின் முகப்பில் கணினி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பொது மக்களின் குறைகள் உடனடியாகவும் வேகமாகவும் நிவர்த்தி செய்யப்படுவதால் அவர்களுக்கு மிகவும் திருப்தி ஏற்படுகிறது.



1999 ஏப்ரல் 30]

10.26 துணை வட்டார அலுவலகங்களில் பொது மக்களின் குறைகள் தொடர்பாக தகுந்த கவனம் செலுத்தப்படுவதால் பொது மக்களின் குறை தீர்க்கும் குழு நன்றாக வேலை செய்வது தெரிய வருகிறது. இது தொடர்பாக மைய அலுவலகம் வழங்கும் அறிவுரைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

10.27 கடந்த மூன்று வருடங்களில் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:

| வருடம் | நிவர்த்தி செய்யப்பட்ட புகார்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1995-96 | 86,614 |
| 1996-97 | 59,170 |
| 1997-98 | 36,829 |
| 1998-99 (டிசம்பர் 1998 வரை) | 35,385 |

10.28 குறைகளைக் கேட்டு அதனை நிவர்த்தி செய்வதற்காக மண்டல அலுவலகத்தில் ஆணையர்-I அவர்களாலும், துணை வட்டார அலுவலகங்களில் பொறுப்புள்ள அதிகாரிகளாலும் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதி லோக் அதாலத் என்ற கூட்டம் நடத்தப்படுகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலத்தைப் பற்றிய ஒருங்கிணைந்த அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு மாதமும் 20 ஆம் தேதி அனுப்பப்படுகிறது.

## அத்தியாயம் 11

## வேலைவாய்ப்புப் பணிகள்

### வேலைவாய்ப்புப் பணிகளின் தோற்றமும், மூலமும்

11.1 இரண்டாம் உலகப் போருக்குப்பின் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட படைவீரர்களின் மறுவாழ்வு குறித்து தொண்டாற்றிடும் நோக்கத்திற்காகவே பாரதத்தில் வேலைவாய்ப்புப் பணி தொடங்கப்பட்டது. இவ்வாறு தொடங்கப்பட்ட பணி 1946 ஆம் ஆண்டு

[1999 ஏப்ரல் 30

வரை போர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் போர் வீரர்கள் நலன் மற்றும் மறுவாழ்விற்காக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1946-க்குப் பிறகு இப்பணி சிறிது சிறிதாக விரிவுபடுத்தப்பட்டு, இப்பணியின் தொண்டு 1948 ஆம் ஆண்டில் இறுதியில் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினருக்கான மக்களுக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்திய அரசின் நிருவாக அமைப்பின்கீழ் செயல்பட்டு வந்த இந்தப் பணி 1.11.1956 முதல் "சிவராவ் கமிட்டி"யின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு மாநில அரசின் முக்கிய துறைகளில் ஒன்றாக இயங்கிவருகிறது.

11.2 1.11.1956-ல் மாநில அரசின்கீழ் கொண்டுவரப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1963 வரை தொழிலாளர் துறை ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வந்தன. வேலைச் சந்தையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வகித்து வரும் மகத்தான பணியினைக் கருத்தில்கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களை சீரான முறையில் இயக்கிட புதிய துறை ஒன்று முழுநேர இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு 1963 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ், அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கொண்டுவரப்பட்டன. 1963 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### வேலைவாய்ப்புப் பிரிவின் நிருவாக அமைப்பு

11.3 வேலைவாய்ப்பு பிரிவில் இயக்குநர் அவர்களது பணியில் உதவிட இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) மற்றும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு திட்டங்கள்) என மூன்று இணை இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட அளவில் ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற வீதத்தில் 299 முழு அளவிலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முதன்மைப் பணியானது, வேலை தேடுவோரைப் பதிவு செய்து அவர்களை வேலையளிப்பவரால் குறிப்பிடப்படும்



1999 ஏப்ரல் 30]

பணிக் காலியிடங்களுக்குப் பரிந்துரை செய்வதாகும். இந்தப் பணியமர்த்தல் வேலையைத் தவிர, இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள், வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலைச் சந்தையில் உள்ள நிலவரத்திற்குத் தகுந்தாற்போல் தங்களது வாழ்க்கை நெறியை வகுத்துக்கொள்ள உதவிடும் நோக்கத்துடன் தொழில் நெறி வழிகாட்டும் பணிகளை செயல்படுத்துகின்றன. இது தவிர, வேலை நிலவரத் தகவல் திட்டத்தைச் செயல்படுத்துவதும் இவ்வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாக அமைந்துள்ளது, இத்திட்டத்தின்கீழ் பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ள வேலைவாய்ப்பு நிலவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் காலாண்டு இடைவெளிகளில் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு அவை, வேலைச் சந்தையில் குறுகிய கால இடைவெளியில் நேரிடும் வேலை நிலவர ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிய ஆராயப்படுகின்றன.

11.4 மேலே குறிப்பிடப்பட்ட 299 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர கீழ்க்காணும் சிறப்பு அலுவலகங்களும் வேலைவாய்ப்புத் துறையின் ஒரு முக்கியப் பகுதியாக தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை. | 1 |
| 2. | தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை. | 1 |
| 3. | தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (சென்னை மற்றும் கோவை) | 2 |
| 4. | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை. | 1 |
| 5. | பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள், சென்னை, மதுரை மற்றும் அண்ணாமலை நகர். | 3 |
| 6. | துணை வேலைவாய்ப்பு அலுவலகம், ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) | 1 |

| | |
|---|---|
| 7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (கடலூர், கோவை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்) | 5 |
| 8. பழங்குடியினருக்கான தொழில் நெறி வழி காட்டும் சிறப்பு நிலையங்கள் [சேலம், சங்கராபுரம் (விழுப்புரம்), திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம்]. | 4 |
| மொத்தம் | 18 |

11.5 மேலே கூறப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணியினை மேற்பார்வையிட சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டலங்களில் 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் வருவாய் மாவட்டங்களின் அடிப்படையில் மாவட்டங்களை தமது நிருவாக எல்லைகளாகக் கொண்டு செயல்படுகின்றன.

### வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள்

11.6 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் உயிர்ப் பதிவேட்டில் வேலைக்காகப் பதிவு செய்து காத்திருக்கும் அனைத்து வகை மனுதாரர்களுக்கும் <u>பாரபட்சமற்ற இலவசமாகப் பணியமர்த்தல்</u> தொண்டினைச் செயலாற்றி வருகின்றன.

### 1998 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் ஆற்றப்பட்ட முக்கியப் பணிகளின் விவரம்

**11.7 பதிவு செய்தல்**

1998 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உதவி கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 6,35,976 ஆகும். இதே ஆண்டில் 37,906 பணிக் காலியிடங்கள் வேலையளிப்பவரால் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அக்காலியிடங்களுக்கு 4,97,632 மனுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இந்த முயற்சியின் பயனாக 23,716 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இச்செயல்பாட்டினால் 1998 ஆம் ஆண்டில் பதிவு செய்தலுக்கும் பணியமர்த்தலுக்குமான விகிதாச்சாரம் 27:1 என அமைந்துள்ளது.



11.8 1998 ஆம் ஆண்டு இறுதியில் (அதாவது 31.12.1998 அன்று) வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேட்டில் வேலைவாய்ப்பு தேடி பதிவு செய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 41.6 இலட்சமாக அமைந்துள்ளது. இவர்களில் 13.9 இலட்சம் பேர் பெண்கள், 9.1 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் 9,991 பேர் பழங்குடியினத்தை சார்ந்தவர்கள் ஆவர்.

### கிராமப்புறப் பள்ளிகளை தத்து எடுத்து தொழில்நெறி வழிகாட்டிப் பணியினை அப்பள்ளிகளில் தீவிரமாக செயல்படுத்தும் முன்னோடித் திட்டம்

11.9 இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 200 மாணவர்கள் பயிலும் ஒரு கிராமப்புற மேல்நிலைப்பள்ளி, கல்வித் துறையின் ஆலோசனைப்படி தேர்வு செய்யப்பட்டு, தத்து எடுத்துக் கொள்ளப்பட்டு, அப்பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டிப் பணி தீவிர முறையில் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம ஆண்டிற்கான கல்வி ஆண்டில் திட்டத்தின்கீழ் 22 பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முயற்சிகள்

11.10 மாதச்சம்பள வேலைவாய்ப்புகள் அரிதாகிக் கொண்டே வரும் இன்றைய வேலைச் சந்தை சூழலில், சுயவேலை முறையில் வாழ்க்கை நெறியினை உருவாக்கிக் கொள்வது வேலைவாய்ப்பின்மையைப் போக்க உதவும் முக்கிய நெறிமுறையாக வளர்ந்து வருகிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை தேடுவோரின் மாபெரும் பட்டியலைக் கொண்ட உயிர்ப் பதிவேடுகளைப் பராமரிக்கும் நிறுவனங்கள். ஆதலால் வேலை தேடும் இளைஞர்களில் சுயவேலையில் நாட்டம் கொண்ட நபர்களைக் கண்டறிந்து அவர்களை சுயதொழில் முறையில் வாழ்க்கை நெறியை அமைத்துக்கொள்ள உதவுவது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாகக் கருதப்படுகிறது. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தத்தம் அளவிலேயே கூட்டுக் கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடு செய்து, சுயவேலை வாழ்க்கை நெறி பற்றி இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்கவும், சுய வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க மைய, மாநில அரசுகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அளித்து வரும் உதவிகள் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல் வழங்கவும்

நடவடிக்கை எடுத்தன. இத்தகைய சிறப்பு முயற்சியினால் 1998 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட 240 இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட வகையில் உற்பத்தி மற்றும் வாணிப நிறுவனங்களைத் தொடங்குவதற்கு ரூபாய் 130.50 இலட்சம் தொகை வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கான இலவசப் பயிற்சி மற்றும் முன்னோடி தேர்வுப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்

11.11 தற்போது தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 5 நகரங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிட இளைஞர்களிடையே சுயவேலைவாய்ப்பு நெறி பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் சுயதொழில் தொடங்க அனைத்து வகையான உதவிகளையும் இந்த மையங்கள் நல்கி வருகின்றன.

11.12 இத்தகைய வழிகாட்டல் பணிகள் மட்டுமின்றி, மையப்பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற பல்வேறு தேர்வு நிறுவனங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு முன்னோடிப் பயிற்சி அளிப்பதற்கான வகுப்புகளையும், மருத்துவம் மற்றும் பொறியியல் பட்டப் படிப்பினைப் பயிலும் நபர்களை தெரிவு செய்ய நடத்தப்படும் தேர்வுகள் தொடர்பான பயிற்சி வகுப்புகளையும் இந்த மையங்கள் நடத்துகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டல் நிலையங்கள் மூலமாக நடத்தப்பட்ட இலவசப் பயிற்சி வகுப்புகள் வாயிலாக 1998 ஆம் ஆண்டில் மொத்த 6,033 ஆதிதிராவிடர் இளைஞர்கள் பயன் அடைந்துள்ளனர்.

### வேலைக்காகக் காத்திருக்கும் உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்

11.13 விழிப்புலன் இழந்தவர், செவிப்புலன் இழந்தவர் மற்றும் உறுப்பு நலன் குறைந்தோர், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்கள் ஆகிய





5 வகையான உடல் ஊனமுற்ற மனுதாரர்களை தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பதிவு செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு உதவி அளித்து வருகின்றன. சென்னை-40-ல் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும் மற்றும் காஞ்சீபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், நாகர்கோவில், கோயம்புத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஈரோடு, உதகமண்டலம் மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறப்பு உடல் ஊனமுற்றோர் பிரிவுகளும் சிறப்புப் பணியமர்த்தல் உத்தியினைக் கையாண்டு உடல் ஊனமுள்ள பதிவாளர்கள் பணியில் அமர்த்தப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

11.14 இந்த முறையில் 1998 ஆம் ஆண்டில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட 5683 ஊனமுற்ற நபர்களில் (525 பார்வையற்றோர், 353 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 4805 உறுப்பு நலம் குன்றியோர்) 1,081 உடல் ஊனமுற்றப் பதிவுதாரர்கள் சம்பள வேலையில் பணியமர்த்தப்பட்டனர் (38 விழிப்புலன் இழந்தோர், 52 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 991 உடல் உறுப்பு நலம் குறைந்தோர்). 31-12-1998 நிலவரப்படி . மொத்தமாக 57,367 ஊனமுற்ற நபர்கள் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உயிர்ப் பதிவேடுகளில் வேலைவாய்ப்பு உதவி கோரி காத்திருக்கின்றனர். இவர்களில் 5,717 பார்வையற்றோரும் 4,630 செவிப்புலன் இழந்தோரும் மற்றும் 47,020 இதர உறுப்பு ஊனம் கொண்டவரும் அடங்குவர்.

### பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பு நிவாரணம்

11.15 தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பிறிதொரு முக்கிய திட்டம் பார்வையற்ற மனுதாரர்களுக்கு வேலையற்றோருக்கான நிவாரணத் தொகை வழங்கும் நலத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்து உயிர்ப் பதிவேட்டில் ஓராண்டிற்கும் மேல் காத்திருக்கும் 40 வயதிற்குட்பட்ட பார்வையற்ற நபர்களுக்கு (தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் 45 வயது) பின்வரும் வீதத்தில் 5 ஆண்டுகளுக்கு பார்வையற்றோர் நிவாரணத் தொகை வேலைவாய்ப்பு அலுவலகங்களால் வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. பட்டதாரி/முதுகலை பட்டதாரிகள் | - | ரூ.300/- மாதம் |
| 2. புகுமுக வகுப்பு/ மேல்நிலைப்பள்ளி | - | ரூ.250/- மாதம் |
| 3. பள்ளி இறுதி வகுப்பு மற்றும் இதர வகுப்பு | - | ரூ.200/- மாதம் |

1998 ஆம் ஆண்டில் இந்த நிவாரணத் தொகையினை 992 பார்வையற்ற நபர்கள் பெற்று பயன் அடைந்துள்ளனர். 31-12-1998 வரை மொத்தமாக ரூபாய் 17.92 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் பார்வையற்ற நபர்களின் நலனுக்காக செலவிடப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினி மயமாக்குதல்

11.16 திறமையான, குறைபாடற்ற, விரைவான பணிச் சேவையை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்துள்ள மனுதாரர்களுக்கும் மற்றும் வேலையளிப்போருக்கும் அளிப்பதற்கு ஏதுவாகவும், மனுதாரர்களைத் தேர்வு செய்வதில் ஏற்படும் கால அவகாசத்தினைக் குறைப்பதற்கு ஏதுவாகவும் 1986-87 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினிமயமாக்கும் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. சென்ற நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பின்வரும் மூன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டன:

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், புதுக்கோட்டை
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், விருதுநகர்
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருவண்ணாமலை.

## அத்தியாயம் 12

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

### துறையின் தோற்றம்

12.1 1940 ஆம் வருடம் இந்திய அரசால் பாதுகாப்புப் படைகள் மற்றும் பாதுகாப்புப் பொருட்கள் உற்பத்தி செய்யும்



தொழிற்சாலைகளின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் தேசிய அளவில் போர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு போர்ப்படை கலைப்பு வீரர்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட படைவீரர்களின் மறுவாழ்வு நலன் கருதி இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கங்கள் இந்திய அரசால் மேலும் விரிவுப்படுத்தப்பட்டன.

12.2 1947-ல் இந்தியாவின் பிரிவினைக்குப் பிறகு இத்திட்டமானது அகதிகளுக்கும், பிறகு 1950-ல் இராணுவத்தில் இல்லாத முதியவர்களுக்கும் பயனளிக்கும் விதத்தில் தேசிய அளவில் இராணுவத்தில் இல்லாத முதியோர்கள் பயிற்சி எனும் புதிய பெயரில் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இது தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கைவினைஞர் பயிற்சித் திட்டம் என அழைக்கப்பட்டது.

12.3 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை உருவாவதற்கு முன்னர் வேலைவாய்ப்புப் பிரிவு தொழிலாளர் ஆணையரகத்துடனும், பயிற்சிப் பிரிவு தொழில் மற்றும் வணிகத் துறை இயக்கக் கட்டுப்பாட்டின்கீழ் 1963 வரை இருந்து வந்தது. 1963 ஆம் ஆண்டு வேல்லவாய்ப்புப் பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவு ஆகியவை ஒன்று சேர்க்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது.

### துறையின் நோக்கம்

12.4 நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில் உற்பத்தியைச் சார்ந்துள்ளது. தொழில் உற்பத்திக்கும் அதைத் தொடர்ந்து பெறுவதற்கும் கைவினைஞர் முதுகெலும்பாக உள்ளனர். தொழிற்பயிற்சி நிலையங்கள், மாறிவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப மனித ஆற்றலை (கைவினைஞர்) உருவாக்கி வருகின்றனர். கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. கல்வி கற்ற ஏழை, எளிய இளைஞர்கள் பயனடைய வேலைவாய்ப்புகள் பெறும் வகையில் தொழிற்பயிற்சி அளித்தல்.

2. செயல்திறன் முன்னேற்ற பயிற்தித் திட்டத்தை செயல்படுத்த தேவையான உள்ளமைப்புகள் உருவாக்குதல்.

3. பல்வேறு தொழிற்பிரிவுகளில் சிறந்த பணியாளர்களை உருவாக்கி தொழிற்சாலைகளின் தேவைக்கு ஏற்ப வழங்குதல்.

[1999 ஏப்ரல் 30

4. ஊரக இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறவும், சுயவேலைவாய்ப்பு பெற உதவிபெறும் வகையிலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிப்பதை ஊக்குவித்தல்.

5. தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சியாளர் இரு தரப்பினரும் ஒருவருக்கொருவரின் பயன் கருதி பணிமனைகளில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் இவற்றைப் பரிமாற்றம் செய்ய தொழிற்சாலைகளிடையே நெருங்கிய தொடர்பு தோற்றுவித்தல்.

6. பணிபுரியும் தொழிலாளர்களின் கருத்தியல் பாடம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கான பயிற்சியை அளித்தல்.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்

12.5 தமிழ்நாடெங்கும் 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 35 பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ 17,200 மாணவ, மாணவியர் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். தொழிற்பிரிவின் இயல்புக்கேற்றவாறு பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி காலம் முடியும் தருவாயில் அகில இந்திய ரீதியில் தொழிற் தேர்வு, தேசிய வாழ்வியல கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழில் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்

12.6 தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் அரசின் சீரிய முயற்சிகளை நிறைவு செய்திடும் வகையில் தொழிற்பயிற்சி அளிக்க தனியார் துறையினரும் பங்கு பெற ஊக்குவிக்கப்படுகிறது. ஊரக இளைஞர்கள் தொழிற் பயிற்சியில் பயன் அடையும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அனைத்து 218 பஞ்சாயத்து யூனியன்களில் எங்கெல்லாம் தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லையோ அங்கெல்லாம் மூன்று ஆண்டு காலத்தில் புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கும் திட்டமொன்றை அறிவித்தார்கள். முதல் இரண்டு கட்டங்களில் இத்திட்டம் செயலாக்கப்பட்டு, 102 பஞ்சாயத்து யூனியன்களில் 107 புதிய தனியார்



1999 ஏப்ரல் 30]

தொழிற் பயிற்சி நிலையங்கள் தேசிய வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி குழுவின் ஒப்புதலுடன் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது 545 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் 271 பஞ்சாயத்து யூனியன்களில் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவது மற்றும் இறுதிக் கட்டமாக 116 பஞ்சாயத்து யூனியன்களில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்க இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்

12.7 உலக வங்கி நிதி உதவியுடன் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.32.76 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டன. இச்செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாகப் பங்கிட்டுக் கொண்டன. உலக வங்கி நிதிஉதவித் திட்டத்தினைப் போலவே மற்ற 21 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும் ரூ.12.24 கோடி மாநில அரசின் செலவில் 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

12.8 நவீனமயமாக்குதலின் முழுப்பயனையும் அடைவதற்கு வேண்டிய இதர வசதிகளான கட்டடம் கட்டுதல், மின் இணைப்பு மாற்றியமைத்தல், சி.என்.சி. இயந்திரங்கள் நிறுவ தூசு புகாத தட்பவெப்பநிலை, கட்டுப்படுத்தப்பட்ட குளிர்பதன அறை கட்டுதல், கூடுதல் வகுப்பறை, மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு விடுதி கட்டுதல், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சுற்றிலும் சுற்றுச்சுவர் எழுப்புதல், முழுநேர தடங்கலில்லாத மின்வசதி அளித்தல், புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் போன்றவை மிகவும் அவசியமானவை. இவை அனைத்தையும் பூர்த்தி செய்து இலக்கினை அடைய 1997-2002-ன் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

அகில இந்திய தொழிற் தேர்வும் சாதனைகளும்

12.9 பாடத்திட்டம், தொழிற்தேர்வு நடத்துதல் மற்றும் தொழிற் தேர்வு சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகள் அகில இந்திய அளவில் தரமாகவும் மற்றும் சீராகவும் அமைந்திட தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அதிகாரத்திற்குட்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

12.10 தொழிற் கல்வியின் தரத்தைப் பேணிடவும், வெகுவிரைவில் தேர்வு முடிவுகளை அறிவிக்கவும், அகில இந்திய தொழிற் தேர்வு விடைத்தாள்களை ஒரே சீராக மதிப்பீடு செய்திட ஜூலை 1979

[1999 ஏப்ரல் 30

முதல் மைய மதிப்பீடு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வதில் இரகசியம் பேணிட மாற்று எண்ணிட்டு மதிப்பீடு செய்யும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. ஜூலை 1998-ல் சுமார் 45,000 பயிற்சியாளர்கள் தொழிற் தேர்வு எழுதியதில், அவர்களில் சுமார் 60 விழுக்காடு பயிற்சியாளர்கள் தேர்ச்சி பெற்றனர். அவர்கள் அனைவருக்கும் தொழிற் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள்

12.11. ஒவ்வோர் ஆண்டும் திறனாய்வுப் போட்டிகள் அகில இந்திய அளவில் 10 தொழிற் பிரிவுகளில் நடத்தப்படுகிறது. இதில் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு தலா ரூ.6,000 ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன. 1998 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 34 திறனாய்வு தேர்வுப் போட்டிகளில் 16 முறை தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இதிலிருந்து மற்ற மாநிலங்களுடன் ஒப்புநோக்குகையில் இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் சீரிய முறையில் செவ்வனே திறம்பட நடைபெறுகின்றன என்பது தெரிய வருகிறது. திறனாய்வுப் போட்டிகளில் தமிழ்நாடு முதலிடம் வகித்த விவரங்கள் கீழே இடம் பெறுகின்றன :

| வ.எண் (1) | வருடம் (2) | தொழிற் பிரிவு (3) | தமிழ்நாட்டில் முதலிடம் பெற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| 1. | 1964 | இயந்திர வேலையாள் பல்வகை | 1 |
| 2. | 1966 | பற்றவைப்பவர் | 2 |
| 3. | 1967 | இயந்திர வேலையாள் பல்வகை | 2 |
| 4. | 1969 | கம்மியர் கருவிகள் | 2 |
| 5. | 1973 | பொருத்துநர் | 1 |
| 6. | 1974 | இயந்திர வேலையாள் | 2 |
| 7. | 1975 | இயந்திர வேலையாள் பல்வகை | 2 |
| 8. | 1977 | கடைசலர் | 2 |
| 9. | 1978 | பற்றவைப்பவர் | 2 |



1999 ஏப்ரல் 30]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 10. | 1986 | பற்றவைப்பவர் | 2 |
| 11. | 1988 | துணிவெட்டுதல் மற்றும் தையல் வேலை | 2 |
| 12. | 1989 | கடைசலர் | 1 |
| 13. | 1992 | அச்சுவார்ப்பவர் | 2 |
| 14. | 1993 | அச்சுவார்ப்பவர் | 1 |
| 15. | 1995 | பொருத்துநர் | 2 |
| 16. | 1996 | கம்மியர் மோட்டார் வண்டி மற்றும் அச்சுவார்ப்பவர் | 3 |

### மாண்புமிகு முதலமைச்சர் விருது

12.12 பயிற்சியாளர்களை மென்மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆண்டுதோறும் மாநில அளவிலும் 14 தொழிற் பிரிவுகளில் தொழிற் திறனாய்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ரொக்கத் தொகையாக ரூ.5,000/-மும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவ்விதம் சிறந்த பயிற்சியாளரை உருவாக்கும் பயிற்றுநர்களுக்கும் ரொக்கத் தொகை பரிசாக வழங்கப்பட்டு அவர்களும் கௌரவிக்கப்படுகின்றனர். தொழிற்பிரிவுகள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

1. பொருத்துநர் 2. கடைசலர், 3. இயந்திர வேலையாளர், 4. கம்மியர் (மோட்டார் வண்டி), 5. கம்மியர் (கருவிகள்), 6. மின்சாரப் பணியாளர், 7. கம்மியர் மின்னணுவியல், 8. அச்சுவார்ப்பவர், 9. பற்றவைப்பவர், 10. துணிவெட்டுதல் மற்றும் தையல் வேலை, 11. கம்மியர், வானொலி மற்றும் தொலைக்காட்சி, 12. கம்பியாளர், 13. உலோகத்தகடு வேலையாள், 14. தச்சர்.

12.13 ரொக்கப் பரிசுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

[1999 ஏப்ரல் 30

| வ. எண் | பரிசு பெற்றவர்கள் | தொகை | தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ | | ரூ |
| 1. | சிறந்த பயிற்சியாளர் | 5000 | 14 | 70,000 |
| 2. | முதல்வர் | 1000 | 14 | 14,000 |
| 3. | இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர் | 1750 | 14 | 24,500 |
| 4. | பணிமனை கணித பயிற்றுநர் | 500 | 14 | 7,000 |
| 5. | பொறியியல் வரைபட பயிற்றுநர் | 500 | 14 | 7,000 |
| | மொத்தம் | | | **1,22,500** |

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

12.14 பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்து முன்மாதிரியாக விளங்கும் பயிற்றுநர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-4) இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500 மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது.

தொழிற் பள்ளிகள்

12.15 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர இம்மாநிலத்தில், 6,326 இருக்கைகள் கொண்ட 107 தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இத்தொழிற்பள்ளிகள் பெரும்பாலும்



1999 ஏப்ரல் 30]

அறக்கட்டளைகளினால் நடத்தப்பட்டு வருகின்றன. எட்டாம் வகுப்பு முதல் மேல்நிலைப் பள்ளி வரையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கு மாநில அரசின் தொழிற் பள்ளி சான்றிதழ் வழங்கப்படுகிறது. 107 பள்ளிகளில் 50 பள்ளிகள் பணியாளர் ஊதியம், பயிற்சி செலவினத்தில் 75% அல்லது நிகர நஷ்டம் இதில் எது குறைவோ அதனை அரசின் பராமரிப்பு மானியமாகப் பெறுகின்றன.

தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்

12.16 தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு தொழிற் நிறுவனங்களில் ஒன்று முதல் நான்கு ஆண்டுகள் வரை தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் மூலம் தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு உற்பத்தியில் தமது செயல் திறத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்கள் அனுபவம் குறைவான தொழிலாளர்களை உருவாக்கும்போது தொழிற் பழகுநர் பயிற்சி அவர்களை அனுபவம் மிகுந்த திறமையான தொழிலாளர்களாக மாற்றியமைக்கிறது. தொழில் பழகுநர்கள், பணிமனை செய்முறை திறனை தொழிற் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடப்பயிற்சியினை தொடர் அறிவுரை மையங்களிலும் அவர்களது தொழிற் பழகுநர் பயிற்சிக் காலத்தில் பெறுகின்றனர். தொழிற் பழகுநர் பயிற்சிக் காலத்தில் தொழிற் பழகுநர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.680 முதல் 1020 வரை உதவித் தொகையாக சம்பந்தப்பட்ட தொழிற் நிறுவனங்கள் வழங்குகின்றன.

12.17 இத்தொழிற் பழகுநர் பயிற்சி 122 தொழிற் பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 16,425 தொழிற் பழகுநர்கள் 2,180 தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர். அகில இந்திய தொழிற் தேர்வு ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது. தேர்ச்சி பெற்ற தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. சுமார் 8,000 தொழிற் பழகுநர்கள் ஒவ்வொரு தொழிற் தேர்விலும் கலந்து கொள்கின்றனர்.

12.18 ஆண்டுதோறும் தொழிற் பழகுநர்களுக்காக அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள் 11 தொழிற் பிரிவுகளில் மண்டலம் மற்றும் அகில இந்திய ரீதியில் நடைபெறுகின்றன. சிறந்த தொழிற் பழகுநருக்கு

மண்டல ரீதியில் நற்சான்றிதழும், அகில இந்திய ரீதியில் ரூ.10,000 ரொக்கத் தொகையும் சேர்த்து நற்சான்றிதழும் அளிக்கப்படுகிறது.

### தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்

12.19 மாலை நேர வகுப்புகள் திட்டம் தொழிற்சாலைகள் செறிவுள்ள அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள் தாம் பணிபுரியும் தொழிற்சாலைகளில் பணிமனை செயல்திறனை அடையும்போது ஒரு வருட / இரு வருட தொழிற் பிரிவுகளில் கருத்தியல் பாடங்கள் இந்த அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புகளில் கற்பிக்கப்படுகிறது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. சுமார் 1,925 தொழிலாளர்கள் ஆண்டுதோறும் இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று பயன்பெறுகின்றனர்.

### பயிற்றுநர்களுக்குப் பயிற்சி

12.20 மிக விரைவாக முன்னேறிவரும் தொழிற்நுட்ப வளர்ச்சியினை அறிந்துகொள்ள பயிற்றுநர்கள் மத்திய பயிற்சி நிலையங்கள் / முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு ஓராண்டுகால பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியினால் பயிற்றுநர்கள் தங்களது செயல்திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைத் தெரிந்துகொண்டு அவற்றைப் பயிற்சியாளர்களுக்குப் போதிப்பதற்கும் ஏதுவாகின்றது.

12.21 இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர்களுக்கு ஒளி, ஒலி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இருவார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இந்த மறுபயிற்சி அவர்களின் கல்வி கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

### வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்டம்

12.22 வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், அம்பத்தூர் மற்றும் கோவையில் தொழிலாளர்களின் பயனிற்காக நடைபெற்று வருகிறது. நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிற்சாலை பணியாளர்கள் தெரிந்து





கொள்ளும் வகையில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதனால் சமீபகால தொழில் நுட்பத்துடன் தொழிலாளர்கள் பணிபுரிய ஏதுவாகின்றது.

### மகளிர் நலன்

12.23 தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கிண்டி, அம்பத்தூர், சேலம், கடலூர், கோவை, திண்டுக்கல், புள்ளம்பாடி, திருப்பூர், மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் மகளிருக்காகவே அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இதைத்தவிர ஏனைய 43 தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 30 விழுக்காடு இருக்கைகள் மகளிருக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

### தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலன்

12.24 சிதம்பரத்தில் இயங்கும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென்றே உள்ளது. அதேபோல் சங்கராபுரத்திலும் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் பழங்குடியினர் நலனுக்காக இயங்குகின்றது. இதைத்தவிர அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காகவும், 1 விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்

12.25 சமுதாயத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள 18 முதல் 35 வயதுள்ள இளைஞர்கள் சுயவேலை ஆரம்பிக்கும் வகையில் அவர்களின் செயல்திறனை மேம்படுத்தி தொழிற் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் திறமையுடையவர்கள் வேலைக்காக கிராமங்களில் இருந்து நகர்ப்புறங்களுக்கு குடியேறுவதைத் தடுப்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

12.26 இத்திட்டம் ஈரோடு, நாகப்பட்டினம், நாகர்கோவில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, தேனி, உளுந்தூர்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய 9 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அனைத்து பணியாளர்களைக் கொண்டு முழுநேரப் பயிற்சித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

12.27 மேலும் ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி 27 தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேரமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி குழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட திட்ட அலுவலரால் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஆறு மாதம் மற்றும் ஒரு வருடம் வரையிலான 23 சுயவேலைவாய்ப்பு தொழிற்பிரிவுகளான குழாய் பழுதுபார்ப்பவர், மின்சார சாதனங்கள் பழுதுபார்ப்பவர், மின்சார மோட்டார் சீர் செய்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்த்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி எதுவும் வற்புறுத்தப்படுவதில்லை. பயிற்சிக் காலத்தில் உதவித்தொகையாக மாதம் ரூ.300 வீதம் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்த பின்னர் ரூ.600 மதிப்புள்ள கருவி கலப்பெட்டி ஒன்று அவர்கள் சுயமாக வேலை தொடங்க உதவும் வகையில் இலவசமாக அளிக்கப்படுகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டம்

12.28 தொழிற்சாலைகளில் திறமையான தொழிலாளர்கள் தேவையினை பூர்த்தி செய்திடவும் பயிற்சித் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடனும் உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டம் கைவினைஞர் பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, மகளிர் வாழ்வியல் தொழிற் பயிற்சி மற்றும் திறமைமிகு தொழிலாளருக்கான வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவைகளைக் கொண்டதாகும். பின்வரும் எட்டு திட்டங்கள் 1989-90 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மகளிருக்கான வாழ்வியல் பயிற்சித் திட்டம்

12.29 தொழிற்சாலைகளில் திறமை மிகுந்த மற்றும் திறமை குறைவான மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மகளிர் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்தவும், தரமுள்ளதாகவும் செய்திட அம்பத்தூர், கோவை, சேலம், மதுரை மற்றும் புள்ளம்பாடி ஆகிய இடங்களில் மகளிருக்காகவே 5 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.





இயந்திரப் பராமரிப்பு மையங்கள் பணிமனை

12.30 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சீராகப் பராமரிப்பதற்கு வடசென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி மற்றும் பேட்டையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தம்முடைய தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மேலும் தமக்கு அருகாமையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய இயந்திரங்களைப் பழுதுபார்த்து சீர் செய்கின்றன. இயந்திரங்களில் பெரிய அளவிலான பழுதுகள், இதற்கென பிரத்யேகமாக அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ள இயந்திரப் பராமரிப்புப் பணிமனையில் சீர் செய்யப்படுகின்றன.

தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம்

12.31 மாறி வரும் தொழில் வளர்ச்சிக்கேற்ப கைவினைஞர்கள் மிகுதியாகத் தேவைப்படுவதினைக் கருத்தில் கொண்டு தேவைக்குத் தகுந்தவாறு 25 புதிய தொழிற் பிரிவுகள் 16 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இவ்விரிவாக்கத்திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்ட விரிவாக்கம்

12.32 புதுமைமிகு நவீன இயந்திரங்களைக் கையாள மேம்பட்ட தொழில் நுட்பவியலைத் தெரிந்து பயனடையும் வகையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேம்பட்ட திறமையான பயிற்சி அளிக்க தேசிய பாடத் திட்டப்படி போதுமான வசதிகள் செய்யப்பட்டு தற்போது கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் மூன்று தொழிற் பிரிவுகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஒலி, ஒளி சாதன வசதிகள் அமைத்தல்

12.33 பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உபயோகம் உள்ளதாகவும், திறம்பட அமையவும், வகுப்பறை போதனா முறையினை மேம்படுத்தவும் 38 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில், ஒளி, ஒலி சாதனங்கள் படிப்படியாக வழங்கப்பட்டுள்ளன.

[1999 ஏப்ரல் 30

### அடிப்படை பயிற்சி மையங்கள்/தொடர் அறிவுரை மையங்கள்

12.34. அடிப்படை பணிமனைப் பயிற்சி வசதிகள் அம்பத்தூர் உணவாக்க தொழிற் பிரிவுகளிலும், இராணிப்பேட்டையில் இரசாயன தொழிற் பிரிவுகளிலும் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தின்கீழ் தொழிற் பழகுநர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உணவாக்கம் மற்றும் இரசாயன தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் தொழிற் பழகுநர்கள் அடிப்படை பயிற்சி மற்றும் தொடர் அறிவுரை பயிற்சிகளை இந்த மையங்களில் பெறுகின்றனர்.

### மாநில திட்ட செயலாக்கப் பிரிவு

12.35. உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கண்ட பல்வேறு திட்டங்களை செவ்வனே அமல்படுத்தி, அவைகளை திறம்பட நடைமுறைப்படுத்த இயக்ககத்தில் மாநில திட்டச் செயலாக்கப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### இயந்திரங்களை நவீனப்படுத்துதல்

12.36. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலைய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழக்கொழிந்தவைகளாகவும், பழுதடைந்தவைகளாகவும் ஆகிவிட்டன. எனவே, அவைகள் படிப்படியாக ரூ.1078.59 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்பட்டு, நவீன இயந்திரங்கள் வழங்கப்பட்டு பயிற்சியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.572.24 இலட்சம் மதிப்புள்ள நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு 31 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### உயர் தொழிற்நுட்பப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

12.37. திறமையான தொழிலாளர் தலைமுறைக்கு சி.என்.சி. இயந்திரங்கள் இயக்குவதிலும் உயர் தொழிற் நுட்பக் கருவிகளைக் கையாளுவதில் சிறந்த பயிற்சியும் அளித்து அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் கீழ்க்கண்ட நான்கு தொழிற் பிரிவுகளில் அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 30]

1. தானியங்கி இயந்திரத் தொழில்
2. கணினி சார் வரைவு
3. எழுத்து மற்றும் எண் மின்னணுவியல்
4. தனி கணினிப் பராமரிப்பு

இப்பயிற்சி நான்கு முதல் ஆறு வார காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியினை மத்திய அரசு முழுமையாக ஏற்றுள்ளது.

12.38. இதற்காக கட்டடம் சீரமைக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் உயர் தொழிற்நுட்பப் பயிற்சி ஆரம்பிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மேலாண்மை நிருவாக தகவல் முறை

12.39. இயக்ககத்தில் மேலாண்மை நிருவாக தகவல் முறையினை நிறுவ மத்திய அரசு முன் வந்துள்ளது. இத்திட்டத்திற்கான கணினி மற்றும் அதன் இதர கருவிகளை தேசிய தகவல் மையத்தால் வழங்கப்பட உள்ளன. தொழிற் பயிற்சி சம்பந்தமாக 15 வகையான சாஃப்ட்வேர்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய திட்டமிட தொழிற்பயிற்சி, அகில இந்திய தொழிற் தேர்வு போன்றவற்றின் முன்னோக்குக் குறிப்புகளைச் சேகரித்துப் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.

### மின்கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு

12.40. 21 வயதானவர்கள், மின்சார ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரிந்து குறைந்தது 5 வருட முன் அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி 5 வருட முன் அனுபவம் உடையவர்களாயின், அவர்கள் இத்தேர்விற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு மூன்று வருடத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அடுத்த தேர்வு ஜூன் 2001-ல் நடைபெற உள்ளது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு "எச்" கிரேடில் "மின்கம்பி உதவியாளர் தகுதிகாண்" சான்றிதழ் வழங்கப்படுகிறது.

[1999 ஏப்ரல் 30

எதிர்கால திட்டங்கள்

12.41. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்திறனை மேலும் உயர்த்தும் பொருட்டு இந்த இயக்ககம் கீழ்க்காணும் செயல் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்துள்ளது:

1. தொழிற் துறையில் தற்போதுள்ள நவீன தொழிற் நுட்பத்திற்கு இணையாக தொழிற் பயிற்சி நிலையங்கள் நவீனமயமாக்குவதைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.

2. தொழிற் நிறுவனங்களில் மாறிவரும் தேவைக்கேற்ப புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்.

3. நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் விஞ்ஞானம் மற்றும் தொழிற் நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு அவ்வப்போது பாடத் திட்டத்தினை மாற்றியமைத்தல்.

4. தொழிற்சாலைகளுக்கும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குமிடையே பரஸ்பர உறவை உருவாக்கி தொழிற் நுட்பத் திறன் மற்றும் அனுபவங்களை ஒருவருக்கொருவர் பயன்பெறும் வகையில் தொழிற்சாலைகளிடையே நெருங்கிய தொடர்பு தோற்றுவித்தல்.

5. 1950 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது பொருத்துநர், கடைசலர், இயந்திர வேலையாள், தச்சர், அச்சுவார்ப்பவர், பற்றவைப்பவர் போன்ற வழக்கமான தொழிற்பிரிவுகளே இருந்தன. தற்போது அனைத்து இடங்களிலும் நடவடிக்கைகளிலும் கணினிகள் முக்கிய பங்காற்றுவதால் இக்காலம் கணினிகளையும் அவற்றின் இயக்கங்களையுமே சார்ந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பதினைந்திற்கும் மேற்பட்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கம்ப்யூட்டர் ஆபரேட்டர் மற்றும் புரோகிராமிங் அஸிஸ்டென்ட் என்னும் தொழிற் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்தொழிற்பிரிவு மற்ற அனைத்து அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் விரைவில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இதன் காரணமாக கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட இருக்கிறது:

1. கணினிப் பயன்பாடு பன்பொருள்;
2. மோட்டார் வாகனங்கள் (இரு சக்கர வண்டிகள் உட்பட);



1999 ஏப்ரல் 30]

3. அச்சடித்தல்;
4. வேதியியல் தொழிற் பிரிவுகள்;
5. உணவக தொழிற் பிரிவுகள்;
6. கணினிப் பொறிகள் மூலம் தேர்வு முறை செயலாக்கம்;
7. தொழிற் பிரிவுகளை மாற்றியமைத்தல் மற்றும்
8. தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவியர் பயனடைய கீழ்க்கண்ட பாடங்களில் குறுகிய காலப் பயிற்சிப் பிரிவுகள் அறிமுகப்படுத்துதல்

அ) சி.என்.சி. செயல்முறைத் திட்டம்;
ஆ) சி.ஏ.டி. செயல்முறைத் திட்டம்;
இ) சி.இ.டபிள்யு. மோட்டார் வாகன பொறியியல் மற்றும்
ஈ) டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆப்ரேட்டர்.

## அத்தியாயம் 13

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

13.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும்.

13.2. இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் அயல்நாட்டுப் பணியை நாடும் இந்தியர்கள் அயல்நாடுகளில் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெற உதவி செய்வதாகும். இதன் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சமாகும். அதற்கென வழங்கப்பட்ட மூலதனம் தொடக்கத்தில் ரூ.25 இலட்சமாக இருந்தது. இப்போது அதில் ரூ. 10 இலட்சம் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்நிறுவனம் அக்கடன் தொகையை அரசின் அனுமதி பெற்று 1998-99 ஆம் நிதியாண்டில் ஒரே தவணையில் திருப்பிச் செலுத்தியுள்ளது.

13.3. கடந்த எட்டு ஆண்டுகளில், இந்நிறுவனம் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. 31-3-1998-இல் அமைந்தவாறு, இந்நிறுவனத்தின் மொத்த இலாபம் ரூ. 8.67 இலட்சமாகும்.

13.4. தான் செயல்படத் தொடங்கிய நாள் முதல் 31-3-1999 வரை இந்நிறுவனம் மொத்தம் 5,328 நபர்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தந்துள்ளது. இதில் 1-4-1998 முதல் 31-3-1999 வரையுள்ள கால அளவில் பணியமர்த்தப்பட்ட 258 நபர்களும் அடங்குவர்.

13.5. தன் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்வதன் மூலம் இந்நிறுவனம் விமானச் சீட்டுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளது. இச்செயல்பாட்டிலும் அது நல்ல இலாபத்தை ஈட்டி வருகிறது. விமானச் சீட்டு நீங்கலாக இந்நிறுவனம் அதன் மனுதாரர்களுக்கு மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் கூட பாஸ்போர்ட் பெற்றுத் தரும் பணிகளையும் செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் அனைத்துப் பணிகளிலும் கணினி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

13.6. தன் பணியிலமர்த்தும் செயல்பாட்டை இன்னும் மேம்படுத்தும் வகையில் இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களை வைத்துள்ளது:-

* ஆட்களின் தேவை பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காகவும் இந்நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்தும் அயல்நாட்டு வேலையளிப்போரின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காகவும் இந்நிறுவனத்திற்கு, இணைய (INTERNET) தொடர்பு அளிப்பது.

* அதிக அளவில் வேலையளிப்போரை கவரும் வகையில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி அயல்நாட்டுப் பத்திரிகைகளில் காலமுறைதோறும் விளம்பரங்கள் வெளியிடுவது.

* இந்நிறுவனத்தின் விமானச் சீட்டுப் பணிக்கு உலக விமானப் பயணியர் கழகத்தின் (IATA) ஏற்புப் பெறுவது.

* மனுதாரர்கள் தங்கள் பணித் தகுதியை மேம்படுத்துவதற்கேற்ப விரிவான புத்தறிவுப் பயிற்சி வகுப்புகளை நடத்துவது.

* அயல்நாட்டுப் பணிகளின் தேவைகள், அவற்றுக்குத் தேவைப்படும் இயல்பான தகுதிகள், சம்பளம், விசா நடைமுறைகள், வாழ்க்கை நிலைமைகள் முதலானவை பற்றி சிற்றேடுகள் வெளியிடுவது.



## அத்தியாயம் 14

### 1999-2000 ஆம் ஆண்டிற்கான அரசால் ஏற்பளிக்கப்பட்ட பகுதி-2 திட்டங்கள்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின்கீழ் தொழிலாளர், தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைகளுக்கென்று 1999-2000 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் புதிய திட்டப் பணிகளை நிறைவேற்ற அரசு ரூ.37.79 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

| வ. எண் (1) | திட்டப் பணிகள் (2) | தொகை (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | *தொழிலாளர் துறை* | |
| 1. | ஐந்து தொழிலாளர் நல வட்டார துணை ஆணையாளர் அலுவலகங்களில் கணினி அமைப்பை ஏற்படுத்துதல் | 9.00 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று தொழிலாளர் நல வட்டார துணை ஆணையாளர் அலுவலகங்களில் நிகரி சாதனங்கள் நிறுவுதல் | 1.29 |
| | *தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம்* | |
| 3. | மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் அலுவலகங்கள் இரண்டை கணினி மயமாக்குதல் | 2.00 |
| | *வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை* | |
| 4. | அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 39-ல் மகளிருக்குக் கழிவறை வசதிகள் செய்து தருதல். (இத்திட்டத்திற்கென அரசு ரூ.39 இலட்சத்திற்கு ஏற்பளித்துள்ளது. இதில் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது). | 16.00 |

| (1) | (2) | (3) ₹ |
|---|---|---|
| 5. | கிண்டி, ஓசூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்குக் கருவிகள் வாங்குதல் | 3.00 |
| 6. | திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலுள்ள கணினி அமைப்பை மேம்படுத்துதல் | 3.50 |
| 7. | பணியாளர்களுக்குக் கணினி பயிற்சியளித்தல் | 1.00 |
| 8. | இயக்ககத்தில் உள்ள கணினிப் பிரிவை வலுப்படுத்துதல் | 2.00 |
| | மொத்தம் .. .. | 37.79 |

221806